The Government contribution to the scheme shall be debited to the following head of account :

| |
|---|
| 2071. Pension and other retirement benefits |
| 01. Civil |
| 800. Contribution to Contributory Pension Scheme of the Tamil Nadu State Government Employees |
| 10. Contribution |
| 01. Contribution to Specific Fund - (DPC - 2071 - 01 800-A1-1016) |

by book adjustment by the Accountant General with reference to the amount contributed by the employees and initially credited to *(8011.00-106-AA-020H) and (8011.00-106-AB-020J)

(xii) Heads of the Departments / Heads of Offices should get the Index numbers from the Accountant General for all the new employees who have already joined the Government service service after 31.03.2003 within a month from the date of this G.O. As and when employees join in future, they should be admitted to this scheme compulsorily by the Heads of the Department / Heads of offices by promptly applying for allotment of the Index No. to the Accountant General within a month from the date of joining of the new employees.

(xiii) Arrears of subscription to the Contributory Pension Scheme from 1.4.2003 will be deducted from the new employees already joined after 1.4.2003 along with current month subscription (i.e. one subscription for current month and one additional for subscription arrears)

(xiv) The Index number allottted by the Accountant General for joining the Contributory Pension Fund Scheme should be entered in the first page of Service Register with necessary attestation.

**N.NARAYANAN,**
Development Commissioner &
Principal Secretary to Government

# தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

**பள்ளிக் கல்வி - தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு நன்கொடை மூலம் கட்டடம் கட்டிக் கொடுத்தலை ஏற்றுக் கொள்ளுதல் - ஆணைகள் வெளியிடப்படுகிறது.**

**பள்ளிக் கல்வி (இ1) துறை**

அரசாணை (நிலை) எண் 96 — நாள் 22.06.2006

படிக்கப்பட்டவை

1. அரசாணை (நிலை) எண் 409, பள்ளிக் கல்வித் துறை நாள் 9.11.1998.
2. அரசாணை (நிலை) எண் 338, பள்ளிக் கல்வி துறை, நாள் 8.12.1999.
3. அரசாணை (நிலை) எண் 14, பள்ளிக் கல்வித் துறை, நாள் 9.2.2005.

**ஆணை :**

அரசாணை (நிலை எண். 14. பள்ளிக் கல்வித் துறை, நாள் 9.2.2005இல் வெளியிடப்பட்டுள்ள ஆணை நீக்கம் செய்யப்படுகிறது.

2. அரசுப் பள்ளிகளில் கட்டடங்களை தங்கள் சொந்த செலவிலேயே கட்டிக்கொடுக்க முன்வரும் நன்கொடையாளர்கள் விரும்பும் பெயரை அந்தக் கட்டடத்தில் பொறிக்கவும். அது குறித்து நன்கொடை மதிப்பீட்டைப் பின்வருமாறு நிர்ணயித்தும் அரசு ஆணையிடுகிறது

(அ) தொடக்கப் பள்ளியில் 2 வகுப்பறைகள் அல்லது ரூ.5.00 இலட்சத்திற்கு குறையாமலும் (ரூபாய் ஐந்து இலட்சம்)

(ஆ) நடுநிலைப் பள்ளியில் 3 வகுப்பறைகள் அல்லது ரூ.7.50 இலட்சத்திற்கு குறையாமலும் (ரூபாய் ஏழு இலட்சத்து ஐம்பது ஆயிரம்)

(இ) உயர்நிலைப் பள்ளியில் 4 வகுப்பறைகள் அல்லது ரூ. 15.00 இலட்சத்திற்கு குறையாமலும் (ரூபாய் பதினைந்து இலட்சம்)

(ஈ) மேல்நிலைப் பள்ளியில் 6 வகுப்பறைகள் அல்லது ரூ.20.00 இலட்சத்திற்கு குறையாமலும் (ரூபாய் இருபது இலட்சம்)

3. நன்கொடை வழங்குவோர் விருப்பப்படி அவர்கள் கேட்டுக் கொள்ளும் பெயர் சூட்டப்படும் கோரிக்கைகள் தொடர்பாக அரசின் ஒப்புதல் பெறப்பட வேண்டும். மேலும் அரசாணை (நிலை) எண் 1003, கல்வித் துறை நாள் 22.5.76இல் நிர்ணயிக்கப்பட்ட விதிமுறைகள் தொடர்ந்து பின்பற்றப்பட வேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

ம.குற்றாலிங்கம்
அரசு செயலாளர்

## GOVERNMENT OF TAMILNADU

### ABSTRACT

**School Education - Admission in Std XI in Schools in Tamil Nadu - Implementation of High Court directions - Orders - Issued.**

---

**School Education (V) Department**

**G.O.Ms. No. 126** **Dated : 11.06.2007**

**Read :**

1. From the High Court, Madras, Order dated 9.6.2007 in W.P. No. 19834/2007.
2. From the Director of School Education, Letter No. 44136/W1 (4) (2), dated 11.6.2007.

**ORDER :**

In W.P. No 19834/2007 filed by one Selvan A. Mohammed Wasif, the High Court, Madras has issued the following directions on 9.6.2007.

(a) Admission of a student from class X to class XI within the same school should not be treated as a fresh admission but only as continuation of the original admission done in that school. So issuing transfer certificate to class X students within the same school and readmitting them to class XI is against the rules.

(b) All the students of the same school who have qualified in class X Board Examination should be offered admission in Class XI as far as possible subject to the availability of seats. The schools may consider students from other schools for admission after accommodating the students of their own school.

(c) No admission test should be conducted by schools for their own students. After admitting their own students if there are still vacancies, they may be filled either on the basis of the Class X Board Examinations or by conducting an admission test for the students who are from other schools.

(d) No school should prescribe any cut-off marks for admission to class XI or for allotment of subject.

2. With a view to implement the directions of the High Court, Madras, the Government direct the Director of School Education / Director or Matriculation School, Chennai to communicate these orders of forthwith to all the Higher Secondary Schools in Tamil Nadu for strict compliance.

3. The following procedure laid down by the High Court. Madras shall be followed regarding admission of students in Standard XI;

The Director of School Education / Director of Matriculation Schools, Chenenal is requested to instruct all the Higher Secondary Schools in Tamil Nadu to display the number of seats available in Class XI in each stream on the notice boards as well as on the websites, if any, of the respective schools. The admission procedure, including the list of all the candidates who have applied in the respective schools, the merit list, if any, the list of provisionally selected candidates and the criteria followed for admission shall also be displayed on the notice boards of the schools. The Director of Schoold Education / Director of Matriculation Schools, Chennai is also requested to instruct all the Higher Secondary Schools in Tamil Nadu tocommunicate the above information to the partents of the students in Class X of their respective schools.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**M.KUTRALINGAM,**
Secretary to Government

## GOVERNMENT OF TAMILNADU

### FINANCE (PENSION) DEPARTMENT

### G.O. No. 458, Dated 21st September 2007

(Sarvajith Puratasi-4, Tiruvalluvar Aandu 2038)

Tamil Nadu Government Pensioners' Health Fund Scheme - Relaxation of certain stipulations - Orders issued.

---

**READ**

1. G.O.Ms. No. 562, Finance (Pension) Department, dated 11.7.1995
2. G.O.Ms. No. 818, Finance (Pension) Department, dated 20.10.1995
3. G.O.Ms. No. 207, Finance (Pension) Department, dated 22.04.1997
4. G.O.Ms. No. 379, Finance (Pension) Department, dated 16.07.1997
5. G.O.Ms. No. 587, Finance (Pension) Department, dated 9.10.1998
6. G.O.Ms. No. 400, Finance (Salaries) Department, dated 29.8.2000
7. G.O.Ms. No. 404, Finance (Pension) Department, dated 9.10.2001
8. G.O.Ms. No. 377 Finance (Salaries) Department, dated 13.10.2005
9. G.O.Ms. No. 378, Finance (Pension) Department, dated 13.10.2005
10. G.O.Ms. No. 88, Finance (Salaries) Department, dated 20.03.2007
11. G.O.Ms. No. 128, Finance (Pension) Department, dated 12.4.2007
12. G.O.Ms. No. 400, Finance (Salaries) Department, dated 29.08.2007
13. G.O.Ms. No. 440, Finance (Pension) Department, dated 13.09.2007

**ORDER :**

The Government in their order first read above had constituted a fund called, 'Tamil Nadu Government Pensioners' Health Fund" to provide financial assistance to pensioners for undergoing specialised treatment / Surgery if they are affected by major ailments. The approved list of the Special treatment / Surgeries and a list of Private Hospitals accredited were annexed to the said Order to provide assistance from the fund to the pensioners for undergoing treatment. In the Government Order second read above Eye surgery / Treatment was included under the Tamil Nadu Pensioners Health Fund Scheme. In the Government Order third read above. procedure for grant of assistance to the Tamil Nadu Government Pensioners who are drawing pension from the Treasuries / Sub Treasuries and under the Public Sector Bank Scheme outside the State was also issued. In the Government Order seventh read above orders were issued for Increasing the contribution towards the Fund by pensioners from Rs.5/- to Rs.10/ - p.m. with effect from 1.10.2001 in order to continue the scheme on self financing basis. Under this scheme an assistance of Rs.50,000/- or 75% of the actual cost of treatment whichever is less is given to pensioners in the Government order thirteenth read above, orders were issued for accreditation of additional registered private hospitals.

2. In the Government order eleventh read above some new hospitals have been approved for availing assistance for the specialities under the Tamil Nadu Government Pensioners' Health Fund Scheme.

3. In recent decisions of High Court Madras at Chennai and its bench at Madurai it has been observed that it cannot be the policy of the Government to list specified hospitals in respect of Medical reimbursement so as to enable the retired Government Servants to become eligible under the schemes

for reimbursement. In another case the Apex Court has observed that the denial of Medical aid will amount to the denial of fundamental right guaranteed under Article 21 of the Constitution and in as much as the petitioner has teken medical treatment, the petitioner who has an ailment, could not be expected to stand in queue in any of the listed hospitals. Further it has also been observed that the vast strides in the medical field has opened up a number of hospitals providing speciality treatment and hence the patient's priority to avail immediate treatment and the large number of new hospitals with such facilities have to be considered.

4. The Government after careful consideration of the above issues relating to treatment / surgeries approved under the Tamil Nadu Government Pensioners' Health Fund Scheme but availed in unaccredited hospitals pass the following orders:-

i) In partial modification of the orders issued in para 3 of the Government order ninth read above, it is hereby ordered that Pensioners who undergo specialised advanced surgeries / treatments in respect of diseases which are included in the list approved under the Tamil Nadu Government Pensioner's Health Fund Scheme, in unaccredited hospitals shall also be eligible for the maximum grant of Rs.50,000/- (Rupees fifty thousand only) or 75% (seventy five per cent) of the actual cost of such surgery / treatment whichever is less from the date of issue of these orders subject to the following procedure.

a) The Pension Pay Officer / District Treasury Officer / Sub - Treasury Officer / Branch Manager of the Public Sector Bank after satisfying himself about the details furnished in the application received in his office, shall consult the District Medical Officer attached to the Government Hospitals under the control of Director of Medical and Rural Health services in the District and the Director of Medical Education in Chennai as the case may be, who shall certify the existence of facilities and infrastructure for the treatment / surgery undergone in the hospital and through Penison Pay Officer / Treasury Officer / Sub-Treasury Officer / Branch Manager of the bank concerned shall send the claim to Director of Pension within a week.

ii) The procedure for availing assistance to treatments approved under Tamil Nadu Goverment Pensioner's Health Fund Scheme through accredited hospitals shall remain unchanged.

5. The other terms and conditions of the scheme shall remain unchanged.

**(By order of the Governor)**

**K.GNANADESIKAN**
Secretary to Government.

# தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

**தொடக்கக்கல்வி-தமிழ்நாடு தொடக்கக் கல்வி சார்நிலைப் பணி - உதவி தொடக்கக் கல்வி அலுவலர் பணியிடங்கள் - நேரடி நியமனம் (Direct recruitment) - ஆணை வெளியிடப்படுகிறது.**

**பள்ளிக் கல்வித் (ஜி1) துறை**

அரசாணை (நிலை) எண்.182 நாள் : 25.07.2007

**படிக்கப்பட்டது :**

தொடக்கக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.5220/ஜி1/2006 நாள் : 13.2.2006, 29.03.2007 மற்றும் 21.05.2007.

**ஆணை :**

மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சர் அவர்களால் 2007-2008 **ஆம்** ஆண்டு பள்ளிக் கல்வித்துறை மான்ய கோரிக்கையின் போது கீழ்க்கண்ட அறிவிப்பு வெளியிடப்பட்டது.

"தொடக்கக் கல்வி இயக்கத்தில் நிர்வாகம் மற்றும் கல்வி ஆய்வு பணிகளை மேற்கொள்ளும் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் பணியிடங்களில் 50 விழுக்காடு நேரடி நியமனம் மூலம் நிரப்பப்படும்"

2) தொடக்கக் கல்வி இயக்ககத்தில் தொடக்கக் கல்வி சார்நிலைப்பணி சிறப்பு விதிகளில் வரையறுக்கப் பட்டுள்ளவாறு உதவி தொடக்கக் கல்வி அலுவலர் பணியிடங்கள் நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களைக் கொண்டு பணி மாறுதல் மூலம் (Recruitment by Transfer from Headmaster or Headmistres of Middle Schools with B.Ed. qualification) நிரப்பப்படுகின்றன.

3) மேலே படிக்கப்பட்ட கடிதங்களில், தொடக்கக் கல்வி இயக்குநர் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேலாகியும் கூட அவர்கள் தங்கள் நிர்வாகத் திறமையை செவ்வனே வளர்த்துக் கொள்ளவில்லை என்றும் இதனால் ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு வழங்குதல், ஒய்வூதிய பணிக்கொடை பெற்றளிக்கும் அதிகாரம் உள்பட நிதி அதிகாரங்களை சரிவர செயல்படுத்த இயலவில்லை என்றும், பெரும்பாலும் கற்பித்தல் பணியில் ஈடுபட்டு வந்த நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் பணிமாறுதல் மூலம் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்களாக நியமிக்கப்படுவதால், அவர்கள் இப்பதவிகளை முழுப்பொறுப்புகளுடன் திறம்பட வகிப்பதில் போதிய அனுபவம் பெற இயலாத நிலையில் உள்ளனர்.

4) மேலும் தற்போதுள்ள உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் பணியிடங்களில் நேரடி நியமனம் மேற்கொள்ளப்படின், இளம் வயதில் உள்ளவர்கள் துடிப்புடனும், ஆர்வத்துடனும் பணியாற்றுவார்கள் என்பதால், உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்பலாம் என்றும், அதன் தொடர்பாக கீழ்க்கண்ட கருத்துருவினை அரசின் பரிசீலனைக்காகவும் தொடக்கக் கல்வி இயக்குநர் பரிந்துரைத்துள்ளார்.

(i) ஒவ்வொரு ஆண்டும் ஜுன் முதல் தேதியன்று காலி ஏற்படும் நிரந்தர பணியிடத்தில் 50% பணியிடத்தை நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களிலிருந்து பதவி உயர்வு மூலமாகவும் மீதமுள்ள 50% பணியிடங்களை நேரடி நியமனம் மூலமாகவும் நிரப்பலாம்.

(ii) இந்த நேரடி நியமனத்திற்கு அலுவலர்களை தேர்வு செய்யும் பணி "ஆசிரியர் தேர்வு வாரியம்" மூலம் மேற்கொள்ளலாம்.

(iii) இப்பணிக்குத் தேர்வு செய்யப்படுவோர் கீழ்க்கண்ட கல்வித் தகுதிகளை பெற்றிருக்க வேண்டும்.

அ) ஒவ்வொரு ஆண்டில் வேலை வாய்ப்பு மதிப்பீடு அனுப்பும் போது, தொடக்கக் கல்வி இயக்குநரால் நிர்ணயிக்கப்படும் மொழி அல்லது பாடத்தில் மாநிலத்தில் உள்ள பல்கலைக் கழகம் ஒன்றினால் வழங்கப்பட்ட இளங்கலைப் பட்டம் அல்லது அதற்கு இணையான பட்டம் மற்றும் இம்மாநிலத்தில் பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் பி.எட்., பட்டம் (தொடக்கக் கல்வியில் பயிற்றுவிக்கப்படும் பாடங்களுக்குரிய இளங்கலைப் பட்டம் தமிழ், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல், விலங்கியல், தாவரவியல், உயிரியல், வரலாறு, புவியியல் பாடங்கள் மட்டும்)

ஆ) பட்டதாரி ஆசிரியர்களுக்கு தற்போது வயது வரம்பு நீக்கப்பட்டு விட்டது எனினும் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் பணியிடம் நிர்வாகப் பணியிடம் என்பதால் வயது வரம்பு 35 என நிர்ணயம் செய்யப்படும்.

இ) இப்பதவிக்கென இனவாரி சுழற்சி முறை கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

ஈ) உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்களாக நியமனம் பெற்று தகுதிகாண் பருவ காலத்திற்குள் கீழ்க்கண்ட துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெறப்பட வேண்டும்:-

i) சார்நிலை அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு பாகம் - 1

ii) தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல்.

iii) பள்ளித் துணை ஆய்வர் தேர்வு பாகம் - i

iv) பள்ளித் துணை ஆய்வர் தேர்வு பாகம் - ii

v) பள்ளித் துணை ஆய்வர் தேர்வு பாகம் - iii (கல்விப் புள்ளியியல்)

vi) மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள் நேரடி நியமனம் மூலம் நியமனம் செய்யப்படும் போது 6 மாத காலம் நிர்வாக பயிற்சி பெற அனுமதிப்பது போல இவ்வாறு நேரடி நியமனம் மூலம் நியமனம் செய்யப்படும் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள் 3 மாத காலம் நிர்வாகப் பயிற்சி பெற வேண்டும். இவ்வாறு பயிற்சிக்கு சேரும் நாளிலிருந்து மூன்று மாதம் முடிந்து முறையான உதவித் தொடக்கக் கல்வி அலுவலராக நியமனம் செய்யப்படும் நாள் வரை உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் பணிக்கான ஊதிய விகிதத்தில் ஊதியம் வழங்கப்படும். இந்த பயிற்சி காலம் தகுதிகாண் பருவத்திற்கும் ஊதிய உயர்வுக்கும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

vii) அநேகமாக அனைத்து உதவித் தொடக்கக் கல்வி அலுவலகங்களிலும் ஒரு உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் மற்றும் ஒரு கூடுதல் உதவித் தொடக்கக்கல்வி அலுவலர் உள்ளனர். இவர்களில் படிப்படியாக ஒரு அலுவலகத்தில் நேரடி நியமனம் மூலம் நியமனம் செய்யப்பட்ட வரும் மற்றவர் பதவி உயர்வு மூலம் நியமனம் செய்யப்பட்ட வரும் இருக்குமாறு நியமன உத்தரவ (Postings) அளிக்கப்பட செய்வது நிர்வாக மேம்பாட்டிற்கு உதவும்.

மேலும், உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கு தற்போது மேற்கொண்டு பதவி உயர்வு வாய்ப்புகள் இல்லாததால், மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலராக பதவி உயர்வு அளிக்க வேண்டிய அவசியம் எழக்கூடும் என்றும், உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள் / மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்கள் / மாவட்டக் கல்வி அலுவலர்கள் பதவிக்கு வருவதாக இருந்தால், மாவட்ட கல்வி அலுவலர், மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களுக்குள்ள நியமன முறையான உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பதவியிலிருந்து பதவி உயர்வு மூலம் நியமனம் பெறுதல் என்ற நிலை ஏற்படக்கூடும் என்றும், உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள், மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் பதவியில் ஊட்டுப் பதவியான உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியராக பணி மாறுதல் மூலம் முதலில் நியமனம் பெற்று அதன் பின்னர், உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பதவியின் பொதுவான முன்னுரிமையின்படி பள்ளி கல்வித்துறையில் பதவி உயர்வு பெறலாம் என்றும் தொடக்கக் கல்வித்துறையில் பதவி உயர்வு பெறலாம் என்றும் தொடக்கக் கல்வி இயக்குநர் கருத்துரைத்துள்ளார்.

5. மேலே பத்தி மூன்று மற்றும் நான்கில் உள்ள தொடக்கக் கல்வி இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலித்து அதனை ஏற்கலாம் என முடிவு செய்து, தற்போதுள்ள உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் பணியிடங்களில் ஒவ்வொரு ஆண்டும் காலியேற்படும் நிரந்தர பணியிடத்தில் 50% பணியிடத்தை நேரடியாக (by direct recruitment) ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் நிரப்பலாம் என அரசு ஆணையிடுகிறது. மேலும், தற்போது பணிபுரியும் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கு நேரடியாக மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களாக பதவி உயர்வு அளிக்க இயலாது என்பதால், இவர்களுக்கு 3 விழுக்காடு பணியிடத்தை உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியராக பணிமாறுதல் மூலம் நிரப்பிட ஒதுக்கீடு செய்யலாம் என்றும் அரசு ஆணையிடுகிறது.

6. முன்பக்கம் பத்தி ஐந்தில் ஆணையிட்டதிற்கிணங்க, தமிழ்நாடு தொடக்கக் கல்வி சார்நிலைப் பணி சிறப்பு விதிகளுக்கு உரிய திருத்தங்கள் தனியே வெளியிடப்படும். இதன் தொடர்பான வரைவு சட்ட திருத்தத்தினை அரசுக்கு விரைவில் அனுப்பி வைக்குமாறு தொடக்கக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ம.குற்றாலிங்கம்**
அரசுச் செயலர்

# தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

**பள்ளிக் கல்வி - பள்ளி வளாகங்களில் மாணவர்கள் செல்போன் கொண்டு வருவதை தடை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.**

**பள்ளிக் கல்வித் (இ1) துறை**

அரசாணை (நிலை) எண்.261 நாள் : 15.10.2007

படிக்கப்பட்டவை:-

பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.83950/எம்3/07 நாள் : 03.10.2007

**ஆணை :**

பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகள் பள்ளிகளில் செல்போன் பயன்படுத்துவதால், மாணவர்களின் கவனம் முழுக்க கல்வி கற்பதிலிருந்து திசை திரும்புவதனால், ஆசிரியர்களின் கல்வி கற்பிக்கும் திறனும் வீணடிக்கப்படுகிறது என்றும், விடுப்பு நேரங்களில் பாடங்களில் கவனம் செலுத்தாமல் செல்போன் மூலம் குறுஞ்செய்தி அனுப்புவதிலேயே கவனம் செலுத்தும் மாணவ / மாணவியரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது என்றும் பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. பள்ளிக் கூடங்களில் செல்போன் பயன்படுத்துவதை முழுமையாக தடை செய்வதினால் மாணவர்கள் மிகுந்த பயனடைவதுடன் கல்வியில் நல்ல அக்கறை செலுத்துவார்கள் என்றும் ஆசிரியர்களின் கல்வி கற்பிக்கும் திறமையை முழுமையாக பயன்படுத்திக் கொண்டு சிறந்த மாணவர்கள் உருவாக வாய்ப்பு உண்டு என்று கருதுவதால் தமிழகத்தில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் மாணவ / மாணவியர் வயது வரம்பின்றி செல்போன் பயன்படுத்துவதை தடை செய்ய ஆணை வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

3. மேற்கண்ட சூழ்நிலையில் பள்ளிக் கல்வி இயக்குநரின் பரிந்துரையினை ஏற்று தமிழகத்தில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் பயிலும் மாணவ / மாணவியர்கள் வயது வரம்பின்றி பள்ளி வளாகங்களுக்குள் செல்போன் கொண்டு வருவதை தடை செய்ய அரசு முடிவெடுத்துள்ளது. அரசின் இம்முடிவிற்கேற்ப மாணவ / மாணவியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு தகுந்த அறிவுரைகளை வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம.குற்றாலிங்கம்
அரசுச் செயலாளர்

# தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

பள்ளிக்கல்வி - அரசு உதவி பெறும் பள்ளிகள் - அரசாணை (நிலை) எண்.244, பள்ளிக்கல்வி நாள் 22.09.2007- அரசு உதவிபெறும் பள்ளிகளில் சார்பான தெளிவுரைகள் - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

**பள்ளிக் கல்வித் (டி1) துறை**

அரசாணை (நிலை) எண்.144 நாள் : 04.07.2008

ஆனி 20 திருவள்ளுவராண்டு 2039

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.244, பள்ளிக் கல்வி (வ.செ) துறை, நாள்:22.09.2008.
2. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.95088/ஜி3/இ2/07, நாள் : 21.12.2007.

ஆணை :

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின் பத்தி 4(vi)ல் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு ஆணையிடப்பட்டுள்ளது.

6, 7, 8 வகுப்புகளில் ஆங்கிலம், அறிவியல், கணிதம் ஆகிய பாடங்களில் தேர்ச்சி பெற்ற பி.எட்., பட்டதாரிகளுக்கு மட்டும் நியமனம் செய்ய முன்னுரிமை வழங்கப்படுவதற்குப் பதிலாக இனி 6,7,8 வகுப்புகளில் காலி ஏற்படும் பணியிடங்களில் கணிதம், ஆங்கிலம், அறிவியல் தவிர்த்த பிற பாடங்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

2. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட பள்ளிக்கல்வி இயக்குநரின் கடிதத்தில், மேலே பத்தி 1ல் குறிப்பிடப்பட்டு உள்ள ஆணையில் பாடவாரிப் பணியிடங்கள் வரையறுக்கப்படவில்லை என்றும், எனவே இது பொருளில் 6-10 வகுப்புக்களை ஒரே அலகாகக் கொண்டு இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் நிரந்தரமாக காலியேற்படும் போது அப்பள்ளியின் தேவை மற்றும் தகுதியின் அடிப்படையில் தேவையான பாடத்தில் பட்டதாரி ஆசிரியர் பணியிடமாக மாற்றம் செய்திட சம்மந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர்க்கு அதிகாரப் பகிர்வு வழங்கலாம் எனவும். இது பொருளில் ஒரு தடவை பாடநிலை (தமிழ், ஆங்கிலம், கணிதம், அறிவியல், சமூக அறிவியல்) பட்டதாரி ஆசிரியர் பணியிடம் முதன்மைக் கல்வி அலுவலரால் நிர்ணயம் செய்யப்பட்ட பின்னர் எக்காரணம் கொண்டும் எதிர்காலத்தில் மாற்றப்படலாகாது எனவும், நிபந்தனை விதிக்கலாம் எனவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன், இது பொருளில் தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 1974ன் விதி 15(1)ல் கூடுதலாகச் சேர்த்திட உரிய திருத்திய ஆணை வழங்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

3. ஆழ்ந்த பரிசீலனைக்குப் பின்னர் மேலே பத்தி 3ல் உள்ள பள்ளிக் கல்வி இயக்குநரின் பரிந்துரையினை ஏற்று, பின்வருமாறு ஆணையிடப்படுகின்றது.

(i)அரசாணை (நிலை) எண். 244 பள்ளிக்கல்வி நாள் 22.09.2007 பத்தி 4 (vi)ல் வெளியிடப்பட்டுள்ள ஆணை அரசு உதவிப் பெறும் பள்ளிகளுக்கும் பொருந்தும்

(ii) அரசு உதவிபெறும் பள்ளிகளில் 6,10 வகுப்புகளை ஒரே அலகாகக் கொண்டு இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் நிரந்தரமாக காலியேற்படும் போது, அப்பள்ளியின் தேவை மற்றும் தகுதியின் அடிப்படையில், தேவையான பாடத்தில் பட்டதாரி ஆசிரியர் பணியிடமாக மாற்றம் செய்திட சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர்க்கு அதிகாரம் வழங்கப்படுகின்றது. மற்றும்

(iii) ஒரு முறை பாடநிலை (தமிழ் ஆங்கிலம், கணிதம், அறிவியல், சமூகஅறிவியல்) பட்டதாரி ஆசிரியர் பணியிடம் முதன்மைக் கல்வி அலுவலரால் நிர்ணயம் செய்யப்பட்ட பின்னர் அது எக்காரணம் கொண்டும் எதிர்காலத்தில் மாற்றப் படக்கூடாது.

4. மேலே பத்தி 3ல் உள்ள ஆணைகள் தொடர்பாக, தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 1974ன் தொடர்புடைய விதிகளுக்கு திருத்தம் வெளியிடப்படுவதற்காகத் தனியே தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

ம.குற்றாலிங்கம்

அரசுச் செயலர்

## GOVERNMENT OF TAMILNADU

**Letter No.1753/Finance (All) / 2010-1, dated 14.01.2010**
**Thai 1, Thiruvalluvar Aandu 2041**

From

Thiru M.Padmanabhan, B.Com.,
Joint Secretary to Government.

To

The Principal Secretary / Commissioner of Treasuries and Accounts,
No.1, Jeenis Road, Panagal Buildings,
II Floor, Saidapet,
Chennai - 600 0015 (w.e)

Sir,

Sub : Bonus - Adhoc Bonus - Special Adhoc Bonus for the year 2008-2009 - Sanction - Orders - Issued - Certain clarification - sought for - Regarding.

Ref : 1. G.O.Ms.No.119/P&AR/ Dt. 9.9.2009
2. G.O.Ms.No.1/Fin. (All). Dt. 2.1.2010
3. Your Letter No.1287/2010/D2 dated 11.01.2010, addressed to the Joint Secretary to Government, Finance (All) Department, Secretariat, Chennai-9.

I am directed to invite attention to the reference cited and to clarify the following:

**Points raised :** Whether a Group 'C' employee who is in the category of Selection Grade / Special Grade but drawing Grade Pay applicable to Group 'B' may be paid Bonus of Rs.3,000/- taking into account the ordinary grade of the post held by him.

**Points clarified :** Yes, The clarification of Government Servants ordered in the Government order first referred above is only ordinary grade. Hence an employee who is in Group 'C' i.e in ordinary grade of the post held by him and moves to the category of Selection Grade / Special Grade but drawing Grade pay applicable to Group 'B' may be paid Bonus of Rs.3,000/-.

**Points raised :** An employee who has rendered service for major part of 2008-09 in Group 'C' and subsequently moved to Group 'B'. It may kindly be clarified as to whether such employee may be paid propertionate Bonus applicable to Group 'C' only. It is presumed that such employee may be paid Bonus only in the event of rendering a minimum period of 6 months in Group 'C'. Further they are not eligible for proportinate Adhoc Bonus applicable to Group 'B' after they have been paid proportionate Bonus for Group 'C'.

**Points clarified :** The clarification issed vide Letter No.8093/Fin.(All)/97-1, dated 19.02.1997 (Copy enclosed) holds good now also.

Yours faithfully,
For Joint Secretary to Government.

## GOVERNMENT OF TAMILNADU

FINANCE (ALLOWANCES) DEPARTMENT,
FORT ST. GEORGE,
CHENNAI 600 009.

**Letter No. 8093/Fin (All) 97-1,** **Dated:19.2.1997.**

From

Thiru S.K.Subramanian, B.A., B.Com.,
Joint Secretary to Government.

Sir,

Sub : Bonus - Adhoc Bonus - Special Adhoc Bonus for the year 1995-1996 - Sanctioned - Clarification - Regarding.

Ref : 1. G.O.Ms.No.760, Finance (Allowances) Department, Dated 31.12.1996.

2. From the Director of Seed Certification, Coimbatore letter No.B1/1848/97, dated 22.1.1997.

I am to state that certain clarifications have been raised by the Director of Seed Certification for the payment of Adhoc Bonus Special Adhoc Bonus sanctioned in the G.O. cited. The following clarifications are issued on the points raised:-

**Points raised :** An employee in Group "C" category (Superintendent) has been promoted to higher post in Group "B" category (Administrative Officer) at the fag end of the financial year, 1995-96. Whether he is eligible for Adho. Bonus or Special Adhoc Bonus?

**Points clarified :** If an employee rendered more than 6 months service in Group "C" post, he shall be allowed proportionate Adhoc Bonus based on the basic pay, Personal Pay, Special Pay and Dearness Allowance drawn in the post in Group "C" category prior to promotion to Group "B" category and not on the pay drawn on 31.03.96 in Group "B" category, Hence, the employee will be eligible for proportionate Adhoc Bonus only.

**Points raised** : Whether they may be allowed proportionate Adhoc Bonus for the service rendered in Group "C" category and proportionate Special Adhoc Bonus for the service rendered in Group "B" post.

**Points clarified** : No. (i) Employees who have rendered service of six months and above in Group "C" are eligible for proportionate Adhoc Bonus only.

(ii) If an employee rendered service less than six months in Group "C" and more than 6 months in Group "B", he may be allowed full Special Adhoc Bonus of Rs.625/- taking into account the entire service in that year.

Yours faithfully,

For Joint Secretary to Government

அனுப்புநர்
திரு.மோகன் பியாரெ, இ.ஆ.ப.,
ஆணையர், (கூ/பொ),
அரசு தகவல் தொகுப்பு விவர மையம்,
சென்னை - 600 025.

பெறுநர்
உதவி தொடக்கக் கல்வி அலுவலர்,
துரிஞ்சாபுரம் - 606805.
திருவண்ணாமலை மாவட்டம்.

**ந.க.எண்.5825/உ2/2010, நாள் 20.10.2010**

பொருள்: ஆசிரியர் வைப்பு நிதி - ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்கள் 1994-95 கணக்கு சீட்டு நகல் வழங்க கோருதல்.

பார்வை : தங்களது கடித எண்.315/அ2/2010, நாள் : 02.09.2010.

பார்வையில் கண்ட தங்களது கடிதத்தின் பால் கவனம் ஈர்க்கப்படுகிறது.

இவ்வலுவலகத்தில் 1994-95ம் ஆண்டு முதல் 2006-07 முடிய கணக்குத்தாள் தொகுத்து வழங்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இம்மையத்தில் ஆசிரியர் வைப்புநிதி கணக்குகள் பராமரிக்கப்படுவதில்லை. தொகுக்கும் பணிகள் மட்டுமே நடைபெறுகிறது. ஆசிரியர் வைப்புநிதி கணக்குச் சீட்டுகளில் அவர்களது பேரரேட்டில் உள்ள தொகையுடன் ஒப்பிட்டுப் பார்த்து கணக்குச் சீட்டுகளில் கையொப்பமிட சம்மந்தப்பட்ட உதவி தொடக்கக் கல்வி அலுவலர் அதிகார ஒப்பளிப்பு பெற்ற தகுதியுடைய அதிகாரி ஆவார்.

மேலும், பணியிலிருந்து ஓய்வு பெறும் ஆசிரியர்களின், ஆசிரியர் வைப்புநிதி இறுதி கணக்குகளை பேரேட்டில் உள்ளவாறு முடித்து ஒப்பளிப்பு ஆணை வழங்கவும், பணியிலிருக்கும் போது இறக்கும் ஆசிரியர்களின் கணக்குகளை முடித்து ஒப்பளிப்பு வழங்கவும் சம்மந்தப்பட்ட உதவி தொடக்கக் கல்வி அலுவலரே தகுதியுடைய அதிகாரி ஆவார்.

எனவே, ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு கணக்குத்தாள் இவ்வலுவலகத்தில் வழங்கி இருந்தாலும், வழங்காமல் இருந்தாலும் அவர்களது ஆசிரியர் வைப்புநிதி கணக்குகளை முடித்து ஆணை வழங்கும் அதிகாரி உதவி தொடக்கக் கல்வி அலுவலரே ஆவார்.

எனவே, பேரேட்டில் உள்ளவாறு தொகைகளை சரிபார்த்து, வட்டி கணக்கிட்டு ஓய்வு பெற்ற அல்லது இறந்த ஆசிரியர்களது கணக்கினை முடித்து தருமாறு உதவி தொடக்கக் கல்வி அலுவலர் அவர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

ஆணையாளருக்காக
அரசு தகவல் தொகுப்பு விபர மையம்
சென்னை - 25

// உண்மை நகல் //

## தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை-6
## ஒ.மு.35050/சி2/2010 - நாள் : 24.12.10

பொருள்: அலுவலர் வைப்பு நிதி - ஓய்வு பெற்ற ஆணையர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்கள் 1994-95 கணக்குச் சீட்டு நகல் வழங்கக் - கோருதல்.

பார்வை : சென்னை அரசுத் தகவல் தொகுப்பு விவர மைய ஆணையரின் கடித ந.க.எண்.5825/22/2010, நாள்: 20.10.2010 (துரிஞ்சாபுரம் உதவி தொடக்கக் கல்வி அலுவலருக்கு முகவரியிடப்பட்டது.)

பார்வையில் காணும், சென்னை-25 அரசு தகவல் தொகுப்பு விவர மைய ஆணையரின் நகல் இத்துடன் இணைத்து தக்க நடவடிக்கையின் பொருட்டு அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பப்படுகிறது. கடிதத்தில் தெரிவிக்கப்பட்டவாறு அனைத்து உதவி தொடக்கக் கல்வி அலுவலருக்கும் தக்க அறிவுரைகள் வழங்கவும் அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலருக்கு தெரிவிக்கலாகிறது.

தொடக்கக் கல்வி இயக்குநருக்காக.

// உண்மைநகல் //

## தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை-6
## ந.க.எண்.12118/டி1/2011, நாள் : 13.09.2011

பொருள்: தமிழ்நாடு தொடக்கக் கல்வி - ஆசிரியர் பொதுமாறுதல் மற்றும் பதவி உயர்வு - 2011-2012ம் கல்வியாண்டில் கடைபிடிக்க வேண்டிய திருத்திய நெறிமுறைகள் - சார்பு.

பார்வை : 1. தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், ந.க.எண்.012118/டி1/2011, நாள் : 26.04.2010.

2. அரசாணை (1டி) எண்.259, பள்ளி கல்வித் (இ1) துறை, நாள் : 09.09.2011.

2011-2012 ஆம் கல்வியாண்டில் ஆகிரியர்களுக்கான பொதுமாறுதல் நடத்துவது தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்த அறிவுரைகள் பார்வை 1ல் காணும் இவ்வியக்கக செயல்முறைகள் மூலம் அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்பட்டது. தற்போது பொது மாறுதலுக்கான நெறிமுறைகள், பார்வை 2ல் காணும் அரசாணையில் வழங்கப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக திருத்திய நெறிமுறைகள் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது.

2. ஆசிரியர்களுக்கான மாறுதல் மற்றும் பதவி உயர்வு வழங்குவதற்கான கலந்தாய்வு 16.09.2011, 17.09.2011, 19.09.2011 மற்றும் 20.09.2011 ஆகிய நாட்களில் பின்வரும் அட்டவணைப்படி நடத்தப்பட வேண்டும். கலந்தாய்வினை எவ்வித புகாருக்கும் இடமின்றி ஒளிவுமறைவற்ற முறையில் விதிகளின்படி நடத்துதல் மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களின் முக்கியக் கடமையாகும்.

3. கலந்தாய்வு நடைபெறும் இடம், மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் மூலம் இவ்வியக்ககத்தில் பெறப்பட்டு, மாநில அளவில் மாவட்ட வாரியாக கலந்தாய்வு நடைபெறும் நாள், இடம் ஆகிய விவரங்கள் பத்திரிகை வாயிலாக வெளியிடப்பட உள்ளது. அவ்வாறே மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்கள் தத்தம் மாவட்டங்களில் கலந்தாய்வு நடைபெறும் இடம் மற்றும் மையங்கள் சார்ந்த விவரங்களை அனைத்து உள்ளூர் பத்திரிகையில் வெளியாகும் வண்ணமும், உள்ளூர் தொலைக்காட்சிகளில் செய்திகள் வெளியிடுவதற்கு தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

4. பணியிட வாரியாக காலிப் பணியிட விவரங்கள் கலந்தாய்வு நடைபெறும் மையங்களில் கலந்தாய்வு நாளன்று தகவல் பலகையில் ஒட்டப்பட வேண்டும். கலந்தாய்வின்போது மேற்பார்வையிட இணை இயக்குநர் அளவில் அலுவலர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். எனினும் அந்தந்த மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்களை அணுகி அவர்களது ஆலோசனைகளின் பேரில் சிறப்பாக நடத்திடவும், கலந்தாய்விற்கு தேவையான மூத்த தலைமை ஆசிரியர்களை நியமனம் செய்து கொள்ளவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

5. உபரியாக உள்ள காலிப்பணியிடத்தில் எவ்வித மாறுதலும் வழங்கிடுதல் கூடாது. அதேபோன்று ஆசிரியருடன் உபரியாக உள்ள பணியிடத்திலிருந்து மாறுதல் யாரேனும் பெற்றால் அவ்விடத்தினையும் கலந்தாய்வில் நிரப்பிடக்கூடாது.

6. கலந்தாய்வுக்கு வருகை புரியும் ஆசிரியர்களை பெரிய அறையில் (Hall) அமர வைத்து கலந்தாய்வு சார்ந்த விதிமுறைகளை விளக்கிக் கூற வேண்டும். இவ்வறையில் காலிப்பணியிட விவரங்கள் ஒட்டப்படுதல் வேண்டும். பெரிய அறையிலிருந்து ஆசிரியர்களை ஒன்றியம் வாரியாக அழைத்து சிறிய அறைகளில் அமர வைக்க வேண்டும்.

7. மாறுதல் / பதவி உயர்வு ஆணை பெறும்பொழுது ஆசிரியர்களிடம் கீழ்க்கண்ட படிவத்தில் கையொப்பம் பெற்று ஆணை வழங்க மேற்பார்வையாளராக உதவி தொடக்கக் கல்வி அலுவலர் ஒருவர் ஒவ்வொரு அறைக்கும் நியமிக்கப்படுதல் வேண்டும். ஆசிரியர் எந்த காலிப்பணியிடத்தை தெரிவு செய்துள்ளார் என்பதனை மாறுதல் கோரும் விண்ணப்ப படிவத்தில் பதிவு செய்து சம்மந்தப்பட்ட ஆசிரியரின் முழுகையொப்பம் தேதியுடன் பெறுதல் வேண்டும்.

பதவி உயர்வு / மாறுதல் ஆணை பெற்றுக்கொண்டமைக்கு ஒப்புதல்
நநிபதஆ/ பட்டதாரி ஆசிரியர் / தமிழ் ஆசிரியர் / தொபதஆ/இநிஆ

மாவட்டம் : ஒன்றியம் :

| வ.எண். | ஆசிரியர் பெயர் | பதவி | கையொப்பம் |
|---|---|---|---|
| | | | |

8. மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் கலந்தாய்வு நடைபெறும் அறைகளைக் கண்காணித்து தேவையான ஆலோசனைகளை உடனுக்குடன் வழங்குதல் வேண்டும்.

9. கலந்தாய்வில் கலந்து கொள்ளும் ஆசிரியர்கள் தவிர வேறு எவரையும் கலந்தாய்வு நடைபெறும் அறைகளுக்குள் அனுமதிக்கக்கூடாது.

10. தவிர்க்க முடியாத காரணங்களால் வரஇயலாத ஆசிரியர்களுக்குப் பதில் அவர் அனுப்பும் பிரதிநிதியை கீழ்க்கண்ட படிவத்தைப் பெற்றுக் கொண்டு உரிய ஆதாரத்துடன் அனுமதிக்கலாம்.

11. மாநில முன்னுரிமை அடிப்படையில் 2009ல் இடைநிலை ஆசிரியர்களாக பணிநியமனம் பெற்றவர்களுக்கு மேன்மை தாங்கி உச்சநீதிமன்ற இடைக்கால தீர்ப்பின் படி பணிபுரியும் மாவட்டத்திற்குள் மாறுதல் வழங்கலாம் மாவட்ட மாறுதல்கள் வழங்க தகுதியில்லை.

**தவிர்க்க இயலாத காரணத்தால் பதவி உயர்வு / மாறுதல் கலந்தாய்வில் ஆசிரியர் சார்பாக பிரதிநிதி கலந்து கொள்ள அனுமதி கோரும் படிவம்**

........................................ மாவட்டம் ........................................ ஒன்றியத்தில் ........................................ பள்ளியில் பணிபுரியும் ........................................ ஆசிரியராகிய நான் தவிர்க்கமுடியாத காரணத்தால் / பல்கலைக் கழக தேர்வில் கலந்துகொள்ள வேண்டி உள்ளதால் என்னால் மாறுதல் / பதவி உயர்வு கலந்தாய்வில் நேரடியாக கலந்து கொள்ள இயலவில்லை. எனவே என் சார்பில் ........................................ என்பாரை மாறுதல் / பதவி உயர்வு கலந்தாய்வில் கலந்துகொண்டு ஆணை பெற்றுக்கொள்ள அனுமதிக்குமாறு பணிந்து வேண்டுகின்றேன்.

பிரதிநிதியாக கலந்து கொள்பவரின் கையொப்பம் மற்றும் முகவரி

ஆசிரியர் கையொப்பம்

11. பதவி உயர்வுக்கு தகுதி வாய்ந்த நபர் தாமோ அல்லது தமது சார்பில் வேறு ஒரு பிரதிநிதியோ கலந்தாய்வில் கலந்துகொண்டு பதவி உயர்வு ஆணை பெறவில்லை எனில் அன்னார் பதவி உயர்வு தற்காலிக துறப்பு செய்ததாக கருதப்படும். அதனை பணிப்பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும்.

12. கலந்தாய்வு நடைபெறும் விவரத்தினை காவல் துறைக்குத் தகவல் தெரிவித்துத் தேவையான பாதுகாப்பினை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

13. அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்டத்தில் தரம் உயர்த்தப்பட்ட உயர்நிலைப் பள்ளிகளுக்கு விருப்பத்தின்பேரில் சென்றுள்ள பட்டதாரி ஆசிரியர்களின் பெயர்கள் முன்னுரிமை பட்டியலிலிருந்து நீக்கம் செய்யப்படல் வேண்டும்.

14. ஒவ்வொரு அறையிலும் கீழ்க்கண்ட எண்ணிக்கையில் உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

i) கரும்பலகையில் எழுதக்கூடிய ஒருவர்
ii) கரும்பலகையில் எழுதக்கூடியவற்றை உரிய பதிவேட்டின் பதிவேட்டில் பதிவு செய்யக்கூடிய ஒருவர்.
iii) ஆசிரியரிடமிருந்து அவர்கள் விவரங்கள் அடங்கிய சுயவிவரப்படிவம் பெற்றுக்கொள்ள ஒருவர்.
iv) பதிவேடுகளில் கையொப்பம் பெறுவதற்கு ஒருவர் (அலுவலக உதவியாளர்/பதிவறை எழுத்தர்).
v) கலந்தாய்வு மாறுதல் பணி மேற்கொள்ளும்பொழுது காலி பணியிடங்களின் பெயர்களை கரும்பலகையின் இடது ஓரத்தில் அனைத்து காலிப் பணியிடங்களும் வரிசையாக எழுதப்பட்டிருக்க வேண்டும்.

15. மாறுதலுக்கு வந்துள்ளவர்களை அமரச் செய்துவிட்டு ஒவ்வொரு காலிப் பணியிடமாக வாசிக்க வேண்டும். காலிப் பணியிடத்திற்கு மாறுதல் விருப்பம் தெரிவித்தவர்கள் பணி மூப்பு மற்றும் முன்னுரிமை அடிப்படையில் உரியவருக்கு வழங்க வேண்டும்.

16. பின்னர் இதனால் ஏற்பட்ட காலிப் பணியிடத்தையும் அறிவிக்க வேண்டும். அதற்கு மாறுதல் கோருபவர்களுக்கும் மாறுதல் வழங்கலாம்.

17. இவ்வாறு ஒவ்வொரு பணியிட மாறுதல் முடிந்த பின்னர் அடுத்த பணியிடத்தை அறிவித்து இதேபோல் செய்ய வேண்டும்.

18. பதவி உயர்வின்பொழுது பணி மூப்பில் முதலில் இருப்பவர்கள் பெயரை வாசித்து அவர் அந்தப் பணியிடத்தை தெரிவு செய்யவில்லை எனில், அதன் பின்னர் முன்னுரிமைப் பட்டியலில் உள்ளவர்களில் யாரேனும் அந்த இடத்தை தெரிவு செய்ய அனுமதிக்கலாம். அதற்குரிய பதிவேடுகளில் பதிவுகள் செய்து கொண்டு கையொப்பம் இட்ட பின்னர் ஆணை பெற்றுச் செல்லுமாறு அறிவுரை வழங்கிய பிறகு அடுத்த ஒன்றியத்திற்கான பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

## பட்டதாரி ஆசிரியர்களுக்கான ஒன்றியம் விட்டு ஒன்றியம் மாறுதல்

19. பட்டதாரி ஆசிரியர்களுக்கான ஒன்றியம் விட்டு ஒன்றியம் மாறுதல்களைப் பொறுத்த வரை

i) முதலில் பாடவாரியாக பிரித்து, அவர்களை பாடவாரியாக தனித்தனி அறையில் அமர வைத்து பாடவாரியாக கலந்தாய்வு தனித்தனியே நடத்துதல் வேண்டும்.

ii) ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய ஆசிரியர்களை முன்னுரிமை அடிப்படையில் பிரித்துக் கொள்ள வேண்டும்.

iii) ஒரே முன்னுரிமையில் உள்ள ஆசிரியர்களை நிலைய மூப்பு அடிப்படையில் (Station Seniority) அவர்களை வரிசைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

iv) பார்வையில் காணும் அரசாணையின்படி மேற்காண் வரிசையில் முதலில் உள்ளவருக்கு முன்னுரிமை வழங்கி இடத்தைத் தெரிவு செய்ய அனுமதிக்கலாம்.

v) இதேபோன்று அனைத்து வகை முன்னுரிமையைப் பெற்றுள்ள ஆசிரியர்களுக்கு கலந்தாய்வு நடத்திட வேண்டும்.

20. சாஸ்திரா பல்கலைக்கழகத்தின் B.Ed., பட்டம் தமிழ்நாட்டில் உள்ள பிற பல்கலைக்கழகங்களால் வழங்கப்படும் பட்டத்திற்கு இணையானது என அரசாணை வழங்கப்பட்டுள்ளதால் அவர்களையும் இந்த ஆண்டு முன்னுரிமை பட்டியலில் சேர்த்து பதவி உயர்வு வழங்க வேண்டும்.

21. Non-SSA பள்ளிகளில் 6,7,8 ஆம் வகுப்புகளில் ஏற்படும் இடைநிலை ஆசிரியர் காலிப் பணியிடங்களை பட்டதாரி ஆசிரியர் பணியிடமாக கருதி கீழ் காணும் முறையில் பாட நிர்ணயம் செய்ய சம்பந்தப்பட்ட மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

பாட நிர்ணயம்

| | | |
|---|---|---|
| முதல் காலிப்பணியிடம் | - | அறிவியல் (அல்லது) கணிதம் |
| இரண்டாவது காலிப்பணியிடம் | - | தமிழ் (அல்லது) ஆங்கிலம் |
| மூன்றாவது காலிப்பணியிடம் | - | சமூக அறிவியல் |

பள்ளியில் ஏற்கனவே இல்லாத பட்டதாரி ஆசிரியர் பணியிடம் பாட பணியிடமாக நிர்ணயம் செய்து கொள்ளப்பட வேண்டும்.

22. 10 + 2 + 3 என்ற முறையில் பட்டம் பெற்றவர்களுக்கு மட்டுமே பதவி உயர்வு முன்னுரிமைப் பட்டியலில் சேர்த்து பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும். மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற் கல்வி பிரிவில் ஆசிரியர் பயிற்சி சான்று பெற்றவர்கள் +2 ஆகவே கருத வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

23. 1995ஆம் ஆண்டு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு மட்டும் அன்னார் ஒன்றியம் விட்டு ஒன்றியம் மாறுதலில் செல்லும் போது ஒரே ஒரு முறை மட்டும் ஆசிரியர் தேர்வு வாரியம் வழங்கிய தர எண் அடிப்படையில் முன்னுரிமை நிர்ணயம் செய்யலாம். எனவே அதன் (1995க்கு) பின்னர்

நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு இச்சலுகை பொருந்தாது. எனவே 2004 முதல் தொகுப்பூதியத்திலும் 1.6.2006 முதல் காலமுறை ஊதியத்திலும் பணியாற்றி வரும் பட்டதாரி ஆசிரியர்கள் ஒன்றியம் விட்டு ஒன்றியம் மாறுதலில் சென்றால் மாறுதல் பெற்றுள்ள ஒன்றியத்தில் (transferred union) பணியில் சேரும் பதவியில் ஏற்கெனவே பணியாற்றிக் கொண்டிருப்பவர்களுக்கு மிகவும் இளையவராகவே பணி மூப்பு நிர்ணயிக்க வேண்டும்.

24. பணி நிரவல் காரணமாக ஒன்றியத்திற்குள்ளும், ஒன்றியம் விட்டு ஒன்றியம் மாறுதல் செய்யப்பட்டவர்கள் மற்றும் நிர்வாகக் காரணங்களுக்காக மாறுதல் பெற்றவர்கள் (புகார் அடிப்படையில் மாறுதல், தண்டனையின் அடிப்படையில் மாறுதல் அளிக்கப்பட்டவர்கள் தவிர்த்து) மீள ஒன்றியத்திற்குள் பணி வாய்ப்பு அளிக்கும் போது பணி மூப்பு முன்னுரிமையில் தமக்குரிய வாய்ப்பினை தாம் கருதும் பணியிடம் கிடைக்கப் பெறவில்லை என்பதற்காகவோ, அல்லது பிற காரணங்களுக்காகவோ அந்தக் கல்வியாண்டில் நடக்கும் கலந்தாய்வில் கலந்து கொள்ள தவற விட்டவர்கள் மீளபணி நிரவல் முன்னுரிமை/நிர்வாக மாறுதல் முன்னுரிமை பெற இயலாது. மீள ஒன்றியத்திற்குள் பணிவாய்ப்புக் கோரிக்கை செய்தால் அது பொதுப் போட்டியின் அடிப்படையிலேயே அமையும்.

25. மேலும், வரலாறு மற்றும் புவியியல் பாடங்களில் தேர்ச்சி பெற்றுள்ள சில இடைநிலை ஆசிரியர்கள் அரசாணை நிலை எண்.239, கல்வி நாள் 22.09.2007ல் உள்ள ஒரு குறிப்பை வைத்து, ஆங்கில பாடம் கற்பிக்க பட்டதாரி ஆசிரியர்களாக பதவி உயர்வு அளிக்க வேண்டும் எனக் கோருவதாக இயக்குநரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இதனை ஆய்வு செய்ததில் அரசாணையில் அவ்வாறாக தெரிவிக்கப்படவில்லை. எனவே பட்டதாரி ஆசிரியர் எந்தப் பாடத்தில் தேர்ச்சி மற்றும் தகுதி பெற்றுள்ளாரோ அப்பாடத்திற்குரிய பணியிடம் காலியாக உள்ள பணியிடங்களுக்கே மாறுதல் / பதவி உயர்வு நடைமுறையில் உள்ள நடப்பு பொது மாறுதல் நெறிமுறைகள் மற்றும்பதவி உயர்வு விதிகளை பின்பற்றி வழங்கப்பட வேண்டும்.

26. அவ்வாறே பணியிடம் இன்மை போன்ற பல நிர்வாகக் காரணங்களுக்காக ஒரு ஆசிரியர் பணியிறக்கம் செய்ய நேரிட்டால் அன்னார் எப்பதவியில் இருந்து பணியிறக்கம் செய்யப்படுகிறாரோ அப்பதவி உயர்வுக்கு முன்னர் எந்த பாடத்தில் / எந்த பதவியில் பணியாற்றினாரோ அப்பதவிக்கு பணியிறக்கம் செய்யப்பட வேண்டும்.

5(1) உதாரணமாக நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியராக பணியாற்றும் ஒருவர் பணி இறக்கம் செய்யப்படும் போது அன்னார் நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பதவி உயர்வுக்கு முன்னர் தமிழாசிரியராக பணியாற்றியுள்ளார் என்றால் அன்னாரை தமிழ் ஆசிரியர் பதவிக்கும், பட்டதாரி ஆசிரியராக பணியாற்றி உள்ளார் என்றால், எந்த பாடத்தில் பணியாற்றி உள்ளார் என்பதை கணக்கில் கொண்டு அப்பாடத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியிடத்திற்கும், தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியராக பணியாற்றி உள்ளார் என்றால் தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியர் பதவிக்கும் பணியிறக்கம் செய்ய வேண்டும். அவ்வாறு அல்லாமல் நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பதவி உயர்வுக்குரிய ஒருங்கிணைந்த முன்னுரிமைப் பட்டியல்படி பட்டதாரி ஆசிரியர் பணியில் இளையவரை பணியிறக்கம் செய்யக் கூடாது.

27. ஒரே வருடத்தில் குறைந்த கால அளவில் இரு பட்டப் படிப்புகள் தேர்ச்சி பெற்றோர் முன்னுரிமை மற்றும் தேர்ந்தோர் பட்டியலில் இடம் பெறும் முன்னர் இரு தேர்வுகள் தொடர்பான கால அட்டவணை. ஆசிரியர் விடுப்பின் தன்மை, முன் அனுமதி பெற்ற விபரம் ஆகியவற்றை முழுமையாக ஆராய்ந்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் நியமன அலுவலர் என்ற முறையில், அவ்வாசிரியரின் கல்வித் தகுதிகள் குறித்து தம் அளவில் மனநிறைவு பெற்ற பின்னரே முன்னுரிமை மற்றும் தேர்ந்தோர் பட்டியலில் சேர்த்து பதவியுயர்வு வழங்குவது குறித்து பரிசீலிக்க வேண்டும்.

28. எக்காரணத்தைக் கொண்டும் 1.1.2011க்குப் பிறகு பட்டம் மற்றும் பி.எட். வகுப்புகளில் தேர்ச்சி பெற்றவர்களை முன்னுரிமை மற்றும் தேர்ந்தோர் பட்டியலுக்கு எடுத்துக்கொள்ளக் கூடாது. பதவி உயர்வும் வழங்கக் கூடாது.

29. கலந்தாய்வு அறையில் தமது பணியிடத் தெரிவு தொடர்பாக சம்பந்தப்பட்ட ஆசிரியரே பேச அனுமதிக்க வேண்டும். பிற ஆசிரியர்கள் தலையீடு இல்லா வண்ணம் மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்.

30. கலந்தாய்வு வளாகத்திற்குள் கலந்து கொள்ளும் ஆசிரியர்கள் தவிர (மாறுதல் விண்ணப்பித்தவர்கள் / பதவி உயர்வு பட்டியில் உள்ளோர் தவிர ஏனையோரை அனுமதிக்கக்கூடாது. கலந்தாய்வு வளாகத்தில் தகவல் பலகையில் காலிப்பணியிடங்கள் ஒட்டும்போது பணியிட வாரியாக, பாட வாரியாக தனித்தனியே ஒட்டப்பட வேண்டும்.

தொடக்கக் கல்வி இயக்குநருக்காக.

# தமிழ்நாடு அரசு

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்
நலத்துறை, தலைமைச் செயலகம்,
சென்னை-9.

கடிதம் (நிலை) எண்.128/சா.மெ.1/2011-1, நாள் : 16.12.2011

அனுப்புநர்

திரு.ஆ.க.ஜீவரத்தினம், இ.ஆ.ப.,

அரசு செயலாளர்

பெறுநர்

1. ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை, சேப்பாக்கம், சென்னை-5.
2. இயக்குநர், பழங்குடியினர் நலத்துறை, சேப்பாக்கம், சென்னை-5.
3. ஆணையர், நகராட்சி நிர்வாகம், சேப்பாக்கம், சென்னை-5.
4. ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை பனகல் மாளிகை, சென்னை-15.
5. ஆணையர், பள்ளிக் கல்வித்துறை, டி.பி.ஐ.காம்ப்ளக்ஸ், சென்னை-6.
6. ஆணையர், வருவாய்த்துறை, சென்னை-5.

அய்யா,

பொருள் : ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை பழங்குடியினர் சாதிச்சான்று தவறுகளை சரி செய்வதற்கு அறிவுரைகள் வழங்குவது - குறித்து,

பார்வை : இயக்குநர், பழங்குடியினர் நலம் அவர்களின் கடிதம்.

பழங்குடியினரின் சாதிச் சான்றிதழ்கள் மெய்த்தன்மை கோரி வரப்பெறும் விண்ணப்பங்கள் மீது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, தலைமைச் செயலகம், சென்னை 9" இல் இயங்கி வரும் மாநில கூர்நோக்கு குழுவால் தக்க பரிசீலனைகள் செய்யப்பட்டு உரிய ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றது. இதில் பின்வரும் இனங்களில் அதிக தவறுகள் நடைபெற்றுள்ளதாக குழு அறிய வருகின்றது.

"பள்ளி பதிவேடுகளில் பழங்குடியினர் சாதிகள் உரிய ஆதாரம் இன்றி பதிவு செய்யப்படுவதுடன் தற்போது பழைய பள்ளி மற்றும் இதர பதிவேடுகளில் சாதி குறித்து அதிக அளவில் திருத்தம் செய்துள்ளதும் கண்டறியப்பட்டுள்ளது. மேலும் ஒரே குடும்பத்தில் உள்ள சகோதரர் சகோதரிகளுக்கு வெவ்வேறு வகையான சாதிகள் (மி.பி.வ/பி.வ/பழங்குடியினர்) குறிப்பிடப்பட்டதும் கண்டறியப்பட்டுள்ளது."

2. மேற்கூறப்பட்ட தவறுகளை சரிசெய்ய, பெற்றோர்கள் ஆரம்பத்தில் குழந்தைகளை பள்ளிகளில் சேர்க்கும் பொழுது, சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் பள்ளிப்பதிவேடுகளில் மாணவ / மாணவியரின் சாதியை உரிய மூல ஆவணங்களின் அடிப்படையில் தற்போது நடைமுறையில் உள்ள பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் பட்டியலின் வரிசை எண் மற்றும் அந்த பழங்குடியினரின் சாதி உட்பிரிவினை குறிப்பிட வேண்டும். மேலும் "ஆதி திராவிடர்" ஆக இருப்பின் வட்டாட்சியர் / துணை வட்டாட்சியர் அவர்களும் பழங்குடியினராக இருப்பின் வருவாய் கோட்டாட்சியர் அவர்களும் சாதிச்சான்றிதழ்கள் வழங்க வேண்டும். எனவே, பள்ளிப் பதிவேடுகளில் சாதி குறித்து பதிவு செய்யப்படும் முன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் வழங்கப்பட்டுள்ளதா என ஆராய்ந்து பதிவு செய்ய வேண்டும். நிரந்தர சான்றிதழ்களில் R.Dis எண் கொடுக்கப்பட்டுள்ளதா எனவும் மற்றும் கோப்பு எண்கள் உள்ளனவா எனவும் சரிபார்த்துக் கொள்ள வேண்டும். மேலும், குழந்தைகள் பிறந்தவுடன் பதிவு செய்யப்படும் பதிவேடுகள் (Birth Register) சாதியை உறுதி செய்வதற்கு மிகவும் முக்கியமான ஆவணங்களாக உள்ளதால் பிறப்பு குறித்து பதிவு செய்யும் போது சாதி பற்றிய விபரத்தை சரியாகக் கண்டறிந்து பதிவு செய்யப்படல் வேண்டும்.

3. மேற்கூறிய தெளிவுரைகள் தவறாது கடைபிடிக்க உரிய அலுவலர்களுக்கு அறிவுரை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஒ.ம்./

அரசு செயலாளருக்காக.

// உண்மை நகல் //

## GOVERNMENT OF TAMILNADU

### FINANCE (PENSION) DEPARTMENT

### G.O.No.7, Dated 6th January, 2012

### (Margazhi-21, Thiruvalluvar Andu 2042)

**Tamil Nadu Government Pensioners Health Fund Scheme, 1995- Enhancement of Subscription - Orders - Issued.**

---

**Read the following :**

1. G.O.Ms.No.562, Finance (Pension) Department, dated : 11.07.1995.
2. G.O.Ms.No.404, Finance (Pension) Department, dated : 09.10.2001.
3. G.O.Ms.No.188, Finance (Pension) Department, dated : 09.05.2008.
4. G.O.Ms.No.474, Finance (Pension) Department, dated : 30.09.2009.
5. G.O.Ms.No.475, Finance (Pension) Department, dated : 30.09.2009.
6. From the Director of Pension, Chennai - 6 Letter No. RC.51168/2011/ Bills,Dated 24.08.2011.

**ORDER**

The Government in their order first read above had constituted a fund called "Tamil Nadu Government Pensioners' Health Fund" with effect from 01.07.1995 to provide financial assistance to pensioners for undergoing specialised treatment / surgery, when they are affected by major ailments.

2. In the Government Order third read above the subscription recoverable from the pensioners was enhanced to Rs.50/-per month with effect from 01.04.2008 and the maximum limit was enhanced to Rs.1,00,000/- or 75% of the actual cost of treatment, whichever is less.

3. In the Government order fourth read above, the Tamil Nadu Government Pensioners' Health Fund Scheme, 1995 was extended to the spouse of the pensioners with effect from 17.02.2009, subject to the maximum limit of Rs.1,00,000/- or 75% of the actual cost of treatment, whichever is less, for both the pensioner and spouse combined together and the contribution recoverable from the pensioners' monthly pension was enhanced from Rs.50/- to Rs.100/- per month with effect from 01.09.2009.

4. In the Government Order fifth read above, the scheme was extended to the family pensioners including teacher family pensioners, with effect from 01.09.2009 for whom subscription to the fund was fixed at Rs.75/- per month on their option to enroll under the scheme.

5. Though initially the scheme was introduced as a financially self sustaining one, the receipt of funds under the scheme by way of subscription collected from the pensioners was not sufficient to meet the claims received from the pensioners resulting in a backlog of pending applications for sanction of assistance under the scheme. Owing to extension of the scheme to the spouse of the pensioners and family pensioners and also due to the extension of the facility for those pensioners / family pensioners who have undergone treatment / surgery even in unaccredited hospitals, claims received under the scheme increased enormously, leading to a deficit of more than Rs.4 Crores per month which has to be supported by the Government and so far around Rs.80 crores has been sanctioned by the Government as additional grant to the fund from the inception of the scheme.

6. In order to avoid the ever increasing additional burden to the Government and to make a breakeven point, the Government, after careful examination decided to enhance the subscription recoverable from the pension of the State Government pensioners. Accordingly Government direct that the subscription from the pensioners shall be enhanced from Rs.100/- per month to Rs.150/- per month with effect from 01.01.2012 i.e. from the pension payable for the month of January, 2012. The Government also direct that the subscription recoverable from the family pensioners shall be enhanced from Rs.75/- per month to Rs.100/- per month with effect from 01.01.2012 i.e. from the family pension payable for the month of January, 2012.

7. There shall be no change in the other terms and conditions of the scheme.

**(By order of the Governor)**

**K.SHANMUGAM,**
Principal Secretary to Government.

# தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

பள்ளிக்கல்வி - அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் அனைத்து மாணவ/மாணவியர்களுக்கும் ஒரே மாதிரியான புத்தகப் பைகள், கற்றலுக்குத் தேவையான கணித உபகரணப்பெட்டி, வண்ணப்பென்சில்கள் மற்றும் புவியியல் வரைபடங்கள் வழங்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வி (எஸ் 1) துறை**

**அரசாணை (நிலை) எண்.12** — **நாள் : 18.01.2012**

**படிக்கப்பட்டவை :**

1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு நாள் : 26.8.2011.
2. இணை இயக்குநர் (மேநிக) பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை-6. கடிதம் ந.க.எண்.1/பிசி/2011 நாள் : 28.09.2011.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110ன் கீழ் 26.8.2011 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்.

"1985ஆம் ஆண்டிலிருந்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளுக்கு இலவசமாக பாடப்புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. மாணவர்களிடம் இருக்கும் ஏற்றத் தாழ்வுகளை நீக்கும் நல்லெண்ணத்துடன் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் அனைத்து மாணவ மாணவியர்களுக்கும் ஒரே மாதிரியான புத்தகப் பைகள், கற்றலுக்குத் தேவையான கணித உபகரணப்பெட்டி, அதாவது Geometry Box, கிராமப்புற மாணவ மாணவியர்களுக்கு இதுவரை கிடைக்கப் பெறாத வண்ணப் பென்சில்கள் மற்றும் புவியயல் வரைபடங்கள் போன்றவை வரும் கல்வியாண்டு முதல் வழங்கப்படும்".

2. மேற்காண் அறிவிப்பு தொடர்பாக விரிவான கருத்துருவினை செலவின விவரங்களுடன் அரசுக்கு அனுப்பி வைக்குமாறு இணை இயக்குநர் (மேநிக) கேட்டுக் கொள்ளப்பட்டார். அதனடிப்படையில் இணை இயக்குநர் (மேநிக) அவர்கள் அரசு / அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ / மாணவியர்களுக்கும் ஒரே மாதிரியான புத்தகப் பைகள், கணித உபகரணப்பெட்டி (Geometry box) வண்ணப்பென்சில்கள் மற்றும் புவியியல் வரைபடங்கள் ஆகியவற்றை 2012-2013ம் கல்வியாண்டு முதல் கீழ்க்கண்டவாறு வழங்கலாமென தெரிவித்துள்ளார்.

<u>புத்தகப்பை:</u>

1 முதல் 3 வகுப்புகள் வரை - சிறிய அளவு (Small Size)
4 முதல் 7 வகுப்புகள் வரை - நடுத்தர அளவு (Middle Size)
8 முதல் 12 வகுப்புகள் வரை - பெரிய அளவு (Large Size)

இம்மூன்று அளவுகள் கொண்ட புத்தகப் பைகளின் தோராய விலை ரூ.75, ரூ.100 மற்றும் ரூ.125 என மதிப்பிடலாம். இதனால் 92,28,374 மாணவ/மாணவியர் பயன்பெறுவர்.

<u>கணித உபகரணப் பெட்டி:</u>

6 முதல் 10 வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு இலவச கணித உபகரணப் பெட்டிகள் வழங்கலாம். ஒரு கணித உபகரணப் பெட்டியை மாணவ / மாணவியர்கள் இரண்டு கல்வி ஆண்டுகளுக்கு பயன்படுத்தலாம். எனவே, ஒவ்வொரு கல்வியாண்டிலும் 6,8,10 வகுப்புகள் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு இலவச கணித உபகரணப் பெட்டிகள் வழங்கலாம். இதன் தோராயவிலை ரூ.35 என மதிப்பிடலாம். இதனால் 46,01,572 மாணவ / மாணவியர் பயன்பெறுவர்.

<u>வண்ணப் பென்சில்கள்:</u>

1 முதல் 5 வகுப்புகள் வரை பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு வண்ணப் பென்சில்கள் வழங்கலாம். இவ்வகை வண்ணப் பென்சில்கள் அளவில் பெரியதாகவும் (Long Size) இரு முனைகளில் இரு வெவ்வேறு வண்ணங்கள் கொண்டதாக இருக்கும். வண்ணப் பென்சில்கள் அடங்கிய பெட்டி ஒன்றுக்கு உத்தேசமாக ரூ.20

என மதிப்பிடலாம். இதனால் 35,00,556 மாணவ / மாணவியர் பயன்பெறுவர்.

**புவியியல் வரைபடங்கள் :**

முதல் ஆண்டில் 6 முதல் 10 வகுப்புகள் வரை பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு புவியியல் வரைபடங்கள் வழங்கலாம். இரண்டாம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் 6-ம் வகுப்பு மாணவ / மாணவியர்களுக்கு மட்டும் வழங்கலாம். ஒரு புவியியல் வரைபடத்தின் தோராய விலை மதிப்பு ரூ.50 எனக் கொள்ளலாம். இப்புவியியல் வரைபடங்கள் தமிழ்நாடு பாடநூல் கழகம் மூலம் அச்சிட்டு வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்று தெரிவித்துள்ளார். இதனால் 46,01,572 மாணவ / மாணவியர் பயன்பெறுவர்.

3. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கிணங்க 2012-2013ஆம் கல்வியாண்டில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ /மாணவியர்களுக்கும் ஒரே மாதிரியான புத்தகப் பைகள், கணித உபகரணப் பெட்டி, (Geometry box) வண்ணப் பென்சில்கள் மற்றும் புவியியல் வரைபடங்கள் ஆகியவைகளை கீழ்க்கண்டவாறு வழங்கலாம் என முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

**அ) புத்தகப்பை:**

1 முதல் 3 வகுப்புகள் வரை - சிறிய அளவு (Small Size)

4 முதல் 7 வகுப்புகள் வரை - நடுத்தர அளவு (Middle Size)

8 முதல் 12 வகுப்புகள் வரை - பெரிய அளவு (Large Size)

இம்மூன்று அளவுகள் கொண்ட புத்தகப் பைகள் வழங்கப்படும்.

**ஆ) கணித உபகரணப் பெட்டி:**

6 முதல் 10 வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு இலவக கணித உபகரணப் பெட்டிகள் வழங்கலாம். ஒரு கணித உபகரணப் பெட்டியை மாணவ / மாணவியர்கள் இரண்டு கல்வி ஆண்டுகளுக்கு பயன்படுத்தலாம். எனவே, ஒவ்வொரு கல்வியாண்டிலும் 6,8,10 வகுப்புகள் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு கணித உபகரணப் பெட்டிகள் வழங்கப்படும்.

**இ) வண்ணப் பென்சில்கள்:**

1 முதல் 5 வகுப்புகள் வரை பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு வண்ணப் பென்சில்கள் வழங்கலாம். இவ்வகை வண்ணப் பென்சில்கள் அளவில் பெரியதாகவும் (Long Size) இரு முனைகளில் இரு வெவ்வேறு வண்ணங்கள் கொண்டதாகவும் இருக்கும். வண்ணப் பென்சில்கள் அடங்கிய பெட்டி ஒன்று வழங்கப்படும்.

**ஈ) புவியியல் வரைபடங்கள் :**

2012-2013 ஆம் கல்வி ஆண்டில் 6 முதல் 10 வகுப்புகள் வரை பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு புவியியல் வரைபடங்கள் வழங்கலாம். 2013-14 கல்வி ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் 6-ம் வகுப்பு மாணவ / மாணவியர்களுக்கு மட்டும் வழங்கப்படும்.

4. புவியியல் வரைபடங்களை தமிழ்நாடு பாடநூல் கழகம் மூலம் அச்சிட்டு வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

5. இத்திட்டத்தினை சரியாக செயல்படுத்த ஏதுவாக முறையான கொள்முதல் நடைமுறைகளை (Appropriate Procurement Procedure) பின்பற்றி கல்வியாண்டின் தொடக்கத்திலேயே கற்றலுக்கான பொருட்களை வழங்கிட ஏதுவாக கொள்முதல் நடவடிக்கைகளை முடித்திட பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகின்றனர்.

6. இத்திட்டத்தினை 2012-13 கல்வி ஆண்டு முதல் செயல்படுத்திட தேவையான நிதியினை வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கீடு செய்திட ஏதுவாக கருத்துருவினை நிதித் (கல்வி 11) துறைக்கு சமர்ப்பிக்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகின்றனர்.

7. இந்த அரசாணை நிதித் துறையின் இசைவினை அதன் அ.சா.எண்.01/DS(KM)/Edn-11/2011, நாள்:04.01.2012-ல் பெற்று வெளியிடப்படுகிறது.

தி. ஸ்ரீ. ஸ்ரீதர்

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

# தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

பள்ளிக்கல்வி - மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் அறிவிப்பு பள்ளி செல்லும் குழந்தைகள் அனைவரும் முழுமையான வளர்ச்சியும், வாழ்திறன்களையும் பெறும் வகையில் "நமது குழந்தைகள் திட்டம்" செயல்படுத்துதல் ஆணை வெளியிடப்படுகிறது.

**பள்ளிக் கல்வித் (சி 2)துறை**

**அரசாணை (1டி) எண்.42** | **நாள் : 06.02.2012**

**திருவள்ளுவராண்டு 2042**

**தை -20**

**படிக்க:**

1. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு எண்.17, நாள் 22.08.2011.
2. அனைவருக்கும் கல்வித் திட்ட மாநில திட்ட இயக்குநரின் கடித எண்.1274/ஏ1/அகதி/2011, நாள்: 9.8.2011 மற்றும் 5.1.2012.

**ஆணை :**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பள்ளிக் கல்வித் துறை மானிய கோரிக்கையின் போது கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

"மத்திய, மாநில அரசுகள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள், சமூக கலாச்சார நிறுவனங்கள் அனைத்தும் இணைந்து செயல்படுத்தும் பல்வேறு நலத் திட்டங்களை ஒருங்கிணைத்து பள்ளி செல்லும் குழந்தைகள் அனைவரும் முழுமையான வளர்ச்சியும், வாழ்திறன்களையும் பெறும் வகையில் "நமது குழந்தைகள் திட்டம்" செயல்படுத்தப்படும்."

2. மேற்கண்ட அறிவிப்பு குறித்து அனைவருக்கும் கல்வி இயக்க மாநில திட்ட இயக்குநர் உரிய கருத்துருவினை அனுப்பியுள்ளார்.

3. மாநில திட்ட இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து, பள்ளி செல்லும் குழந்தைகள் அனைவரும் முழுமையான வளர்ச்சியும், வாழ்திறன்களையும் பெறும் வகையில் நமது குழந்தைகள் திட்டத்தை கீழ்க்கண்டவாறு செயல்படுத்தலாம் என முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

1) அரசு சார்ந்த துறைகளின் மூலமாக பள்ளி குழந்தைகளுக்கு வழங்கப்படும் அனைத்து சலுகைகளும் குறிப்பாக பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, ஆதிதிராவிடர் / பழங்குடியினர் நலத்துறை, சமூக நலத்துறை, வனத்துறை போன்ற துறைகள் மூலமாக வழங்கப்படும் சலுகைகள் அத்துறை அல்லாத பிற பள்ளிகளில் பயிலும் மாணவ/ மாணவியர்களுக்கு சென்றடைய பள்ளியின் தலைமையாசிரியர் மற்றும் கிராமக் கல்விக் குழு உறுப்பினர்கள் தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

2) குழந்தைக்கு ஊறு விளைவிக்கும் தண்டனை அளிக்காமலும், பாலியல் வன்முறைகளிலிருந்து பெண் குழந்தைகளை பாதுகாக்கவும், குழந்தை பாதுகாப்பு கொள்கை (Child Protection Policy) அவசியமான ஒன்றாகும். பள்ளிகளில் பாதுகாப்பான, குழந்தைகள் விரும்பும் சூழலில் கல்வி அளித்தல் வேண்டும். இதனை கண்காணிக்க கிராமக் கல்விக் குழு / கல்வி மேலாண்மை குழு / பள்ளி தலைமையாசிரியர் ஆகியோர் இவ்விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். மேலும், சமூக நலம் (ம) சத்துணவுத் திட்ட துறையால் ஏற்படுத்தப்பட உள்ள குழந்தைகள் உரிமைக்கான மாநில பாதுகாப்பு ஆணையம் (SCPCR) அவ்வப்போது வெளியிடும் அறிவுரைகளை தவறாது கடைபிடிக்க வேண்டும்.

3) வட்டார மற்றும் மாவட்ட அளவில்நடைபெறும் அனைத்து விளையாட்டு போட்டிகள், கலை மற்றும் கலாச்சார நிகழ்வுகளில் பள்ளி மாணவர்கள் பங்கேற்க வழிவகை செய்ய பள்ளி தலைமையாசிரியர்

மற்றும் அப்பகுதியை சார்ந்த கிராமக் கல்வி குழு உறுப்பினர்கள் உறுதுணையாக இருந்து அவர்கள் பங்களிப்பை உறுதி செய்ய வேண்டும்.

4) பள்ளி ஆசிரியர்கள், பள்ளிக் குழந்தைகள் அனைவரின் பல்திறன் வளர்ப்பில் கற்றல் தொடர் மதிப்பீடு, விளையாட்டு, சுகாதாரம், தன்சுத்தம் பாட இணை செயல்பாடுகள் மற்றும் பாட துணைச் செயல்பாடுகள் கற்றுத் தரப்பட வேண்டும்.

5) கிராமக் கல்வி குழு/ பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் இலவச கட்டாய கல்வி உரிமைச் சட்ட வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு உறுதுணையாக இருந்து, அப்பகுதியில் இருக்கும் 6 வயது முதல்14 வயதுடைய மாணவ / மாணவியர்கள் அனைவரும் பள்ளியில் சேர்த்தல், பள்ளி செல்லாதோர், இடைநின்றோர், குழந்தை தொழிலாளர் மற்றும் புலம்பெயர்ந்தோர் குழந்தைகள் சிறப்பு பயிற்சி மையங்களில் சேர்க்க கிராமக் கல்வி குழு / பள்ளி மேலாண்மை குழு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

6) பெண் குழந்தைகளின் முழு ஆளுமைத் திறன் வெளிப்படுத்த வாய்ப்பு ஏற்படுத்துதல், குழந்தைகள் தங்கள் உடல் நலம் சார்ந்த அனைத்து அறிதல், பள்ளிகளில் பாதுகாப்பான, குழந்தைகள் விரும்பும் சூழலில் கல்வி அளித்தல், ஒழுங்குமுறை சிந்தனையை மாணவர்களிடம் வளர்த்தல் ஆகியவற்றை மேற்கொள்ள ஆசிரியர்கள் முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

7) நமது குழந்தைகள் திட்டத்தை செயல்படுத்த பெற்றோர்கள், சமூக ஆர்வலர்கள், கல்வியாளர்கள், பள்ளி ஆசிரியர்கள், கிராம கல்விக்குழு உறுப்பினர்கள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் சமூக கலாச்சார மற்றும் பிற சார்பு நிறுவனங்கள் அனைவருடன் ஒருங்கிணைந்து மாணவர்களிடம் ஒருங்கிணைந்த வளர்ச்சியை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுதல் அவசியமாகும். இத்திட்டத்தை செயல்படுத்த கிராம, வட்டார மற்றும் மாவட்ட அளவில் தனிப்பிரிவு அமைத்து இத்திட்டத்தின் பலன்கள் முழுவதுமாக சென்றடைய வழிவகை செய்யப்பட வேண்டும்.

4. இத்திட்டம் அனைத்து பள்ளிகளிலும் செம்மையான முறையில் செயல்பட, தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தொடக்கக் கல்வி இயக்குநர் மற்றும் பள்ளிக் கல்வி இயக்குநர் ஆகியோர் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.சபிதா,
அரசுச் செயலாளர்.

# தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

பள்ளிக் கல்வி - அரசுத் தேர்வுகள் இயக்ககம் - தனித் தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதுவதற்கான குறைந்த பட்ச வயது வரம்பு மற்றும் டிசம்பர் 2010 மற்றும் அதற்கு முந்தைய தேர்வுகளுக்கு பழைய பாடத்திட்டத்தின்படி 8ம் வகுப்பு தேர்வெழுதி தேர்ச்சி பெறாதவர்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் ஏப்ரல் 2012 மற்றும் ஏப்ரல் 2013ம் ஆண்டுகளில் நடைபெறவுள்ள இரு பருவத் தேர்வுகளுக்கு மட்டும் பழைய பாடத்திட்டத்தின்படி தேர்வெழுத அனுமதி - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வி (வி 1)துறை**

**அரசாணை (நிலை) எண்.36** — **நாள் : 17.02.2012**

**திருவள்ளுவராண்டு 2043**

**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (நிலை) எண்.203, கல்வி, நாள் : 8.2.1979.
2. அரசாணை (நிலை) எண்.192, கல்வி, நாள் : 25.2.1992.
3. அரசாணை (நிலை) எண்.290, பள்ளிக் கல்வி, நாள் : 13.10.2010.
4. அரசாணை (நிலை) எண்.166, பள்ளிக் கல்வித் துறை, நாள் : 31.10.2011.
5. அரசுத் தேர்வுகள் இயக்குநர் கடிதம் ந.க.எண்.059803/ஜி/11நாள் : 14.11.2011.

**ஆணை :**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி தனித் தேர்வர்களுக்கென எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வு அரசுத் தேர்வுத் துறையால் நடத்தப்பட்டு வந்துள்ளது. 1991-1992ம் கல்வியாண்டு முதல் குறைந்தபட்ச வயதாக 12ம் வகுப்பிற்கு 16-1/2 வயது, 10ம் வகுப்பிற்கு 14-1/2 வயது மற்றும் எட்டாம் வகுப்பிற்கு 12-1/2 வயது என நிர்ணயிக்கப்பட்டு மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி, டிசம்பர் முதல் தேதியன்று 12-1/2 வயது நிரம்பியவர்கள் இத்தனித் தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டு வருகிறது. இந்நடைமுறை 2009ம் ஆண்டு வரை கடைபிடிக்கப்பட்டது. இந்நிலையில் 2010ம் ஆண்டுக்கான தனித் தேர்வுக்கு அறிவிப்பு வெளியிடப்பட்டு விண்ணப்பங்கள் பெறப்பட்ட நிலையில், அனைவருக்கும் இலவச கட்டாய கல்விச் சட்டம் 2009, 1.4.2010 முதல் நடைமுறைக்கு வந்ததால் அச்சட்டத்தின்படி 14 வயதுக்குட்பட்ட அனைத்து சிறார்களையும் கட்டாயமாக பள்ளியில் சேர்க்கவும், அம்மாணவர்கள் தொடக்கக் கல்வி 8ம் வகுப்பு முடிக்கும் வரை வாரிய தேர்வில் தேர்ச்சி பெறத் தேவையில்லையென அரசாணை (நிலை) எண்.189, பள்ளிக் கல்வி, நாள் : 12.7.2010ல் ஆணை வெளியிடப்பட்டதை கருதி, இத்தனித் தேர்வை 2010ம் ஆண்டுக்கு மட்டும் நடத்தலாமெனவும், அதன் பின்னர் இத்தனித் தேர்வு நடத்த தேவையில்லையென முடிவு செய்யப்பட்டு மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டது. இந்நிலையில், எட்டாம் வகுப்பு முடிக்காமலுள்ள 18 வயதுக்கு மேற்பட்டவர்கள், வேலையில் உள்ளோர், வேலையில்லாமல் வேலை தேடுவோர், பதவி உயர்வு, ஓட்டுநர் உரிமம் என பலவகைகளுக்காக 8ம் வகுப்பு சான்றிதழ் பெற வேண்டியதை கருதியும், பத்தாம் வகுப்பு தேர்வு எழுத குறைந்தபட்ச தகுதிகளிலொன்றாக தனித் தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டுமென்பதைக் கருதி 1.4.2010 அன்று 18 வயதினை கடந்தவர்களுக்கும் ஏற்கனவே தேர்வு எழுதி தோல்வியுற்றவர்களுக்கும் வாய்ப்பு அளிக்க 2012 மற்றும் 2013ம் ஆண்டுகளில் மட்டும் இத்தேர்வை நடத்த அரசுத் தேர்வுகள் இயக்குநர் வேண்டியிருந்தார்.

2. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கருத்துருவை ஆய்வு செய்து, தனித் தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வு, தொடக்கக் கல்வி பெறாதவர்களுக்கும், தொடக்கக்கல்வியை இடைநிறுத்தம் செய்தவர்களுக்கும் உயர்கல்வி / வேலைவாய்ப்புக்கு சந்தர்ப்பம் அளிக்கவும் நடத்தப்பட்டு வருவதாலும் எட்டாவது வகுப்பு வரையான தொடக்கக்கல்வியை முடிக்கும் வரை தேர்வில் தேர்ச்சி பெற தேவையில்லை என்பது இலவச

கட்டாய கல்விச் சட்டம் 2009ல் 14 வயதுக்குட்பட்ட பள்ளியில் சேர்ந்து பயிலும் குழந்தைகள் பொருட்டே வகுக்கப்பட்டுள்ளது என்பதாலும் மேலும், 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் வேலையில் உள்ளோர் / வேலையில்லாமல் வேலைதேடுவோர் / பதவி உயர்வு / கருணை அடிப்படையில் பணி நியமனம் / பணி நிரந்தரம் / பதவி உயர்வில் முன்னுரிமை / ஓட்டுநர் உரிமம் பெற என பலவகைகளுக்கான 8ம் வகுப்பு சான்றிதழ் பெறவேண்டிய நிலை உள்ளதாலும், பத்தாம் வகுப்பு தேர்வு எழுத குறைந்த பட்ச கல்வித்தகுதிகளில் ஒன்றான தனித்தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் தேர்ச்சிப் பெற்றிருக்க வேண்டும் என்பதாலும், தொழில் மற்றும் வேலைவாய்ப்புத் துறையால் நடத்தப்படுகின்ற முறைசாரா தொழில்நுட்ப படிப்புகளுக்கு 8ம் வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்பதாலும் மேலே நான்கில் படிக்கப்பட்ட அரசாணையில் அரசாணை (நிலை) எண்.203, கல்வி, நாள் 8.7.79ன்படியான தனித் தேர்வருக்கான 8ம் வகுப்பு பொதுத் தேர்வினை நிறுத்திடாமல் ஏற்கனவே நடத்துவது போலவே இனி வருங்காலங்களில் தொடர அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு ஆணை வழங்கப்படுகின்றது எனவும், இதன்பொருட்டு தனித் தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வினை 2010ம் ஆண்டுக்குப் பிறகு நடத்தப்பட வேண்டியதில்லை. என அரசால் வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.290, பள்ளிக் கல்வித் துறை, நாள் : 13.12.10யை இரத்து செய்து ஆணையிடப்பட்டது.

3. மேலே ஐந்தில் படிக்கப்பட்ட அரசுத் தேர்வுகள் இயக்குநர் கடிதத்தில், டிசம்பர் 2010 வரையிலும், டிசம்பர் 1-ம் தேதியன்று 12.1/2 வயது நிரம்பியவர்களை தனித் தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டது என்றும், அரசாணை (நிலை) எண்.189, பள்ளிக் கல்வி (சி2) துறை, நாள் : 12.07.2010ன்படி 14 வயதிற்குட்பட்ட அனைவருக்கும் இலவச கட்டாயக் கல்வித் திட்டம் அமல்படுத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளதால் தனித் தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வு எழுத தேர்வு எழுதும் மாதத்தின் முதல் நாளன்று 12-1/2 வயது நிரம்பியிருக்க வேண்டும் என்ற நிபந்தனையை 14 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும் என்று மாற்றியமைக்கவும், ஏப்ரல் 2012-ல் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள தேர்விற்கு முதன்முறையாக தேர்வெழுத விண்ணப்பிக்கும் தேர்வர்கள் புதிய பாடத்திட்டத்தின் படியே தேர்வெழுத அனுமதிக்கப்படுவர் எனவும், டிசம்பர் 2010 மற்றும் அதற்கு முந்தைய தேர்வுகளுக்கு விண்ணப்பித்து வருகை புரியாத மற்றும் பழைய பாடத்திட்டத்தின்படியே தேர்வெழுதி தேர்ச்சி பெறாதவர்களுக்கும் வாய்ப்பளிக்கும் வகையில் ஏப்ரல் 2012 மற்றும் ஏப்ரல் 2013-ல் நடைபெறவுள்ள இருபருவத் தேர்வுகளுக்கு மட்டும் பழைய பாடத்திட்டத்தின்படியே தேர்வெழுத அனுமதி அளிக்குமாறு அரசின் ஆணை வேண்டியுள்ளார்.

4. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கருத்துரு அரசால் நன்கு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது.

(i) இலவச கட்டாயக் கல்வி அளிக்கும் சட்டம் 2009 பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு மட்டுமே பொருந்தும். எனவே, எட்டாம் வகுப்பு பொதுத்தேர்வுக்கு விண்ணப்பிக்கும் மனுதாரருக்கு தற்போது 12.1/2 வயது நிரம்பியிருக்க வேண்டுமென்பதை மாற்றி 14 வயது நிரம்பியவர்கள் என திருத்தம் செய்ய தேவையில்லை.

(ii) அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் ஏப்ரல் 2012-ல் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள எட்டாம் வகுப்பு தேர்விற்கு முதன்முறையாக தேர்வெழுத விண்ணப்பிக்கும் தேர்வர்கள் புதிய பாடத்திட்டத்தின்படியே தேர்வெழுத அனுமதிக்கப்படுவர். இந்நிலையில், அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கோரிக்கையினை ஏற்று டிசம்பர் 2010 மற்றும் அதற்கு முந்தைய தேர்வுகளுக்கு விண்ணப்பித்து வருகை புரியாத மற்றும் பழைய பாடத்திட்டத்தின் படியே தேர்வெழுதி தேர்ச்சி பெறாதவர்களுக்கும் வாய்ப்பளிக்கும் வகையில் ஏப்ரல் 2012 மற்றும் ஏப்ரல் 2013-ல் நடைபெறவுள்ள இருபருவத் தேர்வுகளுக்கு மட்டும் பழைய பாடத்திட்டத்தின்படியே தேர்வெழுத அனுமதி அளிக்கவும் அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**த.சபிதா,**
அரசுச் செயலாளர்.

## GOVERNMENT OF TAMILNADU

**Abstrct**

**Public Services - Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules - Amendment to rule 17 (e) (1) - Amendment - Issued**

**PERSONNEL AND ADMINISTRATIVE REFORMS (N) DEPARTMENT**

G.O. (Ms) No.29

Dated : 23.02.2012
மாசி-11
திருவள்ளுவர் ஆண்டு 2042
Read

**ORDER :**

The rule 17(e) (1) of the Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules, stipulates the circumstances on which a member of a service may be placed under suspension. The said rule position has been examined in accordance with the Rule 10 (1) of the Central Civil Services (Classification, Control and Appeal) rules, 1965, so that there is no arbitrariness in interpretation of the rule 17 (e) (1) of the Tamil Nadu Civil Services (Discipline & Appeal) Rules while suspending a member of a service. Accordingly, the Government have decided to amend the sub - clauses (i) and (ii) of clause (1) of sub-rule (e) of rule 17 of the Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules.

2. The following Notification will be published in the Tamil Nadu Government Gazette:

**NOTIFICATION**

In exercise of the powers conferred by the proviso to Article 309 of the Constitution of India, the Governor of Tamil nadu hereby makes the following amendments to the Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules (in Volume I of the Tamil Nadu Services Manual, 1987)

2. The amendments hereby made shall come into force on the 23rd February of 2012.

**AMENDMENTS**

In the said Rules, in rule 17, in sub-rule (e), in clause (1),-

(1) in sub-clause (i), for the expression "an enquiry into grave charges", the expression "a disciplinary proceedings" shall be substituted.

(2) for sub-clause (ii), the following sub-clause shall be substituted, namely:-

(ii) a case against him in respect of any criminal offence is under investigation, inquiry or trial".

**(BY ORDER OF THE GOVERNOR)**

**V.IRAI ANBU**
Secretary to Government

நிதித் (ஓய்வூதியம்) துறை
தலைமைச் செயலகம்,
சென்னை-9.

கடித எண்.44093 / ஓய்வூதியம் / 2011-1, நாள் : 24.02.2012

அனுப்புநர்
திரு.க.சண்முகம் இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

ஐயா / அம்மையீர்,

பொருள் : ஓய்வூதியம் - ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் - கூடுதல் ஓய்வூதியம் மற்றும் கூடுதல் குடும்ப ஓய்வூதியம் வழங்குதல் - தெளிவுரை வேண்டுவது - தொடர்பாக.

பார்வை :
1. அரசு ஆணை (நிலை) எண்.42, நிதித் (ஓய்வூதியம்) துறை, நாள் : 07.02.11.
2. கருவூலக் கணக்கு ஆணையர், சென்னை-15 அவர்களின் கடிதம் ந.க.எண்.21681/2011, C2 நாள்:18.08.2011.
3. ஓய்வூதிய இயக்குநர், சென்னை-6 அவர்களின் கடிதம் RC. No.50863/2011/D2, நாள்:27.09.11.
4. மாநில கணக்காயர், சென்னை-18, கடித எண்.Pen30/III/3-3/Pension/2011-2012/136725, நாள் :24.11.2011.

பார்வை ஒன்றில் கண்டுள்ள அரசாணையில் 80 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய ஓய்வூதியதாரர்களுக்கு 01.01.2011 முதல் கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியம் வழங்க ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து, பார்வை 2 முதல் 4 வரையிலான கடிதங்களில் கோரப்பட்ட தெளிவுரைகள் தொடர்பாக கீழ்க்கண்ட தெளிவுரைகள் வழங்கப்படுகின்றன.

1. எழுப்பப்பட்ட வினா

ஓய்வூதியதாரர்களின் கொடுப்பாணை / படிவம் 14ல் குடும்ப ஓய்வூதியதாரர்களின் வயது உறுதி செய்யப்படாத நேர்வில், கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியம் தற்காலிகமாக வழங்கி அதற்குள்ளாக சம்பந்தப்பட்ட ஓய்வூதிய முன்மொழிவினை அனுப்பிவைத்த அலுவலகத்திலிருந்து உரிய கால கெடுவிற்குள் வயது உறுதி செய்யப்படாத நிகழ்வுகளில் தற்காலிகமாக வழங்கிய கூடுதல் ஓய்வூதியத்தை பிடித்தம் செய்யலாமா? செய்யலாம் என்றால் ஒரே தவணையிலா அல்லது தவணைகள் முறையிலா?

அரசின் தெளிவுரை

ஓய்வூதியதாரர்களின் கொடுப்பாணை / படிவம் 14ல் குடும்ப ஓய்வூதியதாரர்களின் வயது உறுதி செய்யப்படாத நேர்வில், கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியம் தற்காலிகமாக வழங்கி அதற்குள்ளாக சம்பந்தப்பட்ட ஓய்வூதிய முன்மொழிவினை அனுப்பிவைத்த அலுவலகத்திலிருந்து உரிய கால கெடுவிற்குள் வயது உறுதி செய்யப்படாத நிகழ்வுகளில் தற்காலிகமாக வழங்கிய கூடுதல் ஓய்வூதியத்தை ஓய்வூதிய முன்மொழிவுகள் பெறும் வரை பிடித்தம் செய்யத் தேவையில்லை. எனினும் சம்பந்தப்பட்ட ஓய்வூதிய முன்மொழிவினை அனுப்பி வைத்த அலுவலகத்திலிருந்து உரிய பதில் பெற சம்பந்தப்பட்ட கருவூல அலுவலர் / ஓய்வூதியம் வழங்கும் அலுவலர்களால் தக்க மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

2. எழுப்பப்பட்ட வினா

அவ்வாறு பிடித்தம் மேற்கொள்ளும் போது ஓய்வூதியதாரர்கள் நீதிமன்றங்களை நாடி செல்லும் நிகழ்வில் நீதி மன்றங்களும் அநேக நேர்வுகளில் ஓய்வூதியத்திலிருந்து பிடித்தம் செய்ய தடை வழங்குகிறது என்பதால் ஓய்வூதியதாரர்களின் வயதை ஓய்வூதிய முன்மொழிவினை அனுப்பி வைத்த அலுவலகம் உறுதி செய்யப்பட்ட பின்னரே நிரந்தரமாக வழங்கலாமா? ஒவ்வொரு குடும்ப ஓய்வூதியதாரருக்கும் குடும்ப ஓய்வூதிய முன்மொழிவினை

அனுப்பிவைத்த அலுவலருக்கு அன்னாருடைய வயதினை உறுதி செய்ய அந்த அலுவலகத்தை தொடர்பு கொள்வதில் மிகவும் சிரமம் உள்ளதால் (ஓய்வூதியதாரர் பணிபுரிந்த இடம் மற்றும் ஓய்வூதியம் பெறும் இடம் வெவ்வேறாக இருக்கும் நிகழ்வுகளில் மற்றும் உரிய அலுவலகம் பல ஆண்டுகளுக்கு பின்னர் தெரியாத நிலையில்) இந்த பணியினை மேற்கொள்வது கருவூலத்திற்கு மிகவும் கடினமான கூடுதல் பணி பளுவினை ஏற்படுத்தும் என்பதால் குடும்ப ஓய்வூதியதாரர்களின் வயதை உறுதிசெய்வதற்கு பதிலாக அரசு ஆணையில் பத்தி 5ல் குறிப்பிட்டுள்ள ஆவணங்களில் உள்ள வயதின் அடிப்படையில் மட்டுமே கூடுதல் ஓய்வூதியம் வழங்கிடலாமா?

அரசின் தெளிவுரை

ஓய்வூதிய கொடுப்பாணை (Pension Payment Order) அல்லாத அரசாணையில் தெரிவிக்கப்பட்ட பிற ஆவணங்கள் ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரரால் வழங்கப்படும் நேர்வில், அவர்களது பிறந்த தேதி / வயதை ஓய்வூதிய முன்மொழிவினை அனுப்பி வைத்த அலுவலகத்திற்கு அனுப்பி அங்குள்ள ஆவணங்களிலிருந்து உறுதி செய்ய வேண்டும் என அரசாணை (நிலை) எண்.42 நிதித் (ஓய்வூதியம்) துறை, நாள்:07.02.2011ல் ஆணையிடப்பட்ட நடைமுறை கண்டிப்பாகப் பின்பற்றப்பட வேண்டும். அவ்வாறு ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரர் பணிபுரிந்து ஓய்வுபெற்ற உரிய அலுவலகம் பல ஆண்டுகளுக்குப் பின்னர் தெரியாத நிலையில் ஓய்வூதியதாரர் ஓய்வுபெற்ற துறையின் சம்பந்தப்பட்ட துறைத் தலைவருக்கு அவர் பணிபுரிந்த அலுவலகம் / மாவட்டத்தினை தெரிவித்து அனுப்பி ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரரின் பிறந்த தேதி / வயது உறுதி செய்யப்பட வேண்டும். இந்நடைமுறை இந்தத் தெளிவுரை வெளியிடப்படும் நாளிலிருந்து 6 மாதங்களுக்குள்ளாக மேற்கொள்ளப்பட்டு முடிவெடுக்கப்பட வேண்டும். சரியான வயது குறித்த, அரசாணையில் தெரிவிக்கப்பட்ட ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை அளிக்க வேண்டிய பொறுப்பு சம்பந்தப்பட்ட ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரரையே சாரும். எனவே, இது குறித்த ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரரால் அளிக்கப்படும் வயது குறித்த சான்றிதழுக்கான தேவையான நகல்களைப் பெற்று ஓய்வூதிய கொடுப்பாணை மற்றும் கருவூலங்களில் பராமரிக்கப்படும் சம்பந்தப்பட்ட ஓய்வூதியதாரர்களின் பதிவேடுகளில் ஓய்வூதிய அலுவலரால் அதற்கான பதிவுகள் உடனடியாக செய்யப்பட வேண்டும். ஓய்வூதியதாரரால் முதன் முதலில் அளிக்கப்படும் வயது குறித்த ஆவணமே இறுதியானதாகக் கொள்ளப்பட வேண்டும். அதன்பிறகு வயது மாற்றம் குறித்து வேறு சான்றிதழ்கள் சமர்ப்பித்து கோரிக்கைகள் ஏதேனும் பெறப்படின் அவை நிராகரிக்கப்படலாம்.

3. எழுப்பப்பட்ட வினா

மத்திய வருமானவரி அலுவலகத்தால் வழங்கப்படும் நிலையான கணக்கு எண்ணிற்கான அட்டை (Pan-Card) மற்றும் இந்திய தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை போன்றவற்றில் காணப்படும் வயது குறித்த பதிவுகள் உரிய நபர்கள் கூறும் கூற்றின் அடிப்படையிலேயே பதிவு செய்யப்படுவதாலும் அதற்கான ஆதாரங்கள் ஏதும் உரிய துறைகளால் கோரப்படுவதில்லை.

அரசின் தெளிவுரை

மத்திய வருமானவரி அலுவலகத்தால் வழங்கப்படும் நிலையான கணக்கு எண்ணிற்கான அட்டை (Pan Card) மற்றும் இந்திய தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை போன்றவற்றில் காணப்படும் வயதின் அடிப்படையில் கூடுதல் ஓய்வூதியம் /கூடுதல் குடும்ப ஓய்வூதியம் வழங்கலாம்.

4. எழுப்பப்பட்ட வினா

பணியிலிருந்து ஓய்வு பெற்று அதற்குரிய ஓய்வூதியம் மற்றும் கணவன் / மனைவி (spouse) இறப்பிற்கு பிறகு பெறும் குடும்ப ஓய்வூதியம் ஆகிய இரண்டு ஓய்வூதியங்களை பெறும் ஓய்வூதியதாரர்களுக்கும் கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியம் என இரண்டு ஓய்வூதியத்திலும் வழங்கலாமா?

அரசின் தெளிவுரை

இது குறித்து தெளிவுரைகள் தனியாக வெளியிடப்படும்.

2. அரசாணை எண்.42, நிதி (ஓய்வூதியம்)த் துறை, நாள் 07.02.2011 பத்தி 5-ல் தெரிவிக்கப்பட்டுள்ள ஆவணங்கள் ஏதும் நாளது தேதிவரை இல்லாத நபர்களைப் பொறுத்தவரை மத்திய வருமானவரி அலுவலகத்தால் வழங்கப்படும் நிலையான கணக்கு எண்ணிற்கான அட்டைக்கு (Pan Card) விண்ணப்பித்து அதனைப் பெற்ற பிறகு அதனடிப்படையில் அவர்கள் கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியத்திற்கு விண்ணப்பிக்கலாம். மத்திய அரசால் தெரிவிக்கப்பட்டுள்ள ஆவணங்களின் பட்டியலில் மருத்துவச் சான்றிதழ், குடும்ப அட்டை மற்றும்

வாரிசு சான்றிதழ் ஆகியவை இடம்பெறாததால் இந்த ஆவணங்களை கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியம் வழங்குவதற்கு ஏற்க வேண்டாம் எனவும் தெளிவுரை வழங்கப்படுகிறது.

3. பிறந்த தேதி குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் ஏதும் இல்லாத நிலையில், வயது மட்டுமே குறிக்கப்பட்ட ஆவணங்கள் ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரரால் அளிக்கப்படும் நேர்வுகளில், கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியம் சம்பந்தப்பட்ட ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரர் 80, 85, 90, 95 மற்றும் 100 வயதினை முறையே நிறைவடைந்த வருடத்தின் அடுத்த வருடத்தின் சனவரி முதல் தேதியிலிருந்து வழங்கலாம். (i.e. 1st January of the year following the year in which the pensioner / family pensioner has completed the age of 80, 85, 90, 95 and 100 years based on the records.) உதாரணமாக, ஒரு ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரரால் அளிக்கப்படும், பிறந்த தேதி குறிப்பிடப்படாமல், வயது மட்டும் குறிப்பிடப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை / பிற ஆவணங்களின்படி 01.01.2011 அன்று ஒருவரது வயது 80 எனக் குறிப்பிடப்பட்டிருந்தால், அவருக்கு கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியத்தை 01.01.2011 முதலே வழங்கலாம்.

தங்கள் உண்மையுள்ள,
அரசு முதன்மைச் செயலாளருக்காக.

## GOVERNMENT OF TAMILNADU

**Abstrct**

**RESTRICTED HOLIDAYS - Inclusion of "BHAGAWAN VAIGUNDASWAMI BIRTHDAY" - Orders - Issued.**

---

**PERSONNEL AND ADMINISTRATIVE REFORMS (FR III) DEPARTMENT**

G.O. (Ms) No.36 Dated : 02.03.2012

Read

1. G.O.Ms.No.428, Personnel and Administrative Reforms (FR. III), Department, dated 16.12.2003.
2. G.O.Ms.No.183, Personnel and Administrative Reforms (A) Department, dated 13.07.2007.
3. From Mahaguru Balaprajapathy Adikalar, representation dated 21.09.2011.

**ORDER :**

As per the Government Order first read above the State Government employees are entitled to avail three days as Restricted Holidays in a year. The Government also directed in the G.O. that 35 festivals were notified as Restricted Holidays.

2. In the Government Order second read above, the list of restricted holidays has been restricted to 32, by amending para 532 of Secretariat Office Manual.

3. A request has been made to this Government to consider declaring a Government Holiday on "BHAGAWAN VAIGUNDASWAMI BIRTHDAY".

4. The Government after careful consideration direct that "BHAGAWAN VAIGUNDASWAMI BIRTHDAY" shall be included as one of the 'Restricted Holidays' mentioned in the annexure to the Government Order second read above as Serial No.33.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**Dr.V.IRAI ANBU**
PRINCIPAL SECRETARY TO GOVERNMENT

## GOVERNMENT OF TAMILNADU

**Abstrct**

**School Education - Central Plan Scheme - Constitution of District Level Grant-in-aid Committee for providing infrastructure Development to Minority Institution / Schools (IDMI) - Guidelines - Orders - issued.**

**School Education (Q) Department**

G.O. (Ms) No.49

Dated : 05.03.2012
மாசி-22
திருவள்ளுவர் ஆண்டு 2043
**Read**

1. From the Government of India, MHRD Department of School Education & Literacy, New Delhi, Lr.No. F.No.8-13/2010-EE-19, dt. 10.08.2010, 11.11.2010 and 18.12.2010.
2. From the Director of Elementary Education Lr.Rc.No.30672/K4/2009, dated 12.10.2010 and 12.07.2011.
3. G.O. (Ms) No.111, School Education (Q) Department, dated 25.03.2009.
4. G.O. (Ms) No.125, School Education (Q) Department, dated 19.08.2011.
5. The Commissioner of Minorities Welfare Department, letter no.DM1/7842/2010, dated 15.02.2012.

**ORDER :**

The Area Intensive Programme for Educationally Backward Minorities has been structured under Central Plan Schemes of Modernisation of Madarassa Education The Government of India are releasing 100% Central Assistance from the year 1993-94. In continuation of the scheme, the Government of India have called for the proposals from Non-Government organizations seeking financial assistance under the revised Scheme for Providing Quality Education in Madarassa (SPQEM) and infrastructure Development of Minority Institution / Schools (IDMI). These proposals have to be forwarded to Government of India, with the recommendation of the State Level Grant-in-aid Committee.

2. In the G.O third and fourth read above, orders have been issued constituting the State Level Grant-in-aid Committee for implementing the Scheme for providing quality Education in Madarassa SPQEM / IDMI. The State Level Grant-in-aid Committee would scrutinize, prioritize and recommend the proposals received from the District Level Grant-in-aid Committee to the Government of India for consideration.

3. A meeting on State Level Grants-in-Aid Committee for providing financial assistance for the development of infrastructure in minority institutions was held. Accordingly, the Director of Elementary Education was requested to frame guidelines and to constitute the District Level Committees in order to advertise, receive, scrutinize, inspect and forward the proposals from the district to the Government through the Head of the Departments.

4. The Director of Elementary Education in his proposal has stated that erstwhile area intensive and Madarassa Modernisation Programme has been revised as a separate scheme for infrastructure development of minority institution / schools. The revised scheme of infrastructure Development of Minority Institution / Schools places upon State Government certain specific responsibilities such as constituting a State Level Grant-in-aid Committee under the Chairmanship of Secretary, School Education Department and the Committee would scrutinize, prioritize and recommend proposals to the Government of India for sanction of grant. Therefore, in tune with above guidelines it is desirable to have a committee at the District level so as to undertake the responsibility of implementing and supervising of

the infrastructure Development of Minority Institution / Schools (IDMI) scheme at the District level with the following Officers as follows:-

| | | |
|---|---|---|
| 1) Chief Educational Officer of the Concerned Revenue District | - | Chairman |
| 2) District Backward Classes and Minorities Welfare Officer | - | Member |
| 3) Two Members from the Minority Community | | |
| 4) District Elementary Educational Officer | - | Member Secretary |

The District Level Grant-in-aid Committee may be empowered to undertake the responsibilities to implement the Infrastructure Development of Minority Institution / Schools (IDMI) Scheme at the district level, by following the parameters / guidelines.-

a. The Scheme has to cover the entire district but preference should be given to institutions (Private / Aided / Unaided / Elementary / Secondary /Senior Secondary) located in blocks and towns having a minority population above 20% based on 2001 census data.

b. The scheme will fund infranstructure development such as construction of classrooms, Computer room labs, library rooms, toilet, drinking water facility, hostel rooms and any other specific infrastructure justified by the committee for educational advancement of minority institutions, subject to the condition that a maximum amount of Rs.50,00 lakhs per school or 75% of the total expenditure incurred whichever is less as one time grant shall be sanctioned in two instalments.

**Eligibility Criteria**

◆ Voluntary Organisations, Society, trust, running institutions that are recognized by Central or State Government are eligible to apply, it they satisfy the following criteria.

◆ The minority institution should have been established and running for a minimum period of 3 years. The institution should run as per section 4 and section 9 of of 1977 Tamilnadu Minority Schools (Recognition and payment of grant) rules.

◆ It should not be run with a profit motive.

◆ The agencies intended to receive grants should furnish an audited statement in the prescribed proforma duly attested by a charted accountant.

◆ The estimate of expenditure should be prepared by a Charted Engineer and should be certified / Counter Signed by the concerned area Executive Engineer (PWD).

◆ The voluntary agencies should furnish, form 6 to 7 under society Registration Act of the Registration Department.

◆ Minority Institution should submit Government order declaring them as minority institution as on date.

◆ The District level committee shall give wide publicity through mass media and circulate the above mentioned guidelines through a proceedings issued by the Chief Educational Officer of the concerned district to all the minority schools.

No case should be pending with Court of law / Police either against the society or against its members with regard to their official discharge.

After receiving the proposals from the Minority Institutions, the members of the District Level Grant-in-aid Committee under the Chairmanship of Chief Educational Officer should inspect the institution as team and satisfy themselves that the institution is eligible to receive grant under Infrastructure Development of Minority Institution / Schools (IDMI) Scheme and furnish a certificate to that effect to the State Level Grant-in-aid Committee. The Director of Elementary Education has requested the orders approving the guidelines and constituting the District Level Grant-in-aid Committee.

5. The Government have examined the proposal of the Director of Elementary Education and have decided to accept it. Accordingly, the Government constitute the Distrit Level Grant-in-aid Committee for implementing the Scheme of Infrastructure Development to Minority Institutions / Schools as follows :

| | | |
|---|---|---|
| 1) Chief Educational Officer of the Concerned Revenue District | - | Chairman |
| 2) District Backward Classes and Minorities Welfare Officer | - | Member |
| 3) Two Members from the Minority Community | | |
| 4) District Elementary Educational Officer | - | Member Secretary |

6. The District Level Grant-in-aid Committee Members / Director of School Education / Director of Elementary Education are requested to follow the guidelines while forwarding the proposals to the Government scrupulously.

7. This order issues with the concurrence of Backward Classes. Most Backward Classes & Minorities Welfare Department vide its U.O. NO.5712/MWRV/11, dated 15.02.2012.

**(By Order of the Governor)**

**D.Sabitha,**
Secretary to Government.

# GOVERNMENT OF TAMILNADU

## ABSTRACT

Public Services Compassionate appointment - Recruitment of Disabled Defence Personnel / Sons / unmarried daughters / widows of Defence Personnele killed / Disabled in action or died in harness to the posts within the purview of Tamil Nadu Public Service Commission / Outside the purview of Tamil Nadu Public Service Commission - Procedure of recruitment through Employment Exchage - Tamil Nadu Public Service Commission - Relaxation - Ordered - Amendment - issued.

---

## PUBLIC (EX - SERVICEMEN) DEPARTMENT

**G.O. Ms. No. 211** **Dated : 07.03.2012**

Read :

1. G.O. Ms. No. 1083, Labour & Employment Department, dated 18.12.1976.
2. G.O. Ms. No. 120, Labour & Employment Department, dated 26.06.1995.
3. G.O. Ms. No. 164, Labour & Employment Department, dated 22.08.1995
4. G.O. Ms. No. 93, Labour & Employment Department, dated 30.06.1997.
5. G.O. Ms. No. 70, Labour & Employment Department, dated 02.07.1998
6. From the Secretary to Government of India, Ministry of Defence, D.O.Letter No. 114/19336/JS (Ex.Ser). dated 26.06.1999
7. From the Chief of Army Staff, Army Headquarters, Letter No A/00043/1/COAS dated 25.06.1999.
8. From the Director of Ex-Serviceman's Welfare, letter No. 19111/99/C1, dated 23.07.1999
9. G.O.Ms. No. 1218, Public (Ex-Servicemen) Department fsyrf 03.09.1999.
10. G.O. Ms. No 216, labour & Emeployment Department, dated 15.11.2007.
11. From the Commissioner, Department of Employment and Training, Chennai-32. Letter No. ச/9777/2007 dated 24.11.2008.
12. Government Letter No. 6607/Ex-ser/2010-5, Public (Ex-Servivemen) Deprtment, dated 18.10.2010.
13. From the Joint Director, Directorate of Ex-Servicemen's Welfare, Chennai-3 Letter Rc. No. 6040/2008/C2, Dated 23.11.2010.
14. From the Director, Directorate of Ex-Servicemen's Welfare, Chennai-3 Letter Rc.No. 6040/2008/C1, dated 17.05.2011.

**Order**

The following amendment is issued to the G.O. Ms. No.1218, Public (Ex-Servicemen) Department, dated 03.09.1999.

**AMENDMENT**

In the said G.O. for paragraph 9, the following be shall be substituted.

"The Director of Employment and Training is directed to distribute all the pending applications for compassionate ground appointment of the dependants / disabled defence personnel killed / disabled held with him to the respective District Collectors.

The District Collectors are directed to register such applications and to conduct a "Special Drive" to clear all the pending applications received from Director of Employment and Training according to seniority and merit.

The Director of Ex-Servicemen's Welfare is directed to forward all applications for compassionate ground appoinment to the respective District Collectors in future".

This order issues with the concurrence of Labour and Employment Department vide its U.O.No. 7235/Q2/2012-1, dated 06.03.2012

**(BY ORDER OF THE GOVERNOR)**

**KUMAR JAYANT,**
**SECRETARY TO GOVERNMENT**

## தமிழ்நாடு அரசு

### சுருக்கம்

பள்ளிக் கல்வி - அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டது, நிலையிறக்கம் செய்யப்படும் தொடக்கப் பள்ளிகளுக்கு தலைமையாசிரியர் பணியிடங்கள் - ஒப்பளிப்பு ஆணை வெளியிடப்படுகிறது.

---

### பள்ளிக் கல்வித் (சி2) துறை

அரசாணை (நிலை) எண்.64 நாள் : 15.03.2012

படிக்க

1. அரசாணை (நிலை) எண். 46 பள்ளிக் கல்வித் துறை, நாள் 01.03.2011
2. தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை 6 அவர்கள் கடித ந.க.எண் 034582/கே4/2010, நாள் 15.03.2011 மற்றும் 07.12.2011.
3. பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை6 அவர்கள் கடித ந.க.எண் 189/A2/RMSA/2011 நாள் 21.03.2011

**ஆணை**

தமிழகத்தில் அனைத்து மாணவர்களுக்கும் தரமான இடைநிலைக் கல்வியை உறுதி செய்வதற்காக அனைவருக்கும்இடைநிலை கல்வித் திட்டம் மத்திய, மாநில அரசுகளின் பங்களிப்புடன் கீழ்க்காணும் நோக்கங்களுடன் 2009-2010ம் நிதி ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது.

◆ 2017 ஆம் ஆண்டிற்குள் 16 வயதிற்குட்பட்ட எல்லாக் குழந்தைகளுக்கும் இடைநிலைக் கல்வி வழங்குதல்.

◆ 2020க்குள் 18 வயதிற்குட்பட்ட அனைவருக்கும் மேல்நிலைக் கல்வி வாய்ப்பை ஏற்படுத்துதல்.

◆ அனைத்து மாணவர்களுக்கும் தரமான கல்வியை உறுதி செய்தல்.

◆ பள்ளிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்

◆ ஆண்,பெண் இன, மத வேறுபாடின்றி இடைநிலைக் கல்வியை உறுதி செய்தல்.

2. 2011-2012 ஆம் கல்வியாண்டில் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித்திட்டத்தின் கீழ் 344 அரசு / ஊராட்சி ஒன்றிய / நகராட்சி / மாநகராட்சி / நலத்துறை நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தி மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டன.

3. நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்த அரசுக்கு கருத்துருக்கள் அனுப்பும்போது, நிலையிறக்கம் செய்யப்படும் தொடக்கப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர் பணியிடம் அனுமதிப்பது குறித்த கருத்துருக்களை தொடக்கக் கல்வி இயக்குநரிடமிருந்து பெற்று ஒருங்கிணைந்த கருத்துருக்களை அரசுக்கு அனுப்பத் தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் பள்ளிக்கல்வி இயக்குநர் தனது கடிதத்தில், 2011-2012ஆம் கல்வியாண்டில் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் 344 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்படும் போது 1 முதல் 5 வகுப்புகளுடன் நிலையிறக்கம் செய்யப்பட்ட 344 தொடக்கப்ப பள்ளிகளுக்கு 344 தலைமையாசிரியர் பணியிடங்கள் அனுமதிக்குமாறும், இப்பணியிடங்களை ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள ரூ.5200 -20200 தரஊதியம் ரூ.2800 என்ற ஊதிய விகிதத்திலுள்ள இடைநிலை ஆசிரியர் பணியிடங்களுள் ஒரு பணியிடத்தை ரூ.9300-34800 தரஊதியம் ரூ. 4500 என்கிற ஊதிய விகிதத்திலுள்ள தொடக்கப்ப பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடமாக நிலையுயர்த்தி ஆணை வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அரசினைக் கோரியுள்ளார்.

4. 2011-2012ஆம் கல்வியாண்டில் நிலையிறக்கம் செய்யப்பட்ட 344 தொடக்கப் பள்ளிகளுள் ஆதிதிராவிடர் நலத்துறைக்குட்பட்ட 8 பள்ளிகள் நீங்கலாக மீதமுள்ள 336 தொடக்கக் கல்வித் துறைக்குட்பட்ட அரசு, ஊராட்சி ஒன்றியம், நகராட்சி, மாநகராட்சி ஆகிய மேலாண்மையின்கீழ் செயல்பட்டு வரும் தொடக்கப் பள்ளிகளில் அனுமதிக்கப்பட்டுள்ள இடைநிலை ஆசிரியர் பணியிடங்களுள், ஒரு பள்ளிக்கு ஒரு இடைநிலை ஆசிரியர் பணியிடம் வீதம் மொத்தம் 336 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களை 336 தொடக்கப்பள்ளித் தலைமையாசிரியர் பணியிடங்களாக நிலையுயர்த்தி ஆணைகள் வழங்குமாறு தொடக்கக் கல்வி இயக்குநர் அரசைக் கோரியுள்ளார். மேலும் ஆதிதிராவிடர் நலத்துறைக்குட்பட்ட 8 தலைமையாசிரியர் பணியிடங்கள் அனுமதிப்பது குறித்து ஆதிதிராவிடர் நலத்துறையால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளலாம் எனவும் தொடக்கக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

5. தொடக்கக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலித்து, 2011-12 ஆம் கல்வியாண்டில்அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் கீழ் நடுநிலைப்பள்ளிகள் தரம் உயர்த்தப்பட்டதால் நிலையிறக்கம் செய்யப்பட்ட 344 தொடக்கப்பளளிகளுள் அரசு, ஊராட்சி ஒன்றியம், நகராட்சி, மாநகராட்சி ஆகிய மேலாண்மையின் கீழ் செயல்பட்டு வரும் 336 தொடக்கப்ப பள்ளிகளில் எற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள இடைநிலை ஆசிரியர் பணியிடங்களுள், பள்ளிக்கு ஒரு பணியிடம் வீதம் மொத்தம் 336 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களை ரூ.9300-34800 தரஊதியம் ரூ.4500 என்ற ஊதிய விகிதத்தை கொண்டுள்ள தொடக்கப்பள்ளித் தலைமையாசிரியர் பணியிடங்களாக நிலையுயர்த்தி அரசு ஆணையிடுகிறது.

6. ஆதிதிராவிடர் நலத்துறைக்குட்பட்ட 8 பள்ளிகளுக்கான தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிட ஒப்பளிப்பு ஆணை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையால் தனியாக வெளியிடப்படும்.

7. மேற்கண்டவாறு தலைமையாசிரியர் பணியிடங்கள் தரம் உயர்த்திப்படுவது, உயர்நிலைப்பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டு தொடக்கப்ப பள்ளி தனியாக பிரிக்கப்பட்டு அதற்கான தலைமையாசிரியர் பணியிடம் நிரப்பப்படும் நாள் முதல் நடைமுறைப்படுத்தப்பட வெண்டும்.

8. மேலே பத்தி 5-ல் ஆணையிடப்பட்டவாறு நிலையுயர்த்திடப்படும் பணியிடங்கள் அவை நிரப்பப்படும் நாளிலிருந்து ஓராண்டு காலத்திற்குத் தற்காலிகமாக அனுமதிக்கப்படுகின்றது. இப்பணியிடங்களில் பணிபுரிவோர், அப்பணியிடங்களுக்கென அனுமதிக்கப்பட்ட காலச் சம்பள ஏற்ற முறையில், ஊதியம், தர ஊதியம் மற்றும் இதரப்படிகளையும் நடைமுறையில் உள்ள விதிகளின்படி பெறுவதற்குத் தகுதியுடையவராவர்.

9. மேலே ஆணையிடப்பட்டுள்ளவாறு நிலையுயர்த்தப்படும் பணியிடங்களுக்கான கூடுதல் செலவினம் ஒரு புதுப்பணியாக கருதப்படமாட்டாது என்றும் 2011-2012 இல் துணை மதிப்பீடுகளில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்டமன்றப் பேரவையில் தகவலுக்கு கொண்டு செல்லப்படும்.

10. மேலே குறிப்பிட்டுள்வாறு நிலையிறக்கம் செய்யப்படும் 336 தொடக்கப்பள்ளிகளில் இடைநிலை ஆசிரியர் பணியிடத்தை தொடக்கப் பள்ளித் தலைமையாசியர் பணியிடமாக நிலையுயர்த்துவதால் ஏற்படும் செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புக்களின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

(i) அரசுப் பள்ளிகள்
2202 பொதுக்கல்வி-01 தொடக்கக் கல்வி-101 அரசு
தொடக்கப் பள்ளிகள் -I திட்டத்தில் சேராதது - AB
அரசு தொடக்கப் பள்ளிகள்
(த.தொ.கு 2202-01-101-AB-0005)

(ii) ஊராட்சி ஒன்றிய பள்ளிகள்
2202 பொதுக் கல்வி-01 தொடக்கக் கல்வி -101 அரசு
தொடக்கப் பள்ளிகள் -I திட்டத்தில் சேராது - AC- ஊராட்சி
ஒன்றியத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளங்கள்
(த.தொ.கு. 2202-01-101 AC - 0003)

(iii) நகராட்சி / மாநகராட்சிப் பள்ளிகள்
2202 பொதுக்கல்வி -01 தொடக்கக் கல்வி - 101 அரசு
தொடக்கப் பள்ளிகள் -I திட்டத்தில் சேராதது - AA - நகராட்சி
மாநகராட்சி தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளங்கள்
(த.தொ.கு 2202-01-101 AA - 0007)

11. இக்கூடுதல் செலவினத்தை 2011-12ம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு ஏதுவாக, துணைக் குறிப்பணை தவறாது உரிய காலத்தில் நிதித்துறைக்கு அனுப்பி வைக்குமாறு தொடக்கக் கல்வி இயக்குர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

12. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண் 14826/CMPC/2012 நாள் 14.03.2012ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது, இதற்கான கூடுதல் நிதியொதுக்கம் பேரேட்டு எண் 1875 (ஆயிரத்து எண்ணூற்று ஏழுபத்தைந்து)

(ஆளுநரின் ஆணைப்படி)

த.சபீதா,
அரசு முதன்மைச் செயலாளர்

**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**

பள்ளிக் கல்வி - அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டது - நிலையிறக்கம் செய்யப்படும் தொடக்கப் பள்ளிகளுக்கு தலைமையாசிரியர் பணியிடங்கள் - ஒப்பளிப்பு ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வித் (சி2) துறை**

அரசாணை (நிலை) எண்.66 நாள் : 16.03.2012

படிக்கப்பட்டவை :

1. அரசாணை (நிலை) எண். 199, பள்ளிக் கல்வித் துறை, நாள் 15.03.2010.
2. தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை 6 அவர்கள் கடித ந.க.எண் 034582/கே4/2011, நாள் 12.12.2011.

**ஆணை**

தமிழகத்தில் அனைத்து மாணவர்களுக்கும் தரமான இடைநிலைக் கல்வியை உறுதி செய்வதற்காக அனைவருக்கும் இடைநிலை கல்வித் திட்டம் மத்திய, மாநிலஅரசுகளின் பங்களிப்புடன் கீழ்க்காணும் நோக்கங்களுடன் 2009-2010 ம நிதி ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது.

- 2017 ஆம் ஆண்டிற்குள் 16 வயதிற்குட்பட்ட எல்லாக் குழந்தைகளுக்கும் இடைநிலைக் கல்வி வழங்குதல்.
- 2020க்குள் 18 வயதிற்குட்பட்ட அனைவருக்கும் மேல்நிலைக் கல்வி வாய்ப்பை ஏற்படுத்துதல்.
- அனைத்து மாணவர்களுக்கும் தரமான கல்வியை உறுதி செய்தல்.
- பள்ளிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்
- ஆண்,பெண் இன, மத வேறுபாடின்றி இடைநிலைக் கல்வியை உறுதி செய்தல்.

2. 2011-2012 ஆம் கல்வியாண்டில் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித்திட்டத்தின் கீழ் 710 அரசு / ஊராட்சி ஒன்றிய / நகராட்சி / மாநகராட்சி / ஆதிதிராவிடர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (ம) சீர் மரபினர் நலத்துறை நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தி மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டன.

3. தரம் உயர்த்தப்பட்ட 710 பள்ளிகளுள், 2 பள்ளிகள் ஆதிதிராவிடர் நலத்துறையின் கட்டுப்பாட்டிலும், 4 பள்ளிகள் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (ம)சீர் மரபினர் நலத்துறையின் கட்டுப்பாட்டிலும் இயங்குவன என்றும் உயர்நிலைப் பள்ளிகள் துவக்கிடும்போது, அந்நடுநிலைப் பள்ளிகளிலுள்ள 6, 7, 8 ஆகிய வகுப்புகள் உயர்நிலைப் பள்ளிகளுடன் இணைக்கப்பட்டுவிடுவதால், மீதமுள்ள 1-5 வகுப்புகள் நிலையிறக்கம் செய்யப்பட்ட தொடக்கப் பள்ளிகளாகவே இயங்கும் என்றும்இவ்வாறு நிலையிறக்கம் செய்யப்பட்ட தொடக்கப் பள்ளிகளுக்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள ரூ.5200-20200+ தரஊதியம் ரூ.2800 என்ற ஊதிய விகிதத்திலுள்ள இடைநிலை ஆசிரியர்பணியிடங்களுள் ஒரு பணியிடத்தை ரூ.9300-34800+ தரஊதியம் ரூ.4500 என்கிற ஊதிய விகிதத்திலுள்ள தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடமாக நிலையுயர்த்தி ஆணை வழங்குமாறு தொடக்கக் கல்வி இயக்குநர் கோரியுள்ளார்.

4. தொடக்கக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலித்து, 2011-2012 ஆம் கல்வியாண்டில் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் கீழ் நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டதால், நிலையிறக்கம் செய்யப்பட்ட 710 தொடக்கப் பள்ளிகளுள் அரசு, ஊராட்சி ஒன்றியம், நகராட்சி, மாநகராட்சி ஆகிய மேலாண்மையின்கீழ் செயல்பட்டு வரும் 704 தொடக்கப் பள்ளிகளில் ஏற்கனவே உள்ள இடைநிலை ஆசிரியர் பணியிடங்களுள் பள்ளிக்கு ஒரு பணியிடம் வீதம் 704 இடைநிலை ஆசிரியர் பணியிடஙகளை ரூ.9300-34800+தரஊதியம் ரூ.4500 என்ற ஊதிய விகிதத்தை கொண்டுள்ள தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடங்களாக நிலையுயர்த்தி அரசு ஆணையிடுகிறது.

5. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும்சீர்மரபினர் நலத்துறைக்குட்பட்ட 6 தொடக்கப் பள்ளிகளுக்கான தலைமையாசிரியர் பணியிடங்கள் குறித்த ஒப்பளிப்பு ஆணை சம்பந்தப்பட்ட துறையில் தனியாக வெளியிடப்படும்.

6. மேற்கண்டவாறு பணியிடங்கள் தரம் உயர்த்தப்படுவது, உயர்நிலைப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டு தொடக்கப் பள்ளி தனியாக பிரிக்கப்பட்டு, அதற்கான தலைமையாசிரியர் பணியிடம் நிரப்பப்படும் நாள் முதல் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

7. தனியாக பிரிக்கப்படும் தொடக்கப் பள்ளிகள் விவரம் தனியாக வெளியிடப்படும்.

8. மேலே பத்தி நான்கில் ஆணையிடப்பட்டவாறு நிலையுயர்த்தப்படும் பணியிடங்கள், அவை நிரப்பப்படும் நாளிலிருந்து ஓராண்டு காலத்திற்கு தற்காலிகமாக அனுமதிக்கப்படுகின்றது. இந்நிலையுர்த்தப்பட்ட பணியிடங்களில் பணிபுரிவோர், அப்பணியிடத்திற்கென, அனுமதிக்கப்பட்ட காலச் சம்பள ஏற்ற முறையில், ஊதியம், தர ஊதியம் மற்றும் இதரப்படிகளை, நடைமுறையில் உள்ள விதிகளின்படி பெறுவதற்குத் தகுதியுடையவராவர்.

9. மேலே ஆணையிடப்பட்டுள்ளவாறு நிலையுயர்த்தப்படும் பணியிடஙகளுக்கான கூடுதல் செலவினம் ஒரு புதுப்பணியாக கருதப்பட மாட்டாது என்றும், 2011-2012 இன் துணை மதிப்பீடுகளில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்டமன்ற பேரவையின் தகவலுக்கு கொண்டு செல்லப்படும்.

10. மேலே குறிப்பிட்டுள்ளவாறு நிலையிறக்கம் செய்யப்படும் 704 தொடக்கப்பள்ளிகளில் இடைநிலை ஆசிரியர் பணியிடத்தை தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடமாக நிலையுயர்த்துவதால் ஏற்படும் செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புக்களின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

(i) அரசுப் பள்ளிகள்
2202 பொதுக்கல்வி-01 தொடக்கக் கல்வி-101 அரசு
தொடக்கப் பள்ளிகள் -I திட்டத்தில் சேராதது - AB
அரசு தொடக்கப் பள்ளிகள்
(த.தொ.கு 2202-01-101-AB-0005)

(ii) ஊராட்சி ஒன்றிய பள்ளிகள்
2202 பொதுக் கல்வி-01 தொடக்கக் கல்வி -101
அரசு தொடக்கப் பள்ளிகள் -I திட்டத்தில் சேராது - AC- ஊராட்சி
ஒன்றியத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளங்கள்
(த.தொ.கு. 2202-01-101 AC - 0003)

(iii) நகராட்சி / மாநகராட்சிப் பள்ளிகள்
2202 பொதுக்கல்வி -01 தொடக்கக் கல்வி - 101 அரசு
தொடக்கப் பள்ளிகள் -I திட்டத்தில் சேராதது - AA - நகராட்சி
மாநகராட்சி தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளங்கள்
(த.தொ.கு 2202-01-101 AA - 0007)

11. இக்கூடுதல் செலவினத்தை 2011-12ம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு ஏதுவாக, துணைக் குறிப்பணை தவறாது உரிய காலத்தில் நிதித்துறைக்கு அனுப்பி வைக்குமாறு தொடக்கக் கல்வி இயக்குர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

12. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண் 15276/மை.ம.ஆ.பி/2012, நாள் 16.03.2012ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது, இதற்கான கூடுதல் நிதியொதுக்கம் பேரேட்டு எண் 1877 (ஆயிரத்து எண்ணூற்று ஏழுபத்தேழு)

(ஆளுநரின் ஆணைப்படி)

த.சபீதா,
அரசு முதன்மைச் செயலாளர்

## தமிழ்நாடு அரசு
## சுருக்கம்

பள்ளிக்கல்வி - மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பு 2012-2012ஆம்ஆண்டு முதல் தமிழகத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் 7 முதல் 17 வயது வரை உள்ள மாணவ, மாணவிகளுக்கு சதுரங்க விளையாட்டு அறிமுகப்படுத்துதல் - ஒப்புதல் ஆணை - வெளியிடப்படுகிறது

---

### பள்ளிக் கல்வித் (இ1) துறை

அரசாணை (நிலை) எண்.73 நாள் : 20.03.2012

படிக்கப்பட்டவை :

1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற பேரவை விதி 110-ன் கீழ் 26.08.2011 அன்று வெளியிடப்பட்ட அறிக்கை.
2. பள்ளிக்கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.2/பி./இஇ(மேநிப)/2011, நாள்:28.09.2011, 10.11.2011 மற்றும் 30.12.2011.

**ஆணை :**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி 110-ன் கீழ் 26.08.2011 அன்று பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:-

மாணவ / மாணவியர்களின் திறமையையும், ஆற்றலையும் வளப்படுத்துவதற்கு அவர்களின் சிந்திக்கும் ஆற்றலை மேம்படுத்துவது மிகவும் அவசியம். இதனை கருத்தில் கொண்டு குழந்தைகளின் சிந்திக்கும் ஆற்றலை மேம்படுத்தும் நோக்கத்துடன், 7 முதல்17 வயதுள்ள பள்ளி செல்லும் மாணவ / மாணவியருக்கு சதுரங்க விளையாட்டு வரும் கல்வியாண்டு முதல் அறிமுகப்படுத்தப்படும். இந்த விளையாட்டினால் மாணவ / மாணவியரின் அறிவுத்திறன் வளர்வதுடன், கூர்மையாக சிந்திக்கும் ஆற்றலும் விரிவடையும்.

2) மேற்காண் அறிவிப்பினை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக உரிய கருத்துருவினை அரசின் பரிசீலினைக்காக பள்ளிக்கல்வி இயக்குநர் பரிந்துரைத்துள்ளார்.

3) பள்ளிக்கல்வி இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலித்து அதனை ஏற்கலாம் என முடிவு செய்து, கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடப்படுகிறது.

1. 2011-2012ஆம் ஆண்டு முதல் தமிழகத்திலுள்ள அனைத்து வகைப் பள்ளிகளிலும் 7 முதல் 17 வயது வரை உள்ள மாணவ / மாணவிகளுக்கு சதுரங்க விளையாட்டினை அறிமுகப்படுத்தப்படுகிறது. இதற்காக ஒரு வகுப்பறை, மின்விளக்கு, மின்விசிறி மற்றும் அறைகலன்கள் (மேஜை மற்றும் நாற்காலி) ஆகிய வசதிகளை பள்ளிகளை அமைத்துக் கொள்ளவேண்டும்.
2. 2594 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 2488 அரசு மேல்நிலைப் பள்ளிகள் ஆக மொத்தம் 5082 பள்ளிகளுக்கு பள்ளி ஒன்றுக்கு 10 சதுரங்கப் பலகைகள் வீதம் 50820 சதுரங்கப் பலகைகளுக்கு தேவைப்படும் தொகை ரூ.50.82 இலட்சம் மேற்படி பள்ளிகளில் பராமரிக்கப்பட்டு வரும் பள்ளி பொது நிதியில் மேற்கொள்ளப்பட வேண்டும்.
3. மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிதி அமைப்பு இல்லாத ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு மட்டும் ஒரு தொடக்கப் பள்ளிக்கு ஒரு சதுரங்கப் பலகை என்ற விகிதத்தில் 22877 ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிகளுக்கும், ஒரு நடுநிலைப் பள்ளிக்கு இரண்டு சதுரங்கப் பலகை வீதம் 8296 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளுக்கும் ஆக மொத்தம் 39469 சதுரங்கப் பலகைகளுக்கு ஒரு பலகைக்கான விலை ரூ.100/- வீதம் வாங்கிட நிர்வாக ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

4. அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் சுயநிதி பள்ளிகள் தங்கள் சொந்த நிதி ஆதாரத்தில் சதுரங்க விளையாட்டுப் பலகைகள் வாங்கப்பட வேண்டும்.

5. அனைத்து ஊராட்சி ஒன்றிய பள்ளிகள், உதவி பெறும் பள்ளிகள் மற்றும் சுயநிதி பள்ளிகளில் உடற்கல்வி ஆசிரியர் இல்லாத நிலையில், ஆர்வமுள்ள ஆசிரியர்களை சதுரங்க விளையாட்டில் உட்படுத்தி, அவர்களுக்கு அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் குறுவள மையம் (CRC) மற்றும் வட்டார வளமையம் (BRC) மூலம் சதுரங்க விளையாட்டு பயிற்கி அளித்து அவர்கள் மூலம் மாணவர்களிடையே சதுரங்க விளையாட்டினை அறிமுகப்படுத்தப்பட வேண்டும். மேலும், அனைத்து அரசு, உதவிபெறும் மற்றும் சுயநிதி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு உடற்கல்வி ஆசிரியர்கள் / ஆர்வமுள்ள ஆசிரியர்களைக் கொண்டு சதுரங்க விளையாட்டினை நடைமுறைப்படுத்தவும், அவ்வாசிரியர்களுக்கு அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்ட (RMSA) பயிற்சியில் சதுரங்க விளையாட்டிற்கான பயிற்சி அளிக்க வேண்டும்.

6. அனைத்து வகை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் நூலகத்திற்கு புத்தகங்கள் வாங்கும் போது சதுரங்க விளையாட்டு குறித்த புத்தகங்களை வாங்குவதற்கு அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் அறிவுறுத்தப் படுகிறார்கள்.

7. (அ) சதுரங்க விளையாட்டினை அனைத்து வகை மாணவ / மாணவியர்களிடையே நடைமுறைப்படுத்தி நன்கு பயிற்சியளித்த பின்னர் பள்ளிகளிடையே போட்டிகள் நடத்தவும் திட்டமிட வேண்டும்.

7. (ஆ) ஏற்கனவே தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், 2005-2006 முதல் மாநில அளவிலான பாரதியார் மற்றும் குடியரசு தின விளையாட்டுப் போட்டிகளில், புதிய விளையாட்டுகளில் ஒன்றான சதுரங்க விளையாட்டுப் போட்டியினை பள்ளிக்கல்வித் துறையுடன் ஒருங்கிணைந்து ஆண்டுதோறும் மாணவ, மாணவியர்களில் மூன்று (14.17.19) வயது பிரிவினர்களுக்கு குறு வட்டம், கல்வி மாவட்டம் மண்டல போட்டிகள் மற்றும் மாநில அளவிலான போட்டிகள் நடத்தப்பட்டு வருவது தற்போது நடைமுறையில் இருந்து வருகிறது. இப்போட்டிகளை மேற்குறிப்பிட்டுள்ள துறைகளுடன் ஒருங்கிணைந்து கீழ்க்கண்ட வயது பிரிவினர்களுக்கு நடத்த திட்டமிட வேண்டும்.

| | |
|---|---|
| Sub Juniors | 7 to 10 |
| Juniors | 11 to 13 |
| Seniors | 14 to 15 |
| Super Seniors | 16 to 17 |

7. (இ) மேலும், பாரதியார் தின மற்றும் குடியரசு தினவிழா போட்டிகள் நடத்துவதற்காக உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயின்று வரும் மாணவ / மாணவியர்களுக்கு இயக்குநரின் செயல்முறைகளின்படி ரூபாய் ஒன்று வீதம் அனைத்துப் பள்ளிகளிலிருந்தும் வசூலித்து குறுவட்ட மாவட்ட மற்றும் மண்டல போட்டிகள் நடத்துவது நடைமுறையில் இருந்து வருகிறது. இந்நிலையில், தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளி மாணவ / மாணவிகளுக்கு தனிக்கட்டணம் இல்லாத நிலையில் இதனை குறுவள மையம் (CRC) மற்றும் வட்டார வளமையம் (BRC) சிறப்பு நிகழ்வாக கருதி அப்பள்ளிகளில் பயின்று வரும் மாணவ / மாணவிகளுக்கு நுழைவுக் கட்டணத்திற்கு விலக்கு அளித்து மேற்குறிப்பிட்டுள்ள விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள அனுமதிக்க வேண்டும்.

| வ.எண். | வயது பிரிவு | பயிலும் வகுப்பு | நடத்தப்படவுள்ள விளையாட்டுப் போட்டி |
|---|---|---|---|
| 1. | 7 முதல் 10 வரை | 2 முதல் 5 வரை | பாரதியார் தின விழா விளையாட்டுப் போட்டி |
| 2. | 11 முதல் 13 வரை | 6 முதல் 8 வரை | குடியரசு தினவிழா விளையாட்டுப் போட்டி |
| 3. | 14 முதல் 15 வரை | 9 முதல் 10 வரை | |
| 4. | 16 முதல் 17 வரை | 11 முதல் 12 வரை | பாரதியார் தினவிழா விளையாட்டுப் போட்டி |

7. (ஈ) மேற்குறிப்பிட்டுள்ள விளையாட்டு போட்டிகள் 2013-2014ஆம் கல்வியாண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்.

4) மேலே ஆணையிடப்பட்டுள்ளவாறு, சதுரங்கப் பலகைகளை கொள்முதல் செய்வதற்கான செலவின, ஒப்பளிப்பு ஆணை 2012-2012ஆம் ஆண்டில் தொடக்கக் கல்வி இயக்குநர் கருத்துருவின் அடிப்படையில் தனியாக வெளியிடப்படும்.

5) இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.177/KD(KM)/2012 நாள் : 20.03.2012ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.சபிதா
அரசு முதன்மைச் செயலாளர்

---

Finance (Allowances) Department,
Secretariat,
Chennai-9.

**Letter No.15363/All/2012, Dated 22.03.2012**

**From**

Thiru.M.Padmanaban, B.Com.,
Additional Secretary to Government.

**To**

The Pay and Accounts Officer,
Pay and Accounts Office (South),
Nandanam,
Chennai - 600 035.

Sir,

Sub : General Provident Fund Temporary Advance / Part Final Maximum amount of withdrawal - Clarification - Reg.

Ref: 1) G.O.Ms.No.381 Finance (Allowances) Department, dated 30.09.2010.
2) Govt. Letter No.2670/Finance (Allowances) Department, 13.01.2012.
3) Your Letter No. pay and accounts office (south) BASI/U1/1127/2012, dated 14.03.2012.

With reference to your letter third cited, I am directed to state that the maximum amount eligible for the part final withdrawal from the General Provident Fund for the purpose other than House Building Allowance Rs.2.50 Lakhs as already clarified in Government letter second cited. However with regard to the sanction of temporary advance rom General Provident Fund the existing procedure will continue to be followed.

Yours faithfully,
for Additional Secretary to Government.

## தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை 600 006.

ந.க.எண். 08118/டி2/2012, நாள் : 30.03.2012

பொருள் : தமிழ்நாடு தொடக்கக் கல்வி சார்நிலைப் பணி 2011-2012ஆம் கல்வி ஆண்டில் இணைந்திருக்கும் இடைநிலைக் கல்வி திட்டத்தின் கீழ் நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டதால் தொடக்கப் பள்ளியாக நிலையிறக்கம் செய்யப்பட்ட பள்ளிகளுக்கு தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடம் வழங்கப்பட்டது - தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர் பணியிடங்கள் பயன்படுத்த அறிவுரைகள் வழங்குதல் சார்பு.

பார்வை : 1. அரசாணை (நிலை) எண்.64 பள்ளிக் கல்வி (சி2) துறை நாள் : 15.03.2012

2. அரசாணை (நிலை) எண்.66 பள்ளிக் கல்வி (சி2) துறை நாள் : 16.03.2012

பார்வையில் கண்ட அரசாணைகளில் 2011-2012 ஆம் கல்வியாண்டில் நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டதால் நிறையிறக்கம் செய்யப்பட்ட 336 மற்றும் 704 தொடக்கப் பள்ளிகளிலும் உள்ள ஒரு இடைநிலை ஆசிரியர் பணியிடத்தை தொடக்கப்பள்ளித் தலைமை ஆசிரியர் பணியிடமாக நிலை உயர்த்தி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி தங்கள் மாவட்டத்திலுள்ள நிலையிறக்கம் செய்யப்பட்ட பள்ளிகளில் உள்ள ஒரு இடைநிலை ஆசிரியர் பணியிடத்தை தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர் பணியிடமாக நிலைஉயர்த்தி அவ்விவரத்தினை பள்ளி அளவைப் பதிவேட்டிலும், உதவி தொடக்கக் கல்வி அலுவலகம் மற்றும் மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகத்தில் பேணப்படும் பதிவேடுகளிலும் குறிப்பிடல் வேண்டும். அரசாணைகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

2. 31.03.2012 சனிக்கிழமை அன்று அனைத்து மாவட்டங்களிலும் (சென்னை தவிர்த்து) கீழ்காணும் வண்ணம் அரசினால் தற்போது அறிவிக்கப்பட்டுள்ள 1040 தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர் பணியிடங்களை ஏற்கனவே தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர் பணியிடத்திலிருந்து இடைநிலை ஆசிரியர்களாக பதவி இறக்கம் செய்யப்பட்டவர்கள் மட்டும் மீண்டும் தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர்களாக பதவி உயர்த்துவதற்கு கலந்தாய்வு நடத்தப்பெறல் வேண்டும்.

3. 31.03.2012 காலை 08.30 முற்பகல் முதல் ஏற்கனவே தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர்களாக பணியாற்றி பதவி இறக்கம் செய்யப்பட்ட இடைநிலை ஆசிரியர்களுக்கு மட்டும் மீண்டும் தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியராக பதவி உயர்வு வழங்கும் கலந்தாய்வு மற்றும் தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர் பணியிடங்கள் தரம் உயர்த்துவதன் காரணமாக இடமாற்றம் செய்யப்பட வேண்டிய இடைநிலை ஆசிரியர் கலந்தாய்வு நடைபெறுதல் வேண்டும்.

4. மேற்காணும் கலந்தாய்வின் போது கீழ்க்காணும் நடைமுறைகள் தவறாது பின்பற்றப்பட வேண்டும்.

அ) அவ்வாறு மீளவும் தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியராக பணியமர்த்தப்படும்போது, ஒரு ஒன்றியத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட பணிநபர்களுக்கு மீளவும் தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர் பணிவழங்கும் போது, தனியர் தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியராக பதவி உயர்வு பெற்ற முன்னுரிமை அடிப்படையிலேயே வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஆ) தொடக்கப்பள்ளித் தலைமை ஆசிரியர் பணியிடமாக நிலை உயர்த்தப்படுவதால் அப்பள்ளியில் பணியில் இளையோராக உள்ள ஒரு இடைநிலை ஆசிரியரை வேறு பள்ளிக்கு நிர்வாக இடமாறுதல் அளிக்கப்பட வேண்டும்.

இ) ஒரு ஒன்றியத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட இடைநிலை ஆசிரியர்கள் இடமாறுதல் அளிக்கும் போது பள்ளியில் சேர்ந்த நாளைக்கொண்டு முன்னுரிமை பின்பற்ற வேண்டும். வேறு எந்தவிதமான முன்னுரிமையையும் பரிசீலனை செய்தல் கூடாது.

ஈ) 31.03.2012 அன்றைய தேதியில் மறுநியமன அடிப்படையில் பணியாற்றுபவர்களுக்கு பதவி உயர்வோ, இடமாற்றமோ வழங்கக்கூடாது.

5. மேற்காண் கலந்தாய்வு நடைபெறும் நாளான 31.03.2012 மாவட்டத்தில் உள்ள தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் அனைத்தும் வேலைநாளாக செயல்படுதல் வேண்டும். இச்செயல்முறைகளுடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் விவரங்களை பூர்த்தி செய்து இவ்வியக்கத்திற்கு கலந்தாய்வுக்குப் பின் உடன் அனுப்ப அனைத்து மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

6. மேலும், இக்கலந்தாய்வு எவ்வித புகாருக்கும் இடமளிக்காமல் செயல்பட அனைத்து மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தொடக்கக் கல்வி இயக்குநர்.

## தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை 600 006.

**ந.க.எண். 37718/எப்2/2011, நாள் : 12.04.2012**

பொருள் : தொடக்கக் கல்வி - தனியார் நிதி உதவிபெறும் பள்ளிகள் மற்றும் சுயநிதி பள்ளிகள் - குழந்தைகளுக்கான இலவச கட்டாய கல்வி உரிமைச் சட்டம் 2009-ன்படி ஆசிரியர் நியமனங்கள் ஆசிரியர் தகுதி தேர்வை கட்டாயமாக்குதல் மற்றும் தகுதியான காலிப் பணியிடங்கள் நிரப்பிட அனுமதி அளித்தல் - சார்பு.

பார்வை :
1. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச் சட்டம் 2009.
2. தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமை விதிகள் 2011.
3. அரசாணை எண்.181, பள்ளிக் கல்வித் (சி2) துறை, நாள் : 15.11.2011.

பார்வை (1)ல் காணும் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச் சட்டம் 2009 Chapter - 4 பிரிவு -23 (Section - 23) உட்பிரிவு (1)ன்படி (Sub Section)யும் பார்வை (2)ல் காணும் தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமை விதிகள் 2011 (விதி 16(2))ன் படியும் ஆசிரியர்களின் நியமனத்திற்கு ஆசிரியர்கள் தகுதி தேர்வு கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அரசாணை எண்.173, பள்ளிக் கல்வித் (சி2) துறை, நாள் 8.11.2011-ல் தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமை விதிகள் 2011 Part - VI விதி 16 (2) -ன் கீழ்கண்டுள்ளவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

> "(2) For a teacher, of any school referred to in sub-clause (iv) of clause (n) of section 2. who does not possess the minimum qualifications as laid down by the academic authority authorized by the Central Government at the time of commencement of the Act, the management of such school shall enable such teachers to acquire such minimum qualifications within a period of five years from the commencement of the Act."

எனவே NCTE யினால் ஆசிரியர் நியமனத்திற்கு உரிய கல்வி தகுதியுடன் TET தேர்ச்சி பெற வேண்டும் என்பதும் குறைந்த பட்ச தகுதியாக நிர்ணயம் செய்யப்பட்டிருப்பதால் 23.08.2010-க்கு பின்னர் சிறுபான்மை மற்றும் சிறுபான்மையற்ற உதவிபெறும் பள்ளிகளுக்கு தகுதியுடைய பணியிடங்களை நிரப்புவதற்கு அனுமதி அளிக்கும் போது இதர பிற நிபந்தனைகளோடு கீழ்ககாணும் நிபந்தனையுடன் அனுமதி அளிக்கலாம் என அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கு தெரிவிக்கலாகிறது.

**நிபந்தனை**

ஆசிரியர் தகுதிதேர்வில் தேர்ச்சி பெற்றவரையே நியமனம்செய்யப்பட வேண்டும்.

தொடக்கக் கல்வி இயக்குநர்

நிதி (சிஎம்பிசி)த்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை-600 009.

கடித எண்.8764 / சி.எம்.பி.சி / 2012-1, நாள் : 18.4.2012

அனுப்புதல்
திரு.க.சண்முகம், இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
முதன்மைச் செயலாளர், பள்ளிக்கல்வித்துறை, சென்னை-9.
இயக்குநர், பள்ளிக் கல்வித்துறை, சென்னை-6.
இயக்குநர், தொடக்கப்பள்ளிக் கல்வித்துறை, சென்னை-6.
மாநில கணக்குத் துறைத் தலைவர், கணக்குகள் (ம) உரிமைத் தொகை, சென்னை-18.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை-1&2), சென்னை-18.
மாநிலக் கணக்குத் துறைத் தலைவர் (CAB), சென்னை-9/மதுரை.
ஆணையர், கருவூலக் கணக்குத்துறை, சென்னை-15.
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை-3.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை-9.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர், (வடக்கு/தெற்கு/கிழக்கு), சென்னை-1/35/5.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர், மதுரை-625 001.
அனைத்து கருவூல அலுவலர்கள் / அனைத்து துணைக் கருவூல அலுவலர்கள்.

ஐயா,

பொருள் : தமிழ்நாடு திருத்திய ஊதிய விகிதங்கள் 2009 - இடைநிலை ஆசிரியர் மற்றும் இடைநிலை ஆசிரியர் நிலையில் உள்ள பிறவகை ஆசிரியர்கள் மற்றும் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடத்தில் சாதாரண நிலையில் உள்ளவர்களுக்கு ரூ.500/- சிறப்புபடிக்கு மாற்றாக ரூ.750/- தனி ஊதியம் 01.01.2011 முதல் அனுமதித்து ஆணையிடப்பட்டது - தனி ஊதிய நிர்ணயம் குறித்து தெளிவுரைகள் வழங்கக் கோரல் - தொடர்பாக.

பார்வை :
1. அ.ஆ.நிலை.எண்.234, நிதி (ஊ.பி)த்துறை, நாள் : 1.6.2009.
2. அ.ஆ.நிலை.எண்.270, நிதி (ஊ.பி)த்துறை, நாள் : 26.08.2010.
3. அ.ஆ.நிலை.எண்.23, நிதி (ஊ.பி.)த்துறை, நாள் : 12.01.2011.
4. அ.ஆ.நிலை.எண்.58, நிதி (சிஎம்பிசி)த்துறை, நாள் : 25.01.2011.
5. அரசுக்கடித எண்.36135/சிஎம்பிசி/11-1, நிதித்துறை, நாள் : 19.07.2011.
6. பல்வேறு ஆசிரியர் சங்கங்கள் மற்றும் ஆசிரியர்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள்.

பார்வை இரண்டில் காணும் அரசாணையில் மற்றவற்றுக்கிடையே இடைநிலை ஆசிரியர் மற்றும் இடைநிலை ஆசிரியர் நிலையில் உள்ள பிறவகை ஆசிரியர்கள் மற்றும் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்களுக்கு 01.08.2010 முதல் ரூ.500/- சிறப்புப்படி அனுமதித்து ஆணையிடப்பட்டது. பின்னர் பார்வை மூன்று மற்றும் நான்கில் காணும் அரசாணைகளில் மேற்கூறிய ஆசிரியர் பணியிடங்களுக்கு 1.8.2010 முதல் அனுமதிக்கப்பட்ட கிறப்புப்படி ரூ.500/-க்கு பதிலாக, சாதாரண நிலையில் ரூ.5200 - 20200 + தர ஊதியம் ரூ.2800/- பெறும் இடைநிலை ஆசிரியர்கள் / இடைநிலை ஆசிரியர் நிலையில் உள்ள பிறவகை ஆசிரியர்களுக்கும் சாதாரண நிலையில் ரூ.9300-34800+தர ஊதியம் ரூ.4800/- பெறும் உயர்நிலைப்பள்ளி தல்லமை ஆசிரியர்களுக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ.750/- தனி ஊதியம் வழங்கவும், இத்தனி ஊதியம் வரும் காலங்களில் ஆண்டு ஊதிய உயர்வுக்கும் அகவிலைப்படிக்கும், ஓய்வூதியத்திற்கும் கணக்கில் கொள்ளப்படும்

எனவும் ஆணையிடப்பட்டது. மேலும் 1.1.2006க்கு பின்னர் தேர்வுநிலை மற்றும் சிறப்பு நிலையில் பணியாற்றும் இடைநிலை ஆசிரியர் / இடைநிலை ஆசிரியர் நிலையில் உள்ள பிறவகை ஆசிரியர்கள் மற்றும் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு 1.8.2010 முதல் அனுமதிக்கப்பட்டு வரும் சிறப்புப் படியான ரூ.500/- தொடர்ந்து பெற அனுமதித்தும் ஆணையிடப்பட்டது.

2. பார்வை ஆறில் காணும் மனுக்களின் வாயிலாக பல்வேறு ஆசிரியர் சங்கங்கள், திருத்திய ஊதிய விகித அமைப்பில் 1.1.2006க்கு பின்னர் தேர்வு நிலை, சிறப்பு நிலை பணியிடங்களுக்கு என தனி ஊதிய விகிதம் அனுமதிக்கப்படாமல் அடிப்படைச் சம்பளம் மற்றும் தர ஊதியம் சேர்ந்ததில் 3 சதவீதத்திற்கு சமமான ஒரு ஊதிய உயர்வு அளித்து அதே ஊதியத் தொகுப்பு + தர ஊதியத்தில் தொடர வேண்டும் என பார்வை ஒன்றில் காணும் அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது. இந்நிலையில் திருத்திய ஊதிய விகிதத் தொகுப்பில் 1.1.2006 முதல் ரூ.2800 மற்றும் ரூ.4800 தர ஊதியம் பெறும் அனைத்து இடைநிலை ஆசிரியர் / இடைநிலை ஆசிரியர் நிலையில் உள்ள பிறவகை ஆசிரியர்கள் மற்றும் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் பார்வை மூன்று மற்றும் நான்கில் காணும் அரசாணைகளில் 1.1.2011 முதல் அனுமதிக்கப்பட்ட தனி ஊதியம் ரூ.750/- பெறத் தகுதியுண்டா எனவும் தனி ஊதியம் மற்றும் சிறப்புபடி பெற்றுவரும் ஆசிரியர்கள் பதவி உயர்வு பெறும் நிகழ்வுகளில் அவர்களின் ஊதிய நிர்ணயம் குறித்து உரிய தெளிவுரை வழங்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளது. இதனை அரசு பரிசீலித்து கீழ்க்கண்டவாறு தெளிவுரை வெளியிடப்படுகிறது:-

அ) 1.1.2011 முதல் சாதாரண நிலையில் உள்ள இடைநிலை ஆசிரியர்கள் / இடைநிலை ஆசிரியர் நிலையில் உள்ள பிறவகை ஆசிரியர்கள் மற்றும் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் ஆகியோருக்கு ரூ.750/- தனி ஊதியம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இவ்வாசிரியர்களுக்கு அவர்கள் 1.1.2011க்கு பின்னர் தேர்வு நிலை எய்தும்போது தர ஊதியத்தில் எவ்வித மாற்றமும் இல்லாமல் அவர்கள் பெற்றுவரும் அடிப்படை ஊதியத்தில் (தர ஊதியம் உட்பட) 3 சதவீதத்திற்கு சமமான ஒரு ஊதிய உயர்வு மட்டுமே அளிக்கப்படுவதால் அவர்கள் இத்தனி ஊதியத்தினை தொடர்ந்து பெறத் தகுதியுடையவர்களாகிறார்கள்.

ஆ) மேற்குறிப்பிட்டுள்ள ஆசிரியர் பணியிடங்களுக்கு அனுமதிக்கப்படும் தனி ஊதியம் ரூ.750/- ஆண்டு ஊதிய உயர்வுக்கும், அகவிலைப்படிக்கும் ஓய்வூதியத்திற்கும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். இவ்வகை ஆசிரியர் பணியிடங்களில் இருந்து பதவி உயர்வு பெறும் ஆசிரியர்களுக்கு உயர் பதவியில் ஊதியம் நிர்ணயம் செய்யும் போது இத்தனிஊதியம் அடிப்படை ஊதியத்துடன் சேர்த்து கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு ஊதியம் நிர்ணயம் செய்யப்பட வேண்டும். அதன் பின்னர் உயர் பதவியில் இத்தனிஊதியம் தொடர்ந்து அனுமதிக்கப்படக் கூடாது.

இ) பார்வை இரண்டில் கண்டுள்ள அரசாணையில் இடைநிலை ஆசிரியர் மற்றும் இடைநிலை ஆசிரியர் நிலையில் உள்ள பிறவகை ஆசிரியர்கள் மற்றும் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்களுக்கு 01.08.2010 முதல் அனுமதிக்கப்பட்ட சிறப்புப்படி ரூ.500/- 1.1.2006க்கு முன்னர் தேர்வுநிலை / சிறப்பு நிலை எய்திய மேற்கூறிய ஆசிரியர் பணியிடங்களுக்கு மட்டுமே பொருந்தும். இவ்வகை ஆசிரியர்கள் பதவி உயர்வு பெற்ற பின்னர் உயர்பதவியில் சிறப்புப்படி ரூ.500/- தொடர்ந்து பெறத் தகுதியற்றவர்கள்.

தங்கள் நம்பிக்கையுள்ள

அரசு முதன்மைச் செயலாளருக்காக.

## GOVERNMENT OF TAMILNADU

**ABSTRACT**

School Education Rules - The Tamil Nadu Tamil Learning Rules 2012 - Notification - Published.

**School Education (U2) Department**

G.O. Ms. No. 103

Dated : **20.04.2012**
**Chithirai-8**
Thiruvalluvar **Andu 2043**

**ORDER :**

The Tamil Nadu Tamil Learning Act, 2006 (Tamil Nadu Act 13 of 2006) was published in the Tamil Nadu Government Gazettee Extraordinary, dated 12th June 2006. Under sub-section (1) of section 9 of the said Act, rules have to be framed for implementation. Accordingly, the following Notification will be published in the Tamil Nadu Government Gazette:-

**NOTIFICATION**

In exercise of the powers conferred by sub-section (1) of section 9 of the Tamil Nadu Tamil Learning Act, 2006 (Tamil Nadu Act 13 of 2006), the Governor of Tamil nadu hereby makes the following rules:-

**1. Short title and commencement : -**

(a) These rules may be called the Tamil Nadu Tamil Learning Rules, 2012.

(b) They shall come into force with effect on said from the 20th April 2012.

**2. Definition :-**

In these rules, unless the context otherwise requires,- (a) 'Act' means the Tamil Nadu Tamil Learning Act, 2006 (Tamil Nadu Act 13 of 2006);

(b) "Optional subject" means the subject referred to in Part-IV in sub-section (2) of section 3 of the Act.

**3. Powers and Functions of the Competent Authority:-**

The Competent authority shall exercise the following powers and functions namely-

(i) To visit any school under his jurisdiction for the purpose of ensuring implementation of the Act, and

(ii) To issue suitable instruction to any school, as and when necessary, with regard to any matter concerning the implementation of the said Act.

**4. Syllabi and Text Books for optional Subject:**

The Syllabi and the text books followed for teaching the optional subject immediately before the commencement of these rules may continue to be used for teaching the said subject.

**5. Examination for optional subject:-**

The optional subject may be included as a subject for examination, but the marks obtained in that subject shall not be a factor for deciding the promotion or detention of a student.

**6. Time limit for submission of report to Government:-**

The Competent authority shall report to the Government, the result of the enquiry or the proceedings taken by him on the direction of the Government by an order under sub section (1) of section 7 of the Act within thirty days from the date or receipt of such Order.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**D.Sabitha**

Principal Secretary to Government

# GOVERNMENT OF TAMILNADU

## ABSTRACT

School Education Rules - Tamil Nadu Tamil Learning Act 2006 - Appointment of competent authorities under section 4 - Notification - Published.

**School Education (U2) Department**

G.O. Ms. No. 104

Dated : 20.04.2012
Chithirai-8
Thiruvalluvar Andu 2043

ORDER :

The Tamil Nadu Tamil Learning Act, 2006 (Tamil Nadu Act 13 of 2006) was published in the Tamil Nadu Government Gazette Extraordinary, dated 12th June 2006. Under sub-section (1) of section 4 of the said Act, competent authorities for the purposes of carrying out the provisions of the said Act have to be appointed. Accordingly, the following Notification will be published in the Tamil Nadu Government Gazette.

**NOTIFICATION**

In exercise of the powers conferred by sub-section (1) of section 4 of the Tamil Nadu Tamil Learning Act, 2006 (Tamil Nadu Act 13 of 2006), the Governor of Tamil Nadu hereby appoints the officers specified in column (3) of the Table below to be the competent authorities within their jurisdiction, in respect of the schools specified in the corresponding entry in column (2) thereof for the purposes of carrying out the provisions of that Act and the rules made thereunder:-

**THE TABLE**

| Sl.No | Schools | Officers |
|---|---|---|
| 1. | Nursery and Primary schools Primary Schools and Middle Schools | District Elementary Educational Officer |
| 2. | Matriculation Schools | Inspector of Matriculation Schools |
| 3. | Anglo Indian Schools | Inspector of Anglo Indian Schools |
| 4. | High Schools, Higher Secondary Schools and Oriental Schools | District Educational Officer |

**(BY ORDER OF THE GOVERNOR)**

**D.Sabitha**
Principal Secretary to Government

**Finance (PGC) Department,**
**Secretariat, Chennai - 600 009.**

**Letter No.35674/PGC/2011-3, dated : 23.04.2012.**

From

Thiru. M.Padmanabhan, B.Com.,
Additional Secretary to Government

Sir,

Sub : Contributory Pension Scheme - Mode of recovery of subscription and arrear amount under the Contributory Pension Scheme - Clarifications - Regarding.

Ref : 1. G.O.Ms.No.259, Finance (Pension) Department, dated 06.08.2003.
2. G.O.Ms.No.430 Finance (Pension) Department, dated 06.08.2004.
3. Government Letter No.71341/ Finance (PGC) 10, dated 20.01.2011.
4. From the Accountant General (A&E), Tamil Nadu, Chennai-18 letter no.GPF-14 / CPS / V / 65168 dated 24.06.2011.
5. From the Principal Accountant General (A&E), Tamil Nadu, Chennai-18 letter no.GPF-14 /CPS / Genl /51/115046/1903/12 Dated 16.03.2012.

I am to invite your attention to the references cited.

2. In G.O. (Ms) No.430, Finance (Pension) Department, dated 6.8.2004, among others, orders have been issued to the effect that "arrears of subscription to the Contributory Pension Scheme from 1.4.2003 will be deducted from the employees already joined after 1.4.2003 along with current month subscription "(i.e, one subscription for current month and one additonal for subscription arrears)".

3. Even after nine years of introduction of the Contributory Pension Scheme, instances have been brought to the notice of the Government that several departments are not implementing the above orders promptly and commencing recovery of subscription after one or two years from the date of appointment of employees. Further as contemplated by the Accountant General in the reference third cited, certain Head of Departments / Drawing Officers have erroneously made recovery of arrears of subscriptions equal to the amount of subscription of the current month which leads to recovery of more than 10% of the Basic Pay + Grade Pay + Dearness Allowance of an Employee / Officer of the initial month's subscription. As long as the employee drawing the same salary, (i.e, until the date of increment and hike in Dearness Allowance) the subscription amount does not vary. However, after drawing increment and enhanced rate of Dearness Allowances the salary will be increased and correspondingly subscription amount will also be increased. If arrear recoveries are made equal to the current month's subscription, there is everypossibility of missing credit for the employees in future. This will not only lead to chaos at the time of final settlement for both the employer and the employees concerned but also leads to huge financial burden to the Government by means of equal Government contribution and by way of interest payment.

4. As requested by the Accountant General in his letter fourth cited, to issue necessary instructions to the drawing and Disbursing Officers to ensure correct deductions as per the Government Order second cited, an illustration regarding the recovery of arrears under the Contributory Pension Scheme was worked out and sent to the Accountant General for concurrence. The Deputy Accountant General (Funds) in his letter fifh cited has informed that the illustrative example sent by Government is self-explanatory which would help the Drawing and Disbursing Officers to recover the correct amount of subscription/arrears, subject to certain suggestion made therein.

**Accordingly**, I am directed to issue the following guidelines:-

(i) The formula to be followed for recovery of subscription under Contributory Pension Scheme

**= 10/100 (Pay + Grade Pay) + (% of D.A on Pay + Grade Pay) of respective month.**

(ii) The amount of subscription / arrears may be rounded off to the nearest rupee.

(ii) Excess recoveries of subscription / arrears shall be adjusted against the future subscriptions as already clarified in Letter No.92399/ Pension / 2005-1, dated 13.04.2006.

(iv) In cases wherein the excess recoveries are not adjusted against future recoverieis, the excess credits of subscription / arrears will be treated as unauthorized and no interest or government contribution will be allowed on the amount recovered in excess on final closure, though matching government contribution and interest have been shown in the accounts slip issued by the Office of the Accountant General.

(v) An illustration showing the methodology of calculation of subscription/ arrears of an employee towards Contributory Pension Scheme appointed in the revised scales of pay is enclosed in the Annexure for compliance.

All the Head of Departments / Drawing Officers are requested to adhere to the above instructions scrupulously.

Yours faithfully,

for Additional Secretary to Government.

## ANNEXURE

Illustration showing the calculation of monthly subscription for a Junior Assistant appointed in the revised pay scale of Rs.5200-20200+Grade Pay Rs.2400.

| | | |
|---|---|---|
| Date of Joining | : | 12.5.2006 |
| Subscription to be commenced w.e.f | : | 01.06.2006 (D.A.Nil) |
| D.A. @ 2% w.e.f | : | 01.07.2006 |
| D.A. @ 6% w.e.f | : | 01.01.2007 |
| Date of increment | : | 01.04.2007 |
| Actual date of commencement of the Subscription | : | 01.05.2007 |

**Working Sheet for the calculation of subscription & arrears under the Contributory Pension Scheme:-**

| | | | |
|---|---|---|---|
| Subscription under the CPS until June 2006<br>((5200+2400)+(DA Nil+GP))*10/100 | = | Rs. | 760.00 |
| Subscription under the CPS from July 2006 to Dec.2006<br>((5200+2400)+(2% DA on Pay + GP))*10/100 | = | Rs. | 775.20 |
| Subscription under the CPS from Jan 2007 to Mar.2007<br>((5200+2400)+(6% DA on Pay + GP))*10/100 | = | Rs. | 805.60 |
| Subscription under the CPS w.e.f. April 2007 (after increment)<br>((5200+2400)+(6% DA on Pay + GP))*10/100 | = | Rs. | 830.00 |
| Subscription under the CPS at the time of actual commencement<br>(i.e) From may 2007 onwards | = | Rs. | 830.00 |

*Monthly subscription from 5/2007 and arrear instalment shall be recovered as below:*

| Month of Recovery | Monthly Subscription | Arrear Amount |
|---|---|---|
| May 2007 | Rs.830/- | Rs.760/- (for 6/2006) |
| June 2007 to November 2007 | Rs.830/- p.m | *Rs.775/- p.m (from 7/2006 to 12/2006) |
| December 2007 to February 2008 | Rs.830/- p.m | *Rs.806/- p.m (from 1/2007 to 3/2007 |
| March 2008 | Rs.830/- | Rs.830/- (for 4/2007 |

*(The amount of subscription / arrears may be rounded off to the nearest rupee).

// True Copy //

**SECTION OFFICER**

நிதித் (ஓய்வூதியம்) துறை
தலைமைச் செயலகம்,
சென்னை -9.

**கடித எண் 15082/ஓய்வூதியம்/ 2012, நாள் 24.04.2012**

அனுப்புநர்
திரு.க.சண்முகம், இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்

ஐயா / அம்மையீர்,

பொருள் : ஓய்வூதியம் - ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் - கூடுதல் ஓய்வூதியம் மற்றும்கூடுதல் குடும்ப ஓய்வூதியம் வழங்குதல் - தெளிவுரை வேண்டுவது - தொடர்பாக.

பார்வை :
1. அரசு ஆணை (நிலை) எண், 42, நிதித் (ஓய்வூதியம்) துறை, நாள் 07.02.2011.
2. கருவூலக் கணக்கு ஆணையர், சென்னை - 15, அவர்களின் கடிதம் ந.க.எண் 21681/2011/உ2, நாள் 18.08.2011.
3. ஓய்வூதிய இயக்குநர், சென்னை-6 அவர்களின் கடிதம் R.C.No.50863/2011/D2, நாள் 27.09.2011
4. மாநில கணக்காயர், சென்னை-18, கடித எண் Pen30/III/3-3/Pension/2011-2012/ 136725, நாள் 24.11.2011
5. அரசு கடித எண் 44093/ஓய்வூதியம் / 2011-1, நாள் 24.02.2012
6. இந்திய அரசு பணியாளர், பொது மக்கள் குறை தீர்வு மற்றும் ஓய்வூதிய அமைச்சகம், ஓய்வூதியதாரர் மற்றும் ஓய்வூதியதாரர் நலத்துறையின் சார்பு செயலாளரின் கடித எண் 38/06/12 - P&PW(A) நாள் 11.04.2012.

பார்வை ஒன்றில் கண்டுள்ள அரசாணையைத் தொடர்ந்து பார்வை ஐந்தில் காணும் அரசு கடிதத்தில் சில தெளிவுரைகள் அரசால் வழங்கப்பட்டுள்ளன.

2) பார்வை ஆறில் கண்டுள்ள மைய அரசின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க, பார்வை ஐந்தில் உள்ள அரசு கடிதத்தின் பத்தி 1 / வரிசை எண் 4ல் எழுப்பப்பட்ட வினாவிற்கு கீழ்க்கண்ட தெளிவுரை அரசால் வழங்கப்படுகிறது.

| எழுப்பப்பட்ட வினா | அரசின் தெளிவுரை |
|---|---|
| 1) பணியிலிருந்து ஓய்வு பெற்று அதற்குரிய ஓய்வூதியம் மற்றும் கணவன் / மனைவி (Spouse) இறப்பிற்கு பிறகு பெறும்குடும்ப ஓய்வூதியம் ஆகிய இரண்டு ஓய்வூதியங்களை பெறும் ஓய்வூதியதாரர்களுக்கு கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியம் என இரண்டு ஓய்வூதியத்திலும் வழங்கலாமா? | பணியிலிருந்து ஓய்வு பெற்று அதற்குரிய ஓய்வூதியம் மற்றும் வாழ்க்கைத் துணை (Spouse) இறப்பிற்கு பிறகு பெறும் குடும்ப ஓய்வூதியம் ஆகிய இரண்டு ஓய்வூதியங்களைப் பெறும் 80 வயது மற்றும்அதற்கு மேற்பட்ட வயது நிறைவடைந்த ஓய்வூதியதாரர்களுக்கு அவர்களின் வயதிற்கேற்ப கூடுதல் ஓய்வூதியம் கூடுதல் குடும்ப ஓய்வூதியம் என இரண்டு ஓய்வூதியங்களிலும் உயர்வு வழங்கலாம். |

தங்கள் நம்பிக்கையுள்ள
அரசு முதன்மைச் செயலாளருக்காக

## ABSTRACT

Public Services - Equivalence Committee - Degree of Bachelor of Education B.Ed., (Special Education) equivalence to Bachelor of Education B.Ed., (General Education) - Recommendation of the Equivalence Committee - Orders - Issued.

---

**Higher Education (K2) Department**

G.O.(Ms) No. 56 Dated : 24.04.2012

சித்திரை - 12

திருவள்ளுவர் ஆண்டு - 2043

**Read :**

1. From the Registrar, Tamil Nadu Teachers Education University Letter No. TNTEU/R/B.EdSpl/AC-July 10-item6/2010/1382 dated 16.09.2010.
2. Government Letter No 21991/K2/2010-1, dated 11.1.2011 and 2.9.2011
3. From the secretary, Tamil Nadu Public Service Commission Letter No,5281/RND-F1/2007 dated 09.02.2011
4. From the Secretary, Tamil Nadu Public Service Commission Letter No. 1188/RND-F1/2012 dated 29.03.2012

**ORDER :**

The Registrar, Tamil Nadu Teachers Education University in the letter first read above requested the Government to consider the B.Ed., (Special Education) course is equivalent to B.Ed., (General Education) and to accord approval and issue Government orders for the purpose of employment in public services.

2. Along with the remarks of the Tamil Nadu Teachers Education University the Secretary, Tamil Nadu Public Service Commission has been requested to place before the Equivalence Committee for consideration of B.Ed., (special Education) course awarded by any university as equivalent to B.Ed., (General Education) course for the purpose of employment in Public Services.

3. The Secretary, Tamil Nadu Public Service Commission placed the same before the Equivalence Committee meeting held on 27.03.2012 for its recommendation and the committee has recommended for consideration of B.Ed., (Special Education) course awared by any university as equivalent to B.Ed., (General education) course for the purpose of employment in Public Services.

4. The Government after careful consideration, have decided to accept the recommendation of the Equivalence Committee and accordingly direct that the B.Ed., (Special Education) course awarded by any university be considered as equivalent to B.Ed. (General Education) Course for the purpose of employment in Public Services.

**(BY ORDER OF THE GOVERNOR)**

T.S.SRIDHAR,

ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT

பணியாளர் மற்றும்நிருவாகச் சீர்திருத்தத் (எஸ்) துறை,
தலைமைச் செயலகம், சென்னை -9.

**கடித (நிலை) எண். 63/எஸ்/2012, நாள் 30.04.2012**

அனுப்புநர்

திரு.தேபேந்திரநாத் சாரங்கி, இ.ஆ.ப.,
அரசு தலைமைச் செயலாளர்

பெறுநர்

அனைத்து அரசு முதன்மைச் செயலாளர்கள் / அரசு செயலாளர்கள், சென்னை-9
அனைத்து துறைத் தலைவர்கள் / மாவட்ட ஆட்சியர்கள்
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை -6,
கருவூலம் மற்றும்கணக்குகள் இயக்குநர், சென்னை - 15.

ஐயா,

பொருள்: பணியாளர் - அரசுப் பணியாளர்கள் இடமாற்றம் பொது மாற்றல்களுக்கு விதிக்கப்பட்ட தறகாலிகத் தடையாணை 2012-2013 ஆம் ஆண்டுக்கு விலக்கி ஆணை வெளியிடப்படுகிறது.

பார்வை : 1. அரசாணை (நிலை) எண்.10, பணியாளர் மற்றும்நிருவாகச் சீர்திருத்தத் (எஸ்) துறை நாள் 07.01.1994.
2. அரசுக் கடித எண் 23847/எஸ்/1998-1, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள் 05.08.1998
3. அரசுக் கடித எண் 25192/எஸ்/1999-1, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள் 21.05.1999.
4. அரசுக் கடித எண் 24954/எஸ்.2011-1, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள் 29.09.2011

பார்வை 1 மற்றும் 2-இல் காணும்ஆணைகளின்படி ஒவ்வொரு ஆண்டின் ஏப்ரல் மாதம் 1-ஆம் நாள் முதல் மே மாதம் 31-ஆம் நாள் முடிய உள்ள மாற்றல் காலத்தில் அரசுப் பணியாளர்களின் பொது மாற்றல்கள் நடைபெற வேண்டும். நிருவாகத் தேவையில்லாத பட்சத்தில் 3 ஆண்டுகள் பணி முடித்தவர்கள் என்ற காரணத்தினால் மட்டும் செய்யப்படும் பொது மாற்றல்களுக்கு அரசின் நிருவாகச் செலவினைக் குறைக்கும்பொருட்டு 1999-ஆம் ஆண்டு தடை விதிக்கப்பட்டது. பின்னர் பொது மாற்றல்களுக்கான இத்தடையாணை 2000, 2001, 2002, 2003 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளுக்கும் நீட்டிக்கப்பட்டது.

2. சென்னை 2005 மற்றும் 2006ஆம் ஆண்டுகளுக்கும் பொது மாற்றல்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீட்டிக்க முடிவெடுக்கப்பட்டது. இருப்பினும் நிருவாகக் காரணங்களால் அவ்வாண்டுகளில் ஏப்ரல் 1-ஆம் நாள் முதல் மே 31-ஆம் நாள் முடிய உள்ள மாற்றல் காலத்திற்கு முன்பாக தடையை நீட்டித்து, ஆணையேதும் வெளியிடப்படவில்லை, இருந்தபோதிலும், மேற்படி தடையாணையை நீக்கி ஆணைகள் வெளியிடப்படாததால், பொது மாறுதல்களுக்கான தடையாணை அவ்வாண்டுகளிலும் தொடர்ந்து நடைமுறையில் இருந்து வந்தது, 2007 முதல் 2011ஆம் ஆண்டு வரை இத்தடை நீட்டிக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டன. இருப்பினும் பொது மாறுதல்களுக்கான தடையாணை நடைமுறையில் இருந்த எல்லா ஆண்டுகளிலும் நிருவாக தேவையின் பொருட்டு மாற்றல்கள் இன்றியமையாததெனில், அத்தகைய மாற்றல்களை சில வரையறைகளுக்குட்பட்டு அனுமதித்தும், காலியாக உள்ள இடத்திற்கு விருப்ப மாறுதல் கோரும் விண்ணப்பங்கள் பரஸ்பர மாற்றல் மற்றும்கணவன் / மனைவி பணிபுரியும் இடத்திற்கு மாற்றல் கோருபவர்களின் விண்ணப்பங்கள் பயணப்படி மற்றும் தினப்படி முதலியவை கோராத பட்சத்தில், பரிசீலனை செய்து, மாற்றல் வழங்க அனுமதித்தும் ஆணைகள் வெளியிடப்பட்டன.

3. அரசுப் பணியாளர்களின் இடமாற்றம் பொதுமாற்றல்களுக்கு விதிக்கப்பட்ட தற்காலிக தடையாணையை விலக்கிக் கொள்வது குறித்து அரசு நன்கு ஆய்வு செய்த பின்னர், நிருவாகச் செலவினை குறைக்கும் நோக்கில் பொது மாறுதலுக்கு 1999 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை அமலில் இருந்து வந்த தடையாணையினை 2012-2013ஆம் ஆண்டிற்கு விலக்கி ஆணையிடப்படுகிறது.

4. மேற்குறிப்பிட்ட ஆணை உடனடியாக அமலுக்கு வருகிறது. மேலும், மேற்குறிப்பிட்ட ஆணையினை தவறாமல் கடைபிடிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள
அரசு தலைமைச் செயலாளருக்காக

**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**

பள்ளிக் கல்வி - பள்ளி மாணவ மாணவிகளிடம் ஒழுக்கக்கேடான முறையில் தவறாக நடந்துக் கொள்ளும் ஆசிரியர்கள் மீது நடவடிக்கை எடுத்தல்மற்றும் தவறுகள் ஏற்படாமல் தவிர்த்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

**பள்ளிக் கல்வி (இ1) துறை**

அரசாணை (நிலை) எண். 121 நாள் 17.05.2012

படிக்கப்பட்டவை :

பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண் 028338/PD2/இ3/2012 நாள் 17.04.2012

**ஆணை :**

பள்ளி மாணாக்கர்களுக்கு முன்னுதாரணமாகவும், வழிகாட்டியாகவும், செயல்பட வேண்டிய ஆசிரியர்களில் சிலர் பள்ளிகளில் பயிலும் சிறு குழந்தைகள் உட்பட மாணவ மாணவிகளிடம் ஒழுக்கக் கேடான முறையில் நடந்து கொள்வது குறித்தும், அதனால் மாணவர் சமுதாயம், குறிப்பாக பெண் குழந்தைகள் மோசமாகப் பாதிக்கப்படுவது குறித்தும் நாளிதழ்கள் மற்றும்மின்னனு ஊடகங்களிலும் சமீப காலங்களில் செய்திகள் அதிக அளவில் வெளிவருவதை பள்ளிக் கல்வி இயக்குநர் அரசின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

2. இத்தகைய அவலநிலையை உடனடியாகக் களையவும், மாணவ சமுதாயம் ஆரோக்கியமான சூழ்நிலையில் உருவாகுவதற்கும், ஆசிரியர்கள் பள்ளி மாணவ, மாணவிகளிடம் மிகுந்த அக்கரையுடனும், கடமை உணர்ச்சியுடனும் ஆசிரியர் பணி செய்யவும், பள்ளிக் குழந்தைகள் மற்றும் மாணவ மாணவிகளிடம் ஆசிரியர்கள் தவறான முறையில் நடந்து கொள்ளும்நிலையை முற்றிலும் தவிர்ப்பதற்கும்தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் பள்ளிக் கல்வி இயக்குநர் அரசுக்கு பரிந்துரைத்துள்ளார்.

3. ஆழ்ந்த பரிசீலினைக்குப் பின்னர் பள்ளிக் கல்வி இயக்குநரின் பரிந்துரையை ஏற்று அரசு கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

1. தவறான நடவடிக்கைகளில் ஈடுபடும் ஆசிரியர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து, அவர்களுக்கு கடும் தண்டனையான (Major punishment) அதாவது கட்டாய ஓய்வு (Compulosry Retirement) / பணி நீக்கம் (Removal) / பணியறவு (Dismissal) போன்ற தண்டனை வழங்கப்படும். (அரசுப் பள்ளி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் நடத்தை விதி 19 (2) இதற்குப் பொருந்தும், இவ்விதியை மீறுபவர்களுக்கு மேற்குறிப்பிட்ட தண்டனைகளுள் ஒன்று வழங்கப்பட வேண்டுமென தமிழ்நாடு குடிமைப் பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 8-ல் கூறப்பட்டுள்ளது.
2. சம்பந்தப்பட்ட ஆசிரியரின் கல்விச் சான்றுகள் அனைத்தையும் ரத்து செய்ய சார்ந்த துறை மூலம் நடவடிக்கை எடுத்து கல்விச் சான்றுகளை ரத்து செய்யப்படும்.
3. பள்ளிக் குழந்தைகளும், மாணவ மாணவிகளும்பிற நபர்களின் தவறான நடவடிக்கைகளிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் வகையில் அவர்களுக்கு போதிய விழிப்புணர்வை ஏற்படுத்தப்பட வேண்டும்.
4. ஆசிரியர்கள் தவறான செயல்களில் ஈடுபடாவண்ணம் தகுந்த உளவியல் ஆலோசகர்கள் மூலம் ஆசிரியர்களுக்கு உளவியல் ரீதியான ஆலோசனைகள் வழங்கப்பட வேண்டும்.
5. பள்ளி மாணவ மாணவிகளின் மனநிலை பாதிக்கும் பிரச்சினைகளை களைவதற்கான உளவியல் ஆலோசனைகளை வழங்குவதற்கென பள்ளிக் கல்வித் துறை மூலம் உளவியல் ஆலோசகர், உதவியாளர், மற்றும்அனைத்து வகை வசதிகளுடன் கூடிய நடமாடும் ஆலோசனை மையங்கள், ஏற்படுத்தி, இதன் மூலம் மாணவ மாணவியருக்கு விழிப்புணர்வும், ஆசிரியர்களுக்கு ஆலோசனைகளும் வழங்கப்பட வேண்டும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

த.சபிதா

அரசு முதன்மைச் செயலாளர்

**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**

**பள்ளிக்கல்வி - ஆசிரியர் பொது மாறுதல் - ஊராட்சி ஒன்றியம் / நகராட்சி / மாநகராட்சி தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் மற்றுமற்அரசு / நகராட்சி / மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் - 2012-2013 ஆம் கல்வி ஆண்டில் கடைபிடிக்கப்பட்ட வேண்டி நெறிமுறைகள் - ஆணை வெளியிடப்படுகிறது.**

**பள்ளிக் கல்வி (இ1) துறை**

அரசாணை (நிலை) எண். 158 நாள் 18.05.2012

படிக்கப்பட்டவை :

1. அரசாணை (1டி) எண் 259 பள்ளிக் கல்வித் (இ1)துறை, நாள் 09.09.2011
2. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண் 200/ஏ1/இ2/2012 நாள் 20.04.2012
3. முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித எண் 3079/மாதிந 3-1/2012 நாள் 02.05.2012
4. மாற்று திறனாளிகள் சங்கங்களின் கூட்டமைப்பின் கடிதம் நாள் 16.05.2012.

**ஆணை :**

ஆசிரியர் சமுதாயத்தின் நலனுக்காக வெளிப்படையான ஒளிவு மறைவற்ற கலந்தாய்வு பொதுமாறுதல் வழிகாட்டி விதிமுறைகள் தொடர்ந்து கடைபிடிக்கப்படும் என்ற அரசின் முடிவிற்கேற்ப பள்ளிக் கல்வித் துறை கட்டுப்பாட்டின்கீழ் பணிபுரியும் அனைத்து வகை ஆசிரியர்களிடையே, 2012-2013ம் கல்வியாண்டில் பொது மாறுதல்கள் வழங்குவதற்கு கீழ்க்காணும் நெறிமுறைகளை பின்பற்ற வேண்டும் என்று அரசு ஆணையிடுகிறது.

1. மூன்று வருடங்களுக்கு மேல் அரசுப் பணியாளர்கள் ஒரே இடத்தில் பணியாற்றக் கூடாது என்ற பொதுவான ஆணை இருப்பினும், ஆசிரியர்களைப் பொறுத்த மட்டில் இது கடைபிடிக்கப்படுவதில்லை. இந்த முறை 2012-2013 ஆம் கல்வியாண்டில் தொடரலாம். ஓர் ஆசிரியருக்கு மாறுதல் தருவதற்காக காரணம் ஏதுமின்றி மற்றொரு ஆசிரியரை மாறுதல் செய்யக் கூடாது.

2. (i) மாவட்டங்களில் அனைத்து வகை ஆசிரியர் பணிநிலையிலும் 01.06.2012 அன்று ஏற்படும் காலிப்பணியிடங்களின் விவரப்பட்டியலை முதலில் முழுமையான வகையில் தயார் செய்திட வேண்டும்.

   (ii) தொடக்க / நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் தலைமை ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைத்துவகை ஆசிரியர்கள், அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் அனைத்துவகை ஆசிரியர்கள் மீது பெறப்பட்டுள்ள புகார்கள் அடிப்படையில் மாறுதல் வழங்கப்பட வேண்டிய ஆசிரியர்களுக்கு சம்பந்தப்பட்ட அலுவலர்கள் நிர்வாக அடிப்படையில் மாறுதல் ஆணைகளை முதலில் வழங்கிட வேண்டும். மாறுதல் வழங்கப்பட்ட பின்பு, அந்த புகார் உரிய அலுவலரால் விசாரிக்கப்பட்டு, புகாருக்கு முதல்நிலை ஆதாரம் உள்ள நிகழ்வுகளில், குற்றச்சாட்டுகள் தொடுக்கப்பட்டு, உரிய ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட கோப்பில் இக்காரணத்தின் அடிப்படையிலேயே நிர்வாக மாறுதல் சம்பந்தப்பட்ட ஆசிரியருக்கு வழங்கப்பட்டது என்ற விவரம் பதிவு செய்யப்பட வேண்டும். உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில், சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களிடமிருந்து பெறப்படும் அறிக்கையின் அடிப்படையில் பள்ளிக் கல்வி இயக்குநர் மாறுதல் செய்ய வேண்டும்.

   (iii) மேற்கண்ட நடவடிக்கைகள் முடிவு பெற்றபின், பள்ளிக் கல்வி மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர்கள் குறிப்பிடும் நாட்களில் மாவட்டங்களில் கலந்தாய்வு நடத்தப்பட வேண்டும். கலந்தாய்வு நடப்பதற்கு மூன்று

நாட்களுக்கு முன்னதாகவே தொடக்கக் கல்வி அலுவலகம் மற்றும் முதன்மைக் கல்வி அலுவலகங்களில் காலிப்பணியிடங்களின் பட்டியல் ஒட்டப்பட வேண்டும். மாவட்ட தேசிய தகவல் மைய இணையதளத்திலும் வெளியிட வேண்டும். கலந்தாய்வு குறித்த செய்தியினை அனைத்து செய்தித் தாள்களிலும் வெளியிடலாம். பொது மாறுதல்கள் சார்ந்த நெறிமுறைகளும் வெளியிடலாம்.

3. பொது மாறுதல் கோருவது சார்ந்த விண்ணப்பங்களை, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் 3 நகல்களில் பூர்த்தி செய்து, பெற்று இரண்டு நகல்களில் முதன்மைக்கல்வி அலுவலர் / மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் / உதவி தொடக்கக் கல்வி அலுவலர், பரிந்துரை மற்றும் மேற் கையொப்பம் பெற்று, மாவட்ட மாறுதல் கோரும் ஆசிரியர்கள் சார்பாக ஒரு விண்ணப்ப நகலினை சம்பந்தப்பட்ட மாவட்டத்திற்கு அனுப்ப வேண்டும். ஒரு நகலினை சம்பந்தப்பட்ட ஆசிரியரிடம் வழங்க வேண்டும். மாவட்டத்திற்குள் மாறுதல் கோரும் ஆசிரியர் சார்பான விண்ணப்பத்தினை சார்ந்த அலுவலகத்திலேயே உரிய பதிவேடுகளில் வரிசை எண் வழங்கி, பதிவிட்டு, பராமரிக்க வேண்டும். முறையான விண்ணப்பம் இல்லாமல் எந்த மாறுதல்களும் பரிசீலிக்கப்படக் கூடாது. மாறுதல் கோரும் விண்ணப்பங்கள் பற்றிய விபரங்கள் (ஆசிரியர் பெயர், மாறுதல் கோரியுள்ள இடம்) அறிவிப்புப் பலகையில் வெளியிடப்பட வேண்டும்.

4. பொது மாறுதல்கள் வழங்க கீழ்க்காணும் அலகின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட வேண்டும்.

(அ) தொடக்கக் கல்வித்துறையை பொறுத்தவரை

(i) ஒன்றியத்திற்குள் / நகராட்சிக்குள் / மாநகராட்சிக்குள் முதலில் வழங்க பரிசீலிக்கப்பட வேண்டும்.

(ii) மாவட்டத்திற்குள் - ஒன்றியம் விட்டு ஒன்றியம் அல்லது மற்ற அலகுகளுக்கு பரிசீலிக்கப்பட வேண்டும்.

(iii) மாவட்டம் விட்டு மாவட்டம்

(ஆ) அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரை

(i) வருவாய் மாவட்டத்திற்குள்

(ii) மாவட்டம் விட்டு மாவட்டம்

(இ) உச்சநீதிமன்ற இடைக்காலத் தீர்ப்பாணையின்படி இடைநிலை ஆசிரியர்கள் மாநில முந்துரிமைப்படி நியமனம் செய்யப் பட்டுள்ளவர்களுக்கு மட்டும் மாவட்ட மாறுதல் கிடையாது. ஆனால் மாவட்டத்திற்குள் மாறுதல் கோரி, மாறுதல் விண்ணப்பம் அளித்து மாறுதல் பெறலாம்.

5. கடந்த கலந்தாய்வில் மாறுதல் பெற்ற ஆசிரியர்கள், மாறுதல் பெற்ற பணியிடத்தில் முழுமையாக ஒரு கல்வியாண்டு பணிபுரிந்திருக்க வேண்டும்.

கீழ்க்காணும் பிரிவினர்களுக்கு ஓர் ஆண்டு பணிக்காலத்திலிருந்து விலக்களிக்கலம்.

(i) இராணுவத்தில் பணிபுரிபவர்களின் மனைவி தங்களின் சொந்த பாதுகாப்பு கருதி மாறுதல் கோரும் போது.

(ii) முற்றிலும் கண்பார்வையற்றவர்கள் (Total Blindness)

(iii) இருதய மாற்று அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள் மூன்றாண்டு காலத்திற்குள் விண்ணப்பிக்கலாம்.

(iv) கடுமையாக பாதிக்கப்பட்ட புற்றுநோயாளிகள்

(v) பணி நிரவல்மூலமாக பிற பள்ளிகளுக்கு சென்றவர்கள்

(vi) விதவைகள்

(vii) பதவி உயர்வு மூலம் பிற பள்ளிகளுக்குச் சென்றுள்ளவர்கள்.

(viii) மாற்றுத் திறனாளிகள் சட்டம் 1995-ன்படி 40% மற்றும் அதற்கு மேலும் ஊனம் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான சான்றிதழ் பெற்றவர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரகத்தினால் சான்றிதழ் அளிக்கப்பட்டிருக்க வேண்டும்)

(இ) ஒரே இடத்தில் குறைந்தபட்சம் மூன்றாண்டுகள் அதற்கு மேலும் பணியாற்றிய ஆசிரியர்கள்.

(ஈ) (i) கணவன், மனைவி இருவரும் பணியில் இருப்பவர்கள் எனில், தற்போது கணவர் பணிபுரியும்

இடத்தில் இருந்து மனைவி பணிபுரியும் இடமும் அல்லது மனைவி பணிபுரியும் இடத்திலிருந்து கணவர் பணிபுரியும் இடமும் 30 கி.மீ சுற்றளவுக்குள் இருக்கும்பட்சத்தில் அவர்களை தனித்தனியே வசிப்பதாக கருதி கணவன் / மனைவி பணிபுரிபவர்கள் (Spouse Employed) என்ற அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்படமாட்டாது.

(ii) கடந்த ஆண்டில், கலந்தாய்வில் கலந்து கொண்டு, கணவன் / மனைவி இருவரும் பணிபுரிபவர்கள் (Spouse Employed) என்ற தகுதியின் பேரில், மாறுதல் பெற்றவர்கள் மீண்டும் அதே தகுதியின் அடிப்படையில் மாறுதல் பெற, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னுரிமை வழங்க இயலாது. மேற்கண்ட தகுதியின் பேரில் ஏற்கனவே மாறுதல் பெற்றவர்கள், மீண்டும் கலந்தாய்வில் கலந்து கொள்ள தடையில்லை. ஆனால் அவ்வாறு மாறுதல் கோருபவர்களின் மாறுதல் கோரிக்கைகள் பணியிட முன்னுரிமை (Station Seniority) அடிப்படையிலேயே பரிசீலிக்கப்படும்.

(iii) கணவன் மனைவி என்ற முன்னுரிமை அடிப்படையில் மாறுதல் கோரும் பணியிடமானது, கணவன் அல்லது மனைவி பணிபுரியும் மாவட்டத்தில் உள்ள பணியிடங்களுக்கு மட்டுமே பொருந்தும்.

(iv) கணவன் மனைவி என்ற முன்னுரிமை, மைய அரசு, மாநில அரசு அலுவலகங்கள், பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகளில் பணியாற்றுபவர்களுக்கு மட்டுமே பொருந்தும் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட உரிய அலுவலர்களால் பணிச்சான்று வழங்கப்பட வேண்டும். இதில் மைய அரசு / மாநில அரசு / பொதுத்துறை என்ற பாகுபாடு கிடையாது.

(உ) பிற ஆசிரியர்கள்

7. <u>சிறப்பு நிகழ்வு :</u> கணவன் அல்லது மனைவி திடீரென்று விபத்திலோ அல்லது நோய் வாய்ப்பட்டு இறந்தாலோ அத்தகைய ஆசிரியர்கள் குறித்த நிகழ்வுகளில் கலந்தாய்வு குறித்த விதிமுறைகளை கடைபிடிக்காமல் சிறப்பு நிகழ்வாக வழங்கலாம். எனினும் இது குறித்து அந்தந்த இயக்குநருக்கு ஒட்டுமொத்த அறிக்கை அனுப்பப்பட வேண்டும்.

8. <u>கலந்தாய்வு (Counselling)</u> முறையில் ஆசிரியர்கள் பொது மாறுதலின் போது, கீழ்க்காணும், நிபந்தனைகளையும் அலுவலர்கள் கவனத்திற் கொள்ள வேண்டும்.

(அ) ஏற்கனவே புகாரின் மீது நிர்வாக காரணங்களுக்காக மாற்றப்பட்டவர்கள் இரண்டாண்டுகள் கழித்து விண்ணப்பிக்கலாம். ஆயினும் ஏற்கனவே பணியாற்றிய இடத்திற்கு மாறுதல் கோரி விண்ணப்பிக்கக் கூடாது.

(ஆ) அனைத்து வகை ஆசிரியர்களின் மாறுதல்களை முதன்மைக் கல்வி அலுவலர்கள் / மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள் ஆணையிடலாம்.

(இ) மாறுதல் கோரும் ஆசிரியர்கள், மாறுதல் விண்ணப்பத்தில் எந்தப் பள்ளிக்கு மாறுதல் கோருகிறார் என்ற விவரத்தைக் குறிப்பிடக்கூடாது. மாவட்ட மாறுதல் கோரும் ஆசிரியரும் மாறுதல் கோரும் மாவட்டத்தின் பெயரினை மட்டுமே குறிப்பிட வேண்டும். மாறுதல் கோரியுள்ள ஆசிரியர்களின் பெயர்களை ஏற்கனவே குறிப்பிட்டபடி முன்னுரிமை பட்டியல் தயாரித்து அதன்படி ஒரு குறிப்பிட்ட நாளில் கலந்துரையாடலுக்கு (Counselling) வரவழைத்து அவர்களிடம் தகுதியுள்ள காலிப்பணியிடங்களின் பட்டியலைக் கொடுத்து அவர்கள் விரும்பிய இடத்திற்கு மாறுதல் அளிக்கப்பட வேண்டும்.

(ஈ) மலைப்பாங்கான இடங்களில் உள்ள தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு ஆசிரியர்கள் செல்ல தயக்கம் காட்டுவார்கள் என்பதாலும், இதனால் இவ்விடங்களில் அமைந்துள்ள பள்ளிகளில் ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இல்லாமலிருக்க, மலைச் சுழற்சி முறை (Hill Rotation) அரசாணை (நிலை)

எண் 404 கல்வி, அறிவியல் (ம) தொழில்நுட்பவியல் துறை நாள் 25.05.1995ன்படி மாறுதல்கள் வழங்கப்பட்டு வருகின்றது. இதே முறை பின்பற்றப்படலாம். எனவே, பத்தி 4,5 மற்றும் 6ல் குறிப்பிட்டுள்ள மாறுதல் நெறிமுறைகள் மலை சுழற்சி மாறுதல் முறைக்குப் பொருந்தாது.

(உ) உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களின் மாறுதல்களைப் பொருத்தவரை பள்ளிக் கல்வி இயக்குநரால் மாநிலம் தழுவிய பட்டியல் பேணப்படுவதால், அந்த காலிப் பணியிட விபரங்களை பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்திலும், முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்திலும் தலைமையாசிரியர்களுக்கு மாநில அளவில் பள்ளிக் கல்வி இயக்குநரால் பொது மாறுதல் கலந்தாய்வு நடத்தப்படும்.

(ஊ) மனமொத்த மாறுதறல்களைப் பொருத்தமட்டில், பள்ளிக் கல்வி இயக்குநர் / முதன்மைக் கல்வி அலுவலர் / மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் ஆகியோர் கலந்தாய்வு பொது மாறுதல் நடைபெறுவதற்கு முன்னர் மாறுதல் ஆணைகள் வழங்கிட வேண்டும்.

(எ) மனமொத்த மாறுதல் அடிப்படையில், மாறுதல் பெற்றவர்கள் மீண்டும் ஏற்கனவே பணிபுரிந்த பள்ளிக்கே மனமொத்த மாறுதலில் செல்ல அனுமதிக்கக் கூடாது. மனமொத்த மாறுதலுக்கு விண்ணப்பிப்பவர்கள், தற்போது பணிபுரியும், பள்ளியில் ஒரு கல்வி ஆண்டு முழுமையாகப் பணிபுரிந்திருக்க வேண்டும். கீழ்க்கண்ட காரணங்களுக்காக மனமொத்த மாறுதல் கோருபவர்களின் விண்ணப்பங்களை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளக்கூடாது.

(i) நடப்புக் கல்வியாண்டில் பதவி உயர்வு பெறும் நிலையில் உள்ள அனைத்துவகை ஆசிரியர்கள்.

(ii) நடப்புக் கல்வியாண்டில் ஒய்வுபெறவுள்ள அனைத்துவகை ஆசிரியர்கள்.

(iii) நிர்வாகக் காரணங்கள் அடிப்படையில் (புகாரின் பேரில்) மாறுதல் செய்யப்பட்ட அனைத்துவகை ஆசிரியர்கள்.

(ஏ) தொடக்கக் கல்வி இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் இணை இயக்குநர்கள் கலந்தாய்வு மையங்களில் திடீர் சோதனை செய்து முறையான வகையில் மாறுதல் வழங்கும் பணி நடைபெறுவதை உறுதி செய்து கொள்ள வேண்டும். வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டு, மாறுதல் பணி குறித்த உரிய கால அட்டவணை தயாரிக்கப்பட்ட பின்பு இவ்விபரங்கள் குறித்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் மற்றும் முதன்மைக் கல்வி அலுவலர் மூலமாக செய்தித் தாள்களில் அறிவிப்பு வெளியிடப்பட வேண்டும்.

(ஐ) உபரி ஆசிரியர் பணியிடங்களை பணி நிரவல் செய்த பின்னரே பொது மாறுதல் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு பணி நிரவல் செய்யப்படும்போது தொடக்கப் பள்ளிகளில் குறைந்தது இரு ஆசிரியர்கள் இருக்க வேண்டும் என்பது உறுதி செய்யப்பட வேண்டும்.

(ii) ஒன்றியத்திற்குள் பணிநிரவல் செய்யப்பட்ட பின்னரும் உபரி இடைநிலை ஆசிரியர் / பட்டதாரி ஆசிரியர்கள் இருப்பின் அவர்களை அருகில் உள்ள வேறு ஒன்றியத்தில் தேவைப்படும் பள்ளிகளுக்கு மாற்றி பணிநிரவல் செய்திட வேண்டும். அவ்வாறு பணிநிரவல் காரணமாக உபரி ஆசிரியர்கள ஒன்றியம் விட்டு ஒன்றியததிற்கு மாற்றப்படும் போது சம்பந்தப்பட்ட ஒன்றியத்தின் ஒட்டுமொத்த முனனுரிமைப பட்டியலில் மிகவும் இளையவர்களாக உள்ளவர்களைத்தான் பணிநிரவல் செய்தல் வேண்டும்.

(iii) மேற்குறிப்பிட்டவாறு ஒன்றியம் விட்டு ஒன்றியம் பணிநிரவல் பெறும் ஆசிரியர்களின் முன்னுரிமையானது முந்தைய ஒன்றியத்திலே (அலகில்) தொடர்ந்து இருக்கும் அடுத்தடுத்த கல்வியாண்டுகளில் முந்தைய ஒன்றியத்தில் ஏற்படும் காலிப்பணியிடங்களுக்கு பணிநிரவலின்போது செய்யப்பட்ட முன்னுரிமையின்படி வேறு ஒன்றியத்திற்கு பணிநிரவல் பெற்றவர் மாறுதலுக்கு உட்படுத்தப்படுவார். மேலும்முந்தைய ஒன்றிய முன்னுரிமையினை துறப்பு செய்யவிரும்பினால் அன்னாரது விருப்பக் கடிதத்தின்படி பணிநிரவல் பெற்ற ஒன்றியத்தில் இளையோராக முன்னுரிமை நிர்ணயம் செய்ய வேண்டும்.

(iv) ஒன்றியத்திற்குள் மற்றும் ஒன்றியம்விட்டு ஒன்றியம் இடைநிலை ஆசிரியர் / பட்டதாரி ஆசிரியர் பணிநிரவல் அந்தந்த மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலரால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(v) முற்றிலும் கண்பார்வையற்றவர்கள் மாற்றுத் திறனாளிகள் சட்டம் 1995ன்படி 40% மற்றும் அதற்கு மேலும் ஊனம் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான சான்றிதழ் பெற்றவர்கள் (மாற்று திறனாளிகளுக்கான மாநில ஆணையரகத்தினால் சான்றிதழ் அளிக்கப்பட்டிருக்க வேண்டும்), விதவைகள் மற்றும் 40 வயதைக் கடந்த திருமணம் செய்து கொள்ளாத முதிர் கன்னியர், இருதய அறுவை சிகிச்சை மற்றும் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள், கடுமையாக பாதிக்கப்பட்ட புற்றுநோயாளிகள் மற்றும் மனவளர்ச்சி குன்றிய மற்றும்உடல் குறைபாடுடைய குழந்தைகளின் பெற்றோர் ஆகியோருக்கு பணியிட மாறுதலில் முன்னுரிமை வழங்கலாம் மற்றும் முற்றிலும் கண்பார்வையற்றவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் விருப்பப்படின் தான் பணி புரியும் இடத்திலேயே பணி செய்ய முன்னுரிமை அளிக்கலாம்.

(vi) உபரி இடைநிலை ஆசிரியர் /பட்டதாரி ஆசிரியர் மற்றும் உபரி காலி இடைநிலை ஆசிரியர் / பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் மாவட்டத்திற்குள் மாற்ற இயலாத நிலை இருப்பின், பணியிடத்துடனோ அல்லது பணியிடத்தையோ தேவைப்படும் வேறு மாவட்டங்களுக்கு பணிநிரவல் செய்திட தொடக்கக் கல்வி இயக்குநருக்கு அனுமதி வழங்கலாம்.

2. மேற்காணும் சூழ்நிலையில் தொடக்கக் கல்வி இயக்குநரின் கெயற்குறிப்பினை ஏற்று தொடக்கக் கல்வித் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள ஊராட்சி ஒன்றிய / நகராட்சி / அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் உபரியாக உள்ள இடைநிலை ஆசிரியர் மற்றும் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை ஆசிரியருடனும் / ஆசிரியர் இன்றியும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள நெறிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி பணி நிரவல் செய்திட தொடக்கக் கல்வி இயக்குநருக்கு அனுமதி அளித்து ஆணையிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.சபிதா

அரசு முதன்மைச் செயலாளர்

# தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

பள்ளிக் கல்வி - அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் கீழ் 2009-2010 மற்றும் 2010-2011 ஆம் கல்வியாண்டில் நிலையுயர்த்தப்பட்ட நடுநிலைப் பள்ளிகளுக்கு 1267 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டது - பதவி உயர்வு மூலம் மற்றும் தற்போதுள்ள நடைமுறைகளின்படி நிரப்ப அனுமதி அளித்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக்கல்வித் துறை**

அரசாணை (நிலை) எண் 172 நாள் 11.07.2012

படிக்க:

1. அரசாணை (நிலை)எண். 15, பள்ளிக் கல்வி, நாள் 23.01.2012
2. தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை -6 அவர்கள் கடித ந.க.எண் 14785/கே4/2012, நாள் 06.06.2012 மற்றும் 26.06.2012.

**ஆணை**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் 2009-2010ம் கல்வியாண்டில் நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்ட 831 நடுநிலைப் பள்ளிகளுக்கு 8ம் வகுப்புக்கான ஆசிரியர் பணியிடங்களாக 831 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும் மற்றும் 2010-2011ம் கல்வியாண்டில் நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்ட 218 நடுநிலைப் பள்ளிகளுக்கு 7 மற்றும் 8ம் வகுப்புக்கு ஒரு பட்டதாரி ஆசிரியர் பணியிடம் வீதம் 436 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும் ஆக மொத்தம் 1267 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை 2011-2012 ஆம் ஆண்டிலேயே தோற்றுவித்தும், தோற்றுவிக்கப்படும் 1267 ஆசிரியர் பணியிடங்களை நடைமுறையிலுள்ள விதிகளை பின்பற்றி, ஆசிரியர் தேர்வு வாரியம் வாயிலாக, பணி நாடுநர்களை தேர்வு செய்து நிரப்பிக் கொள்ள தொடக்கக்கல்வி இயக்குநருக்கு அனுமதி அளித்து ஆணை வெளியிடப்பட்டது.

2. இவ்வாறு தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களில் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப்பட்ட 325 ஆசிரியர் பணியிடங்கள் ஜனவரி 2012ல் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட்டது என்றும் எஞ்சியுள்ள 942 பணியிடங்களை தகுதியுள்ள இடைநிலை ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு மூலம் நிரப்பக்கோரி ஆசிரியர் சங்கங்களால் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது என்றும், மேலும் மேற்காண் அரசாணையில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களை பதவி உயர்வு மூலம் நிரப்பக்கோரி வழக்குகள் தொடர்ந்த வண்ணம் உள்ளனர் எனவும், எனவே, மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் தோற்றுவிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களில் எஞ்சியுள்ள 942 பணியிடங்களை அரசாணை (நிலை) எண் 239, பள்ளிக் கல்வி நாள் 22.09.2007ன்படி ஊராட்சி, நகராட்சி மற்றும் அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களில் உரிய தகுதி பெற்ற ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு மூலம் நிரப்பிக் கொள்ளவும், மீதமுள்ள பணியிடங்களை ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நிரப்பிக் கொள்ளவும் அரசின் அனுமதியினை தொடக்கக் கல்வி இயக்குநர் கோரியுள்ளார்.

3. அரசாணை (நிலை) எண் 239, பள்ளிக் கல்வி நாள் 22.09.2007ல் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு இடைநிலை ஆசிரியர்களில் பட்டதாரி ஆசிரியர் பதவிக்கு தகுதி பெற்றவர்களிலிருந்து பாடவாரியாக ஏற்படும் காலிப் பணியிடங்களுக்கு ஏற்ப பட்டதாரி ஆசிரியர்களாகப் பதவி உயர்வு வழங்கவும், தகுதியுள்ளவர்கள் இல்லாத நிலையில், அந்தப் பணியிடங்களை அரசின் அனுமதி பெற்று வேலை வாய்ப்பக மூலம் நேரடியாக நியமனம் செய்து கொள்ளவும் ஆணை வழங்கப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண் 145, பள்ளிக் கல்வி, நாள் 29.06.2009ல்

பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை தகுதியுள்ள இடைநிலை ஆசிரியர்களுக்கு முன்னுரிமைப்படி பதவி உயர்வு மூலம் நிரப்பிடவும், மீதமுள்ள பணியிடங்களை ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நேரடி நியமனம் வாயிலாக நிரப்பிக் கொள்ளவும் தொடக்கக் கல்வி இயக்குநருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 2007-2008 முதல் 2010-2011 வரை பட்டதாரி ஆசிரியர் பணி நியமனமும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

4. தொடக்கக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து, மேலே ஒன்றிபட படிக்கப்பட்ட அரசாணையில் தோற்றுவிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களில் தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப்பட்ட 325 ஆசிரியர் பணியிடங்கள் போக மீதமுள்ள 942 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை அரசாணை (நிலை) எண் 239, பள்ளிக் கல்வி, நாள் 22.09.2007ன்படி தகுதியுள்ள இடைநிலை ஆசிரியர்களை கொண்டு பதவி உயர்வு மூலம் நிரப்பிடவும், தகுதியுள்ள இடைநிலை ஆசிரியர்கள் இல்லாத நிலையில், தற்போது நடைமுறையிலுள்ள ஆசிரியர் பணி நியமன முறைப்படி நிரப்பிக் கொள்ளவும் தொடக்கக் கல்வி இயக்குநருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.சபிதா
அரசு முதன்மைச் செயலாளர்

---

## தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை - 600 006

**ந.க.எண் : 9502/டி1/2012 நாள் 26.06.2012**

பொருள் : தொடக்கக் கல்வி - 2012-2013 ஆம் கல்வி ஆண்டு - ஆசிரியர் பொது மாறுதல் மற்றும் பதவி உயர்வு கலந்தாய்வு - சில நெறிமுறைகள் வழங்குதல் - சார்ந்து,

பார்வை : 1. அரசாணை (1டி) எண்.158, பள்ளிக் கல்வித் (இ1) துறை, நாள் : 18.05.2012.
2. தொடக்கக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், ந.க.எண்.12118/டி1/2011, நாள் : 12.2011.

பார்வை 1ல் காணும்அரசாணையின்படி நடைபெறவுள்ள ஆசிரியர் பொது மாறுதல் மற்றும் பதவி உயர்வு கலந்தாய்வில் கீழ்காணும் கூடுதல் நெறிமுறைகளைத் தவறாமல் கடைபிடிக்குமாறு அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1. அரசாணை (நிலை) எண்.107, பள்ளிக் கல்வித்துறை, நாள் 18.08.2009ன் படி 10+2+3 என்ற முறையில் பட்டம் பெற்றவர்களுக்கும், மற்றும் 11 + 1 + 3 என்ற முறையில் பட்டம் பெற்றவர்களுக்கும் மட்டும் உரிய பதவி உயர்வு முன்னுரிமைப் பட்டியலில் சேர்த்து பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும். 3 ஆண்டு பட்டப்படிப்பு முடித்த பின்பு +2 முடித்தவர்களுக்குப் பதவி உயர்வு வழங்கக்கூடாது.
2. 2011-2012 ஆம் கல்வியாண்டில் அரசு உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்ட 710 நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரிந்து பணிநிரவல் பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர்கள், நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் பொது மாறுதலில் முன்னுரிமை கோரினால் வழங்கப்பட வேண்டும்.

ஒப்பம்
தொடக்கக் கல்வி இயக்குநர்

# தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

பள்ளிக் கல்வி - மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சரின் அறிவிப்பு -2012-2013 ஆம் கல்வியாண்டு முதல் ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் / அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 1-ம் வகுப்பு மற்றும் 6-ஆம் வகுப்பில் தலா இரண்டு ஆங்கில வழி இணைப்பிரிவுகள் தொடங்க அனுமதி அளித்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக்கல்வித் (இ1) துறை**

அரசாணை (நிலை) எண் 180 நாள் 17.07.2012

படிக்க :

1. மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் அவர்கள் 18.04.2012 அன்று நடைபெற்ற பள்ளிக் கல்வித் துறை மான்யக் கோரிக்கை போது வெளியிட்ட அறிவிப்பு
2. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித எண் 20883/ஜி1/இ1/2012 நாள் 27.03.2012.
3. தொடக்கக் கல்வி இயக்குநரின் கடித எண் 31992/கே2/2011 நாள் 28.04.2012.

ஆணை

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் அவர்கள் 18.04.2012 அன்று நடைபெற்ற பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையின் போது கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.

"தற்போதைய கல்வித் திட்டத்தின் அடிப்படையில் மாணவர்களின் எதிர்கால வாழ்விற்கு ஆங்கிய வழிக் கல்வி இன்றியமையாததாக உள்ளதால், ஊரகப் பகுதியில் அமைந்துள்ள அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் ஆங்கில மொழித் திறனை மேம்படுத்தும் வகையில் வரும் கல்வியாண்டு 'முதல் ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளி / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் ஒன்று மற்றும் ஆறாம் வகுப்பில் தலா இரண்டு ஆங்கில வழி இணைப்பிரிவுகள் தொடங்கப்பட்டு படிப்படியாக 12-ம் வகுப்பு வரை ஆங்கில வழி இணைப்பிரிவுகள் நடத்தப்படும். முதற்கட்டமாக 2012-2013 ஆம் கல்வியாண்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 10 ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும்நடுநிலைப் பள்ளிகள் / அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் வீதம் 320 பள்ளிகளில் 22,400 மாணவர்கள் பயன்பெறும் வகையில் ஒன்று மற்றும் ஆறாம் வகுப்பில் தலா இரண்டு ஆங்கில வழி இணைப்பிரிவுகள் தொடங்கப்படும்.

2. மேற்காண் அறிவிப்பினை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக உரிய கருத்துருவினை அரசின் பரிசீலனைக்காக பள்ளிக் கல்வி இயக்குநர் / தொடக்கக் கல்வி இயக்குநர் ஆகியோர் பரிந்துரைத்துள்ளனர்.

3. பள்ளிக் கல்வி இயக்குநர்/ தொடக்கக் கல்வி இயக்குநர் ஆகியோரின் கருத்துருக்களை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து மாணவர்களின் ஆங்கில மொழித் திறனை மேம்படுத்தும் வகையில் முதற்கட்டமாக 2012-2013 ஆம் கல்வியாண்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 10 ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் / அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் வீதம் (3 ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகள், 2 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகள் மற்றும் 5 அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள்) 320 பள்ளிகளில் 22,400 மாணவர்கள் பயன்பெறும் வகையில் ஒன்று மற்றும் ஆறாம் வகுப்பில் தலா இரண்டு ஆங்கில வழி இணைப்பிரிவுகள் தொடங்க அனுமதி அளித்து ஆணை வெளியிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.சபிதா
அரசு முதன்மைச் செயலாளர்

தொடக்கக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை - 600 006.

ந.க.எண் 13275/இ1/2012, நாள் 19.07.2012

பொருள் : தொடக்கக் கல்வி - சார்நிலைப் பணி - இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009 - ஊராட்சி / நகராட்சி / அரசு தொடக்க மற்றும்நடுநிலைப் பள்ளிகள் - 01.09.2011ல் உள்ளபடி மாணவர்கள் எண்ணிக்கை அடிப்படையில் உபரி இடைநிலை ஆசிரியர் / பட்டதாரி ஆசிரியர்களை பணி நிரவல் செய்தல் மற்றும் 2012-2013 ஆம் கல்வியாண்டுக்குரிய பொது மாறுதல் நெறிமுறைகள் வழங்குதல் - சார்ந்து.

பார்வை :
1. அரசாணை (1டி) எண் 158, பள்ளிக் கல்வித் (இ1) துறை, நாள் 18.05.2012
2. அரசாணை (1டி) எண் 142, பள்ளிக் கல்வித்துறை, நாள் 26.04.2012.
3. அரசாணை (1டி) எண் 270, பள்ளிக் கல்வித் (வ.செ.2) துறை, நாள் 10.07.2012
4. தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்மறைகள், ந.க.எண் 4404/இ1/2012, நாள் 11.07.2012
5. அரசாணை (நிலை) எண் 15, பள்ளிக் கல்வித் துறை நாள் 23.01.012
6. அரசாணை (நிலை) எண் 172, பள்ளிக் கல்வித் (சி2) துறை நாள் 11.07.2012.

**ஆணை**

இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009ன்படி, தொடக்கக் கல்வித்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள ஊராட்சி ஒன்றிய / நகராட்சி / அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 01.09.2011ல் உள்ளபடி ஆசிரியர் மாணவர் எண்ணிக்கை அடிப்படையில் உபரியாக உள்ள இடைநிலை ஆசிரியர் மற்றும் பட்டதாரி ஆசிரியர்களை பணி நிரவல் செய்தல் மற்றும் 2012-2013 ஆம் கல்வி ஆண்டுக்குரிய பொதுமாறுதல் வழங்குதல் சார்ந்த கால அட்டவணை பார்வை 4லும், பொதுமாறுதல் மற்றும்பணி நிரவல் குறித்த பார்வை 1 மற்றும் 3 அரசாணைகள், பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்ட மற்றும் பதவி உயர்வு மூலம் நிரப்பிட பார்வை 5 மற்றும் 6ல் காணும் அரசாணைகள் ஆகியவை ஏற்கனவே அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ள நிலையில் கால அட்டவணையின்படி கலந்தாய்வினை சிறந்த முறையில் நடத்திடக் கீழ்க்காணும் நெறிமுறைகள் வழங்கப்படுகின்றன.

1. பார்வை 5ல் காணும் அரசாணையில் அனுமதிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் பார்வை 6ல் காணும் அரசாணையின்படி பதவி உயர்வு மூலம் நிரப்பிக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளதால், இப்பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை பணி நிரவல் மற்றும் ஒன்றிய முன்னுரிமை மற்றும் தேர்ந்தோர் பட்டியலின்படி பதவி உயர்வு மூலம் நிரப்புதல் வேண்டும்.

2. ஆசிரியருடன் உபரியாக உள்ள இடைநிலை ஆசிரியர் மற்றும் பட்டதாரி ஆசிரியர்களை ஒன்றியத்தில் நிரப்பத் தகுதியுள்ள காலிப் பணியிடங்களுக்கு பணி நிரவல் செய்தல் வேண்டும். அவ்வாறு தகுதியுள்ள காலிப் பணியிடத்திற்கு பணி நிரவல் செய்த பின்னர் உபரி ஆசிரியர் பணியிடத்தை இயக்குநரின் தொகுப்புக்கு சரண் செய்ய வேண்டும். மேலும் தகுதியுள்ள காலிப்பணியிடம் அதே ஒன்றியத்தில் இல்லாவிடில், ஒன்றியத்தில் கூடுதல் தேவையுள்ள பள்ளிக்கு உபரி ஆசிரியரை பணியிடத்துடன் பணி நிரவல் செய்தல் வேண்டும். நகராட்சி / ஒன்றியத்திற்குள் பணி நிரவல் செய்ய இயலாவிடில் மாவட்டத்திற்குள் வேறு ஒன்றியத்திற்கு பணி நிரவல் செய்யலாம்.

3. பார்வை 5ல் காணும் அரசாணை சார்பாக வழக்கு ஏதுமிருப்பின், அதனுடைய தீர்ப்பிற்குட்பட்டு பதவி உயர்வுகள் வழங்கப்பட வேண்டும்.

4. பார்வை 6ல் காணும் அரசாணையில் அனுமதிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு ஒருங்கிணைந்த ஒன்றிய மற்றும் தேர்ந்தோர் பட்டியலின்படி பதவி உயர்வு வழங்கிய பின்னர் ஏற்படும் தொடக்கப்பள்ளித் தலைமை ஆசிரியர்பணியிடங்களுக்கு 23.07.2012 திங்கள் முற்பகல் ஒன்றிய தேர்ந்தோர் பட்டியலின்படி பதவி உயர்வு வழங்குதல் வேண்டும். இதே நாளில் தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர் பணியிடங்கள் ஏதேனும் காலி இருப்பின் அப்பணியிடங்களையும் பதவி உயர்வு மூலம் நிரப்பலாம்.

5. பட்டதாரி ஆசிரியர் பதவி உயர்வு, பி.எட்., வுடன் 10+2+3 முறையில் தகுதியுடையவர்களுக்கு மட்டுமே வழங்க வேண்டும். ஓராண்டு இரட்டைப் பட்ட (double Degree) முறையை எடுத்துக் கொள்ளக் கூடாது.

6. இறப்பு, விருப்ப ஓய்வு, பதவி உயர்வு துறப்பு போன்ற காரணங்களால் நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பணியிடம் காலி இருப்பின் 21.07.2012 பிற்பகல் அப்பணியிடங்களை பதவி உயர்வு மூலம் நிரப்பலாம்.

7. பார்வை 1ல் காணும்அரசாணையில் வழங்கப்பட்டுள்ள நெறிமுறைகளின்படியே இடைநிலை ஆசிரியர்/ பட்டதாரி ஆகிரியர்களுக்கு பொதுமாறுதல் வழங்கப்பட வேண்டும். இந்த அரசாணையின்படியே மனமொத்த மாறுதல்கள் வழங்க வேண்டும்.

8. பணி நிரவல் குறித்த பார்வை 3ல் காணும் அரசாணையின் நெறிமுறைகளை பணிநிரவல் செய்யும்போது தவறாமல் பின்பற்றப்பட வேண்டும்.

எனவே, உரிய அரசாணைகள் மற்றும் நெறிமுறைகளை தவறாமல் பின்பற்றி பணி நிரவல் மற்றும் பொது மாறுதலினை சிறப்பான முறையில் எவ்விதப் புகாருக்கும் இடமின்றி செயல்படுத்திட அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களும் அறிவுறுத்தப்படுகிறார்கள். இது மிகவும் அவசரம்

தொடக்கக் கல்வி இயக்குநர்

## GOVERNMENT OFTAMILNADU

**ABSTRACT**

Social Defence - Integrated Child Protection Scheme - Constitution of Block Level Child Protection Committee under Integrated Child Protection Scheme to recommend and monitor the implementation of child protection services at block level - Orders - Issued.

---

**Social Welfare and Nutrutuous Meal Programme (SW 8) Department**

G.O. (Ms) No. 215, Dated 19.07.2012

Read :

From the principal secretary / Special Commissioner of Social Defence, Letter No : 7913/ D1/ Dated : 08.02.2011

**ORDER :-**

As per the guidelines of the Integrated Child Protection Scheme every block (ward in a city) shall have a Child Protection Committee under the Chairpersonship of the block / ward level elected representative (Head of the Block Committee) with the Block Development Officers (BDO's) as the Member Secretary and other Members to recommend and monitor the implementation of child protection services at block level. The Committee could include a member of the District Child Protection

Society, One Integrated Chiid Development Scheme functionary, representatives of edcuation and health departments, Chairpersons of the Village Level Child Protection Committees as well as respected community members and civil society representatives.

2. In pursuance to above, the Principal Secretary /Special Commissioner of Social Defence in the letter read above has sent proposal for constitutionof Block Level Child Protection Committee to recommend and monitor the implementation of child protection services at block level with the following composition :

| | | |
|---|---|---|
| (i) | Block / Ward Level Elected Representative | Chairperson |
| (ii) | Block Development Officers (BDO's) | Member Secretary |
| (ili) | A representative from the Distrist Child Protection Unit | Member |
| (iv) | One Integrated Child Developmnet Scheme Functionary | Member |
| (v) | Assistant Elementary Education Officer | Member |
| (vi) | Medical Officer Primary Health Centre | Member |
| (vii) | 3 Chairpersons of the Village Level Child Protection Committee | Member |
| (vlii) | 2 representatives of the active Non-Governmental Organisation | Member |
| (ix) | 3 Memers of Self - Help Group active in the block (to be identified by the Self - Help Group) | Member |

She has also stated that the Committee shall meet as and when required and atleast once in three months to recommend and monitor the implementation of Child protection services at block level and the District Collectors shall be made reponsible for the constitution and over-all functioning of these committees. She has requested the Government to issue orders for constitution of Block Level Child Protection Committee.

3. After careful examination, the Government accept the proposal of the Principal Secretarty / Director of Social Defence and hereby constitutes the Block Level Child Protection Committee under Intergrated Child Protection Scheme to recommend and monitor the implementation of child protection services at block level with the following composition :

| | | |
|---|---|---|
| (i) | Block / Ward Level Panchayat Union Elected Chairman | Chairperson |
| (ii) | Block Development Officers (BDO's) | Member Secretary |
| (iii) | A representative from the Distrist Child Protection Unit | Member |
| (iv) | One Integrated Child Development Scheme Functionary | Member |
| (v) | Assistant Elementary Education Officer | Member |
| (vi) | Medical Officer Primary Health Centre | Member |
| (vii) | 3 Chairpersons of the Village Level Child Protection Committee | Member |
| (viii) | 2 representatives of the active Non-Governmental Organisation | Member |
| (ix) | 3 Memers of Self - Help Group active in the block (to be identified by the Self - Help Group) | Member |

4. The Committee shall meet as and when required and at least once in three months to recommend and monitor the implementation of child protection services at block level and the District Collectors shall be responsible for the constitution and overall functioning of these committees.

**(By Order of the Governor)**

**ASHOK DONGRE**
Principal Secretary to Government

**தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை 600 006**

**ந.க.எண் 13275/இ1/2012 நாள் 23.07.2012**

பொருள் : தொடக்கக் கல்வி - சார்நிலைப் பணி - இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் - 2009 ஊராட்சி ஒன்றிய / நகராட்சி / அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் 01.09.2011ல் உள்ளபடி மாணவர்கள் எண்ணிக்கை அடிப்படையில் உபரி இடைநிலை ஆசிரியர்களை பணிநிரவல் செய்தல்மற்றும் 2012-2013 ஆம் கல்வியாண்டுக்குரிய பொது மாறுதல் - சார்ந்து

பார்வை : 1. அரசாணை (1டி) எண் 158, பள்ளிக்கல்வி (இ1) துறை, நாள் 18.05.2012

2. அரசாணை (1டி) எண் 142, பள்ளிக் கல்வித்துறை, நாள் 26.04.2012.

3. அரசாணை (1டி) எண் 270 பள்ளிக் கல்வி (வ.செ.2) துறை, நாள் 10.07.2012

4. சென்னை 6, தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண் 4404 / இ1/ 2012 நாள் 11.07.2012

5. சென்னை 6, தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண் 13275/இ1/2012 நாள் 19.07.2012.

இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009ன்படி தொடக்கக் கல்வித் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள ஊராட்சி ஒன்றிய / நகராட்சி / அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 01.09.2011ல் உள்ளபடி ஆசிரியர் மாணவர்கள் எண்ணிக்கை அடிப்படையில் உபரியாக உள்ள இடைநிலை ஆசிரியர்களை பணிநிரவல் செய்தல் மற்றும் 2012-2013 ஆம் ஆண்டுக்குரிய பொது மாறுதல் கலந்தாய்வினை எவ்வித புகாருக்கு இடமின்றி சிறந்த முறையில் நடத்திட இவ்வியக்கத்தில் நடைபெறும் கூட்டத்தில் உரிய நெறிமுறைகள் வழங்கப்பட உள்ளன. இக்கூட்டத்திற்கு கீழே குறிப்பிட்டுள்ளவாறு கோரப்பட்டுள்ள விவரங்களைக் கொண்டு வருதல் வேண்டும் என அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

1. இயக்ககத்தில் 25.07.2012 மற்றும் 26.07.2012 ஆகிய இரு நாட்களும் நடைபெறும் கூட்டத்திற்கு சார்ந்த பிரிவு உதவியாளர் மற்றும் கண்காணிப்பாளர் கண்டிப்பாக வருகை புரிய வேண்டும்.

2. 26.07.2012 அன்று (மட்டும்) நடைபெறும் கூட்டத்திற்கு அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களும் வருதல் வேண்டும்.

3. ஒன்றியத்திற்குள் நிரப்ப தகுந்த காலிப்பணியிடங்கள் மற்றும் கூடுதல் தேவையுள்ள பணியிடங்கள் சேர்த்தும் ஒன்றியத்திற்குள் பணிநிரவல் செய்யப்படும் இடைநிலை ஆசிரியர்கள் பட்டியல்.

4. ஒன்றியத்திற்குள் நிரப்பத் தகுந்த காலிப்பணியிடங்கள் மற்றும் கூடுதல் தேவையுள்ள பணியிடங்கள் சேர்த்தும் அதே ஒன்றியத்திற்குள் பணிநிரவல் செய்ய இயலாத நிலையில், ஒன்றியம் விட்டு ஒன்றியம் பணிநிரவல் செய்யப்பட வேண்டிய இடைநிலை ஆசிரியர்கள், அவர்கள் ஒன்றியத்திற்குள் பணியில் சேர்ந்த தேதியின்படி, தயார் செய்யப்பட்ட பணியில் இளைய இடைநிலை ஆசிரியர்கள் பட்டியல்.

5. பத்தி 4க்கான பட்டியல் தயார் செய்ய உதாரணமாக, ஒரு ஒன்றியத்திற்குள் நிரப்பத் தகுந்த இடைநிலை ஆசிரியர் காலிப்பணியிடம் 5 என்றும், அதே ஒன்றியத்திற்கு கூடுதல் தேவையுள்ள இடைநிலை ஆசிரியர் பணியிடம் 4 என்றும் பணிநிரவல் இடைநிலை ஆசிரியர்கள் 15 என்ற எண்ணிக்கையில் இருப்பின், நிரப்பத் தகுந்த காலிப்பணியிடம் மற்றும் கூடுதல் தேவை பணியிடம் ஆகிய மொத்தம் 9 பணியிடங்களுக்கு பணிநிரவலில் 9 இடைநிலை ஆசிரியர்களுக்கு வழங்குவது போக, எஞ்சிய 6 உபரி இடைநிலை ஆசிரியர்கள் பட்டியலை ஒன்றியம் விட்டு ஒன்றியம் பணிநிரவலுக்கு கொண்டு வரவேண்டும்.

6. பணிபுரியும் ஒன்றியத்திற்குள் பணிநிரவல் செய்ய இயலாத இடைநிலை ஆசிரியர்கள் மாவட்டத்தில் எத்தனை ஒன்றியங்களில் உள்ளார்களோ அந்தப் பட்டியல்களிலிருந்து அவர்கள் அனைவரையும் இடைநிலை

ஆசிரியர்களாகப் பணியில் சேர்ந்த தேதியின்படி ஒருங்கிணைந்த பட்டியல் தயார் செய்யப்பட வேண்டும். பணியில் சேர்ந்த தேதியின்படி ஒருங்கிணைந்த பட்டியல் தயார் செய்யப்பட வேண்டும். ஒரே தேதியில் பணியில் சேர்ந்திருந்தால் பிறந்த தேதியின்படியும், பிறந்த தேதியும் ஒன்றாக இருந்தால் பெயரைக் கொண்டு அகர வரிசைப்படியும் (ஆங்கில எழுத்துக்களின்படி) பட்டியல் தயார் செய்யப்பட வேண்டும். இந்தப் பட்டியலை சம்மந்தப்பட்ட ஒன்றியங்களின் அனைத்து உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்களின் கையொப்பத்துடனும் மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலரின் மேலொப்பத்துடனும் கொண்டு வருதல் வேண்டும்.

7. பத்தி 5ல் குறிப்பிட்டுள்ள ஒன்றியம் விட்டு ஒன்றியம் பணிநிரவல் செய்யப்படும் ஒருங்கிணைந்த இடைநிலை ஆசிரியர்களின் பட்டியலை தயார் செய்ய, 24.07.2012 அன்று சார்ந்த உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்களை மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலகத்திற்கு அழைத்து அவர்கள் மூலமாகதயார் செய்யப்பட வேண்டும். இதில் எவ்வித தவறும்இடம் பெறாமல் மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் கண்காணித்தல் வேண்டும்.

8. ஒன்றியத்திற்குள் மற்றும் ஒன்றியம் விட்டு ஒன்றியம் பணிநிரவல் செய்யப்படும் இடைநிலை ஆசிரியர்களுக்கு, பணிநிரவல் செய்யப்படும் நாள் மற்றும் கலந்தாய்வு நடைபெறும் இடம் குறித்து தெரிவித்தல் வேண்டும். அந்தந்த பட்டியலில் அவர்களது கையொப்பம் பெறப்பட வேண்டும்.

9. எற்கனவே நடைபெற்றுள்ள கலந்தாய்வுக்கு பின்னரும் காலியாக உள்ள நடுநிலைப்பள்ளித் தலைமையாசிரியர் மற்றும் தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர் காலிப்பணியிட பணியிட பட்டியல், பட்டதாரி ஆசிரியர் காலிப்பணியிட பட்டியல் (பாடவாரியாக) (பள்ளி வாரியாக) அளிக்கப்பட வேண்டும்.

10. 23.07.2012 வரை நடைபெற்ற கலந்தாய்வுகளில் ஒன்றிய வாரியாக நடுநிலைப் பள்ளி தலைமையாசிரியர் / தமிழாசிரியர் / பட்டதாரி ஆசிரியர் (பாடவாரியாக) மற்றும் தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர்களாகப் பதவி உயர்வு பெற்றவர்களின் எண்ணிக்கைப் பட்டியல்.

11. 21.07.2012 அன்று பட்டதாரி ஆசிரியராகப் பதவி உயர்வு பெற்ற பின்னர் ஏற்பட்ட இடைநிலை ஆசிரியர்களின் காலிப்பணியிட பட்டியல் தனியாகவும், 23.07.2012 அன்று தொடக்கப் பள்ளித்தலைமை ஆசிரியராக பதவி உயர்வு பெற்ற பின்னர் ஏற்படும் இடைநிலை ஆசிரியர்களின் காலிப்பணியிட பட்டியல் தனியாகவும், ஒன்றிய வாரியாக, பள்ளி வாரியாக மொத்த இடைநிலை ஆசிரியர் காலிப்பணியிட பட்டியல் தனியாகவும் கொண்டு வருதல் வேண்டும்.

12. ஒன்றியத்திற்குள் மற்றும் ஒன்றியம் விட்டு ஒன்றியம் பணிநிரவல் செய்யப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களின் எண்ணிக்கை (பாடவாரியாக) அளிக்கப்பட வேண்டும்.

13. ஒன்றியத்திற்குள் / ஒன்றியம் விட்டு ஒன்றியம் / மாவட்டம் விட்டு மாவட்டம் பொது மாறுதல் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களின் எண்ணிக்கை (பாடவாரியாக) அளிக்கப்பட வேண்டும்.

இது மிகவும் அவசரம்

தொடக்கக் கல்வி இயக்குநர்.

## தமிழ்நாடு அரசு

## நிதி (ஓய்வூதியம்)த் துறை

**அரசாணை எண் 306, நாள் 13.08.2012**

தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர் மருத்துவ நல நிதித் திட்டம், 1995 அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனை மற்றும் அறுவை சிகிச்சைகள் பட்டியல் கூடுதலாக மருத்துவமனை அங்கீகரித்து ஆணை வெளியிடப்படுகின்றது.

படிக்கவும் :

1. அரசாணை (நிலை) எண் 562, நிதி (ஓய்வூதியம்)த்துறை, நாள் 11.07.1995
2. அரசாணை (நிலை) எண் 532, நிதி ( சம்பளங்கள்) த்துறை, நாள்10.12.1999
3. அரசாணை (நிலை) எண் 378, நிதி (ஓய்வூதியம்)த்துறை, நாள் 13.10.2005
4. அரசாணை (நிலை) எண் 128, நிதி (ஓய்வூதியம்)த்துறை, நாள் 12.04.2007
5. அரசாணை (நிலை) எண் 440, நிதி (ஓய்வூதியம்)த்துறை, நாள்13..09.2007
6. அரசாணை (நிலை) எண் 458, நிதி (ஓய்வூதியம்)த்துறை, நாள்21.09.2007
7. அரசாணை (நிலை) எண் 50, நிதி (ஓய்வூதியம்)த்துறை, நாள்19.02.2008
8. அரசாணை (நிலை) எண் 474, நிதி (ஓய்வூதியம்)த்துறை, நாள்30.9.2009
9. அரசாணை (நிலை) எண் 475, நிதி (ஓய்வூதியம்)த்துறை, நாள்30.09.2009
10. அரசாணை (நிலை) எண் 477, நிதி (ஓய்வூதியம்)த்துறை, நாள் 30.09.2009
11. அரசாணை (நிலை) எண் 238, நிதி (ஓய்வூதியம்)த்துறை, நாள் 05.08.2010
12. அரசாணை (நிலை) எண் 423, நிதி (ஓய்வூதியம்)த்துறை, நாள்25.11.2010
13. அரசாணை (நிலை) எண் 195, நிதி (ஓய்வூதியம்)த்துறை, நாள் 15.07.2011
14. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் கடித எண் 012/ஏ1/4/2011 நாள் 29.06.2011

**ஆணை :**

பார்வை மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர் மருத்துவ நல நிதித் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட சிறப்புத் தன்மை வாய்ந்த அறுவை சிகிச்சை / சிகிச்சைகள் மற்றும் தனியார் மருத்துவமனைகள் அடங்கிய திருத்தப்பட்ட பட்டியல் வெளியிடப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, பார்வை நான்கு, ஐந்து, ஏழு மற்றும் பதினொன்று முதல் பதிமூன்று வரை படிக்கப்பட்ட அரசாணைகளில் கூடுதலாக சில சிறப்புத் தன்மை வாய்ந்த அறுவை சிகிச்சை / சிகிச்சைகள் மற்றும் தனியார் மருத்துவமனைகள் இத்திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. பார்வை பதினான்கில் படிக்கப்பட்ட மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் கடிதத்தில் டாக்டர் ஐசக் போன் அண்ட் ஜாயிண்ட் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையை (Dr.Isaac Bone & Joint Speciality Hospital) தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர் மருத்துவ நல நிதித்திட்டத்தின் கீழ் ORTHOPAEDICS சிறப்பு சிகிச்சைகளுக்கு அங்கீகரிக்கலாம் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

3: மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரது பரிந்துரையை, தக்க பரிசீலனைக்குப் பின், ஏற்பதென அரசு முடிவு செய்து, அதன்படி, கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் பிரதான சாலையிலுள்ள Dr.Isaac Bone & JOint Speciality Hospital ஐ தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர் மருத்துவ நல நிதித்திட்டத்தின் கீழ் ORTHOPAEDICS சிறப்பு சிகிச்சைகளுக்கு அங்கீகரித்து அரசு ஆணையிடுகின்றது.

4. இத்திட்டத்தின் கீழான பிற விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் மாற்றம் ஏதும் இல்லை.

5. இவ்வாணை, ஆணை வெளியிடப்படும் நாள் முதல் நடைமுறைக்கு வருகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ச.கிருஷ்ணன்
அரசு செயலாளர் (செலவினம்)

## FINANCE (Salaries) DEPARTMENT

**G.O.Ms. No.309, Dated 14th August 2012**

**(Aadi-30, Thiruvalluvar Aandu - 2043)**

**ABSTRACT**

MEDICAL AID - New Health Insurance Scheme, 2012 for Government Employees and Organisations covered under this Scheme - Implemented - **Constitution of an Accreditation Committee** for empanelment of hospitals and also to monitor the quality of treatment - Orders - Issued.

**Read :**

1. G.O.Ms. No. 139, Finance (Sal), Department, dated 27.04.2012
2. G.O.Ms. No. 243, Finance (Sal), Department, dated 29.06.2012.

**ORDER :-**

In the Government Order first read above, orders have been issued for implementation of the New Health Insurance Scheme, 2012 to provide for health care assistance to the Employees of Government Departments and Organisations covered under this Scheme and their eligible Family Members with provision to avail assistance upto Rupees Four Laksh for a block of four years. In the Govemment Order Second read above, orders have been issued for implementation of the New Health Insurance Scheme, 2012 through United India Insurance Company Limited, Chennai for a block period of four years commencing from 1.7.2012 to 30.06.2016.

2. During the review meeting on the implementation of the New Health Insurance Scheme, 2012 for Employees of Government Departments and Other Organisations covered under this scheme, the issues of monitoring quality of treatment and empanelment of hospitals as per the prescribed minimum qualifications were discussed. As per the tender conditions, the Insurance Company should have accredited hospital network in all districts of the State of Tamil Nadu and these hospitals should have the standards as prescribed under rule 6 of the New Health Insurance Scheme Rules, 2012 and this shall be adhered to by the Insurance Company / Third Party Administrator. After deliberation of the review meeting, it was decided that to ensure the standards prescribed in the New Health Insurance Scheme Rules, 2012 the Insurance Company / Third Party Administrator has to inspect the hospitals and ensure the standards prescribed under rule 6 of the New Health Insurance Scheme Rules, 2012. For the approval of such hospotal accreditaion, and Accreditation Committee may be constituted.

3. Accordingly, the Government has decided to constitute and Accreditation Committee for empanelment of accredited hospitals and also to monitor the quality of treatment for the Employees of Government Department and Other Organisations covered under this Scheme. The Committee consists of the follwoing officers :

(a) Commissioner of Treasuries and Accounts.

(b) Director of Medical and Rural health Services or his nominee and

(c) Representative of United India Insurance Company Limited, Chennai.

4. The Commissioner of Treasuries and Accounts is the head of the Accreditation Committee. The Committee shall review whether the accredited hospitals in all districts of the State of Tamil Nadu and outside the State have the standards as prescribed under rule 6 of the New Health Insurance Scheme Rules, 2012. The Committee will also monitor the quality of treatment for the Employees of Government Departments and Other Organisations covered under this Scheme periodically.

5. In addition, the standards prescribed in the New Health Insurance Scheme Rules, 2012 will also be applicable to the hospitals included in Annexure-III of Government Order second cited. Their inclusion in Annexure -III is only due to their pre-existing empanelment in Tamil Nadu Government Employees Health Fund Scheme and hence further accreditationunder Tamil Nadu Government Employees New Health Insurance Scheme during 2012-2016 will be subject only to their fulfilling the minimum qualification prescribed in the New Health Insurance Scheme Rules, 2012. Hence, these hospitals have also to be inspected and verified that they fulfill thecondition. Hence, the Accreditation Committee shall also review whether these hospitals have the standards as prescribed under rule 6 of the New Health Insurance Scheme Rules, 2012.

6. The Committee shall submit the report to the Government with specific recommendations for accreditation of hospitals for the implementationof New Health Insurance Scheme, 2012 within three months from the date of formation of the committee.

7. The Accreditation Committee shall be declared as a first class committee and entitled for Travelling Allowance and Daily Allowance as per the rules in force.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**K.SHANMUGAM**
PRINCIPAL SECRETARY TO GOVERNMENT

## GOVERNMENT OF TAMILNADU

**ABSTRACT**

Public Services - Equivalence of Degree for the purpose of appointment in Public Servicdes -35th Equivalence Committee meeting Resolution - Orders - Issued.

**Higher Education (H1) Department**

G.O.(1D) No.268 Dated 20.09.2012

Read:

The Secretary, Tamil Nadu Public Service Commission D.O.Letter No.3334/RND-F1/2012, dated 07.09.2012.

**ORDER :-**

In the D.O.Letter read above, the Secretary, Tamil Nadu Public Service Commission has forwarded the following resolutions passed by the Equivalence Committee's 35th meeting held on 06.09.2012, after examining the requests of the Universities and other Educational institutions for recognition of the course offered by them for the purpose of appointment in Public Services:-

**Resolution No.2:**

Public Services - Educational qualifications considering M.A applied Psychology counseling & Guidance awarded by Avinashilingam Institute for Home Science & Higher Education for Women (Deemed University) Coimbatore, and M.Sc., applied Psychology awarded by University of Madras are equivalent

to P.G. Degree in Psychology for appointment by Direct recruitment to the post of Assistant Professor Psychology Cum Clinical Psychologist in Tamil Nadu Medical Services.

**Resolution of the Equivalence Commitee:-**

Recommended.

**Resolution No.3:**

Public Services - Educational qualifications considering M.A. Applied Economics (Five Years Integrated Course) awarded by Annamalai University as equivalent to M.A., (Economics) for the purpose of employment in Public Service.

**Resolution of the Equivalence Commitee:-**

Recommended.

**Resolution No.4:**

Public Services - B.Sc., Plant Biology and Plant Biotechnology awarded by Bharathiar University as equivalent to B.Sc., Botany - for the purpose of employment.

**Resolution of the Equivalence Commitee:-**

Recommended.

**Resolution No.5:**

Public Services - B.A History and Tourism degree awarded by Bharathiar University as equivalent to B.A., History - for the purpose of employment in public services.

**Resolution of the Equivalence Commitee:-**

Recommended.

**Resolution No.6:**

Public Services - Educational qualifications - B.Lit., degree in Tamil of Annamalai University, and Bharathiar University as equivalent to B.Lit., in Tamil of Madras University.

**Resolution of the Equivalence Commitee:-**

Recommended.

**Resolution No.12:**

Public Services - Educational qualifications consideration of M.A., Applied Psychology and M.Sc., Applied Psychology awarded by Annamalai University as equivalent to M.A (Psychology) for the purpose of employment.

**Resolution of the Equivalence Commitee:-**

Recommended.

2. The Government after careful consideration, have decided to accept the above recommendation of the Equivalence Committee and accordingly directed as follows:-

(1) The M.A Applied Psychology counseling & Guidance awarded by Avinashilingam Institute for Home Science & Higher Education for Women (Deemed University) Coimbatore, and M.Sc., Applied Psychology awarded by University of Madras be considered as equivalent to P.G. Degree in Psychology for appointment by Direct recruitment to the post of Assistant Professor Psychology Cum Clinical Psychologist in Tamil Nadu Medical Services.

(2) The M.A. Applied Economics (Five Years Integrated Course) awarded by Annamalai University be considered as equivalent to M.A (Economics) for the purpose of employment in Public Service.

(3) The B.Sc., Plant Biology and Plant Bio-Technology awarded by Bharathiar University be considered as equivalent to B.Sc., Botany - for the purpose of employment.

(4) The B.A History and Tourism degree awarded by Bharathiar University be considered as equivalent to B.A History - for the purpose of employment in public services.

(5) The B.Lit., degree in Tamil of Annamalai University, and Bharathiar University be considered

as equivalent to B.Lit., in Tamil of Madras University.

(6) The M.A., Applied Psychology and M.Sc., Applied Psychology awarded by Annamalai University be considered as equivalent to M.A. (Psychology) for the purpose of employment.

3. This order issues with the concurrence of Personnel and Administrative Reforms Department vide it's U.O.No.36835/M2/2012, dated 18.09.2012.

**(By Order of the Governor)**

**T.S.SRIDHAR**
Additional Chief Secretary to Government.

**Finance (Pay Cell) Department**
Fort St. George,
Chennai - 600 009.

**Letter No.48211/ Pay Cell / 2012-1, dated 09.10.2012**

From
Thiru.S.Krishnan, I.A.S.,
Secretary to Government (Expenditure).

Sir,

Sub : Tamil Nadu Revised Scales of Pay Rules, 2009- Fixation of pay of employees on promotion to higher post carrying identical scales of pay and grade pay-clarification - Reg.

Ref : From the Legislative Assembly Secretariat U.O.Note. No.10001/OP/2012-1, dated 27.6.2012.

In the refernece cited, a clarification has been sought for on the mode of fixation of pay in respect of employees promoted to higher posts on identical scales of pay i.e. in the same pay band and Grade pay in the revised pay structure on or after 1.1.2006.

2. In this connection, it may be stated that as per rule 10 of the Tamil Nadu Revised Scales of Pay Rules, 2009, employees on promotion to higher posts are entitled for the benefit of one increment benefit equal to 3% of the sum of the pay in the pay band and the existing grade pay computed and rounded off to the next multiple of 10 and the same will be added to the existing pay in the pay band. On the same analogy, it is clarified that the employees on promotion to higher posts on identical scales of pay i.e. in the same pay band and same Grade pay in the revised pay structure are also entitled for the benefit of one increment equal to 3% of Basic Pay (Pay+Grade pay) in the lower post.

Yours faithfully,
**Principal Secretary to Government.**
**(Expentiture).**

## தமிழ்நாடு அரசு

### சுருக்கம்

பள்ளிக் கல்வி - பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவிகளின் பாதுகாப்பு - பள்ளி வளாகம், அதன் சுற்றுப்புறம் மற்றும் வாகனங்கள் பராமரித்தல் - பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வி (எக்ஸ்.2) துறை**

அரசாணை (நிலை) எண் 270

நாள் 22.10.2012
திருவள்ளுவர் ஆண்டு 2043
ஐப்பசி 6

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.131, பள்ளிக் கல்வித் துறை, நாள் : 10.8.2006.
2. மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் அறிக்கை நாள். 25.7.2012.
3. அரசு தலைமை வழக்கறிஞரின் கடித எண்.20272/2012, நாள் : 27.7.2012.
4. மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் கடிதம் ந.க.எண்.6979/அ4/2012 நாள்: 28.7.2012.

ஆணை :

மேலே முதலாவ்தாக படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாட்டில் உள்ள அரசு, அரசு உதவிபெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் குறைந்தபட்ச உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவது குறித்து அரசாணைகள் வெளியிடப்பட்டு நடைமுறையில் இருந்து வருகின்றது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் கடிதத்தில், பள்ளிகளில், பள்ளி வாகனங்களில் ஏற்படும் விபத்துக்கள் மற்றும் அசம்பாவித சம்பவங்கள் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு, பின்பற்றப்பட வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகளை அனுப்பி, அனைத்து பள்ளிகளிலும் செயலாக்கம் செய்ய வேண்டியது அவசியம் எனத்தெரிவித்து அனைத்து பள்ளிகளும் பின்பற்ற உரிய ஆணை வெளியிடுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் வரைவு சுற்றறிக்கையை அரசு ஏற்று தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு, அரசு உதவிபெறும் மற்றும் தனியார் பள்ளிகளும் மாணவ/மாணவியர்களின் நலன் கருதி கீழ்க்காணும் நடைமுறைகளை தவறாமல் பின்பற்ற வேண்டும் என அரசு ஆணையிடுகிறது.

**(1) கட்டிடங்கள்**

i) பள்ளிகளில் கட்டிட வரைபட அனுமதி உரிய அலுவலரிடம் பெற்ற பின்னரே கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும்.

ii) பள்ளி வளாகத்திற்குள் அமைந்துள்ள திறந்த வெளிக் கிணறு, கீழ்நிலை மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், செப்டிங் டாங்க் ஆகியன நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு பாதுகாப்பாக மூடப்பட்டிருக்க வேண்டும்.

iii) பள்ளிக் கட்டிடத்தின் மேற்கூரைக்குச் (Terrace) செல்லும் வழி மூடப்பட்டு பூட்டப்பட்டிருக்க வேண்டும்.

iv) பள்ளி வளாகத்திற்குள் சாதாரண கதவுகள் தான் அமைக்க வேண்டும். இழுவைக் கதவுகள், உருளைக் கதவுகள் ஆகியவை கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டும்.

v) மாடிப்பகுதியில் பாதுகாப்பான தடுப்புச் சுவர் போதிய உயரத்திற்கு ஏற்படுத்த வேண்டும்.

vi) பள்ளி ஆய்வகத்தில் வெப்பம் வெளியேற வெப்பப்போக்கி (Exhaust fan) அமைக்க வேண்டும்.

vii) மாடிபடிக்கட்டுகளில் உள்ள கைப்பிடி அமைப்பின் மீது மாணவர்கள் சறுக்கி விளையாடுவதை தவிர்க்க, உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வதுடன் வகுப்பிற்குள்ளும், வெளியேயும் ஆசிரியர் கண்காணிப்புப் பணியில் இருத்தல் வேண்டும்.

**(2) குடிநீர்**

i) பாதுகாப்பான குடிநீர்தரப்படவேண்டும், குடிநீர் சேமித்து வைக்கும் தொட்டிகள் தூய்மையான முறையில் இருத்தல் வேண்டும். எப்பொழுது யாரால் எப்படி சுத்தம் செய்யப்பட்டது என்பதற்கான பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும். குடிநீர் உரிய முறையில் சுத்திகரிக்கப்பட்டு பாதுகாப்பான முறையில் விநியோகிக்கப்பட வேண்டும்.

ii) மேலும் 20 மாணவர்களுக்கு 1 குழாய் என்ற வீதத்தில் குடிநீர் குழாய்கள் ஏற்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

iii) பாத்திரங்கள் கழுவ, கை, கால்கள் கழுவ 20 மாணவர்களுக்கு 1 குழாய் என்ற அளவில் தண்ணீர் வசதி ஏற்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். தரை வழுக்கல் இன்றி அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும்.

**(3) கழிப்பிடங்கள்**

i) 20 மாணவர்களுக்கு 1 சிறுநீர் கழிப்பறை மற்றும் 50 மாணவர்களுக்கு 1 மலக் கழிப்பறை என்ற அளவில், போதிய இடைவெளியில் கழிப்பறைகள் காற்றோட்டம் / போதிய வெளிச்சத்துடன் பாதுகாப்புடன் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இவை அன்றாடம் தூய்மையாகப் பேணப்பட வேண்டும். கிருமி நாசினி தெளித்து ஆரோக்கியமான முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். குறிப்பாக வகுப்பறையை ஒட்டியே கடைசியாக அமைக்கப்பட வேண்டும். தனியே மைதானத்திலோ அல்லது ஆள்நடமாட்டம் இல்லாத பகுதியிலோ அமைதல் கூடாது. கட்டிட உறுதி / உரிமச் சான்றுகள் கழிப்பறைகளுக்கும் அவசியம்.

ii) கழிப்பறைகள் தண்ணீர் குழாய் வசதியுடன் கூடியதாக இருத்தல் வேண்டும்.

iii) தண்ணீர்த் தொட்டிகள் மாணாக்கர்களால் திறக்க முடியாதபடி மூடப்பட்டு இருக்க வேண்டும். மழலையர் மற்றும் தொடக்கநிலை வகுப்பு குழந்தைகள், நடத்தாட்டிகள் உதவியுடன் கழிவறைக்குச் சென்று வர ஏற்பாடுகள் செய்துதர வேண்டும்.

**(4) மின்சாரம்**

i) அனைத்து இடங்களிலும் மின்சார இணைப்புகள், மின் சாவி (Switches) போன்றவை பாதுகாப்பாக அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

ii) பள்ளிகளில் உள்ள மின்சார சாதனங்கள் அவ்வப்போது பழுது நீக்கி அவற்றின் பாதுகாப்புத் தன்மை குறித்து அங்கீகரிக்கப்பட்ட மின் அலுவலரின் (Licenced Electrical Inspectors) சான்று பெற்றிருத்தல் வேண்டும்.

iii) உடைந்த / சிதிலமடைந்த கட்டடங்கள், சுவர்கள், அறுந்த / துண்டித்த நிலையில் மின்சார ஒயர்கள் இருப்பின் அவைகள் உடனடியாக நீக்கம் செய்யப்பட வேண்டும். அதுகாறும் மாணவர்கள் / பணியாளர்கள் அவ்விடம் செல்லாமல் இருக்க பாதுகாப்பான முறையில் உரிய தடுப்பு அமைப்பு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

**(5) இருக்கைகள்**

i) மாணவர்கள் அமரும் பெஞ்சுகள் பின்புறம் முதுகு சாய்வகம் உள்ள முறையில் அமைக்கப்படல் வேண்டும்.

ii) பெஞ்ச், டெஸ்க் ஆகியவற்றில் கூரிய முனைகள் இல்லாத வண்ணம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். எக்காரணங்கொண்டும் அமர்ந்தால் ஆடக்கூடிய மற்றும் உடைந்த நிலையிலான இருக்கைகள் பயன்படுத்தக்கூடாது. அவை உடனடியாக நீக்கம் செய்யப்பட வேண்டும்.

(6) முதலுதவி

i) பள்ளிகளில் ஆபத்துக் காலங்களில் முதலுதவி செய்ய ஏதுவாக முதலுதவி பெட்டிகள் அனைத்து மருத்துவ பொருட்களுடன் அமைக்கப்படல் வேண்டும். மேலும் காலாவதியான மருந்துகள் ஏதும் சேமிக்கப்படவில்லை என்பதை உறுதி செய்ய வேண்டும்.

ii) பள்ளி மாணவர்களின் இரத்தவகை, நீண்ட நாள் நோய் சார்ந்த குறிப்புகள், மருந்து ஒவ்வாமை மற்றும் குடும்ப மருத்துவர் போன்ற உடல்நலம் சார்ந்த பதிவுகள் பேணப்பட வேண்டும்.

iii) ஓட்டுனர்/ உதவியாளர்களுக்கு முதலுதவிப் பயிற்சி அளித்திடவேண்டும்.

(7) மாணவர்கள் கூடும் நேரங்களில்:

ஆய்வகம்:

i) ஆய்வகத்தில் எரிவாயு உருளைகள் (Gas Cylinders) பயன்படுத்தும் போது மாணவர்கள் அவற்றினைக் கையாளாத வகையில் மிகவும் பாதுகாப்பாக காற்றோட்டமுள்ள தனி அறையில் வைத்துப் பராமரிக்கப்பட வேண்டும். அவைகளை ஆய்வகத்தில் சேமித்து வைத்தல் கூடாது.

வளாகம் / வகுப்பறை:

i) பள்ளிகளில் விளையாட்டு மைதானங்கள் மற்றும் காலி இடங்களில் கூர்மையான பொருட்கள் துருப்பிடித்த ஆணிகள், கம்பு போன்றவைகள் அகற்றப்பட்டு மாணவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும். விளையாட்டுக் கருவிகள் உடைந்த நிலையில் ஒட்டப்பட்டதாகவும் துருப்பிடித்தும் திருகு கழன்ற நிலையில், உயவு (Lubrication) இன்றி இருப்பின் உடனுக்குடன் மாற்றப்படவேண்டும். விளையாட்டு வகுப்பு துவக்கத்தில் உடற்கல்வி ஆசிரியர் விளையாட்டு கருவிகளை சரியாக உள்ளதா? என சரிபார்த்தப் பிறகே விளையாட அனுமதிக்க வேண்டும். எக்காரணத்தினை முன்னிட்டும் வில் விளையாட்டு ஆசிரியர் துணையின்றி விளையாட கூடாது. வீர விளையாட்டுகள் பள்ளி நிலையில் அவசியம் இல்லை. பாடத்திட்டத்தில் வரையறுக்கப்பட்ட விளையாட்டுகளை விளையாடும் சமயம் தகுந்த பாதுகாப்பு / முதலுதவி வசதியுடன் மாணவர்கள் குறுக்கும் நெடுக்குமாகப் போகாதபடி எச்சரிக்கையுடன் பார்த்து கவனமாக விளையாட வேண்டும்.

ii) உணவு இடைவேளையின் போது குழந்தைகள் ஆரோக்கியமான முறையில் அமர்ந்து மதிய உணவு சாப்பிடுகிறார்களா என்பதை மேற்பார்வையிட வேண்டும். அதற்கான வசதி ஏற்படுத்தி இருக்க வேண்டும். வகுப்பில் உள்ள வருகை புரிந்த மாணவர்கள் குழந்தைகள் அனைவரும் பள்ளியை விட்டுச் சென்றுள்ளனர் என்பதனை அந்தந்த வகுப்பு ஆசிரியர்கள் (சிறு இடைவேளை, உணவு இடைவேளை, உடற்கல்வி வகுப்பு பள்ளி நேரம் முடிந்த பிறகும்) உறுதி செய்த பிறகே பள்ளியைவிட்டுச் செல்ல வேண்டும்.

iii) பள்ளி முடிந்தவுடன் மாணவர்களிடையே ஏற்படும் நெரிசலைத் தவிர்க்க மாடிப்படிகள், நுழைவாயில் ஆகிய பகுதிகளில் மாணவர்களை ஆசிரியர்கள் ஒழுங்குப்படுத்த வேண்டும். மாணவர்கள் வெளியேறும் பகுதி போக்குவரத்துச் சாலையாக இருப்பின் போக்குவரத்தினை ஒழுங்குப்படுத்தி மாணவர்களுக்கு பாதுகாப்பு ஏற்படுத்த தக்க முன்னேற்பாடுகள் செய்திட வேண்டும்.

iv) சிறுநீர் இடைவேளை மற்றும் உணவு இடைவேளை நேரங்களில் மேல்தளங்களில் மாணவர்களை ஆசிரியர்கள் ஒழுங்குபடுத்த வேண்டும்.

v) மாணவர்கள் / குழந்தைகள் தங்களது காலணிகளை வகுப்பில் ஓர் ஓரமாக கழட்டி வைத்து விட்டு மீளவும் அணிந்து கொள்ளும் சமயம் காலணிக்குள் ஏதேனும் விஷப்பூச்சிகள் சென்று தங்கி இருந்திருப்பின் அக்குழந்தையின் உயிருக்கு பாதிப்பு ஏற்படும் என்பதால் தக்க பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திட வேண்டும். காலணிகளை முடிந்தவரை கழட்டாமல் இருப்பது நலம்.

vi) பள்ளிகளில் மாணவர்கள் எண்ணிக்கை 1500க்கு மேல் இருப்பின் முறையான முழுநேர மருத்துவ சேவை வசதிகள் ஏற்படுத்த வேண்டும்.

**(8) வாகனம்**

வாகனங்கள் இயக்குவது பள்ளி நிர்வாகங்களின் சொந்த பொறுப்பாகும். மாணவர் / மாணவியர் பயன்படுத்தும் வாகனங்கள் தொடர்பாக 31.08.2012 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் உள்துறையால் வெளியிடப்பட்டுள்ள (வரைவு விதிகள்) "தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் (பள்ளி வாகனங்கள் முறைப்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல்) சிறப்பு விதிகள் 2012"-ல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளை அனைத்துப் பள்ளிகளும் உரிய அரசாணை வெளியிடப்பட்ட பின்னர் அவ்வரசாணை பினபற்றப்பட வேண்டும்.

**(9) அன்னையர் பள்ளிப் பார்வைக்குழு**

அரசு அதிகாரிகள் அல்லாது தத்தம் குழந்தைகள் படிக்கும் பள்ளிகளில் என்னென்ன வசதிகள் உள்ளன, என்னென்ன வசதிக் குறைபாடுகள் உள்ளன, முறையான பராமரிப்புகள் செய்யப்படுகின்றனவா என்பதை பள்ளியின் நுகர்வோரான பெற்றோரே நேரில் சென்று சமூக ஆய்வு (Community Inspection) என்ற வகையில் பார்த்து குறைபாடுகளை நிர்வாகத்தின் கவனத்துக்கு கொண்டு செல்வது அதிகபட்ச நலம் பயக்கும் எனக் கருதப்படுகிறது. இவ்வகையில்,

i) மாணவ / மாணவியரின் தாய்மார்கள், வாரத்தில் ஒரு நாள், ஐந்து பேர் கொண்ட குழுவாக சென்று பள்ளியில் உள்ள அனைத்து வசதிகளையும் பள்ளி வேலை நாட்களில் பார்வையிட அனுமதித்தல் வேண்டும். இவர்களின் பார்வைக் குறிப்புகள் ஒரு பார்வை புத்தகத்தில் தொடர்ந்து பதிவு செய்யப்பட வேண்டும். தாய்மார்களைத் தேர்வு செய்யும் போது கீழ்க்கண்டவாறு பல்வேறு வகுப்புகளில் இருந்தும் பிரதிநிதிகள் உள்ளடக்கியவாறு அமைதல் வேண்டும்.

| | வகுப்புகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | மழலையர் வகுப்பு | 1 நபர் |
| 2. | 1ம் வகுப்பு முதல் 3ம் வகுப்பு வரை | 1 நபர் |
| 3. | 4ம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை | 1 நபர் |
| 4. | 6ம் வகுப்பு முதல் 10ம் வகுப்பு வரை | 1 நபர் |
| 5. | 11ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை | 1 நபர் |

i) ஒரு முறை பார்வையிட்ட குழுவைச் சேர்ந்தவர்களே திரும்பவும் பார்வையிடும் வண்ணம் இருத்தல் கூடாது. பிரதிநிதிகள் குலுக்கல் முறையில் (Random Method) தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இதில் பாரபட்சம் ஏதும் இருத்தல் கூடாது.

ii) பள்ளியில் உள்ள கழிப்பறை, குடிநீர் வசதி, ஆய்வக வசதி, கணினி வசதி, நூலக வசதி, விளையாட்டு வசதிகள், வகுப்பு அறை வசதிகள் போன்ற எல்லா வசதிகள் சார்ந்து பள்ளியின் அனைத்து பகுதிகளையும் பார்வையிட்டு இவர்கள் தமது பார்வைக் குறிப்பைப் பதிவு செய்தல் வேண்டும். இக்குழுவின் பார்வைக் குறிப்புகளை ஒவ்வொரு வாரமும் பார்த்து குறைபாடுகள் உள்ள இடங்களில் அதனை சரி செய்ய தாளாளர் / செயலர் தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டும். தொடர் நடவடிக்கைகள் குறித்த குறிப்பு எழுதப்பட்டு அதில் தாளாளர் / செயலர் ஒப்பமிடப்பட வேண்டும். பார்வையின் போது முதல்வரோ அல்லது அவரின் பிரதிநிதியோ உடனிருக்கலாம்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**த.சபிதா,**
அரசு முதன்மைச் செயலாளர்.

**Personnel and Administrative**
**Reforms (A) Department,**
Secretariat, Chennai-600 009.

**Letter (Ms) No. 151/A1/2012, Dated : 25.10.2012.**

From

Thiru.Debendranath Sarangi, I.A.S.,
Chief Secretary to Government.

To

All Additional Chief Secretaries / Principal Secretaries /Secretaries to Government, Chennai - 600 009.
All Departments of Secretariat, Chennai - 600 009.
All Head of the Departments including District Collectors, District Judges and Chief Judicial Magistrates.
The Director General of Police, State of Tamil Nadu, Chennai-4.
The Advocate General of Tamil Nadu, High Court, Chennai-104.
The Registrar General, High Court, Chennai-104.
The Registrar, Madurai Bench of Madras High Court, Madurai.
The Government Pleader, High Court, Chennai-104.
Public Prosecutor, High Court, Chennai-104.
The Secretary, Tamil Nadu Public Service Commission, Chennai-3.

Sir,

Sub : Guidelines - Entry of Government Officials in the Court premises - Issued.

நிறுவனம், கழகம், அமைப்பு அல்லது உள்ளாட்சி மன்றத்தில் பணிபுரியுமாறு அரசால் அமர்த்தப்பட்டுள்ள அரசுப் பணியாளர் மாநிலத் தொகுதியில்லாத ஏனைய வாயில்களிலிருந்து அவர் சம்பளம் வாங்கினாலும் இந்த விதிகளின் பயன் நோக்கில் அரசின் கீழ் பணிபுரியும் அரசுப் பணியாளராகவே கருதப்பட வேண்டும்.

(4) "துறைத் தலைவர்" எனும் சொற்றொடரானது அடிப்படை விதிகளின் பயன்நோக்கில் அவர் துறைத்தலைவர் என்று குறிப்பிடப்பட்டாலும், அல்லது அங்ஙனம் குறிப்பிடப்படா விட்டாலும் அரசுக்கு நேரடி சார்நிலையிலமைந்த துறையின் முதன்மை அலுவலர் என்று பொருள்படும்.

(5) அரசுப் பணியாளர் தொடர்பில் "குடும்ப உறுப்பினர்கள்" என்பதில் பின்வருவோர் அடங்குவார்கள்.

(i) அரசுப் பணியாளரோடு வசித்தாலும் அல்லது வசிக்காவிட்டாலும் அரசுப் பணியாளரது நேர்வுக்கேற்ப மனைவி அல்லது கணவன் அடங்குவார். ஆனால் தகுதிவாய்ந்ததொரு நீதிமன்றத்தின் தீர்ப்பாணை அல்லது ஆணையால், அரசுப் பணியாளரிடமிருந்து பிரிக்கப்பட்ட நேர்வுக்கேற்ப மனைவி அல்லது கணவன் இதில் அடங்கமாட்டார்.

(ii) அரசுப் பணியாளரை முழுவதுமாகச் சார்ந்தவாறுள்ள அவரது மகன் அல்லது மகள் அல்லது வளர்ப்பு மகன் அல்லது வளர்ப்பு மகள் அடங்குவார்கள். ஆனால் அரசுப் பணியாளரை எவ்வகையிலும் சார்ந்திராத அல்லது ஏதேனும் ஒரு சட்டத்தால் அல்லது சட்டத்தின் கீழ் அரசுப் பணியாளரின் பொறுப்பிலிருந்து விடுபட்ட குழந்தை அல்லது வளர்ப்புக் குழந்தை இதில் அடங்காது.

(iii) அரசுப் பணியாளருக்கு அல்லது அரசுப் பணியாளரது மனைவி அல்லது கணவனுக்கு இரத்த உறவு வழி அல்லது திருமண உறவு வழி மற்றும் அரசுப் பணியாளரையே முற்றிலுமாகச் சார்ந்துள்ள உறவினர் பிறரும் இதில் அடங்குவர்.

(6) "அரசுப் பணியாளர்" தொடர்பில் நெருங்கிய உறவினர் என்பவர்கள் - தந்தை, மாற்றாம் தந்தை (தாயின் கணவர்), தாய், மாற்றாம் தாய் (தந்தையின் மனைவி) கணவன், மனைவி, மகன், தத்தெடுக்கப்பட்ட மகன், மகள், தத்தெடுக்கப்பட்ட மகள், சகோதரன், மாற்றாம் சகோதரன், சகோதரி, மாற்றாம் சகோதரி, மனைவியின் தந்தை, மனைவியின் தாய், கணவனின் தந்தை, கணவனின் தாய், சகோதரனின் மனைவி, சகோதரியின் கணவன், மகளின் கணவன் மற்றும் மகனின் மனைவி.

**விதி 3. பரிசல்கள்**

(1) இவ்விதிகளில் மாற்று ஏற்பாடு செய்யப்பட்டாலன்றி, அரசின் முன் ஒப்பளிப்பு இல்லாமல் அரசுப் பணியாளர் எவரும் ரூ.5000/-க்கு மேற்பட்ட விலைமதிப்புள்ள எந்தப் பரிசையும் எவரிடமிருந்தேனும் பெற்றுக் கொள்வதோ அல்லது தன்னுடைய வாழ்க்கைத் துணைவர் அல்லது தன்னுடைய குடும்பத்தைச் சார்ந்த பிற உறுப்பினர் எவரும் பெற்றுக் கொள்ள அனுமதிப்பதோ கூடாது.

* இருப்பினும் திருமணம், ஆண்டு நிறைவு விழா, ஈமச்சடங்கு மற்றும் சமய விழாக்கள் போன்ற சிறப்பு நேர்வுகளில் பரிசுகளைக் கொடுப்பதோஅல்லது பெறுவதோ நடப்பிலுள்ள மதம் மற்றும் சமூக வழக்கங்களை ஒட்டியதாக இருப்பின் ரூ.5000/-க்கு மேற்படா விலை மதிப்புள்ள பரிசுகளைத் தன்னுடைய உற்ற நண்பரிடமிருந்து அல்லது நெருங்கிய உறவினரிடமிருந்து அரசு அலுவலர் பெறலாம் மற்றும் அப்பரிசினைப் பெற்றுக் கொண்ட நாளிலிருந்து ஒரு திங்களுக்குள் அரசுப் பணியாளர் அது குறித்த விபரத்தினை அரசுக்கு அனுப்ப வேண்டும்.

(அரசாணை (நிலை) எண் 225 ப (ம) நி.சீ. (எ) துறை, நாள் 11.09.1998)

* மேலும் வரம்புரையாக, தொகுதி B, C & D அரசு அலுவலர்களைப் பொறுத்து, துணைத் தலைவர்களின் முன் அனுமதியுடன் வெளிநாடு செல்லும் போதெல்லாம், தங்களின் தனிப்பட்ட நண்பர்கள் அல்லது அவர்தம் நெருங்கிய உறவினர்களிடமிருந்து பயணம், தங்கல் மற்றும் பிற தொடர்பான செலவுகளைப் பரிசில்களைப் பெறுவதற்கு இவ்விதியில் உள்ளது எதுவும் பொருந்தாது.

---

* அரசாணை எண்.6 ப(ம) நி.சீ.துறை, நாள் :21.01.2008

* அரசாணை எண்.76 ப(ம) நி.சீ.துறை, நாள் : 20.03.2007

**விளக்கம் : 1**

இந்தத் துணை விதியின் பயன் நோக்கில் அடிக்கல் நாட்டுதல், அல்லது ஒரு பொதுக்கட்டட திறப்புவிழா அல்லது ஏனோம் விழா நிகழ்ச்சிகளில் அரசுப் பணியாளர் ஒருவருக்கு அளிக்கப்படும் ஏதேனும் கொத்துக் கரண்டி, சாவி அல்லது அது போன்ற பொருட்கள் பரிசிலாகக் கருதப்படும்.

**விளக்கம் : 2**

அரசுப் பணியாளரிடத்தில் எத்தகைய அலுவல் முறைத் தொடர்பும் அற்ற நெருங்கிய உறவினர் அல்லது உற்ற நண்பர் அல்லாத வேறு யாரேனும் ஒருவரால் இலவசப் போக்குவரத்து, இலவச உணவு, இலவச உறையுள் அல்லது பிற வசதிகள் அல்லது வேறு ஏதேனும் பணத்தொடர்பான பலன்கள் அளிக்கப்படும்போது அவை பரிசு என்பதில் அடங்குவனவாகும்.

குறிப்பு :- 1 தற்செயலாக அளிக்கப்படும் உணவு, போக்குவரத்து வசதி அல்லது பிற சமூக விருந்தோம்பல் பரிசிலாகக் கருதப்படமாட்டாது.

குறிப்பு : 2 - அரசு பணியாளர் ஒருவர் தன்னோடு அலுவல் முறையில் தொடர்பு கொண்டுள்ள எவரேனும் ஒரு தனிப்பட்டவரிடமிருந்து அல்லது தொழில் அல்லது வணிக நிறுவனங்கள், அமைப்புகள் போன்றவற்றிலிருந்து மட்டுமீறிய விருந்தோம்பல் அல்லது அடிக்கடி நிகழ்வுறும் விருந்தோம்பலை ஏற்றுக் கொள்ளுதலைத் தவிர்க்க வேண்டும்.

(2) எந்த பரிசில் குறித்தும் அரசு அனுமதியின்றி ஏற்றுக் கொள்ளப்படக்கூடியதா எனக் கேள்வியொன்று எழுமானால் அல்லது தனக்கு அளிக்கப்படவிருக்கும் பரிசிலானது அரசு அனுமதி இல்லாமல் ஏற்றுக் கொள்ளப்படக்கூடியதா என அரசுப் பணியாளர் ஐயம் கொண்டால் அது குறித்து அத்தகைய அரசுப் பணியாளரால் அரசுக்கு எழுதப்பட வேண்டும். மேலும் அதன் மீது எடுக்கப்படும் அரசின் முடிவே இறுதியானதாகும்.

(3) தனக்குப் பரிசிலாக அளிக்கக் கருதப்படாத ஓர் உருவப்படம், மார்பளவு உருவச்சிலை, அல்லது சிலைக்காக வேண்டி, ஏதேனும் ஒரு பொது அமைப்பின் வேண்டுகோளுக்கிணங்க, அரசுப் பணியாளர் எவரேனும் ஒரு மாதிரியாக அமர்வதை இவ்விதியில் உள்ள எதுவும் தடுப்பதாகக் கருதப்படக்கூடாது.

(4) அரசுப் பணியாளரிடம் ஆதரவு மனப்பான்மையையும், ஆதாய நிலைப்பாட்டையும் ஏற்படுத்துவதாகக் கருதக்கூடிய அல்லது தனி நபருக்கு அல்லது நிறுவனம் அல்லது நிறுவனத்திற்கு கடப்பாடு காரணமாகச் சலுகை காட்ட வேண்டிய நிலையை ஏற்படுத்தக்கூடிய அல்லது வெளிப்படையாகத் தெரியாத ஆனாலும் ஊழல் எனக் கருதக்கூடிய நிலையினைத் தோற்றுவிக்கும் வகையில் விலை உயர்ந்த பழைய ஊர்தி, அறைகலன் மற்றும் வீட்டுக்குத் தேவைப்படும் மின்கருவிகளைச் சலுகை விலையில் வாங்குவதற்காக அரசுப் பணியாளர் எவரும் வணிகம் அல்லது தொழிலில் ஈடுபட்டுள்ள எந்த ஒரு தனி நபருடன் அல்லது நிறுவனத்துடன் வணிக நடவடிக்கை எதையும் வைத்துக் கொள்ளக்கூடாது.

(5) துணை விதிகள் (2), (3) மற்றும் (4)-இல் உள்ளவை எப்படியிருந்த போதிலும் இந்தியப் பேராளர் குழுவில் உறுப்பினராகவோ வேறு வகையிலோ உள்ள அரசுப் பணியாளர் ஒருவர், ஒரு சிறப்பு நிகழ்ச்சியின்போது ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாத விலைமதிப்புள்ள பரிசிலை அயல்நாட்டிலுள்ள உயர் பதவியாளரிடமிருந்து பெற்று தம்மிடம் வைத்துக் கொள்ளலாம். மற்ற அனைத்து நேர்வுகளிலும், இப்பரிசில்களைப் பெற்றுக் கொள்ளுதலும், வைத்துக் கொள்ளுதலும் குறித்து இது தொடர்பில் அரசால் அவ்வப்போது வெளியிடப்படும் அறிவுறுத்தல்களால் முறைப்படுத்தப்படும்.

(6) அரசுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ள அல்லது அரசுப் பணியாளர் ஒருவருடன் அலுவல்முறை நடவடிக்கைகளைக் கொண்டிருந்த அல்லது கொண்டுள்ள அல்லது கொள்ள வாய்ப்புள்ள எந்தவொரு அயல்நாட்டு நிறுவனத்திடமிருந்தும் பரிசில் எதனையும் அரசுப்பணியாளர் பெற்றுக் கொள்ளக்கூடாது. மற்ற எந்த நிறுவனத்திலிருந்தேனும் அரசுப்பணியாளர் ஒருவர் பரிசில்களைப் பெற்றுக் கொள்வது துணை விதி (4)-இல் உள்ள காப்புரைகளுக்குட்பட்டதாய் இருத்தல் வேண்டும்.

**விளக்கம்** : பழைய பொருட்களுக்குரிய இயல்பான அல்லது நடப்பிலுள்ள அங்காடி விலையில் அப்பழைய பொருள்களை எவரிடமிருந்தும் அல்லது எந்தவொரு நிறுவனம் அல்லது நிறுவனத்திடமிருந்தும் விலைக்கு வாங்கிக் கொள்ளும் வணிக நடவடிக்கையில் அரசுப் பணியாளர் ஈடுபடுவதை இத்துணை விதியிலுள்ள எதுவும் தடைசெய்யாது.

**விதி 3 (அ) வரதட்சணை**

(1) அரசுப் பணியாளர் எவரும்

(i) வரதட்சணை கொடுக்கவோ, வாங்கவோ, வரதட்சணை வாங்க அல்லது கொடுக்க உடந்தையாகவோ இருத்தல் கூடாது. அல்லது

(ii) நேர்வுக்கேற்ப மணமகள் அல்லது மணமகன் ஒருவரது பெற்றோர் அல்லது காப்பாளரிடமிருந்து நேரடியாகவோ, மறைமுகமாகவோ பரிசு / வரதட்சணை கோரக் கூடாது.

**விளக்கம் :** இவ்விதியின் பயன் நோக்கில் வரதட்சணை என்பது 1961 ஆம் ஆண்டைய வரதட்சணை தடுப்புச் சட்டத்தில் (1961-ன் மையச் சட்டம் 28/1961) எவ்வாறு பொருள் கொள்ளப்பட்டுள்ளதோ அவ்வாறே பொருள் உடையது.

(2) அரசு ஊழியர் ஒவ்வொருவரும் அவரது திருமணத்திற்குப் பின்னர் (அ) அவரது குழந்தைகளின் திருமணத்தின் போது இவ்விதிகளில் இணைப்பாகமைந்துள்ள அட்டவணை iv ல் விளம்புகை ஒன்றினை துறைத் தலைவ:ருக்கு அளித்திடல் வேண்டும். அரசு அலுவலர் திருமணம் செய்து கொள்கிறவிடத்து, அரசு அலுவலரின் கணவன் (அ) மனைவி நேர்வுக்கேற்ப மற்றும் பெற்றோர் (அ) காப்பாளர் கையொப்பமிடுதல் வேண்டும். அரசு அலுவலரின் மகள் (அ) மகன் திருமணம் செய்து கொள்கிறவிடத்து, திருமணத்திற்காக தரப்பினர் இருவரும் மற்றும் அவர்களின் பெற்றோர் (அ) காப்பாளர் அதில் அரசு அலுவலரும் உட்பட விளம்புகையில் கையொப்பமிடுதல் வேண்டும்.

**விதி 4. அரசுப் பணியாளருக்குப் பொது மக்கள் சிறப்பு செய்தல்**

அரசுப்பணியாளர் எவரும் அரசின் முன் அனுமதியின்றி பாராட்டுரை, பணி நிறைவு வாழ்த்துரை அல்லது பாராட்டுப் பட்டயச் சான்றிதழ் எதனையும், ஏற்றுக் கொள்வதோ அல்லது தன்னையோ மற்ற அரசுப் பணியாளரையோ சிறப்பிக்கும் முறையில் நடைபெறும் கூட்டத்தில் அல்லது கேளிக்கையில் கலந்து கொள்வதோ கூடாது.

இருப்பினும், இந்த விதியில் உள்ள எதுவும் கீழ்க் காண்பவற்றுக்குப் பொருந்தாது.

(i) அரசுப் பணியாளர் ஒருவர் பணி ஓய்வு அல்லது பணியிட மாறுதல் பெறுகிற நேர்வில் அல்லது அண்மையில் அரசுப் பணியிலிருந்து விலகியிருக்கிற நேர்வில் அவரைச் சிறப்பிக்கும் வகையில் நடத்தப்படுகிற தனிப்பட்டதும் இயல்பானதும் ஆடம்பரமற்றதுமான விடைதருவிழா. அல்லது

(ii) பொது அமைப்புகளால் அல்லது நிறுவனங்களால் ஏற்பாடு செய்யப்படுகின்ற எளிய, செலவற்ற நிகழ்ச்சிகளில் பங்கேற்க இசைதல். அல்லது

(iii) தான், பணியிடமாறுதல் அல்லது ஓய்வு பெற்றுச் செல்லுகின்ற காலத்தில் தன் அலுவலக அல்லது துறை அலுவலர்களடங்கிய குழு நிழற்படத்தில் இடம் பெறுதல் அல்லது அப்படத்தினை ஏற்றுக் கொள்ளுதல்.

**விதி 5. நிதி திரட்டல்**

(1) (அ) துணை விதிகள் (3) மற்றும் (4) - இல் வகை செய்யப்பட்டுள்ளவாறன்றி அரசுப் பணியாளர் எவரும், அரசு அல்லது இதன் பொருட்டு அரசால் அதிகாரம் அளிக்கப்பெற்ற அத்தகைய அதிகாரியின் முன் ஒப்பளிப்பு இல்லாமல் நன்கொடைகள் கேட்பதோ அல்லது ஏற்றுக் கொள்வதோ அல்லது நோக்கம் எத்தகையதாயிருப்பினும் அதன் பொருட்டு பணமாக அல்லது பொருளாகத் திரட்டவோ அல்லது பிறவகையில் அது தொடர்பாகத் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளவோ கூடாது.

(ஆ) இருந்தபோதிலும், ஒரு பணியாளர் சங்கம் அரசின் முன் ஒப்பளிப்புக்காக விண்ணப்பம் செய்யும் போதே அச்சங்கத்திற்கு அத்தகைய ஒப்பளிப்பு அளிக்கப்பட்டால் நிதி திரட்டும் நபர் அல்லது நபர்களை குறிப்பிட்டு தெரிவித்தல் வேண்டும்.

(2) உரிய நிறுவனத்திற்கு மானியங்கள் மூலமாகவோ அல்லது பிற வகையிலோ அரசு உதவியளிக்கும் அனைத்து நேர்வுகளிலும் தக்க ஆய்விற்குப் பிறகு அரசால் அனுமதி வழங்கப்படலாம்.

(3) கொடிநாள் நிதி திரட்டலில் அரசுப் பணியாளர்கள் தாமாகவே மனமுவந்து பங்கு கொள்ளலாம்.

(4) அரசின் அத்தகைய முன் ஒப்பளிப்பு இன்றி இந்து சமய அறக்கட்டளை ஆட்சித் துறையின் செயல் அலுவலர் ஒருவர் கோயிலைப் புதுப்பிக்கும் குழு ஒன்றின் சார்பில் அக்கோயிலின் செயல் அலுவலர் என்ற முறையில் நிதி திரட்டலாம். மேலும் அதனைத் தன் பொறுப்பிலே வைத்துக் கொள்ளலாம். இதன் பொருட்டு தனக்கு மதிப்பூதியம் ஏதேனும் தர முன் வந்தால் அதனையும் அவர் ஏற்றுக் கொள்ளலாம்.

**விதி 6. முதலீடுகள் மற்றும் கடன் கொடுக்கல், வாங்கல்**

(1) எந்த அரசுப் பணியாளரும் ஏதேனும் கடன் மூலப்பத்திரம், பங்கு முதல் அல்லது பிற முதலீட்டில் ஊக வணிக நோக்குடன் ஈடுபடுதல் கூடாது.

**விளக்கம் :** பங்கு முதல்கள், பிணையங்கள் அல்லது பிற முதலீடுகளை வழக்கமாக வாங்குதல் அல்லது விற்றல் அல்லது இரண்டையும் மேற்கொள்ளுதலானது இந்த விதியின் பொருளுக்கிணங்க ஊக வணிகத்தில் ஈடுபடுவதாகவே கருதப்படும்.

(2) எந்த அரசுப் பணியாளரும் தனது அலுவல்முறைக் கடமைகளை நிறைவேற்றுவதில் தனக்கு இக்கட்டான நிலைமையை ஏற்படுத்தும் வகையில் அல்லது செல்வாக்குக் கொள்ளத்தக்க வகையில் அமைகின்ற எத்தகைய முதலீட்டையும் செய்யவோ அல்லது தம் குடும்ப உறுப்பினர் எவரேனும் ஒருவரால் அல்லது தம் சார்பில் செயல்படும் யாரேனும் முதலீடு செய்யப்படுவதற்கோ அனுமதிக்கக்கூடாது.

(3) ஏதேனும் ஒரு நடவடிக்கையானது உள் விதி (1) அல்லது உள்விதி (2)-ல் குறிப்பிடப்பட்டவற்றுக்கு இயல்புடையதாக உள்ளதா என்பது பற்றி கேள்வி ஏதேனும் எழுமானால், அது பற்றிய அரசின் முடிவே இறுதியானதாகும்.

(4) (அ) அரசுப் பணியாளர் எவரும் வங்கித் தொழில் நடத்துவதற்கு உரியவாறு ஏற்பளிக்கப்பெற்ற ஒரு வங்கியில் அல்லது ஒரு நிறுவனத்தில் அல்லது அரசின் வரையறுக்கப்பட்ட நிறுமத்தில் நடைமுறையில் வங்கி நடவடிக்கைகளை கொண்டிருப்பதல்லாமல் தானாக அல்லது தன் குடும்ப உறுப்பினர் எவரேனும் ஒருவர் மூலமாக அல்லது தன் சார்பிலே செயல்படும் வேறொருவர் மூலமாக கீழ்க்காணும் நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடாது.

(i) தனது தல அதிகார எல்லைக்குள் அமைந்த எவரேனும் ஒருவருக்கு அல்லது ஒருவரிடமிருந்து அல்லது அலுவல்முறை செயல்பாடுகளைக் கொண்டுள்ள ஒருவரிடம் முதன்மையாளர் அல்லது முகவர் என்ற முறையில் பணம் கொடுக்கல் அல்லது வாங்கல் அல்லது வேறு வகையில், அத்தகையவரிடம் பயன்நோக்கிலான ஏதேனும் கட்டுப்பாட்டில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளல் அல்லது

(ii) யாரேனும் ஒருவருக்கு வட்டிக்குப் பணமாக அல்லது பொருளாகக் கொடுத்தல் அல்லது அவ்வாறு திரும்பப் பெறுதல்

மேலும் வரம்புரையாக, தொகுதி B, C & D யினைச் சேர்ந்த அரசு ஊழியர்கள் விதி 7, துணை விதி (5)ல் வகை செய்யப்பட்டுள்ள வகுத்தமைக்கப்பட்ட அதிகாரியின் முன் ஒப்பளிப்புடன் உறவினர் அல்லது தனிப்பட்ட நண்பர் ஒருவரிடமிருந்து அடுக்கம் (அ) கட்டி முடிக்கப்பட்ட வீடு (அ) மனை (அ) வீடு கட்டுவதற்காக ரூ.3 லட்சத்திற்கு மேற்படாத தொகையினை வட்டியின்றி பெறலாம்.

மேலும் வரம்புரையாக இந்த துணை விதியில் கண்டுள்ளது எதுவும் அரசின் முன் ஒப்பளிப்புடன் அரசு ஊழியரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைப் பொறுத்து பொருந்தாது.

**(அ.நி.எண்.39 ப.ம.நி.சீ (அ) நாள் 9.3.2010 அமல் 9.3.2010)**

ஆயினும், அரசின் முன் அனுமதியுடன் அரசுப் பணியாளர் ஒருவர் மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பானவற்றுக்கு இந்த உள் விதியிலமைந்த எதுவும் பொருந்தாது.

(அ) அரசுப் பணியாளர் எவரும் தாமோ, தன்னுடைய உறுப்பினர் அல்லது தன்பொருட்டுச் செயற்படுவர் மூலமாகவோ, அரசின் முன் ஒப்பளிப்பு இல்லாமல் அல்லது அவரது மொத்த மாத தொகைக்கு மேற்பட்ட எந்தத் தொகையையும் தனிப்பட்ட எவருக்கும் கொடுக்கவோ அவரிடமிருந்து பெறவோ கூடாது.

(அரசு ஆணை நிலை எண்.225, ப.ம.நி.சீ. துறை நாள் 11.09.1998)

வரம்புரையாக, தொகுதி B, C & D யினைச் சேர்ந்த அரசு ஊழியர்கள் விதி 7, துணை விதி (5)ல் வகை செய்யப்பட்டுள்ள வகுத்தமைக்கப்பட்ட அதிகாரியின் முன் ஒப்பளிப்புடன் எந்தவொரு தனிப்பட்ட நபரிடமிருந்து, அடுக்ககம் (அ) கட்டி முடிக்கப்பட்ட வீடு (அ) மனை (அ) வீடு கட்டுவதற்காக ரூ.3 லட்சத்திற்கு மேற்படாத தொகையினை வட்டி இன்றி பெறலாம்.

(அ.நி.எண் 39. ப..நி.சீ (A) துறை நாள் 093.2010, அமல் 9.3.2010)

(ஆ) உள்விதி (2) அல்லது உள்விதி (4)-ன் ஏற்பாடுகளில் எதனையேனும் மீறவைக்கும் தன்மையிலான பணியிடத்திற்கு நியமனம் அல்லது மாற்றம் செய்யப்படும் அரசுப்பணியாளர் அச்சூழ்நிலை குறித்து அரசுக்கு உடனடியாகத் தெரிவித்து, அதன்மீது அரசு பிறப்பிக்கும் ஆணைப்படி செயற்படவேண்டும். "இ" அல்லது "ஈ" பிரிவைச் சார்ந்த அரசுப் பணியாளர் இந்த உள்விதியில் குறிப்பிடப்பட்டவாறு உரிய துறைத்தலைவருக்குத் தெரிவிக்க வேண்டும்.

(5) தமிழ்நாடு நீதித்துறை அலுவலகப் பணித் தொகுதியைச் சார்ந்த எவரும் மாவட்ட நீதிபதியின் எழுத்து மூலமான அனுமதியைப் பெறாமல் கீழ்க்காண்பவற்றை செய்தல் கூடாது.

(i) ஏலம்விடத்தக்க ஏதேனும் உரிமைக் கோரிக்கையை அல்லது தீர்ப்பாணையைத் தன் பெயரில் மாற்றம் செய்து கொள்ளுதல். அல்லது.

(ii) தனக்குத் தனிப்பட்ட முறையில் நேரடித் தொடர்பு இல்லாத ஏதேனும் வழக்கில் தன்னைத் தொடர்புபடுத்திக் கொள்ளல்.

(6) கூட்டுறவு சங்கங்களை மேற்பார்வையிடுகின்ற அல்லது தணிக்கை செய்கின்ற அரசுப்பணியாளர்கள் நீங்கலாக மற்ற எல்லாவகை அரசுப்பணியாளர்களும் தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி (வரையறுக்கப்பெற்றது), பிற மைய கூட்டுறவு வங்கி மற்றும் நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகள் உட்பட வேளாண்வங்கி அல்லாத கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகி வைப்பீடுகள் செய்யலாம்.

(7) (அ) கூட்டுறவுச் சங்கங்களை மேற்பார்வையிடுகின்ற அல்லது தணிக்கை செய்கின்ற அரசுப் பணியாளர்கள் தங்கள் நலனுக்கெனத் தனியாகப் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகி வைப்பீடுகள் செய்யலாம்.

(ஆ) கூட்டுறவுச் சங்கங்களை மேற்பார்வையிடுகின்ற அல்லது தணிக்கை செய்கின்ற அரசுப் பணியாளர்கள் தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியில் (வரையறுக்கப் பெற்றது) அல்லது எந்தவொரு மைய கூட்டுறவு அந்நிறுவனங்களிலிருந்து பாதுகாப்பு அல்லது பிணையக் கடன்கள் பெறலாம். ஆனால் அவர்கள் அவ்வங்கிகளின் நேரடித் தணிக்கையில் அல்லது மேற்பார்வைப் பணியில் ஈடுபட்டிருக்கக் கூடாது.

(8) அரசுப் பணியாளர்கள் ஒவ்வொரு வகுப்பினரும் தமிழ்நாடு கூட்டுறவு மாநில மைய நிலவள வங்கி (வரையறுக்கப் பெற்றது)யில் வைப்பீடுகள் செய்யலாம் மற்றும் கடன் ஈட்டுறுதிப் பத்திரங்கள் வாங்கலாம். ஆனால் அந்த வங்கியில் எந்தப் பதவியையும் வகிக்கவோ அதன் மேலாண்மையில் எத்தகைய பங்கும் கொள்ளவோ கூடாது.

(9) அரசுப் பணியாளர், தன்னுடைய துறைத் தலைவரின் முன் ஒப்பளிப்புடன் நிலவள வங்கியில் அல்லது வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கத்தில் (உழவர்கள் பணிக் கூட்டுறவுச் சங்கம், வேளாண் வங்கி மற்றும் ஊரக வங்கி உட்பட) அல்லது தொடக்கக் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் உறுப்பினராகலாம். இருப்பினும் அவர் அவ்வங்கி / சங்க எல்லைக்குட்பட்ட பகுதியில் ஏற்கனவே சொந்தமாக நிலம் பெற்றிருந்து, அவ்வங்கியால் / சங்கத்தால் அளிக்கப்படும் சேவைகளைப் பயன்படுத்திக் கொள்வதில் விருப்பமுடையராகவும், அதில் எப்பதவியும் வகிக்காதவராகவும், அதன் மேலாண்மையில் பங்கு கொள்ளாதவராகவும் இருக்க வேண்டும்.

இருப்பினும் அச்சங்கத்தில் / அவ்வங்கியில் நேரிடையாக தணிக்கை, நிருவாகம் அல்லது மேற்பார்வைப் பணியில் ஈடுபட்டுள்ள அரசுப் பணியாளருக்கு அத்தகைய ஒப்பளிப்பு ஏதும் வழங்கப்படமாட்டாது.

(10) கூட்டுறவுச் சங்கங்களை மேற்பார்வையிடுகின்ற அல்லது தணிக்கை செய்கின்ற அரசுப் பணியாளர், தாம் உறுப்பினராக உள்ள நிலவள வங்கி அல்லது வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கம் (உழவர்கள் பணிக் கூட்டுறவு சங்கம், கூட்டுறவு விற்பனை சங்கம் மற்றும் ஊரக வங்கி உட்பட) அல்லது தொடக்கக் கூட்டுறவு விற்பனைச் சங்க எல்லைக்குட்பட்ட பகுதியில் நியமிக்கப்பட்டிருப்பின் அல்லது மாற்றப்பட்டிருப்பின் அவர் அவ்விவரத்தினைத் தன்னுடைய உடனடி மேலலுவலருக்கு உடனடியாகத் தெரிவிக்க வேண்டும். அம்மேலலுவலர், தமக்கு அதிகாரமிருப்பின், தொடர்புடைய அவ்வங்கி அல்லது சங்கத்தின் எல்லைக்கப்பாற்பட்ட பகுதிக்கு அந்த அரசுப் பணியாளரை மாற்ற வேண்டும். அவருக்கு அந்த அதிகாரமில்லையெனில், அந்த அதிகாரமுடைய அலுவலரின் ஆணைக்காக அதனை அனுப்ப வேண்டும்.

(11) கூட்டுறவுத் துறையில் பணிக்கமர்த்தப்பட்டவர்கள் உட்பட எல்லாவகை அரசுப் பணியாளர்களும் கூட்டுறவு வீடுகட்டும் சங்கங்களில் அல்லது வீடு அடமானச் சங்கங்களில் அல்லது கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களில் உறுப்பினர்களாகலாம்.

**விளக்கம் :** மேலே குறிப்பிடப்பட்டுள்ள கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள் என்பவை தங்கள் உறுப்பினர்களுக்காக வீடு கட்டுவதையும், தங்கள் உறுப்பினர்களுக்கு அவர்கள் வீடு கட்டிக்கொள்ள கடன் வழங்குவதையும் நோக்கமாகக் கொண்ட எல்லா வகையான கூட்டுறவுச் சங்கங்களையும் உள்ளடக்கியனவாகும்.

(12) கூறு (அ) இன் உள் விதி (7) இல் உள்ள எதுவும் எவ்வாறிருந்தபோதும், கூட்டுறவுத் துறையில் பணியில் உள்ள அரசுப் பணியாளர் கூட்டுறவுப் பண்டசாலைச் சங்கத்தில் உறுப்பினராகலாம். அதன் பயனாக அவர் அச்சங்கத்திலிருந்து மளிகைப் பொருள்களையும், மற்ற பொருள்களையும் பெறலாம். ஆனால் அவர் அச்சங்கத்தில் எப்பதவியையும் வகிக்கவோ, அச்சங்க நடவடிக்கைகளை மேலாண்மை செய்ய நியமிக்கப்பட் எந்தவொரு குழுவிலும் பணியாற்றவோ தகுதியுடையவராகார்.

(13) இவ்விதியிலுள்ள எதுவும் எப்படியிருந்தபோதிலும், அரசுப் பணியாளர்தான் உறுப்பினராக உள்ள கூட்டுறவுச் சங்கத்திலிருந்து பணம் கடன் பெறலாம். ஆனால் அக்கடன் வாங்கல் என்பது ஆள் பிணையத்தின் அடிப்படையாக இருப்பின், அப்பிணையாளர், கடன் பெறுபவரின் தகுதிநிலைக்குச் சமமானவராக அல்லது மேற்பட்டவராக இருக்க வேண்டும்.

(14) பணம் கொடுக்கல், வாங்கல் மீதான தடையானது, அளவுக்கு மீறிய குறைந்த வீதங்களில், அல்லது போதிய காரணங்களின்றி சலுகையில் அளிக்கப்படும் கடன்கள், கடன் பொறுப்பில் விற்பனை, முன்பணங்கள், பொருள்கள் வழங்கல் அல்லது குடியிருப்பு வசதியளித்தல் மற்றும் மிகவும் குறைந்த விலையில் சொத்துகளை விற்றல் ஆகியவற்றுக்குப் பொருந்தும்.

(15) பணம் கடன் கொடுக்கும் அரசுப் பணியாளர் நிறைவேற்றுநராக, நிருவாகியாக அல்லது பொறுப்பாட்சியராகத் தனக்கு ஆதாயமோ நன்மையோ இல்லாமாலிருக்கிறார் என்பது அவரை இவ்விதியின் செயற்பாட்டிலிருந்து விலக்குவதாகாது.

(16) பணம் கடன் கொடுக்கும் தொழிலை முன்னோர் தொழிலாகக் கொண்டுள்ள இந்து கூட்டுக் குடும்பமொன்றைச் சார்ந்த அரசுப் பணியாளர் ஒருவர் இத்தடையிலிருந்து விலக்களிக்கப்படுகின்றார். ஆனால், அவர் இந்தத் தொழிலில் முனைப்புடன் பங்கு கொள்ளாதவராகவம், தான் சார்ந்த இந்து கூட்டுக் குடும்பத்தினர் தொழில் நடத்துகின்ற மாவட்டத்தில் பணியாற்றாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(17) ஆசிரியர் பணியிலுள்ள அரசுப் பணியாளர் ஒருவர், மாணவரிடத்தில் அல்லது முன்னாள் மாணவரிடத்தில் அல்லது முன்னாள் மாணவரின் பெற்றோரிடத்தில் அல்லது காப்பாளரிடத்தில் அல்லது தான் பணிபுரியும் பள்ளி அல்லது கல்லூரியின் பணியாளரிடத்தில் அல்லது பணியாளர் அமைப்புடன் பணப்பயன் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதிலிருந்து தடை செய்யப்படுகின்றார்.

**விதி 7. இடம் பெயர், இடம் பெயரா மற்றும் விலை மதிப்புள்ள சொத்துக்கள்**

(1) (அ) அரசு பணியாளர் எவரும் தன்னுடைய பெயரிலோ தன்னுடைய குடும்ப உறுப்பினர் பெயரிலோ, உரிய அலுவலருக்கு அறிவிக்காமல், குத்தகை அடமானம், வாங்குதல், விற்பனை, பரிசில், பரிமாற்றம் அல்லது பிற வழிகளில் இடம் பெயராச் சொத்து எதையும் பெறவோ தீர்வு செய்யவோகூடாது.

அரசுப் பணியாளருடைய நிதி ஆதாரங்களிலிருந்து அவருடைய குடும்ப உறுப்பினர் எவராலும் பெறப்படும் ஏதேனுமொரு இடம் பெயராச் சொத்துக்கும் அத்தகையதொரு அறிவிப்பு தேவைப்படுவதாகும்.

மேலும், இந்நடவடிக்கையானது அரசுப் பணியாளருடனான, அலுவல்முறைத் தொடர்பு கொண்டுள்ளவருடனான நடவடிக்கையெனில் உரிய அதிகாரியின் முன் ஒப்பளிப்புப் பெறப்பட வேண்டும்.

இருப்பினும், அரசால் அரசுப் பணியாளருக்கு வீட்டுமனை உரிமை மாற்றம் செய்யப்படும் நேர்வில் அந்த இடம் பெயராச் சொத்தினைப் பெற உரிய அதிகாரியின் முன் ஒப்பளிப்புத் தேவையில்லை.

**விளக்கம் :** இடம் பெயராச் சொத்தானது, தொடர்புடைய அரசுப் பணியாளருடைய நிதி ஆதாரங்களில் பெறப்படாத நேர்வில், கூறு (அ) இன் கீழ் தன்னுடைய குடும்ப உறுப்பினர்களால் இடம் பெயராச் சொத்துக்கள் கையகப்படுத்தப்படுவதற்கு அல்லது தீர்வு செய்யப்படுவதற்கு அந்த அரசுப் பணியாளர் உரிய அதிகாரிக்கு அறிவிக்கவோ உரிய அதிகாரியின் முன் அனுமதியைப் பெறவோ தேவையில்லை.

(அரசாணை எண்.409, ப. (ம) ந.சீ. துறை, நாள் : 24.12.1992)

(ஆ) ஒரு வீட்டைக் கட்டுவதற்கு அல்லது விரிவுபடுத்துவதற்கு அல்லது உடைமையாக்கிக் கொள்வதற்கு அரசுப் பணியாளர் ஒவ்வொருவரும் உரிய அதிகாரிக்குப் பின்வரும் முறையில் அறிவிக்க வேண்டும்:-

(i) அரசிடமிருந்து அல்லது மற்றவர்களிடமிருந்து கடன் அல்லது முன்பணம் அல்லது பொதுவைப்பு நிதியிலிருந்து பகுதி இறுதிப் பெறுகையைக் கொண்டு வீடு கட்டுவதற்கு அல்லது விரிவுபடுத்துவதற்கு அல்லது உடைமையாக்கிக் கொள்வதற்கான நடவடிக்கையைத் தொடங்குவதற்கு முன் அவர் இவ்விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணை Iஇல் உள்ள படிவம் VI அல்லது VIஅ-இல் நேர்வுக்கேற்ப உரிய அதிகாரியின் முன் ஒப்பளிப்பினைப் பெற வேண்டும்.

(ii) கட்டுமானம் அல்லது விரிவாக்கம் முடிந்ததும், அவர் இவ்விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணை Iஇல் உள்ள படிவம் VII இல், உரிய அதிகாரிக்கு அறிவிக்க வேண்டும்.

இயலுமிடத்து, இவ்விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணை I இல் உள்ள படிவங்கள் VI மற்றும் VII இல் இவ்விவரங்கள் அளிக்கப்பட வேண்டும். இருப்பினும், விவரங்களை அளிக்க இயலாதவிடத்து, கட்டடம் எழுப்பப்பட்டுள்ள அல்லது எழுப்பக் கருதப்பட்டுள்ள பரப்பளவையும், கட்டடத்தின் மதிப்பீட்டுச் செலவு விவரத்தையும் அரசுப் பணியாளர் குறிப்பிட வேண்டும்.

(இ) கூட்டு நிதியிலிருந்து பிரிக்கப்படாத கூட்டுக் குடும்பச் சொத்துக்களின் பழுதுபார்ப்புச் செலவில், இந்து கூட்டுக் குடும்ப உறுப்பினராகவுள்ள அரசுப்பணியாளரின் பங்கானது ரூ.50,000/-க்கு மிகையாகும் போது அப்பழுது பார்ப்புகள் தன்னுடைய கவனத்திற்கு வரும்போதெல்லாம் அரசுப்பணியாளர் அவ்விவரத்தை உரிய அதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டும்.

(1) அ. அரசுப் பணியாளர் எவரும் அரசு நிலங்களை அத்துமீறி கைப்பற்றக் கூடாது.

*(2) A தொகுதி அலுவலர்களைப் பொறுத்து ரூ.80,000, B தொகுதி அலுவலர்களைப் பொறுத்து ரூ.60,000, C தொகுதி அலுவலர்களைப் பொறுத்து ரூ.40,000, மற்றும் D தொகுதி அலுவலர்களைப் பொறுத்து ரூ.20,000 ரூபாய்க்கு மேற்பட்ட விலைமதிப்புள்ள இடம் பெயர் சொத்து தொடர்பான விற்றல் வாங்கல் நடவடிக்கையில் ஈடுபடும் அரசுப் பணியாளர் அத்தகு நடவடிக்கை ஒவ்வொன்றும் நடைபெற்ற நாளிலிருந்து ஒரு திங்களுக்குள் இது குறித்த விவரத்தை உரிய அதிகாரிக்கு அறிவிக்க வேண்டும்.

மேலும், அந்நடவடிக்கையானது அரசுப் பணியாளருடன் அலுவல்முறைத் தொடர்பு கொண்டுள்ள வருடனானது எனில் உரிய அதிகாரியின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

---

* அரசாணை எண். 39 ப.நி.சீ (A) துறை, நாள் : 09.03.2010.

இருப்பினும், தன்னுடைய அலுவல் சார்ந்த அதிகார எல்லையிலிருந்து வெளியேறவுள்ள அரசுப் பணியாளர், உரிய அதிகாரிக்குத் தெரிவிக்காமல். தனனுடைய இடம் பெயர் சொத்து எதையும் அவற்றின் பட்டியல்களைப் பொதுவான முறையில் பொது மக்களிடையே சுற்றறிக்கை விடுவதன் மூலம் அல்லது பொது ஏலத்தின் விற்பனை செய்வதன் மூலம் தீர்வு செய்யலாம்.

**விளக்கம் :1**

இந்த உள் விதியின் நோக்கங்களுக்காக "இடம் பெயர் சொத்து" என்னும் சொற்றொடரானது பின்வரும் சொத்துக்களை உள்ளடக்கியதாகும்.

அவையாவன :-

(அ) நகைகள், ஈட்டுறுதி ஆவணங்கள், பங்குகள், பிணையங்கள் மற்றும் கடனீட்டு ஆவணங்கள்.

(ஆ) நீக்கப்பட்டது.

(இ) சீருந்து, மிதி இயக்கிகள், குதிரைகள் அல்லது பிற வகை ஊர்திகள்.

(ஈ) குளிர்பதனிகள், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் காணொலி பதிவுக் கருவிகள்

(2-அ) உள்விதிகள் (1) மற்றும் (2) இல் குறிப்பிடப்பட்ட ஒப்பளிப்பு / அனுமதி வேண்டி அரசுப் பணியாளரிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பத்தினை உரிய அதிகாரியானவர் அவ்விண்ணப்பம் பெறப்பட்ட நாளிலிருந்து ஆறு திங்கள் கால அளவுக்குள் தீர்வு செய்ய வேண்டும். விளக்கங்கள் அல்லது விபரங்கள் எவையேனும் அரசுப் பணியாளரிடம் கேட்கப்பட்டிருந்தால், மேற்கூறப்பட்ட ஆறுதிங்கள் கால அளவென்பது கேட்கப்பட்ட விளக்கங்கள் அல்லது விவரங்கள் பெறப்பட்ட நாளிலிருந்து கணக்கிடப்படும். அவ்வாறான ஒப்பளிப்பு அல்லது அனுமதி அளிப்பு ஆணை எதுவும் மேற்குறிப்பிட்ட ஆறு திங்கள் கால அளவுக்குள் இல்லையெனில், மேற்குறிப்பிடப்பட்ட ஆறு திங்கள் காலஅளவு முடிந்தவுடன் உரிய அதிகாரி தனது ஒப்பளிப்பினை வழங்கியதாக அல்லது அனுமதியளித்ததாகக் கருதி, இடம் பெயராச் சொத்தினை பெறலாம் அல்லது விற்பனை செய்யலாம். இடம் பெயர் சொத்தினை வாங்கலாம் அல்லது விற்கலாம் அல்லது வீட்டின் கட்டுமான / விரிவாக்கப் பணியினைத் தொடங்கலாம்.

(3) அரசுப் பணியாளர் ஒவ்வொருவரும் இவ்விதிகளுக்கு இணைப்பாக உள்ள அட்டவணை 1இல் காணப்படும் I முதல் VI வரையிலான படிவங்களில் பின்வருவன தொடர்பில் முழுமையான விவரங்களுடன் 31-12-1980 ஆம் நாளன்று உள்ளவாறான சொத்துக்கள், கடன் பொறுப்புகள் குறித்த விவர அறிக்கையினை 31.3.1981 ஆம் நாளன்றோ அதற்கு முன்போ அளிப்பதுடன், அதன்பிறகு ஐந்தாண்டுகளுக்கொருமுறை, அவ்வறிக்கைக்குத் தொடர்புடைய ஆண்டுக்கு மறு ஆண்டு மார்ச்சுத் திங்கள் 31-ஆம் நாளன்றோ அதற்கு முன்போ அளிக்க வேண்டும்.

(அ) தமக்கு மரபுரிமையாகக் கிடைத்த அல்லது தமக்குச் சொந்தமான அல்லது அடையப்பெற்ற அல்லது குத்தகை அல்லது அடைமானம் மூலம் தமது பொறுப்பிலுள்ள, தன்னுடைய அல்லது தன்னுடைய குடும்ப உறுப்பினரின் அல்லது மற்றொருவரின் பெயரில் உள்ள இடம் பெயராச் சொத்து.

(ஆ) தமக்கு மரபுரிமையாகக் கிடைத்த அல்லது இதேபோன்று சொந்தமான, அடையப்பெற்ற அல்லது தம் வசமுள்ள பங்குகள், கடனீட்டு ஆவணங்கள் மற்றும் வங்கி வைப்புகள் உட்பட ரொக்கம்.

(இ) தமக்கு மரபுரிமையாகக் கிடைத்த அல்லது இதே போன்று சொந்தமான, பெறப்பட்ட அல்லது தம் வசமுள்ள பிற இடம் பெயர் சொத்து.

(ஈ) நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ தம்மால் ஏற்பட்ட கடன்கள் மற்றும் பிற கடன் பொறுப்புகள்.

மேலும், அரசுப்பணியாளர் ஒவ்வொருவரும் தாம் எந்தவொரு பணிக்கேனும் அல்லது பணியிடத்திற்கேனும் முதலில் நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்று திங்களுக்குள் தாம் பணியின் சேர்ந்த காலத்தில் தமக்கிருந்த சொத்துக்கள் மற்றும் கடன்கள் பற்றிய விவர அறிக்கையினை மேற்கண்ட படிவங்களில் அளிக்க வேண்டும்.

அதன் பின்னர் மேலே குறிப்பிட்டவாறு, தமது முதல் நியமனத்தின்போது தமது சொத்துக்கள் மற்றும் கடன்கள் குறித்த விவர அறிக்கை அளிக்கப்பட்டு ஐந்தாண்டுகள் முடிவடையாத நிலையிலும் காலமுறைப்படி சொத்துக்கள் மற்றும் கடன்கள் விவர அறிக்கையை அளிக்க வேண்டும்.

இருப்பினும், அரசுப் பணியாளர் ஒவ்வொருவரும் ஐந்தாண்டுகள் இடைவெளிகளில், ஆண்டுதோறுமான தன்னுடைய சொத்துக்கள் மற்றும் கடன்கள் பற்றிய விவர அறிக்கையினை அளித்த பின்னர், தன்னுடைய வயது முதிர்வு ஓய்வு நாளுக்கு முந்தைய கடந்த ஐந்தாண்டுகளுக்கான தன்னுடைய ஆண்டுதோறுமான சொத்துக்கள் மற்றும் கடன்கள் பற்றிய விவர அறிக்கையினை இவ்விதிகளின் பின்னிணைப்பாக உள்ள அட்டவணை 1-ல் உள்ள I முதல் V வரையிலான படிவங்களில், உரிய அதிகாரிக்கு அளித்தல் வேண்டும்.

இருப்பினும், உரிய அதிகாரியானவர், அரசுப் பணியாளர்களிடமிருந்து அத்தகைய அறிக்கைகள் பெறப்பட்ட நாளிலிருந்து இரு திங்களுக்குள், அவர்களுடைய சொத்துக்கள் மற்றும் கடன்கள் பற்றிய முந்தைய விவர அறிக்கை அளிக்கப்பட்ட நாளுக்குப் பிறகு அனுமதியளிக்கப்பட்டது தொடர்பான ஆவணங்களை மறு ஆய்வுசெய்து நேர்வுக்கேற்ப முந்தைய ஐந்தாண்டுகளில் / ஆண்டுதோறும் அளிக்கப்பட்ட அறிக்கைகளுடன் அவை ஒத்திசைவாக உள்ளனவா என்பதைச் சரிபார்க்க வேண்டும்.

(அரசாணை எண்.409, ப.(ம) நி.சீ.துறை, நள் :15.3.1996)

எடுத்துக்காட்டு:-1980 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 25 ஆம் நாளன்று பணியில் சேர்ந்தவர், தமது முதல் நியமன நாளன்று உள்ளபடியான தமது சொத்துக்கள் மற்றும் கடன்கள் குறித்த விவர அறிக்கையினை 25.04.1980க்கு முன்னர் அளிக்க வேண்டும். அதன் பின்னர் அறிக்கைகளை 31.12.1980, 31.12.1985, 31.12.1990 நாளின்படியான கொத்துக்கள், பொறுப்புகள் ஆகியவற்றுக்கான விவர அறிக்கையினை 31.3.1981, 31.3.1986, 31.3.1991 ஆம் நாளன்றோ அதற்கு முன்னரோ தொடர்ந்து அளிக்க வேண்டும்.

விளக்கம் :- எல்லா அறிக்கைகளிலும் * ரூ.50,000/-க்குக் குறைந்த விலை மதிப்புடைய இடம் பெயர் சொத்துக்களின் மதிப்புத் தொகை யாவும் ஒன்றாகக் கூட்டப்பட்டு ஒட்டுமொத்தத் தொகையாகக் காண்பிக்கப்பட வேண்டும். துணிகள், பாத்திரங்கள், மண்பாண்டங்கள், புத்தகங்கள் முதலிய அன்றாடப் பயன்பாட்டிற்குரிய பொருள்களின் விலை மதிப்புகள் அவ்விவர அறிக்கையில் சேர்க்கப்பட வேண்டியதில்லை. அரசுப் பணியாளரின் குடும்ப உறுப்பினர்கள் தங்களுடைய சொந்த ஆதாரங்களின் மூலம் பெற்ற இடம் பெயர் மற்றும் இடம் பெயராச் சொத்துக்களின் விவரங்கள் இவ்விவர அறிக்கையில் சேர்க்கப்பட வேண்யடிதில்லை.

* (அரசாணை எண்.225, ப. (ம) நி.சீ. துறை, நாள் : 10.9.1998)

(3அ) உள்விதி (3)-இல் குறிப்பிடப்பட்டுள்ள இவ்விவர அறிக்கையினை மறைவடக்க ஆவணமாகக் கொள்ள வேண்டும். 10-ஆவது விதியின் காப்புரைகள் இயன்றவரையில் இவ்விவர அறிக்கைக்கும் பொருந்தும்.

(4) அரசு அல்லது ஆணைக்குழு எதுவும் அல்லது இதன்பொருட்டு அவற்றால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள அலுவலர் எவரும் அல்லது உரிய அதிகாரி ஒருவர் அரசுப் பணியாளர் அல்லது அவருடைய குடும்ப உறுப்பினர் எவரும் உடைமையாகக் கொண்டிருக்கும் அல்லது தேடிக் கொண்டிருக்கும் இடம் பெயர் அல்லது இடம் பெயராச் சொத்து பற்றிய அனைத்து முழு அறிக்கையினை ஆணையில் குறிப்பிட்டுள்ளவாறு குறிப்பிடப்பட்டுள்ள கால அளவுக்குள் அளிக்குமாறு எத்தருணத்திலும் பொது அல்லது சிறப்பு ஆணை மூலம், கேட்டுக் கொள்ளலாம். அரசால் அல்லது ஆணைக்குழுவால் அல்லது இதன்பொருட்டு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள அலுவலரால் அல்லது உரிய அதிகாரியால் வேண்டப்பட்டால், அச்சொத்து அடையப் பெற்றமைக்குரிய வழிவகை அல்லது ஆதாரம் பற்றி விவரம் அவ்விவர அறிக்கையில் சேர்க்கப்பட வேண்டும்.

மேலும், குறிப்பிட்ட ஊழல் விசாரணை ஒன்றுக்கு சொத்து விவர அறிக்கை தேவைப்பட்டால் உரிய அதிகாரி, அதனைப் பெற உள்விதியின் கீழ் அதிகாரத்தைப் பயன்படுத்தலாம்.

(5) (அ) இவ்விதியின் நோக்கங்களுக்காக "உரிய அதிகாரி" எனப்படுவர்.

(i) துறைத் தலைவர் நேர்வில் "அரசு"

(ii) (அ) மாவட்ட ஆட்சியர் அனைவரும்

(ஆ) மாவட்ட நீதிபதிகள்

(இ) மாவட்டக் குற்றவியல் நீதிபதிகள்

(ஈ) சென்னை மாநகர் உரிமையியல் நீதிமன்ற முதன்மை நீதிபதி

(உ) தலைமை நீதிபதி, சிறுவழக்குகள் நீதிமன்றம், சென்னை

(ஊ) மாநகர முதன்மை நீதிபதி, சென்னை.

(எ) தங்கள் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள "இ" மற்றும் "ஈ" பிரிவைச் சார்ந்த அரசுப் பணியாளர்களைப் பொறுத்தவரையில் மாநகரிலுள்ள (அலுவல் முறையிலான ஒப்படை பெற்றவர் நீங்கலாக) சட்ட அலுவலர்கள் அனைவரும்.

(iii) மாவட்டங்களிலுள்ள நில அளவை மற்றும் பதிவுருக்கள் துறையிலுள்ள பின்வரும் பணியிட வகைகளைப் பொறுத்தவரையில் மாவட்ட ஆட்சியர்கள் அனைவரும், சென்னையிலுள்ள துத்தநாகத் தகடச்சு நிழற்பட அச்சகம் உள்பட நில அளவை மற்றும் பதிவுருக்கள் இணை இளநிலை இயக்குநர் அலுவலகங்கள் மற்றும் மைய நில அளவை அலுவலகத்திலுள்ள மேற்குறிப்பிட்ட வகைகளைப் பொறுத்தவரையில் நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர்

1. இளநிலை வரைஞர்கள், நிலைகள்-1 மற்றும் 2
2. நில அளவர்கள்
3. துணை அளவர்கள்
4. இளநிலை உதவியாளர்கள்
5. உதவியாளர்கள்

(iv) மற்ற நேர்வுகளில் தொடர்புடைய துறைத் தலைவர்

இருப்பினும் துறைத் தலைவர், தாம் பொருத்தமெனக் கருதுகின்ற காப்பு அதிகாரங்களைத் தம்மிடம் வைத்துக் கொண்டு, இவ்விதியின் கீழ் அமைந்த தன்னுடைய அதிகாரங்களைத் தமது துறையிலுள்ள இரண்டாம் நிலை அலுவலர்களுள் ஒருவரிடம் ஒப்படைக்கலாம்.

(ஆ) அயல் பணிக்கு அல்லது வேறு ஏதேனும் அரசுப் பணிக்கு வேற்றுப்பணி முறையில் அனுப்பப்பட்டுள்ள அரசுப் பணியாளரைப் பொறுத்தவரையில், உரிய அதிகாரி என்பது அவ்வரசுப் பணியாளர் முன்னர் பணியாற்றிய தாய்த்துறையைக் குறிப்பிடுவதாகும்.

(6) அரசுப் பணியாளர் தாம் பணிபுரியும் மாவட்டத்திலுள்ள இடம் பெயராச் சொத்துக்கு மரபுரிமை, வழியுரிமை அல்லது விருப்ப ஆவணம் வாயிலாக உரிமை பெறுமிடத்து அல்லது இவ்விதியில் கருதப்படுகின்றவாறு அந்த இடம் பெயராச் சொத்தில் சட்டப்படி உரிமைகொள்ளுமிடத்து அவர் அதுபற்றிய விவரங்கள் அனைத்தையும் வழக்கமான வழி முறையில் உரிய அதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டும்.

(7) நீக்கப்பட்டது.

(8) அரசுப் பணியாளர் தமது உடைமையாக உள்ள அல்லது தாம் சட்டப்படி உரிமை கொண்டுள்ள இடம் பெயராச் சொத்து அமைந்துள்ள மாவட்டத்திற்கு மாறுதல் பெறுமிடத்து அவர் அவ்விவரத்தினைத் தன்னுடைய உடனடி மேலலுவலர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும்.

(9) பணியாளர்களின் மந்தணக் கோப்புகளையும் பதிவுருத் தாள்களையும் பராமரிக்கும் அலுவலர், தமது நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரியும் அனைத்து அரசுப் பணியாளர்கள் குறித்து இவ்விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணை-2இல் உள்ள படிவத்தில், பிரிவு வாரியாகப் பதிவேடுகளைப் பராமரிக்க வேண்டும்.

அப்பதிவேடுகளில் அவர்கள் ஒவ்வொருவரிடமும் உள்ள இடம் பெயராச் சொத்துக்களின் விவரங்களைப் பதிவு செய்வதுடன், துணை விதி (3) - இல் குறிப்பிட்டவாறு அரசுப் பணியாளரால் அடுத்தடுத்து அளிக்கப்படும் விவர அறிக்கைகளின்படி அப்பதிவேட்டிலுள்ள பதிவுகளைத் தக்கவாறு திருத்திக் கொள்ளவும் வேண்டும்.

(10) அறிக்கைகளில் தவறான வழிகாட்டும் எந்த முயற்சியும், முழுமையான மற்றும் சரியான தகவல் தருவதில் எந்தத் தவறுகையும், தொடர்புடைய அரசுப் பணியாளரைக் கடுமையான ஒழுங்கு நடவடிக்கைக்குட்படுத்தும்.

(11) வருவாய்த் தண்டல் அல்லது நீதி நிருவாகப் பணியிலுள்ள அல்லது அதற்குத் தொடர்புடையவருக்கு எந்த வணிக நோக்கத்திற்கும் இந்தியாவின் எப்பகுதியிலும் நிலம் வாங்குவதற்கு அனுமதி அளிக்கக் கூடாது.

(12) இடம் பெயராச் சொத்தினைக் கையகப்படுத்துதலுக்கும் உடைமையாகக் கொள்ளுதலுக்கும் உரிய வரையறைகள், அச்சொத்தின் மீதான எந்த ஒரு உரிமைக்கும் மற்றும் வேறொருவர் பெயரில் அரசுப் பணியாளர் அச்சொத்தினைக் கையகப்படுத்தி உடைமையாக்கிக் கொள்ளதலுக்கும் பொருந்தும். ஆனால் அவை பொறுப்பாட்சியராக, நிறைவேற்றுநராக, நிருவாகியாக அச்சொத்தினைக் கையகப்படுத்துதலுக்கு அல்லது உரிமையாக்கிக் கொள்ளுதலுக்குப் பொருந்தாது.

(13) வருவாய் வாரிய நிலை ஆணைகளுக்கு இணக்கமில்லாமல் அரசு நிலம் எதுவும், நிலையாகவோ தற்காலிகமாகவோ பணிக்கமர்த்தப்பட்டுள்ள அரசுப் பணியாளர் எவருக்கும் விற்கப்படவோ குத்தகைக்கு விடப்படவோ கூடாது.

(14) (அ) அரசுப் பணியாளர், தாம் பணியாற்றும் வருவாய் மாவட்டத்திற்குள், வீட்டுமனையை அல்லது கட்டப்பட்ட வீட்டினை வாங்கும் நோக்கத்திற்காக அன்றி வேறெந்த நோக்கத்திற்காகவும் நிலத்தை உடைமையாக்கிக் கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். அம்மாவட்டத்திலிருந்து அவர் மாற்றப்பட்ட பின்னரும், அவருடைய பணி மாற்றல் நாளிலிருந்து ஈராண்டுகள் வரை, அம்மாவட்டத்தில் வீட்டுமனையை அல்லது கட்டப்பட்ட வீட்டினை வாங்கும் நோக்கத்திற்காக அன்றி பிற நோக்கங்களுக்காக நிலத்தை உடைமையாக்கிக் கொள்ள அவர் அனுமதிக்கப்படமாட்டார்.

இருப்பினும் உள் விதி (1)-ன் பிரிவுக்கூறு (அ)க்குட்பட்டு, அரசுப்பணியாளர் தாம் பணிபுரியும் அல்லது பணிபுரிந்த வருவாய் மாவட்டத்தில் வீட்டுமனையை அல்லது கட்டப்பட்ட வீட்டை வாங்கலாம்.

(ஆ) பொதுவாக, அரசுப் பணியாளர் தாம் பணிபுரியும் வருவாய் மாவட்டத்திற்கு வெளியே இடம் பெயராச் சொத்தினை உடைமையாக்கிக்கொள்ள அனுமதிக்கப்படலாம். ஆனால், அந்த இடம் பெயராச் சொத்தினை உடைமையாகக் கொண்டுள்ள மாவட்டத்திற்கு அரசுப் பணியாளர் மாற்றப்படுகையில், உள் விதி (17)-இல் கோரியுள்ள அறிக்கையை அளித்தவுடன் உரிய அதிகாரி அவரை வேறு மாவட்டத்திற்கு மாற்றுவார்.

இருப்பினும் ஒரு வருவாய் மாவட்டத்திலிருந்து மற்றொரு வருவாய் மாவட்டத்திற்கு மாற்றப்பட்ட அரசுப் பணியாளர், அவர் எந்த வருவாய் மாவட்டத்திலிருந்து மாற்றப்பட்டாரோ அந்த வருவாய் மாவட்டத்திற்குள், அவருடைய மாற்றல் நாளிலிருந்து ஈராண்டுக்குள் எந்தவொரு நோக்கத்திற்காகவும் வீட்டுமனை அல்லது கட்டப்பட்ட வீடு அல்லாத வேறு நிலத்தை உடைமையாக்கிக் கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்.

(இ) வருவாய் வாரியமும், அரசின் நேரடிக் கட்டுப்பாட்டிலுள்ள துறைத் தலைவர்களும், அரசுப்பணியாளர் மாற்றப்பட்டுள்ள மாவட்டத்தில் அவருக்குரிய இடம் பெயராச் சொத்தினைத் தக்கவைத்துக் கொள்வதற்கு, அத்துறைத் தலைவர்களால் வழங்கப்பட்ட சிறப்பு அனுமதிகளின் நேர்வுகள் பற்றி ஒவ்வோராண்டும் மார்ச்-31 ஆம் நாளுக்குள் அரசுக்கு ஆண்டு அறிக்கை அனுப்பப்பட வேண்டும்.

இதேபோன்ற ஒப்பளிப்பு அதிகாரங்கள் அளிக்கப்பட்ட சார்நிலை அலுவலர்களாலும் இவ்வறிக்கைகள் வருவாய் வாரியத்திற்கு அல்லது துறைத்தலைவர்களுக்கு அனுப்பப்பட வேண்டும்.

வருவாய் வாரியத்தாலும் துறைத் தலைவர்களாலும் அனுப்பப்படும் இவ்வறிக்கைகளில், அவர்களுக்குச் சார்நிலையிலுள்ள அலுவலர்கள் தீர்வு செய்த நேர்வுகளைக் குறிப்பிட வேண்டியதில்லை.

(ஈ) கூறுகள் (அ), (ஆ) மற்றும் (இ)-இல் உள்ள "வருவாய் மாவட்டம்" மற்றும் "மாவட்டம்" எனும் சொற்றொடரானது-

(i) பதிவுத்துறையிலுள்ள துணைப்பதிவாளர்கள், எழுத்தர்கள், பதிவுரு எழுத்தர்கள், அடிப்படை அரசுப் பணியாளர்கள் ஆகியோரைப் பொறுத்தவரையில் "பதிவுத் துணை மாவட்டம்" என்றும் பதிவுத் துறையிலுள்ள மாவட்டப் பதிவாளர்களைப் பொறுத்தவரையில் "பதிவு மாவட்டம்" என்றும்,

(ii) ஆயத் துறை அல்லது மதுவிலக்குத் துறையின் தடுப்புக் கிளைகளிலுள்ள துணை ஆய்வாளர்களைப் பொறுத்தவரையில் "ஆயத்துறை அல்லது மதுவிலக்கு வட்டம்" என்றும்,

(iii) தமிழ்நாடு பொது சார்நிலைப் பணித் தொகுதி மற்றும் தமிழ்நாடு அடிப்படைப் பணித் தொகுதிப் பணி உறுப்பினர்களல்லாத பொதுப்பணித்துறை சார்நிலைப் பணி உறுப்பினர்களைப் பொறுத்தவரையில் "பொதுப்பணித் துறை உட்கோட்டம்" என்றும்,

(iv) தமிழ்நாடு வனப்பணித் தொகுதி மற்றும் தமிழ்நாடு வனச் சார்நிலைப் பணித் தொகுதி உறுப்பினர்களைப் பொறுத்தவரையில் "வனக்கோட்டம்" என்றும் பொருள்படும்.

(உ) (அ) முதல் (ஈ) வரையிலான பிரிவுக் கூறுகளில் இடம்பெறாத எதுவும், 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில வீட்டுவசதி வாரியச் சட்டம் (1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் 17) அல்லது மேற்குறிப்பிடப்பட்ட வாரியத்தால் நிறுவப்பட்ட எந்தவொரு வீட்டுவசதிப் பிரிவு அல்லது 1961ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் (1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் 53) பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட சங்கம் வாயிலாகக் கையகப்படுத்தப்பட்ட வீட்டுமனைகள் உள்ளிட்ட நிலத்திற்குப் பொருந்தாது.

(ஊ) குறிப்பிட்ட சொத்தானது அரசுப் பணியாளரால் கட்டப்பட்ட அல்லது மரபுரிமையாகப் பெறப்பட்ட வீடாக இருப்பின், பிரிவுக்கூறு (ஆ)-இல் உள்ள எதற்கும் பொருந்தாது.

(15) மருமக்கள்தாயம் அல்லது அளிய சந்தானம் சட்டத்தினால் முறைப்படுத்தப்படும் குடும்பத்தைப் பொறுத்தவரையில் அக்குடும்பத்தின் சார்பில் மேலாண் உறுப்பினரால் இடம் பெயராச் சொத்து வாங்கப்படுகையில், பொது இளநிலை உறுப்பினராக உள்ள அரசுப் பணியாளர், இதற்கான அனுமதியினைப் பெறத் தேவையில்லை. ஆனால் கையகப்படுத்துகை ஏதேனும் கர்ணவான் அல்லது எஜமான் பெயரில் செய்யப்பட்டிருந்து உள்ளபடியே அது அவ்வரசுப்பணியாளரின் சொந்தச் சொத்தாகக் கருதி இடமளிக்கப்பட்டால், அது தொடர்பில் இவ்விலக்கு பொருந்தாது.

(16) வருவாய் அல்லது நீதித்துறையிலுள்ள அரசுப் பணியாளர், அரசின் அனுமதியின்றி, தாம் அப்போதைக்குப் பணியாற்றும் மாவட்டத்தில் அரசுக்குச் சேரவேண்டிய நிலுவைகள் காரணமாக அல்லது நீதிமன்ற ஆணைகளின்படி விற்பனைக்குரிய இடம் பெயர் அல்லது இடம்பெயராச் சொத்து எதனையும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வாங்குதல் இதன் மூலம் தடை செய்யப்படுகிறது.

(17) அரசுப் பணியாளர், தன்னுடைய சொந்தக் கணக்கில், அல்லது பொறுப்பாட்சியர், நிறைவேற்றுநர் அல்லது நிருவாகி அல்லது கோயில் மிராசுதாரர் எனும் முறையில் உடைமையாகக் கொள்ளப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்ட அல்லது அவரது மனைவி அல்லது அவருடனுள்ள குடும்ப உறுப்பினர் எவரேனும் ஒருவர் அல்லது எவ்வகையிலேனும் அவரைச் சார்ந்தவராக உள்ள எவரேனும் ஒருவர் பெயரில் உரிமையாகக் கொள்ளப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்ட அல்லது அவர்களால் மேலாண்மை செய்யப்படும் இடம் பெயராச் சொத்து விவரம் அனைத்தும் ஆண்டு விவர அறிக்கையில் இடம் பெற்றிருக்க வேண்டும். மருமக்கள் தாயம் அல்லது அளிய சந்தானம் சட்டத்தைப் பின்பற்றும் அரசுப் பணியாளர் நேர்வில் அவரது வாழ்க்கைத் துணைவரால் உடைமையாக கொள்ளப்பட்ட இடம் பெயராச் சொத்தானது விவர அறிக்கையில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

**விதி 8. தனிப்பட்ட வணிகம் அல்லது வேலை :**

(1) (அ) அரசுப் பணியாளர் எவரும் அரசின் முன் அனுமதி ஆணையின்றி ஏதேனும் வணிகம் அல்லது தொழிலில். நேரடியாக அல்லது மறைமுகமாகத் தன்னை ஈடுபடுத்தவோ, ஏதேனும் வேலையை மேற்கொள்ளவோ கூடாது.

இருப்பினும், அரசுப் பணியாளர் ஒருவர் அத்தகைய அனுமதி ஆணையின்றித் தனது அலுவலகப் பணிகளுக்கு அதன் மூலம் ஊறு விளையாது என்ற வரையறைக்குட்பட்டு ஒரு சமூக அல்லது அற இயல்புடைய மதிப்புறு வேலை அல்லது இலக்கியம், கலைத்திறன் அல்லது அறிவியல் தன்மையிலான பணியை எப்பொழுதாவது மேற்கொள்ளலாம் அல்லது பிழைப்புக்காக அன்றி பொழுது போக்காகப் போட்டி விளையாட்டுக்களில் பங்கேற்கலாம். ஆனால் அந்தப் பணியை மேற்கொள்ளக் கூடாது என அரசினால் கட்டளையிடப்பட்டால் அவர் அப்பணியை மேற்கொள்ளக் கூடாது அல்லது விட்டுவிட வேண்டும்.

மேலும் இந்த உள் விதியில் அடங்கியது எதுவும், ஓர் அலுவலக அமைப்பில் அல்லது அலுவல் சார்பற்ற அமைப்பின் அல்லது அமைப்பொன்றின் ஓர் உறுப்பினராக ஆளுநரால் நியமனம் செய்யப்பெற்ற அல்லது தான் வகித்து வரும் முதல்வர் அல்லது தலைமையாசிரியர் அல்லது ஆகிரியர் பதவித் தகுதியின் காரணமாகப் பல்கலைக்கழகக் குழுவின் ஓர் உறுப்பினராவதற்குத் தேர்தலில் நிற்கும் அரசுப் பணியாளர் ஒருவர் அத்தகைய உறுப்பினர் என்ற முறையில் அவரது கடமைகளை மேற்கொள்ளுவதற்கும் நிறைவேற்றுவதற்கும் அரசின் முன் அனுமதி பெற வேண்டுமென்று கருதப்படமாட்டார்.

**விளக்கம் :-** இரண்டாவது காப்புரையின் நோக்கத்திற்காக "ஆசிரியர்" என்ற சொல்லானது உரிய பல்கலைக் கழகத்தை நிறுவிய சட்டத்தில் அதற்களிக்கப்பட்ட பொருளைக் கொண்டிருக்கும்.

ஒரு பல்கலைக் கழகக் குழுவின் தேர்ந்தெடுக்கப்பட்டதோர் உறுப்பினராவதற்கு அனுமதி அளிக்கும் அல்லது மறுக்கும் ஆணையொன்றினைத் துறைத் தலைவர் பிறப்பித்திருக்கும்போது, அரசானது அத்தகைய ஆணையை மாற்றியமைப்பதற்கு அதிகாரம் கொண்டிருக்கும்.

இருப்பினும் இந்து சமய அறக்கட்டளைத் (ஆட்சி) துறையின் ஆய்வாளர்களும் செயல் அலுவலர்களும் அத்தகைய ஒப்பளிப்பின்றி இந்து சமய அறக்கட்டளைத் (ஆட்சி) துறை ஆணையரின் கட்டளைப்படி, எதிர்பாராதவாறு ஏற்படும் காலியிடத்தை நிறைவு செய்வது ஆட்சி முறையில் இன்றியமையாததாக அமையும் போது சமய ஈடுபாடுள்ள நிறுவனமொன்றின் அறங்காவலர் ஒருவரது அலுவல்களை நிறைவேற்றுவதற்காக "அறங்காவலராக" அல்லது "இடைக்கால அறங்காவலராக" அல்லது "தக்கராக" குறுகிய (ம) தற்காலிக காலங்களுக்கு நியமிக்கப்படலாம்.

இருப்பினும் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், மைய அரசுப் பணியாளர் தேர்வாணையம், இந்தியாவிலுள்ள பிற மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையங்கள், தமிழ்நாடு அரசு தொழில்நுட்பக் கல்வி - பயிற்சித் தேர்வுக் குழுமம், அரசுத் தேர்வுகள் இயக்ககம் ஆகியவற்றிற்கு தேர்வாளர் குழுமத்தலைவராக அல்லது உறுப்பினராக அல்லது வினாத்தாள் தயாரிப்பாளராக நியமனம் செய்யப்படுவதை ஏற்பதற்கு அனுமதி பெறத் தேவையில்லை. மற்ற அனைத்து நிறுவனங்களிலும் தேர்வாளர் குழுமம் தலைவராக அல்லது உறுப்பினராக அல்லது வினாத்தாள் தயாரிப்பாளராக அரசுப் பணியாளர்கள் ஏற்றுக்கொள்ள தம் கட்டுப்பாட்டின் கீழ்ப் பணிபுரியும் துறைத் தலைவர்களைப் பொறுத்த வரையில் அரசுச் செயலாளரும், தம் கட்டுப்பாட்டின் கீழ்ப் பணிபுரியும் அலுவலர்களைப் பொறுத்த வரையில் துறைத் தலைவரும் அடிப்படை விதிகள் 11-இன் காப்புரைகளுக்கிணங்க, நியமனம் பெறுவதனை அனுமதிக்கலாம். இருந்த போதிலும் அரசுப்பணியாளர் ஒருவருக்கே ஒரே நிறுவனத்தால் ஐந்து முறைகளுக்கு மேற்பட்டவாறு தொடர்ச்சியாக ஏற்றுக் கொள்வதற்கு முன்னர் அது குறித்து முன் ஏற்புப் பெறுவதற்காக அரசுக்குத் தெரிவித்தல் வேண்டும்.

இருப்பினும், பள்ளிகள், கல்லூரிகள், பல்தொழில்நுட்பப் பயிலகங்கள் மற்றும் ஏதேனும் கல்வி நிலையங்களில் மாணவர்களுடைய மருத்துவ ஆய்வுக்காக உரிய நிறுவனத் தலைவர்களிடமிருந்து வேண்டுகோள்கள் வருகின்றபோதெல்லாம் அத்தகை மருத்துவ ஆய்வுகளைச் செய்வதற்கும் அவற்றுக்கான ஊதியத்தைப் பெற்றுக்

கொள்வதற்கும், கீழ்காணும் வரையறைகளுக்குட்பட்டு மாவட்ட மருத்துவ அலுவலர் தன்னுடைய கட்டுப்பாட்டினால் பணிபுரியும் தமிழ்நாடு மருத்துவப் பணித் தொகுதியைச் சார்ந்த மருத்துவ அலுவலர்களுக்கு (தற்காலிக முறையில் பணியாற்றும் அலுவலர்கள் உட்பட) அனுமதி வழங்கலாம்.

(i) அவ்வாறு நடத்தப்பெறும் மருத்துவ ஆய்வுகள் இயல்பான அலுவல் பணிகளுக்கு ஊறு பயக்கும் முறையில் அமைதல் கூடாது.

(ii) அரசுக்குக் கூடுதல் செலவு எதுவும் அமையக் கூடாது

(iii) மருத்துவ அலுவலரால் பெறப்படும் மொத்த ஊதியமானது ஆண்டொன்றில் ரூ.25,000/-க்கு மேற்படக் கூடாது.

**விளக்கம் (அ) நீக்கப்பட்டது.**

(அ) (அ) இவ்விதியின் கூறு (அ)-இல் உள்ள எதுவும் எப்படியிருந்தபோதிலும், அரசுப் பணியாளர் எவரும் பகுதிநேரப் பணி எதையும் மேற்கொள்ளக் கூடாது.

இருப்பினும், அரசுப்பணியாளர், அரசின் முன் அனுமதியுடன் அரசு, அரசு சார் அல்லது அரசு உதவிபெறும் கல்வி அல்லது தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்கள் அல்லது பல்கலைக் கழகங்களில் ஒரு தறுவாயில் ஓராண்டுக்கு மேற்படாத கால அளவுக்கு விரிவுரையாற்றும் பணியினை மேற்கொள்ளலாம்.

(அரசாணை எண்.35, ப.ம.நி.சீ.(ஏ) துறை, நாள் : 11.12.1997-ல் சேர்க்கப்பட்டுள்ளது)

(அ) அரசுப் பணியாளர் ஒவ்வொருவரும், அல்லது தன்னுடைய குடும்ப உறுப்பினர் எவரேனும் வணிகம் அல்லது தொழிலில் ஈடுபட்டால் அல்லது ஈட்டுறுதி முகமை அலலது தரகுமுகமையைச் சொந்தமாகக் கொண்டிருந்தால் அல்லது நிருவகித்து வந்தால் அதுபற்றி அரசுக்குத் தெரிவிக்க வேண்டும்.

மேலும், அரசுப் பணியாளருடைய குடும்ப உறுப்பினர் ஈடுபடும் வணிகம் அல்லது தொழிலானது அரசுக்கு அல்லது அரசுப் பணியாளருக்குச் சிக்கலை ஏற்படுத்தக்கூடியதாக உள்ளதெனத் தெரியவந்தால், அந்த அரசுப் பணியாளர் தன்னுடைய குடும்ப உறுப்பினரை, கேள்விக்கு ஆளான அவ்வணிகம் அல்லது தொழிலில் அவருடைய தொடர்பைத் தொடர அனுமதிக்கக் கூடாது.

**விளக்கம் :** தன்னுடைய குடும்ப உறுப்பினர் எவேரனும் ஒருவரால் சொந்தமாகக் கொண்டுள்ள அல்லது நிருவகிக்கப்பட்டு வரும் வணிகம், தொழில், ஈட்டுறுதி முகமை அல்லது தரகு முகமை எதற்கேனும், அரசுப் பணியாளர் ஆதரவு திரட்டுவதானது இந்த உள்விதிகளை மீறுவதாகக் கருதப்படும்.

(2) 1949ஆம் ஆண்டு வங்கி நிறுமச் சட்டத்தின் (1949ஆம் ஆண்டு மையச் சட்டம் எண்.10) அல்லது 1913 ஆம் ஆண்டு இந்திய நிறுமங்கள் சட்டத்தின் (1913-ஆம் ஆண்டு மையச் சட்டம்-7) அல்லது 1956 ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின் (1956 ஆம் ஆண்டு மையச் கட்டம் -1) அல்லது இப்போதைக்கு நடைமுறையிலுள்ள சட்டம் எதன் கீழேனும் பதிவு செய்யப்பட்ட எந்தவொரு வங்கியின் அல்லது நிறுமத்தின் பதிவில், முன்னேற்றத்தில் அல்லது மேலாண்மையில் அரசின் முன் அனுமதியின்றி அரசுப் பணியாளர் எவரும் பங்கேற்கக் கூடாது.

இருப்பினும், 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் எண்.53) அல்லது அப்போதைக்கு நடைமுறையிலுள்ள எந்தவொரு சட்டத்தின் கீழேனும் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்படும் கூட்டுறவுச் சங்கத்தின் அல்லது 1860ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டம் (1860 ஆம் ஆண்டு மையச் சட்டம் எண்.21) அல்லது அப்போதைக்கு நடைமுறையிலுள்ள எந்தச் சட்டத்தின் கீழேனும் பதிவு செய்யப்பட்ட இலக்கிய, அறிவியல் மேலாண்மையில் (7) முதல் (10) வரையிலான உள் விதிகளுக்குட்பட்டு அரசுப் பணியாளர் பங்கேற்கலாம்.

மேலும், அரசுப் பணியாளரின் அலுவலகப் பணியானது இதனால் பாதிக்கப்படக் கூடாது. அவர் நடவடிக்கையில் ஈடுபட்ட நாளிலிருந்து ஒரு திங்கள் கால அளவுக்குள், தமது பங்கின் தன்மை குறித்த விவரங்களை அரசுக்குத் தெரிவிக்க வேண்டும்.

(3) (அ) அரசுப் பணியாளர் ஒருவர், நடுவர் ஒருவரை நியமிக்கும் அதிகாரமுடைய நீதிமன்றம் ஒன்றினால் நடுவராகப் பணிபுரியுமாறு கட்டளையிடப்பட்டாலன்றி மற்றபடி தனக்கு நேரடியான மேல் அதிகாரியினது ஒப்புதல் இல்லாமல் எந்த வழக்கிலும் நடுவராகப் பணிபுரிதல் கூடாது.

(ஆ) அரசுப் பணியாளர் எவரும் தான் வகிக்கக்கூடிய ஏதேனும் நீதி அல்லது செயலாட்சித் துறைப் பதவியின் காரணமாகத் தன்னிடத்தில் ஏதேனும் ஒருமுறையில் வரக்கூடிய ஏதேனும் வழக்கில் தான் ஒரு நடுவராகப் பணிபுரிதல் கூடாது.

(இ) அரசுப் பணியாளர் ஒருவர் தகராறு உள்ளவர்களிடையே அவர்களின் தனிப்பட்ட வேண்டுகோளின் மீது நடுவராகப் பணிபுரிந்தால் அவர் எத்தகைய கட்டணத்தையும் பெறுதல் கூடாது.

(ஈ) அவர் நீதிமன்றமொன்றின் நியமனத்தின்படி பணிபுரிந்தால், அடிப்படை விதிகள் 46, 47 ஆகியவற்றின் கீழ்ப்பட்ட துணை விதி 4-ல் அடங்கியது எவ்வாறிருப்பினும் நீதிமன்றம் அறுதியிடும் அத்தகைய கட்டணத்தை அவர் பெறலாம்.

(4)(அ) அரசுப் பணியாளர் அரசின் அனுமதியின்றி எந்த நூலையும் வெளியிடவோ அல்லது இலக்கியம் அல்லது கலைத்திறன் குறித்த பணி எதுவாயினும் அதனில் வழக்கமாகத் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளவோ கூடாது.

இருப்பினும், அரசுப் பணியாளர் ஒருவர் தன்னுடைய நேரத்தையும் பதவி நிலையையும், தன் புத்தக விற்பனை மேம்பாட்டிற்காகப் பயன்படுத்தமாட்டார் என்பதற்கும் அத்தகைய புத்தகங்கள் அரசியல் நோக்கம், எதிர்ப்புக்குரிய பகுதிகள், அரசின் கொள்கைக்கு எதிரான கருத்துக்கள், ஆகியவற்றினைக் கொண்டிருக்கவில்லை என்ற வரையறைக்கும் உட்பட்டு உயர்நிலை அதிகாரியினுடைய முன் அனுமதியின்றி இலக்கியம், சிறுகதை, புதினம், நாடகம், கட்டுரை, கவிதை ஆகியவை பற்றிய நூல்களை எப்பொழுதேனும் வெளியிடலாம்.

(ஆ) நூல் ஒன்றை வெளியிடுவதற்குரிய அனுமதியானது அரசுப் பணியாளர் தன் நேரத்தையும், தன் அலுவல் முறைச் செல்வாக்கையும் நூல் படிகளின் விற்பனை மேம்பாட்டிற்காகப் பயன்படுத்தமாட்டார் என்ற வரையறைக்குட்பட்டு நடைமுறையில் வழங்கப்படும்.

இருப்பினும், தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்கள் உட்பட அரசின் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் யாவற்றிலுமுள்ள ஆசிரியர் அல்லது கல்விசார் பணியாளர் எவரும், தன்னுடைய நேரத்தையும் அலுவல் முறை செல்வாக்கையும் கட்டுரைகளின் அல்லது புத்தகங்களின் விற்பனையை அதிகரிப்பதற்குப் பயன்படுத்தக் கூடாது எனும் வரையறைக்கும், அவ்வெளியீடுகள் அரசின் எந்தச் சட்டங்களுக்கும் கொள்கைகளுக்கும் தொடர்புடையதாகாது என்றும் மற்றும் கூறு (ஈ)-இன் காப்புரைகள் அவ்வெளியீட்டாளருக்கு பொருந்தாது எனும் வரையறைக்குட்பட்டு, தன்னுடைய மேலலுவலரின் அனுமதியின்றி தொழில்முறை மற்றும் கல்வி சார் பொருள்களில் நூல்களை வெளியிடலாம்.

(இ) கல்வி நிறுவனங்களது பயன்பாட்டிற்குரிய பாடநூல்கள் நீங்கலாக பிற நேர்வுகளில் எல்லாம், வெளியீட்டாளர்களிடமிருந்து "பங்குவீத உரிமை அடிப்படையில்" ஊதியம் பெறுவதற்கு அனுமதி வழங்கப்படும். பாடநூல்களைப் பொறுத்த நேர்வில், அரசுப் பணியாளர் நூல் படிகளின் விற்பனையில் எத்தகைய ஈடுபாடும் கொள்ளக்கூடாது மற்றும் வெளியீட்டாளரிடமிருந்து ஊதியமாக ஒரு மொத்தத் தொகையை மட்டுமே அவர் பெறுவதற்குமான வரையறைக்குட்பட்டு ஊதியம் பெறுவதற்கு அனுமதி வழங்கப்படும்.

இருப்பினும், தொழில் மற்றும் கல்விசார் பொருள்களில் நூல்கள் இயற்றும் அரசின் அனைத்து கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களின் கற்பிப்பு அல்லது கல்விசார் பணியாளர் எவரும் அந்நூல்கள் பாடநூல்களாகவோ பொது நூல்களாகவோ இருப்பினும் பங்கு வீத உரிமை அடிப்படையில் மதிப்பூதியம் பெறலாம்.

இருப்பினும் இலக்கியம், சிறுகதை, புதினம், நாடகம், கட்டுரை, கவிதை ஆகியன குறித்து நூல்கள் எழுதும் அரசுப் பணியாளர் ஒருவர் வெளியீட்டாளரிடமிருந்து அவர் பெறும் ஊதியத்தைப் பற்றி குறிப்பிடப்பட்ட அதிகாரிக்கு உடன் தெரிவிக்க வேண்டும்.

விளக்கம் :- ஒரு புத்தகமானது பாடநூலா அல்லது பொது நூலா எனத் தீர்மானிப்பதற்கு. தொடக்க மற்றும் இடைநிலைப் பள்ளிகளுக்கான பாடநூல்களைப் பொறுத்த வரையில் அவை பள்ளிப் பாடதிட்டத்தின்படி எழுதப்பட்டு பாடநூல் குழுவின் ஏற்புக்கு அனுப்பி வைக்கப்பட்டவையா என்பதையும், கல்லூரிகளுக்கான பாடநூல்களைப் பொறுத்தவரையில் அவை பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தின்படி எழுதப்பட்டு ஏற்புக்காக உரிய பல்கலைக்கழகக் குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டவையா என்பதையும் அடிப்படையாகக் கொள்ள வேண்டும். பாடநூலாக ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய பொது நூல் எதுவும் இப்பிரிவுக் கூறின் நோக்கங்களுக்காக பின்னர் பாடநூலாகக் கருதப்படக் கூடாது.

(ஈ) அரசுப் பணியாளர், அரசின் சட்டங்கள் அல்லது கொள்கைகள் குறித்ததொரு நூலை வெளியிடுவதற்குரிய அனுமதிக்காக அரசுக்கு விண்ணப்பிக்கும் பொழுது அதன் கையெழுத்துப்படியை கூர்ந்தாய்வு செய்வதற்காக அதனை அவர் அரசுக்கு அனுப்ப வேண்டும்.

(உ) பாடநூல் குழுவில் உறுப்பினராக உள்ள அரசுப் பணியாளர் எவரும் அக்குழுவில் அவர் உறுப்பினராக உள்ள காலத்தில் ஏற்பளிக்கப்பெற்ற பள்ளியின் பயன்பாட்டிற்காக எந்த பாடநூலையும் எழுதவோ, பதிப்பிக்கவோ கூடாது.

விளக்கம் :- ஏற்பளிக்கப்பட்ட பள்ளி என்பது அரசால் பராமரிக்கப்படும் அல்லது அரசின் ஏற்புடன் தொடங்கப்பட்ட அல்லது தமிழ்நாடு கல்வி விதிகளின் கீழ் அல்லது 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொடக்கக்கல்விச் சட்டத்தின் (1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் எண்.VIII) கீழ் இயற்றப்பட்ட விதிகளின் கீழ் ஏற்பு அளிக்கப்பட்ட பள்ளியைக் குறிப்பிடுவதாகும்.

(5) சுற்றுப் பயணம் புரியும் அலுவலராக உள்ள அரசுப் பணியாளர் அரசின் முன் அனுமதியின்றி அவரது சீருந்தினை ஓட்டுவதற்காக, அவருக்கு அளிக்கப்பட்டுள்ள அலுவலக உதவியாளரை ஈடுபடுத்திக் கொள்ளலாம். ஆனால் அத்தகைய வேலையானது அலுவலருக்கும் அலுவலக உதவியாளருக்கும் இடையே அமைந்ததொரு தனிப்பட்ட ஈடுபாடாக இருக்கும். மேலும் அது அத்தகைய அலுவலக உதவியாளரின் இயல்பான அலுவல் பணியின் பகுதியாகவோ, இயல்பான பணிக்கு எவ்வகையிலும் குறுக்கீடாகவோ இருக்கக் கூடாது.

விளக்கம் :- இந்தத் துணை விதியானது சென்னை மாநகருக்கு வெளியே சுற்றுப்பயணம் மேற்கொள்ள வேண்டிய பணியினை உள்ளடக்கிய, சென்னையில் அலுவலகத்தைக் கொண்டுள்ள அலுவலர்களுக்கும் பொருந்தும்.

(6) பண வரவை அல்லது செலவை உள்ளடக்கிய கொள்முதல் செய்தலை அல்லது தனிப்பட்ட நடவடிக்கைகளில் ஓர் அலுவலர் பிறிதொரு அரசுப்பணியாளரை அல்லது தமிழ்நாடு கடைநிலைப் பணியிலுள்ளவரை ஈடுபடுத்துதல் மிகவும் கடுமையாகத் தடை செய்யப்பட்டுள்ளது. ஏமாற்றுதலையும் பணம் பறித்தலையும் தடுப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளிலும் நிலையான கண்காணிப்பு தேவைப்படக்கூடியதாக இருப்பினும், தனக்கு ஊர்தி வசதி செய்து தருவதில் அல்லது தேவையானவற்றை வழங்குவதில், அரசுப்பணியாளர் ஒருவரை அல்லது தமிழ்நாடு கடைநிலைப் பணியிலுள்ளவரை அலுவலர் பயன்படுத்திக் கொள்வதை இந்த விதியிலுள்ள எதுவும் தடை செய்யாது.

(7) மருத்துவ அலுவலர் எவரும் தன் பெயரிலோ, தன்னுடைய மனைவியின் பெயரிலோ, தன்னைச் சார்ந்து வாழ்வோரது பெயரிலோ தனிப்பட்ட மருத்துவ இல்லம், மருத்துவமனை, மருத்துவ ஆய்வகம் அல்லது அதுபோன்ற அமைப்பு ஒன்றை நடத்தவோ அதில் ஏதேனும் பணத் தொடர்பானதொரு ஈடுபாடு கொள்ளவோ கூடாது. மேலும் அவர் தன் சொந்த இல்லத்தில் பணம் செலுத்திச் சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு 24 மணி நேரத்திற்கு மேல் வழக்கமாக இடவசதி அளித்தல் கூடாது. ஆயினும், அவர் தனியார் மருத்துவமனையொன்றில் நோயாளர்களுக்குச் சிகிச்சை அளிக்கலாம். ஆனால் அந்த மருத்துவமனையானது அவருக்குரிய நோயாளர்களை அனுமதிப்பதற்காக ஒதுக்கப் பெற்றிருக்காமலும், பதிவு பெற்ற மருத்துவத் தொழில் புரிகின்ற எவரது நோயாளர்களையும் அனுமதிப்பதாகவும் இருத்தல் வேண்டும்.

(8) அரசுப் பணியாளர் எவரும் ஏதேனும் நிறுவனம், பரஸ்பர நலச் சங்கம் அல்லது கூட்டுறவுச் சங்கத்தில் சம்பளம் பெறும் ஒரு வேலையை ஏற்றுக் கொள்ளவோ அல்லது ஏதேனும் ஆயுள் ஈட்டுறுதி நிறுவனத்திற்கு அல்லது சங்கத்திற்கு சம்பளம் அல்லது தரகு மூலம் பணம் பெறும் ஒரு முகவராகப் பணிபுரியவோ கூடாது.

இருப்பினும், அரசுப் பணியாளர் ஒருவர் அவரது துறைத் தலைவருடைய ஒப்பளிப்பு மற்றும் அத்தகைய துறைத் தலைவரிடமிருந்து, அவர் மேற்கொண்டுள்ள பணியானது அவருடைய அலுவலகப் பணிகளுக்கு, இடையூறு இல்லாமல் நிறைவேற்றப்படும் என்றும் அத்தகைய அரசுப் பணியாளர் எத்தகைய ஊதியமும் பெறமாட்டார் என்றும் உரியவாறான சான்றிதழ் ஆகியவற்றை முதற்கண் பெற்றிருந்தால் பரஸ்பர நலச் சங்கத்தின் மேலாண்மையில் பங்கு கொள்ளலாம்.

(9) எல்லா வகையான அரசுப் பணியாளர்களும் கூட்டுறவுச் சங்கங்களது மேம்பாட்டில் பங்கு கொள்ள உரிமை உடையவர்களாவர். ஆனால் அரசுப்பணியாளர் எவரும் அரசின் அனுமதி ஆணை பெற்றாலன்றி மற்றப்படி அச்சங்கத்தின் பணிகளில் பங்கேற்பதால் அவருடைய அலுவல் பணிகள் தடைபடாது எனும் நிலை இருந்தாலன்றி முழுவதுமான அரசுப்பணியாளர்களை அல்லது ஒரு பகுதி அரசுப் பணியாளர்களையும் ஒரு பகுதி தல ஆட்சி நிறுவனப் பணியாளர்களையும் உறுப்பினர்களாகக் கொண்டுள்ள எந்த ஒரு கூட்டுறவுச் சங்கத்திலும் பதவி வகிக்கவோ அல்லது அச்சங்கத்தின் நடவடிக்கைகளை மேலாண்மை செய்வதற்கென அமைக்கப்பட்ட ஏதேனும் குழுவில் பணி புரியவோ கூடாது. அச்சங்கத்தில் பங்கேற்கும் அரசுப்பணியாளர்கள் அதில் தாம் பங்கேற்ற நாளிலிருந்து ஒரு திங்களுக்குள் தமது அப்பங்கு பற்றியும் தமது பங்கின் தன்மை பற்றிய விவரங்களையும் அரசுக்குத் தெரிவிக்க வேண்டும்.

இருப்பினும் -

(i) மீன் துறை அலுவலர்கள், தமிழ்நாடு மீன் துறை இயக்குநரின் முன் அனுமதி ஆணையுடன், தம் அலுவலகப் பணிகளுக்கு இடையூறாக அமையாமலும், தனிப்பட்ட ஊதியம் ஏதும் பெறாமலும் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களில் அலுவலால் செயலாளர்களாகவோ தலைவர்களாகவோ பணிபுரியலாம்.

(ii) கூட்டுறவுத் துறையில் பணிபுரிபவர்களைத் தவிர எல்லா வகையான அரசுப் பணியாளர்களும் கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்களில் பதவி வகிக்கவோ அல்லது அதன் நடவடிக்கைகளை மேலாண்மை செய்வதற்கென அமைக்கப்பட்ட ஏதேனும் குழுவில் பணியாற்றவோ செய்யலாம்.

**விளக்கம் :-** மேலே குறிப்பிடப்பட்ட கூட்டுறவு வீடுகட்டும் சங்கங்கள் என்பவை தம்முடைய உறுப்பினர்கட்கு வீடுகள் கட்டுவதனை அல்லது அவர்கள் வீடு கட்டுவதற்காகக் கடன்கள் வழங்குவதனைக் குறிக்கோளாகக் கொண்ட எல்லா வகையான கூட்டுறவுச் சங்கங்களையும் குறிப்பனவாகும்.

(iii) காவல்துறை அலுவலகப் பணியாளர்கள் உரிய காவல் துறை கண்காணிப்பாளரின் அனுமதியுடன் தங்களுடைய அலுவலகப் பணிகளுக்கு இடையூறுமின்றி ஏதேனும் கூட்டுறவுச் சங்கத்தில் பதவி வகிக்கலாம் அல்லது சங்கத்தின் நடவடிக்கைகளை மேலாண்மை செய்வதற்கென அமைக்கப்பட்ட ஏதேனும் குழுவில் பணிபுரியலாம்.

(iv) தொழில் துறை அலுவலர்கள் அவர்களது அலுவலகப் பணிகளுக்கு இடையூறு ஏற்படாமலும் ஊதியம் பெறாதவாறும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் மேலாண்மைக் குழுவில் உறுப்பினராகப் பணியாற்றுமாறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரால் நியமனம் செய்யப்படும் போது அவர்களுக்கு அரசின் அல்லது அதிகாரி எவரது அனுமதி ஆணையும் தேவையில்லை.

(v) கரும்பு வளர்ச்சி அலுவலர்கள், மாநிலக் கரும்பு வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் உரிய வட்டார இணைப்பதிவாளர் பதவி நிலையிலுள்ள வேளாண் துறையைச் சார்ந்த அலுவலர்கள், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரால் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் குழுக்களில் பணியாற்றுவதற்கு நியமிக்கப்படும் போதெல்லாம் அவர்களுக்கு அரசின் அல்லது யாரேனும் அதிகாரியின் அனுமதி ஆணை தேவையில்லை.

(vi) அரசுப் பள்ளிகளைச் சார்ந்த பணியாளர்கள் நேர்வுக்கேற்ப பள்ளிகளின் கோட்ட ஆய்வாளர் அல்லது மகளிர் பள்ளிகள் ஆய்வாளரின் முன் அனுமதியுடன் தொடர்புடைய பள்ளி மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலையில் அலுவலர் பொறுப்பு ஏற்கலாம்.

(10) உள் விதி (8)-ல் குறிப்பிடப்பட்ட ஒப்பளிப்புக்கும் சான்றிதழுக்கும் உட்பட்டவாறு அடிப்படை விதிகள் 46 மற்றும் 47-ன் கீழமைந்த துணை விதி (4)ல் அடங்கியது எதுவாயினும், முழுவதுமாக அரசுப் பணியாளர்களைக் கொண்ட அல்லது பகுதியாக அரசுப் பணியாளர்களையும், பகுதியாகத் தல ஆட்சி நிறுவனங்களின் பணியாளர்களையும் கொண்ட அல்லது பகுதியாக அரசுப் பணியாளர்களையும், பகுதியாக அரசுப் பயிற்கிப் பள்ளிகள் அல்லது கல்லூரிகளின் மாணவர்களையும் கொண்டதொரு கூட்டுறவுச் சங்கத்தில் ஓர் உறுப்பினராக உள்ள அரசுப் பணியாளர் ஒருவர் அச்சங்கத்தின் கணக்குகளைப் பராமரிப்பதற்காக ஊதியம் பெற்றுக் கொள்ளலாம்.

(11) கூட்டுறவுத் துறையைச் சார்ந்த அரசுப் பணியாளர்களின் நலனுக்கெனப் பதிவு செய்யப்பெற்ற ஒரு கூட்டுறவுச் சங்கமானது வங்கியின் மேலாண்மைக் குழுவில் அல்லது ஒன்றியத்தின் ஆட்சிக் குழுவில் இடம் பெறவில்லையெனில் அது கூட்டுறவு மைய வங்கி ஒன்றில் அல்லது ஒரு தணிக்கை அல்லது மேற்பார்வை செய்யும் ஒன்றியமொன்றில் உறுப்பினராகலாம்.

(12) துறைத் தலைவர்கள் அவரவர் துறைகளில் பணியாற்றும் அரசுப் பணியாளர்களை பொறுத்து அரசு பங்கேற்க ஒப்புக் கொண்டுள்ள கூட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் குழுக்களில் கலந்து கொள்ள அனுமதிக்கலாம்.

(13) அரசுப் பணியாளர் எவரும் தரகு பிடிப்பாளர் (Tout) ஒருவருடைய நடவடிக்கைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளக் கூடாது.

விளக்கம் :- மேலே குறிப்பிடப்பட்ட உள் விதியில் "தரகு பிடிப்பாளர்" என்னும் சொல்லானது 1879 ஆம் ஆண்டைய வழக்குரைஞர்களது சட்டத்தின் மையச் சட்டம் XVIII 1879-இன் பிரிவு 3-ல் உள்ள பொருளையே கொண்டிருக்கும்.

**விதி 9. நொடிப்பும் வழக்கமான கடன்பாடும்:-**

அரசுப் பணியாளர் ஒருவர் வழக்கமாக கடன்படு நிலையையும் அல்லது தாம் நொடித்துப் போவதையும் தவிர்ப்பதற்கு முயற்சி செய்தல் வேண்டும். அரசுப் பணியாளர் ஒருவர் பண வகையில் நொடித்துப்போனவர் என்று தீர்ப்பளிக்கப்பட்டால் அல்லது அறிவிக்கப்பட்டால் அல்லது இரண்டு ஆண்டுகாலப் பகுதியில் சாதாரண சூழ்நிலையில் தான் திருப்பிக் கொடுக்க முடியாதவாறு சேர்ந்தமைந்ததொரு தொகைக்குக் கடன்பட்டிருந்தால் அல்லது அவருடைய சம்பளத்தில் ஒரு பகுதியானது கடனுக்காக அடிக்கடி சட்டப்படி பறிமுதல் செய்யப்பட்டால் அல்லது அவர் கடன் பொருட்டு தொடர்ச்சியாக இரண்டாண்டு கால அளவுக்கு அவ்வாறு பறிமுதல் செய்யப்பட்டால் அல்லது இரண்டு ஆண்டு கால அளவுக்குள் நடைமுறையிலமைந்த சூழ்நிலைகளில் தான் திருப்பிக் கொடுக்க இயலாததொரு தொகைக்காக பறிமுதல் செய்யப்பட்டால் அவர் இந்த விதியை மீறியிருப்பதாகக் கருதப்பட வேண்டும். ஆனால் இந்த நொடிப்பு அல்லது கடன்பாடானது இயல்பான கவனநிலையில் தான் எதிர்பாராத அல்லது தன் கட்டுப்பாட்டிற்கு மீறிய சூழ்நிலையின் விளைவாக அமைந்ததெனவும் மட்டுமீறிய அல்லது வீண் செலவுப் பழக்கங்களின் காரணமாக அமையவில்லையெனவும் மெய்பித்தால் அவர் அங்ஙனம் கருதப்படமாட்டார். நொடிப்பிற்கான சட்ட நடவடிக்கைகளுக்குட்படுகின்ற அரசுப் பணியாளர் உடனடியாக தான் பணியாற்றும் அலுவலக அல்லது துறையின் தலைவருக்கு அது பற்றிய முழு விவரங்களையும் தெரிவிக்க வேண்டும்.

*** விதி "10. ஏற்பளிக்கப்படாத தகவல் அறிவிப்பு:**

1. அரசுப்பணியாளர் எவரும் அரசின் ஏதேனும் பொது அல்லது சிறப்பாணையை பெற்று இருந்தாலன்றி அல்லது தனக்கு ஒப்படைக்கப்பட்ட கடமைகளை நல்லெண்ணத்தில் நிறைவேற்றுகிற முறைக்கு உகந்தவாறு அமைந்தாலன்றி நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏதேனும் அலுவலக ஆவணத்தை அல்லது அதன் பகுதியை அதிகாரம் அளிக்கப்படாத நிலையில் தெரிவிக்கக்கூடாது.

2. இவ்விதியானது, மாநில அரசு வழக்குரைஞர்கள், மாநில அரசு குற்றவியல் வழக்குரைஞர்கள், குறிப்பிட்டதொரு பணியை, தங்களுடைய சொந்தத் தொழிலுக்கு இடையூறு இல்லாமல் செய்ய அரசால் ஈடுபடுத்தப்படும் முழு நேர அலுவலர்களல்லாத மற்ற அலுவலர்கள் ஆகியோருக்கு உள்விதி (1) பொருந்தும். ஆனால் பொதுவாக குறிப்பிட்ட உள்ளூர்ப் பகுதிகளில் அல்லது சிறப்பு நிலையில் குறிப்பிட்டதொரு வழக்கு அல்லது வழக்குகளின் பிரிவுத் தொடர்பில் அரசின் பணியினை செய்வதற்கு ஈடுபடுத்தப்படும் மாநில அரசுச் சிறப்புக்

* G.O.Ms.No.38, P & A.R, Dt. 03.04.2009

குற்றவியல் அரசு வழக்குரைஞர்களுக்கு மற்றும் உரிமையியல் வழக்குரைஞர்களுக்கு இந்த உள்விதி பொருந்தாது.

**விதி 11. அச்சு ஊடகம், தொலைக்காட்சி அல்லது வானொலியுடன் தொடர்பு:-**

(1) அரசின் முன் அனுமதி இல்லாமல் அரசுப் பணியாளர் எவரும், எந்த ஒரு நாளிதழ் அல்லது பிற காலமுறை வெளியீட்டினை முழுமையாகவோ பகுதியாகவோ சொந்தமாகக் கொண்டிருத்தலோ அல்லது அதன் பதிப்பு அல்லது நிருவாகத்தில் பங்குகொள்வதோ அல்லது நடத்துவதோ கூடாது.

(2) அரசின் அல்லது இதன்பொருட்டு அரசால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஏதேனும் ஆணைக்குழுவின் அல்லது அலுவலரின் முன் அனுமதியின்றி அல்லது தன்னுடைய கடமைகளை நேர்மையுடன் நிறைவேற்றுகையில், எந்த ஒரு நாளிதழுக்கோ பிற காலமுறை வெளியீடுகளுக்கோ, கட்டுரையை, அளிப்பதோ அல்லது பெயரில்லாமலோ தன் பெயரிலோ கடிதம் எதனையும் எழுதுவதோ கூடாது.

இருப்பினும், அப்பங்களிப்பு அல்லது கடிதம் எழுதுதல் என்பது முற்றிலும் இலக்கியம், கலை அல்லது அறிவியல் தன்மையுடையதாயிருப்பின் அதற்கு அத்தகு ஒப்பளிப்புத் தேவையில்லை.

(3) அரசின் அல்லது இதன்பொருட்டு அரசால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஏதேனும் ஆணைக்குழுவின் அல்லது ஏதேனும் அலுவலரின் முன் அனுமதியின்றி அல்லது தன்னுடைய கடமைகளை நம்பிக்கையுடன் நிறைவேற்றுகையில், தொலைக்காட்சி நிகழ்ச்சியிலோ வானொலி ஒலிபரப்பிலோ பங்கேற்கக்கூடாது.

இருப்பினும், அத்தகைய தொலைக்காட்சி அல்லது வானொலி நிகழ்ச்சி முற்றிலுமாக இலக்கியம் அல்லது கலைத்திறன் அல்லது அறிவியல்புடையதாக அமைந்தாலோ, உரிய அரசுப் பணியாளர் கொள்கையினை உருவாக்கும் நிலையில் அல்லது தொலைக்காட்சி அல்லது வானொலி நிகழ்ச்சிக்குரிய பொருளைச் செயற்படுத்தும் நிலையில் பொறுப்பேற்றுள்ளவராக இருந்தாலோ அத்தகைய ஒப்பளிப்பு எதுவும் வேண்டப்படுவதில்லை.

(4) தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பங்குகொள்ள அல்லது வானொலியில் உரையொன்றினை நிகழ்த்த அழைக்கப்படுகின்ற அல்லது விரும்புகின்றவரும், உள்விதி (3)-ன்கீழ் முன் அனுமதி பெற வேண்டியவருமான அரசுப் பணியாளர் ஒருவர், தொலைக்காட்சி நிகழ்ச்சி தொடர்பான விவரங்களை அல்லது வானொலிப் பேச்சுக்குரிய பொருளினை முறையான வழியில் அரசுக்குத் தெரிவிக்க வேண்டும். மேலும், வேண்டப்பட்டால் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பங்கு கொள்வதற்கு முன்னர் அல்லது வானொலி உரை நிகழ்த்தப்படுவதற்கு முன்னர், தொலைக்காட்சி நிகழ்ச்சிக்கு தொடர்புடைய முழு விவரங்களையும் மற்றும் வானொலி உரை ஒலிபரப்புவதற்கு தொடர்புடைய முழுப்பகுதியையும் அரசின் ஏற்புக்காக அனுப்ப வேண்டும்.

(5) உள்விதிகள் (3) மற்றும் (4)-ன் காப்புரைகள் தயார் செய்யப்பட்ட "ஒப்புவிப்புகள்" அல்லது கிராமபோன் இசைத்தட்டுகளை இயக்குவதற்கு வேண்டிய மாற்றங்களுடன் பொருந்துவதாகும்.

(6) தொலைக்காட்சி நிகழ்ச்சி அல்லது வானொலி ஒலிபரப்புகள் தொடர்பில், அரசின் அதிகாரங்கள்.

(i) அவரவர் துறைகளில் பணிபுரியும் அரசுப் பணியாளர்களைப் பொறுத்து துறைத் தலைவர்கள்

(ii) தங்களுடைய ஆட்சிக் கட்டுப்பாட்டின் கீழுள்ள "இ", "ஈ" ஆகிய பிரிவுகளைச் சார்ந்த அரசுப் பணியாளர்களைப் பொறுத்து அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்

(iii) அரசுப் பள்ளிகள், இடைநிலைப் பள்ளிகள் மற்றும் பயிற்சிப் பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களைப் பொருத்து மாவட்டக் கல்வி அதிகாரிகள் அல்லது மகளிர் பள்ளி ஆய்வாளர்கள்.

(iv) அரசுக் கல்லூரிகளில் பணிபுரிகின்ற அரசுப் பணியாளர்களைப் பொறுத்தவரை அத்தகைய அரசுக் கல்லூரிகளின் முதல்வர்கள், மற்றும்

(எ) தங்களது கட்டுப்பாட்டின் கீழுள்ள அரசுப் பணியாளர்களைப் பொறுத்தவரை அ, ஆ ஆகிய பிரிவுகளுக்குரிய வேளாண் துறையைச் சார்ந்த அலுவலகத் தலைவர்கள் அனைவரும்.

(7) இவ்விதியானது மாநில அரசு உரிமையியல் வழக்குரைஞர்கள், மாநில அரசுக் குற்றவியல்

வழக்குரைஞர்கள், வேறுவகையில் தங்களுடைய சொந்தத் தொழிலுக்கு இடையூறு இல்லாமல் பணியை செய்ய அரசால் ஈடுபடுத்தப்படும் முழுநேர அலுவலர்களல்லாத மற்ற அலுவலர்கள் ஆகியோருக்கும் பொருந்தும், ஆனால் பொதுவாக, குறிப்பிட்ட உள்ளூர் பகுதிகளில் அல்லது சிறப்பு நிலையில் குறிப்பிட்டதொரு வழக்கு அல்லது வழக்குகளின் பிரிவுத் தொடர்பில் அரசின் பணியினை செய்வதற்கு ஈடுபடுத்தப்படும் மாநில அரசுச் சிறப்புக் குற்றவியல் வழக்குரைஞர்களுக்கு மற்றும் உரிமையியல் வழக்குரைஞர்களுக்கு இவ்விதி பொருந்தாது.

**விதி 12 அரசைக் குறை கூறல்**

கீழே குறிப்பிட்டுள்ள விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய தகவலை அல்லது கருத்தை அரசுப் பணியாளர் எந்த ஒரு வானொலி ஒலிப்பரப்பிலும் அல்லது பெயரிடப்படாமலோ, தன்னுடையப் பெயரிலோ, பிறர் பெயரிலோ வெளியிடப்படும் ஆவணத்திலும் அல்லது செய்தித்தாளுக்கு அனுப்பப்படும் தகவலிலும் அல்லது வெளிப்படையான பேச்சிலும், நிகழ்ச்சி குறித்த அறிக்கையினை அல்லது கருத்தினை வெளிப்படுத்தக்கூடாது.

(i) மைய அல்லது ஒரு மாநில அரசின் நடப்பு அல்லது அண்மைக்காலக் கொள்கைபற்றி அல்லது நடவடிக்கை பற்றி எதிர்மறையான திறனாய்வு அல்லது

(ii) இம்மாநில அரசுக்கும் வேறு எந்த அரசுக்கும் இடையே உள்ள உறவில் குழப்பம் ஏற்படுத்தக்கூடியவை அல்லது

(iii) மைய அரசுக்கும் எந்த ஓர் அயல் நாட்டு அரசுக்கும் இடையே உள்ள உறவில் குழப்பம் ஏற்படுத்தக் கூடியவை.

இருப்பினும், இவ்விதியில் இடம் பெற்றுள்ள எதுவும், அரசுப் பணியாளர் தன்னுடைய அலுவல் பதவித் தகுதியில் அல்லது தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட கடமைகளை உரியவாறு நிறைவேற்றுகையில் வெளியிடும் எந்த அறிக்கைக்கும் அல்லது தெரிவிக்கும் கருத்துக்கும் பொருந்தாது.

மேலும், ஏற்பு பெற்ற அரசுப் பணியாளர் சங்கத்தின் அலுவலக உறுப்பினர் எனும் முறையில் அரசுப் பணியாளர்களின் பணி நிலைமையை பாதுகாக்கவோ பணி நிலையில் மேம்பாட்டை அடையப்பெறவோ அரசுப் பணியாளரால் தெரிவிக்கப்படும் உண்மையான கருத்துக்களுக்கு, இவ்விதிகளிலுள்ள எதுவும் பொருந்தாது.

(2) தன்னுடைய அலுவலகக் கடமைகளை நிறைவேற்றும் வகையில் அல்லாமல், அரசுப் பணியாளர் எவரும் அரசின் நடவடிக்கையைத் திறனாய்வு செய்கின்ற அல்லது கல்வி அல்லது அதுபோன்ற நிறுவனங்களுக்கு ஆதரவாக அரசு விதிகள் அல்லது ஆணைகளின் கீழ் அனுமதிக்கத் தக்க மானியங்கள் வழங்குவது நீங்கலாக பிற சில நடவடிக்கைகளை எடுக்குமாறு அரசைக் கேட்டுக் கொள்ளும் சொற்பொழிவுகள் ஆற்றப்படக்கூடிய அல்லது நிறைவேற்றப்படக் கூடிய வாய்ப்பான முறையில் அமைந்த எந்த ஓர் அலுவல் சார்பற்ற கூட்டத்திற்கு அல்லது மாநாட்டிற்குத் தலைமைதாங்கவோ அல்லது அதனை அமைப்பதில் பங்கேற்கவோ, அதில் முக்கிய பங்கு வகிக்கவோ, பேசவோ கூடாது.

**விளக்கம் :** தங்களுடைய, சட்டப்படியான அலுவல் நடவடிக்கைகளுக்காக, மாவட்டக் கழகங்கள், நகராட்சி மன்றங்கள் மற்றும் சட்டப்படி நிறுவப்பட்டுள்ள அல்லது அரசால் உருவாக்கப்பட்டுள்ள இதுபோன்ற அமைப்புகள் மற்றும் அரசின் ஏற்புப் பெற்ற அரசுப் பணியாளர் சங்கங்கள் மற்றும் அம்மன்றங்கள் அல்லது சங்கங்களின் கிளைகள் வழக்கமாக நடத்தும் கூட்டங்களும், சென்னை மாநகர செரீப் நடத்தும் கூட்டங்களும் இவ்விதியின் நோக்கங்களுக்காக "அலுவல்சாரா" கூட்டங்களாகாது.

(3) ஏதேனும் ஆவணத்தை வெளியிட அல்லது செய்தி இதழுக்குச் செய்தி அனுப்ப அல்லது பொதுமேடையில் பேச விரும்புகின்ற அரசுப் பணியாளர், அதிலுள்ள விவரங்கள் தொடர்பாக, இவ்விதியில் ஏற்படுத்தப்பட்டுள்ள வரையறைகள் பொருந்தும் தன்மை குறித்து ஐயம் ஏற்பட்டால் அவ்வாறு தாம் வெளியிட அல்லது பேச விரும்பும் செய்திகளடங்கிய ஆவணத்தின் படியொன்றினை அரசுக்கு அனுப்ப வேண்டும். அதனடிப்படையில் அரசு பிறப்பிக்கக் கூடிய ஆணைகளின்படி அவர் செயற்பட வேண்டும்.

(4) இவ்விதியானது மாநில அரசு வழக்குரைஞர்கள், மாநில அரசு குற்றவியல் வழக்குரைஞர்கள்,

குறிப்பிட்டதொரு பணியைத் தங்களுடைய சொந்தத் தொழிலுக்கு இடையூறு இல்லாமல் செய்ய அரசால் ஈடுபடுத்தப்படும் முழு நேர அலுவலர்களல்லாத மற்ற அலுவலர்கள் ஆகியோருக்குப் பொருந்தும். ஆனால் பொதுவாக குறிப்பிட்ட உள்ளூர்ப் பகுதிகளில் அல்லது சிறப்பு நிலையில் குறிப்பிட்டதொரு வழக்கு அல்லது வழக்குகளின் பிரிவுத் தொடர்பில் அரசின் பணியினை செய்வதற்கு ஈடுபடுத்தப்படும் மாநில அரசுச் சிறப்புக் குற்றவியல் அரசு வழக்குரைஞர்களுக்கு மற்றும் உரிமையியல் வழக்குரைஞர்களுக்கு இவ்விதி பொருந்தாது.

**விதி 13. குழு அல்லது ஏதேனுமொரு அதிகாரக் குழுவின்முன் சான்றளித்தல்:-**

(1) உள்விதி (3)இல் உள்ள காப்புரையின்படி, அரசுப்பணியாளர் எவரும் அரசின் முன் அனுமதி இல்லாமல், எந்த ஒரு நபராலும், குழுவாலும் அல்லது ஆணைக்குழுவாலும் நடத்தப்படும் விசாரணை தொடர்பில் சான்றுமூலம் அளிக்கக் கூடாது.

(2) உள்விதி (1) இன்படி அத்தகைய சான்றுமூலம் அளிக்க அனுமதிக்கப்பட்டுள்ள அரசுப் பணியாளர் எவரும் சான்று மூலம் அளிக்கையில், மைய அரசின் அல்லது ஒரு மாநில அரசின் கொள்கையை அல்லது எந்த நடவடிக்கையைப் பற்றியும் விமர்சனம் செய்யக்கூடாது.

(3) இவ்விதியில் அடங்கப் பெற்றது எதுவும் பின்வருவனவற்றுக்கு பொருந்தாது:-

(அ) அரசால், நாடாளுமன்றத்தால் அல்லது ஒரு மாநில சட்டமன்றத்தால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் விசாரணையில் அளிக்கப்படும் சான்றுமூலம்.

(ஆ) நீதிமன்ற விசாரணையில் அளிக்கப்படும் சான்றுமூலம் அல்லது

(இ) அரசின் சார்நிலை அதிகாரிகளால் ஆணையிடப்படும் எந்தவொரு துறை விசாரணையிலும் அளிக்கப்படும் சான்றுமூலம்.

(4) இவ்விதியானது மாநில அரசு உரிமையியல் வழக்குரைஞர்கள், மாநில அரசுக் குற்றவியல் வழக்குரைஞர்கள், குறிப்பிட்டதொரு பணியைத் தங்களுடைய சொந்தத் தொழிலுக்கு இடையூறு இல்லாமல் செய்ய அரசால் ஈடுபடுத்தப்படும் முழு நேர அலுவலர்களல்லாத மற்ற அலுவலர்கள் ஆகியோருக்குப் பொருந்தும். ஆனால், பொதுவாக, குறிப்பிட்ட உள்ளூர்ப் பகுதிகளில் அல்லது சிறப்பு நிலையில் குறிப்பிட்டதொரு வழக்கு அல்லது வழக்குகளின் பிரிவுத் தொடர்பில் அரசின் பணியினை செய்வதற்கு ஈடுபடுத்தப்படும் மாநில அரசுச் சிறப்புக் குற்றவியல் வழக்குரைஞர்களுக்கு மற்றும் உரிமையியல் வழக்குரைஞர்களுக்கு இவ்விதி பொருந்தாது.

**விதி 14. * அரசியலிலும் தேர்தல்களிலும் பங்கேற்றல் மற்றும் தேர்தல்கள் தொடர்பில் அரசுப் பணியாளர்களின் நிலை:-**

(1) அரசுப் பணியாளர் எவரும், எந்த ஒரு அரசியல் கட்சியிலும் அல்லது அரசியல் நோக்குடையதாக உள்ளதென நம்ப இடமளிக்கத்தக்கதாக உள்ள எந்த ஓர் அமைப்பிலும் உறுப்பினராகவோ அல்லது அதில் எவ்வகையிலேனும் இணைந்திருப்பவராகவோ இருக்கக்கூடாது. மேலும் அதில் பங்கு கொள்ளவோ சந்தா செலுத்தவோ எந்த ஒரு அரசியல் இயக்கத்திற்கும் நடவடிக்கைக்கும் எந்த ஒரு முறையிலேனும் உதவிடவோ கூடாது. அவர் அரசியல் நடுவுநிலைமையைப் பேணுவதுடன் அவ்வாறே தோற்றமளிக்கவும் வேண்டும். அவர் தேர்தலில் எந்த ஒரு அரசியல் கட்சிக்கோ அல்லது எந்த ஒரு வேட்பாளருக்கோ ஆதரவாக உள்ளவர் எனும் ஐயப்பாட்டிற்கு இடம் அளிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

* (அரசாணை எண்.109, ப(ம)நி.சீ., துறை, நாள் : 5.3.1990)

(2) சட்டப்படி அமைக்கப்பட்ட அரசினை நேரடியாக அல்லது மறைமுகமாகக் கவிழ்க்கும் அல்லது கவிழ்க்கச் செய்யும் எந்த ஒரு இயக்கத்திலும் அல்லது செயலிலேனும் பங்கு கொள்வதினின்றும், அதற்கு உதவிடும் பொருட்டு சந்தா செலுத்துவதினின்றும், வேறு ஏதேனும் முறையில் உதவி செய்வதினின்றும் தமது குடும்ப உறுப்பினர் எவரையும் தடுக்க முயல்வது ஒவ்வொரு அரசுப் பணியாளரின் கடமையாகும். அவ்வாறு அந்த இயக்கத்திற்கு அல்லது செயலில் பங்கு கொள்வதினின்றும், அதற்கு உதவிடும் பொருட்டு சந்தா செலுத்துவதினின்றும் அல்லது வேறு ஏதேனும்

முறையில் உதவி செய்வதினின்றும் தமது குடும்ப உறுப்பினர் எவரையும் தடுக்க இயலாத அரசுப் பணியாளர் அது பற்றி அரசுக்குத் தெரிவிக்க வேண்டும்.

(3) எந்த ஒரு கட்சியேனும் அரசியல் கட்சியா அல்லது அரசியலில் பங்கு கொண்டுள்ள ஏதேனும் ஒரு அமைப்பா அல்லது இவ்விதிக்குட்பட்ட ஏதேனும் இயக்கமா அல்லது இவ்விதிக்குட்பட்ட ஏதேனும் இயக்கமா அல்லது செயலா என்பதில் ஐயப்பாடு எழுமானால் அதன்மீது அரசின் முடிவே இறுதியானதாகும்.

(4) அரசுப் பணியாளர் எவரும் எந்த ஒரு சட்டமன்ற அல்லது உள்ளாட்சிமன்ற தேர்தலுக்கேனும் ஆதரவு திரட்டுவதோ, மற்றவகையில் குறுக்கிடுவதோ தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தவோ தேர்தலில் பங்கு கொள்வதோ கூடாது.

இருப்பினும்

(i) அத்தேர்தலில் வாக்களிக்கத் தகுதிபெற்ற அரசுப்பணியாளர், வாக்களிப்பதற்கான தன் உரிமையைப் பயன்படுத்தலாம். ஆனால், அவர் அவ்வாறு செய்யும்போது, தாம் வாக்களிக்க எண்ணியுள்ள அல்லது வாக்களித்த முறைபற்றிக் குறிப்பிடக்கூடாது.

(ii) அரசுப் பணியாளர், அப்போதைக்கு நடைமுறையிலுள்ள எந்த ஒரு சட்டத்தினால் அல்லது சட்டத்தின்படி தனக்கு விதிக்கப்பட்ட கடமையை உரியவாறு நிறைவேற்றும் வகையில், தேர்தலை நடத்துவதில் உதவி செய்கிறார் எனும் காரணத்தினால் அவர் இவ்விதியின் ஏற்பாடுகளை மீறியவராகக் கருதப்படமாட்டார்.

**விளக்கம் : 1**

அரசுப் பணியாளர் தம்முடைய மனைவியை அல்லது தம்முடன் வசிக்கும் தமது குடும்ப உறுப்பினரை அல்லது எவ்வகையிலேனும் தம்மைச் சார்ந்திருப்பவரை, எந்த ஒரு சட்டமன்ற அல்லது உள்ளாட்சி மன்றத் தேர்தலிலேனும் நிற்பதை அல்லது மற்ற வேட்பாளர்களுக்காக ஆதரவு திரட்டுவதை, இந்த உள்விதியில் இடம் பெற்றுள்ள எதுவும் தடை செய்வதாகக் கருதப்படக்கூடாது.

**விளக்கம் : 2**

அரசுப் பணியாளர் தம்மீது அல்லது தம்முடைய ஊர்தியின் மீது அல்லது தம்முடைய இருப்பிடத்தில் எந்த ஒரு தேர்தல் சின்னத்தையேனும் வெளிப்படையாக வைத்திருந்தால் அச்செயலானது ஒரு தேர்தல் தொடர்பில் அவர் தம்முடைய செல்வாக்கைப் பயன்படுத்தியதாகவே இவ்விதியின்படி கருத இடமளிப்பதாகும்.

(5) அரசுப் பணியாளரால் செய்யப்படும் ஆட்சி எதிர்ப்புப் பிரச்சாரம் அல்லது அவருடைய விசுவாசமற்ற மன உணர்ச்சிகளின் வெளிப்பாடு, அவரைப் பணியிலிருந்து நீக்குவதற்குப் போதிய காரணமாகக் கருதப்படும். அரசு ஓய்வூதியர் நேர்வில், இந்நடத்தை குறித்து குடிமுறைப்பணி ஒழுங்கு முறை விதிகளின் 351-ஆவது பிரிவுக் கூறின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

(6) தேர்தலில் வேட்பாளரின் வேட்புமனுவை முன்மொழியும் அல்லது வழிமொழியும் அல்லது தேர்தல் முகவராகச் செயற்படும் அரசுப் பணியாளர் இவ்விதியை மீறியவராகக் கருதப்படுவார்.

இவ்விதியானது மாநில அரசு உரிமையியல் வழக்குரைஞர்கள், மாநில அரசுக் குற்றவியல் வழக்குரைஞர்கள், குறிப்பிட்டதொரு பணியைத் தங்களுடைய சொந்தத் தொழிலுக்கு இடையூறு இல்லாமல் செய்ய அரசால் ஈடுபடுத்தப்படும் முழுநேர அலுவலர்களல்லாத மற்ற அலுவலர்கள் ஆகியோருக்கும் பொருந்தும். ஆனால், பொதுவாக, குறிப்பிட்ட உள்ளூர்ப் பகுதிகளில் அல்லது சிறப்புநிலையில் குறிப்பிட்டதொரு வழக்கு அல்லது வழக்குகளின் பிரிவுத் தொடர்பில் அரசின் பணியினை செய்வதற்கு ஈடுபடுத்தப்படும் மாநில அரசுச் சிறப்புக் குற்றவியல் வழக்குரைஞர்களுக்கும் மாநில அரசு உரிமையியல் வழக்குரைஞர்களுக்கும் இவ்விதி பொருந்தாது.

**விதி 14 (அ) சாதிச் சங்கம் எதிலும் உறுப்பினராக இருப்பதற்குத் தடை:**

(1) அரசுப் பணியாளர் எவரும் பின்வருவன போன்ற எந்தவொரு அமைப்பிலும் உறுப்பினராகவோ மற்றவகையில் அதனுடன் தொடர்புடையவராகவோ இருக்கக்கூடாது.

(அ) மதம், இனம், பிறப்பிடம், இருப்பிடம், மொழி, சாதி அல்லது வகுப்பு அல்லது வேறு எந்தக் காரணத்தினாலும் பல்வேறு மத, இன, மொழி அல்லது வட்டாரப் பிரிவுகள் அல்லது சாதிகள் அல்லது வகுப்புகளுக்கிடையே ஒற்றுமைக்கேட்டையோ, பகைமை உணர்வையோ, வெறுப்பையோ அல்லது தீய எண்ணத்தையோ வளர்க்கின்ற அல்லது வளர்க்க முயலுகின்ற எந்த ஓர் அமைப்பும், அல்லது

(ஆ) பல்வேறு மத, இன, மொழி அல்லது வட்டாரப் பிரிவுகள் அல்லது சாதிகள் அல்லது வகுப்புகளுக்கிடையே ஒற்றுமையைப் பேணுவதற்கு இடையூறு செய்யும் நடவடிக்கைகளைக் கொண்ட மற்றும் பொது அமைதியைக் குலைக்கின்ற அல்லது குலைக்குமெனத் தோன்றுகின்ற எந்த ஓர் அமைப்பும், அல்லது.

(இ) தன்னால் நடத்தப்படும் பயிற்சி (Exercise), இயக்கம், உடற்பயிற்சி (Drill) அல்லது அதுபோன்ற நடவடிக்கையில் பங்கு பெறுபவர்கள், குற்ற வன்முறையை அல்லது வன்முறையைப் பயன்படுத்த வேண்டும் என அல்லது பயன்படுத்துவதற்குப் பயிற்சியளிக்கப்பட வேண்டுமெனக் கருதி அல்லது அத்தகைய நடவடிக்கைகளில் பங்கு பெறுபவர்கள் எந்தச் சமய, இன, மொழி அல்லது வட்டாரப் பிரிவு அல்லது சாதி அல்லது வகுப்புக்கும் எதிராகக் குற்ற வன்முறையை அல்லது வன்முறையைப் பயன்படுத்துவார்கள் அல்லது பயன்படுத்துவதற்குப் பயிற்சியளிக்கப்படுவார்கள் என்றும், அத்தகைய நடவடிக்கையானது எந்தக் காரணத்திற்காகவேனும், அத்தகைய சமய, இன, மொழி அல்லது வட்டாரப் பிரிவு அல்லது வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கிடையே அச்சத்தையோ, பீதியையோ அல்லது பாதுகாப்பற்ற உணர்வையோ ஏற்படுத்துகிறது அல்லது அநேகமாக ஏற்படுத்தக் கூடும் என்றும் அறிந்து, நடத்திவருகின்ற அத்தகைய பயிற்சி, இயக்கம், உடற்பயிற்சி அல்லது அதுபோன்ற நடவடிக்கைகளை நடத்துகின்ற அமைப்பு எதுவும்.

(2) ஏதேனும் அமைப்பு உள்விதி (1)-இன் கீழ் உள்ளடங்கப்பெறுகின்றதா என ஐயப்பாடு ஏதேனும் எழுமாயின், அதன்மேல் அரசு எடுக்கும் முடிவே இறுதியானதாகும்.

**விதி 15. அரசுப் பணியாளர் தம் செயல்களையும் நடத்தையும் சரியெனக்காட்ட முயற்சித்தல்:-**

எதிர்மறைவான விமர்சனம் அல்லது அவதூறான தன்மையிலான தாக்குதல் எனக் கருதப்படக்கூடிய தன்னுடைய அலுவலக நடவடிக்கை எதையேனும் சரியெனக் காட்டுவதற்காக, அரசின் முன் அனுமதியின்றி, அரசுப் பணியாளர் எவரும் பத்திரிக்கைத் துறையின் துணையை நாடக்கூடாது.

**விளக்கம் :-** அரசுப் பணியாளர் தம்முடைய தனிப்பட்ட நடத்தையை அல்லது தம்முடைய தனித்தகுதியால் தாம் புரிந்த செயலைச் சரியெனக் காட்டுவதை இவ்விதியிலுள்ள எதுவும் தடை செய்வதாகக் கருதப்படக்கூடாது. அவர் தன்னுடைய தனிப்பட்ட நடத்தை அல்லது தமது தனித்தகுதியால் தாம் புரிந்த செயலைச் சரியெனக் காட்டுவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமிடத்து, அவர் இதுபற்றி அறிக்கை ஒன்றினைத் தமது துறைத் தலைவருக்கு அளிக்க வேண்டும்.

(2) தமக்கெதிராகக் கெட்ட எண்ணத்தில் தொடுக்கப்பட்ட வழக்கிற்காக அல்லது தம்முடைய வெளிப்படையான நடவடிக்கை அல்லது நடத்தை குறித்த அவதூறு தாக்குதலுக்காக, தகுதியுடைய நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டு வழங்கப்படும் இழப்பீட்டுக் தொகை நீங்கலாக மற்ற எவரிடமிருந்தும் அல்லது நபர்கள் குழுவிடமிருந்தும் எவ்வகையிலான இழப்பீட்டுத் தொகையையும் அரசின் முன் அனுமதியின்றி அரசுப் பணியாளர் எவரும் பெற்றுக்கொள்ளக் கூடாது.

**விதி 16. பணித்துறை சங்கத்தில் உறுப்பினராதல்:-**

அரசுப் பணியாளர்களுக்கு அல்லது எந்த ஒரு வகை அரசுப் பணியாளர்களுக்கும் சார்பாளராக உள்ள அல்லது சார்பாளராகக் கருதப்படுகின்ற எந்த ஒரு சங்கத்திலும், அவை பின்வரும் வரையறைகளை நிறைவு செய்தாலன்றி அச்சங்கத்தில் அரசுப் பணியாளர் எவரும் உறுப்பினராகவோ அல்லது சார்பாளராகவோ அலுவலராகவோ இருக்கக் கூடாது அதாவது:-

(அ) சங்கத்தின் உறுப்பினர் நிலை என்பது அரசுப் பணியாளர்களின் குறிப்பிட்டதொரு வகைக்கென

வரையறை செய்யப்பட்டதாக இருப்பதுடன், அவ்வகை அரசுப் பணியாளர்கள் அனைவருக்கும் உரியதாகவும் இருக்க வேண்டும்.

(ஆ) அச்சங்கமானது, எவ்வகையிலும், எந்த ஒரு அரசியல்கட்சி அல்லது அமைப்புடன் தொடர்பு கொள்ளாததாகவும், அரசியல் நடவடிக்கை எதிலும் ஈடுபடாததாகவும் இருக்க வேண்டும்.

(இ) இச்சங்கமானது, எவ்வகையிலும் பின்வருவனவற்றுடன் தொடர்பில்லாததாகவும் இணைக்கப்படாததாகவும் இருக்க வேண்டும்.

(அ) மற்றும் (ஆ) இல் உள்ள வரையறைகளை நிறைவு செய்யாத

(i) சங்கம் எதுவும்

(ii) சங்க இணையம் எதுவும்

(ஈ) இச்சங்கமானது

(i) அரசின் பொதுவான அல்லது சிறப்பு ஆணை எதுவுமின்றி காலமுறைப் பதிப்பை வெளியிடவோ நடத்தவோ கூடாது.

(ii) அரசின் முன் அனுமதியின்றி, தன்னுடைய உறுப்பினர்களின் பொருட்டு, செய்தித்தாள்கள் வாயிலாகவோ பிறவகையிலோ முறையீடு எதையும் வெளியிடக்கூடாது.

(iii) இந்தியாவிலோ வேறெங்குமோ சட்டமன்றத் தேர்தல் அல்லது உள்ளாட்சி ஆணைக்குழு அல்லது மன்றத் தேர்தல் எதற்கும்

(அ) அத்தேர்தலில் நிற்கும் வேட்பாளருக்கு அவருடைய வேட்பு நிலை தொடர்புடைய செலவுக்காகப் பணம் அல்லது நன்கொடை அளிக்கக் கூடாது.

(ஆ) அத்தேர்தலில் நிற்கும் வேட்பாளருக்கு எவ்வகையிலும் ஆதரவு தரக்கூடாது. அல்லது

(இ) அத்தேர்தலுக்கு, தேர்தல் பதவியில் அல்லது வேட்பாளர் தேர்தலில் பங்கேற்கவோ உதவிடவோ கூடாது.

(iv) இந்தியாவிலோ வேறெங்குமோ சட்டமன்ற உறுப்பினர் எவரையேனும் அல்லது உள்ளாட்சி ஆணைக்குழு அல்லது மன்ற உறுப்பினர் எவரையேனும் பேணுவதற்கு அல்லது பேணுதலின் பொருட்டு அதற்கென பங்களிப்பினை அளித்தல் கூடாது. அல்லது

(v) 1926 ஆம் ஆண்டு இந்தியத் தொழிற்சங்கச் சட்டத்தின் 16 ஆவது பிரிவின்கீழ் நிதியம் ஒன்றை நிறுவியுள்ள எந்த ஒரு தொழிற்சங்கத்திற்கும் செலவுக்குப் பணமளிக்க அல்லது பங்களிக்கக் கூடாது.

இருப்பினும் (அ) மற்றும் (ஆ)இல் உள்ள வரையறைகள், அரசுப்பணியாளர் எவரையும் இந்திய அலுவலர்கள் சங்கத்தில் உறுப்பினராக இருப்பதை அல்லது உறுப்பினராவதைத் தடுக்கவில்லை. மேலும், எழுத்து மூலம் பதிவு செய்யப்படும் காரணங்களுக்காக, பொது அல்லது சிறப்பு ஆணையின் வாயிலாக, எந்த ஒரு சங்கத்தின் நேர்விலும் இவ்வரையறைகளை அரசு கைவிடலாம்.

(உ) இச்சங்கமானது இந்தியாவின் இறையாண்மைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் அல்லது ஒழுக்கப் பண்புக்கும், அல்லது பொது அமைதிக்கும் இடையூறு விளைவிக்கக் கூடிய நடவடிக்கைகளில் ஈடுபடுதல் கூடாது.

**விதி 17. நெருங்கிய உறவினரின் கீழ் அல்லது அவர்களுடன் பணிபுரிதலும் அரசின் ஆதரவுடன் திகழும் நிறுவனங்களில் நெருங்கிய உறவினர்களைப் பணிக்கமர்த்தலும் :**

(1) (அ) தமிழ்நாடு கல்விப் பணியிலுள்ள கல்லூரிப் பிரிவு நீங்கலான மாநிலப் பணியிலுள்ள உறுப்பினர் ஒவ்வொருவரும், தனக்கோ அல்லது தன்னுடைய மனைவிக்கோ உறவினராக உள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் வசிக்கும் குறிப்பிட்டதொரு மாவட்டத்தில் அல்லது கோட்டத்தில் தம்மை நியமிப்பது பொதுநலனுக்கு

ஏன் உகந்ததல்ல என்பதற்குரிய எந்த ஒரு காரணத்தையும் தம்முடைய உடனடி மேலலுவலருக்குத் தெரிவிக்க வேண்டும்.

(ஆ) (i) மாநிலப் பணியிலுள்ள ஒவ்வொரு உறுப்பினரும் மாநில அல்லது சார்நிலைப் பணி உறுப்பினராக உள்ள தமக்கு நெருங்கிய உறவினர் தம்கீழ் பணிபுரிய அமர்த்தப்பட்டால் அது குறித்து தம்முடைய உடனடி மேலலுவலருக்குத் தெரிவிக்க வேண்டும்.

(ii) மாநில அல்லது சார்நிலைப் பணியிலுள்ள ஒவ்வொருவரும் தமக்கு நெருங்கிய உறவினராக உள்ள அனைத்திந்தியப் பணி அல்லது மாநிலப் பணியிலுள்ளவரின்கீழ் பணிபுரிய அல்லது பயிற்சிபெற நியமிக்கப்பட்டால் அது குறித்துத் தமது உடனடி மேலலுவருக்குத் தெரிவிக்க வேண்டும்.

(2) அரசுப் பணியாளர் எவரும், தாம் அலுவல்முறை நடவடிக்கைகளைக் கொண்டுள்ள தனியார் நிறுவனங்களில் அல்லது அரசுடன் அலுவல்முறை நடவடிக்கைகளைக் கொண்டுள்ள பிற எந்த நிறுவனத்திலும் தமது குடும்ப உறுப்பினர் எவரையும் அரசின் முன் அனுமதியின்றிப் பணியில் சேர அனுமதிக்கக் கூடாது.

(2-அ) தமிழ்நாடு கூட்டுறவுத் துறையில் மாநிலப் பணியைச் சார்ந்த அரசுப்பணியாளர் எவரும், தாம் அலுவல் முறைத் தொடர்பு கொண்டுள்ள எந்த ஒரு கூட்டுறவு நிறுவனத்திலும் தமது மகன், மகள் அல்லது தம்மைச் சார்ந்திருப்பவரை, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருடைய முன் அனுமதியின்றிப் பணியில் சேர அனுமதிக்கக் கூடாது.

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மனநிறைவடைந்தால் அத்தகைய நேர்வுகளில் அனுமதியளிக்கலாம், அவையாவன :

(i) வேலை நாடுபவர் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பணியிடத்திற்குரிய தகுதியைப் பெற்றிருந்து தொடர்புடைய கூட்டுறவு நிறுவனத்தின் உரிய அதிகாரியால், குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறை பின்பற்றப்பட்டுள்ள நிலையில், மற்றும்

(ii) குறிப்பிட்ட அரசுப்பணியாளர் அந்நியமனத்திற்காகத் தனது பதவியைத் தவறாகப் பயன்படுத்தவில்லை என்பதிலும், தொடர்புடைய கூட்டுறவு நிறுவனத்தில் தனது செல்வாக்கைப் பயன்படுத்தவில்லை என்ற நிலையிலும்.

இருப்பினும், இந்நியமனத்தை ஏற்றுக் கொள்வதற்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருடைய முன் அனுமதியைப் பெறும்வரை காத்திருக்க இயலா நிலை குறித்து அல்லது நியமனத்தை ஏற்றுக் கொள்ளல் உடனடியாக நடைபெற வேண்டுமெனக் கருதப்படும் நிலை இருப்பின் அதுகுறித்தும் சங்கங்களின் பதிவாளருக்கு நிலையானது அவருக்கு தெரிவிக்கப்படல் வேண்டும். சங்கங்களின் பதிவாளர் அனுமதி வழங்கலுக்குட்பட்டு அந்நியமனம் தற்காலிகமாக ஏற்கப்படலாம்.

இருப்பினும், பணி ஏற்றுக் கொள்வதானது அரசின் முன் அனுமதிக்காக காத்திருக்க இயலாதவிடத்து அல்லது வேறு வகையில் அது மிக அவசரமானது என்று கருதப்படும் நிலையில் அது குறித்து அரசுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். பணியானது அரசின் அனுமதிக்குட்பட்டு தற்காலிகமாக ஏற்றுக் கொள்ளப்படலாம்.

(3) அரசுப் பணியாளர் தன்னுடைய குடும்ப உறுப்பினர் அல்லது நெருங்கிய உறவினர் எவரேனும் ஒரு நிறுவனத்தில் அல்லது எவரேனும் ஒருவரின் கீழ் நியமிக்கப்பட்டிருக்குமிடத்து அல்லது தாமோ தமது குடும்ப உறுப்பினர் எவரேனுமோ அல்லது நெருங்கிய உறவினரோ அந்நிறுவனத்திற்குத் தொடர்புடைய பொருளில் அல்லது ஒப்பந்தத்தில் அக்கறை கொண்டிருக்குமிடத்து அவர் தம்முடைய அலுவல்முறைக் கடமைகளை நிறைவேற்றுகையில் அந்நிறுவுனத்தின் எந்தப் பொருளிலும் தொடர்பு வைக்கக்கூடாது என்பதுடன் அந்நிறுவனத்திற்கோ அல்லது எவரேனும் ஒருவருக்கோ எந்த ஒப்பந்தத்தையும் அளிக்கவோ, ஒப்பளிப்பு செய்யவோ கூடாது. மேலும், அரசுப் பணியாளர் அத்தகைய பொருள் அல்லது ஒப்பந்தம் ஒவ்வொன்றைப் பற்றியும் தம்முடைய அலுவல்முறையான உடனடி மேலலுவலருக்குத் தெரிவிக்க வேண்டும். அதன் பின்னர், அவ்விவரம் தெரிவிக்கப்பட்ட அலுவலருடைய அறிவுறுத்தங்களின்படி அப்பொருள் அல்லது ஒப்பந்தம் தீர்வு செய்யப்பட வேண்டும்.

**விதி 18. அலுவல் சார்பற்ற அல்லது மற்ற வெளிச் செல்வாக்கிற்காக ஆதரவு நாடுதல்:-**

அரசுப் பணியாளர் எவரும் அரசின் கீழமைந்த தன் பணி தொடர்பான பொருள்கள் குறித்து தன்னுடைய நலனை மேம்பாடடையச் செய்வதற்காக உயர் அதிகாரி எவரிடமும் ஏதேனும் அரசியல் அல்லது வேறு வெளிச் செல்வாக்கைக் கொண்டு செல்வதோ கொண்டு செல்ல முயலுவதோ கூடாது.

**விளக்கம் :1**

தன் தனிப்பட்ட குறைகளை நாடாளுமன்றத்தில் அல்லது மாநிலச் சட்டமன்றத்தில் இடைமறி வினா எழுப்புதலுக்குரியதொரு பொருளாகச் செய்விக்கும் அரசுப்பணியாளர் ஒருவர் இந்த விதியை மீறியிருப்பதாகக் கருதப்படுவார்.

**விளக்கம் : 2**

தனிப்பட்ட அரசுப் பணியாளர் சார்பாக சட்டப் பேரவை உறுப்பினர்களும், சட்ட மேலவை உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் மற்றும் அலுவல் சார்பற்ற பிறரும் அமைச்சர்களிடமோ துறைத் தலைவர்களிடமோ, உயர் அலுவலர்களிடமோ முறையிடும்போது, அத்தகைய முறையீட்டால் அரசியல் அல்லது வெளிச் செல்வாக்கினை தம் உயர் அதிகாரிகள் மீது செலுத்தவில்லை என உரிய அரசுப் பணியாளர் நிரூபித்தாலன்றி அவர் அவ்வாறு செல்வாக்கினைச் செலுத்தியதாகவே கருதப்படும்.

**விதி 19. இரு துணை மணம்:**

(1) (i) அரசுப் பணியாளர் எவரும், வாழ்க்கைத் துணையுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒருவரைத் திருமணம் செய்து கொள்வதோ, அவருடன் திருமண ஒப்பந்தம் செய்து கொள்வதோ கூடாது.

(ii) வாழ்க்கைத் துணையுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் அரசுப் பணியாளர் வேறு எவரையும் திருமணம் செய்து கொள்வதோ அவருடன் திருமண ஒப்பந்தம் செய்து கொள்வதோ கூடாது.

இருப்பினும், அரசானது பின்வருவன குறித்து மனநிறைவடைந்தால் பிரிவுக்கூறு (i) அல்லது (ii) இல் குறிப்பிட்டவாறு அத்தகை திருமணம் ஏதேனும் செய்து கொள்ள அல்லது திருமண ஒப்பந்தம் செய்து கொள்ள அரசுப் பணியாளரை அனுமதிக்கலாம் அவையாவன:-

(அ) அத்திருமணமானது, அரசுப் பணியாளருக்கும், அவரை மணந்து கொள்ளும் மற்றொரு தரப்பினருக்கும் பொருந்தக்கூடிய இனமுறைச் சட்டத்தால் அனுமதிப்பதாயிருத்தல் வேண்டும்.

(ஆ) அவ்வாறு செய்வதற்கு வேறு ஏதேனும் காரணங்கள் இருப்பின் அதனடிப்படையில் செய்து கொள்ளலாம்.

(2) அரசுப் பணியாளர் எவரும், அரசுக்குச் சிக்கலை அல்லது மதிப்புக் குறைவை ஏற்படுத்தக்கூடிய சட்டத்திற்குப் புறம்பான செயல் உள்பட தம் பங்கில் ஒழுக்கக் கேடு உள்ள எச்செயலிலும் ஈடுபடக்கூடாது.

**விதி 20. கடமையில் நேர்மையும் முழு ஈடுபாடும்:-**

(1) பணியாளர் ஒவ்வொருவரும் எந்நேரமும் கடமையில் முற்றிலும் நேர்மையும் பற்றும் கொண்டவராக இருப்பதுடன் பணியாளர்களுக்குப் பொருந்தாத எதையும் செய்யக் கூடாது.

(2) பணியாளர் ஒவ்வொருவரும் அப்போதைக்குத் தம்முடைய கட்டுப்பாட்டின் மற்றும் அதிகாரத்தின் கீழ் உள்ள அனைத்து அரசுப் பணியாளர்களைக் கடமையில் நேர்மையும் பற்றும் கொண்டிருப்பதற்கான இயன்ற அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

(3) (i) அரசுப் பணியாளர் எவரும், தன்னுடைய அலுவலகப் பணிகளை நிறைவேற்றுகையில் அல்லது தனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்துகையில், தன்னுடைய மேலலுவலரின் ஆணைப்படி செயற்படும் தருணங்கள் தவிர, மற்றபடி தன்னுடைய தேர்ந்த முடிவின்படியல்லாமல் வேறு வகையில் செயல்படக்கூடாது.

(ii) பொதுவாக மேலலுவலரின் கட்டளைகள் எழுத்து வடிவில் இருக்க வேண்டும். சார்நிலைப் பணியாளர்களுக்கு வாய்மொழி ஆணைகள் தவிர்க்கப்பட வேண்டும். வாய்மொழி ஆணை தவிர்க்க இயலாதவிடத்து, மேலலுவலர் அதனை பின்னர் உடனடியாக எழுத்து வடிவில் உறுதிப்படுத்த வேண்டும்.

(iii) மேலலுவலரிடமிருந்து வாய்மொழி ஆணையைப் பெற்ற அரசுப் பணியாளர், இயன்றவரை விரைவில் அவ்வாணையின் உறுதியாக்கத்தினை எழுத்துவடிவில் கேட்க வேண்டும். அதன்படி அவ்வாணையை எழுத்துவடிவில் உறுதிப்படுத்துவது மேலலுவலரின் கடமையாகும்.

(iv) அரசுப் பணியாளர் எவரும் தன்னுடைய அலுவலர் பணிகளை நிறைவேற்றுகையில் அல்லது தனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செயற்படுத்துகையில், முறைப்படி தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புக்களைத் தவிர்க்கக்கூடாது. மேலும், அதிகாரங்களையும் பொறுப்புகளையும் பகிர்வு செய்யும் திட்டத்தின்படி, மேலலுவலரின் அறிவுறுத்தமோ ஏற்பளிப்போ தேவைப்படாத நேர்வுகளில் அவரிடமிருந்து அறிவுறுத்தத்தை அல்லது அனுமதியைக் கோரக் கூடாது.

விளக்கம் :- தம்மிடம் ஒப்படைக்கப்படும் பணியை வழக்கமாக அதற்குரிய கால அளவில் மற்றும் தம்மிடம் எதிர்பார்க்கப்படும் தரத்தில் நிறைவேற்றத் தவறும் அரசுப்பணியாளர், உள்விதி (1)-இன்படி பணியில் ஆர்வமில்லாதவராகக் கருதப்படுவார்.

**விதி 20 (அ). சிறார்களைப் பணிக்கமர்த்தலுக்குத் தடை:**

அரசுப்பணியாளர் எவரும், பதினான்கு வயதுக்குட்பட்ட சிறாரை இல்லப்பணி உள்ளிட்ட எந்த பணியையும் செய்யும் பொருட்டு பணிக்கமர்த்தக் கூடாது.

(அரசாணை எண்.125, ப.(ம)நி.சீ., துறை, நாள்:12.05.1990-ல் சேர்க்கப்பட்டது)

**விதி 20 (ஆ). பெண் பணியாளர்களுக்கு பாலுணர்ச்சித் தொல்லை தருதல்.**

(1) பணிபுரியும் இடத்தில் மகளிர் எவருக்கும் பாலுணர்ச்சித் தொல்லை கொடுக்கும் எந்தச் செயலுக்கும் அரசுப் பணியாளர் எவரும் இடங்கொடுக்கக் கூடாது.

(2) பணியிடத்தைப் பொறுப்பில் கொண்டுள்ள ஒவ்வொரு அரசுப்பணியாளரும் அப்பணியிடத்தில் பணிபுரியும் மகளிர் எவருக்கும் பாலுணர்ச்சித் தொல்லை கொடுக்கப்படுவதை தடுப்பதற்குத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

விளக்கம் :- இவ்விதியின்படி "பாலுணர்ச்சித் தொல்லை கொடுத்தல்" என்பது, நேரிடையாக அல்லது சம்பந்தப்படுத்துதல் மூலமாகப் பின்வரும் வரவேற்கத்தகாத, பாலுணர்ச்சி எண்ணத்துடனான நடத்தையை உள்ளடக்கியதாகும்.

(அ) உடல் உரசல் மற்றும் அச்சாரமிடல் அல்லது

(ஆ) பாலுணர்வு ஆதரவு பெறக் கட்டாயப்படுத்துதல் அல்லது வேண்டுதல்.

(இ) பாலுணர்வுச் சாயலுள்ள கூற்றுகள் அல்லது

(ஈ) ஆபாச ஓவியம் எதையேனும் காண்பித்தல்

(உ) விரும்பத்தகாத பாலியல் வகையிலான பிற உடல் நடத்தை, பேசுதல் அல்லது சைகை காண்பித்தல்.

(அரசாணை எண்.239, ப.(ம).நி.சீ., துறை, நாள் : 5.10.1998-ல் சேர்க்கப்பட்டது)

**விதி 21. அரசுப் பணியாளர் அலுவலகத்திற்கு வருகை தந்திருக்கும் பொழுது போதை தரும் பானம் எதனையும் குடித்துவிட்டு இருக்கக்கூடாது:-**

அரசுப் பணியாளர் ஒருவர்:-

(அ) அப்போதைக்கு அப்பகுதியில் நடைமுறையில் இருக்கக்கூடிய மது அருந்துதல் அல்லது போதைப் பொருட்களை உட்கொள்ளல் தொடர்பான எந்த ஒரு சட்டத்திற்கும் கண்டிப்பாக இணங்கி நடத்தல் வேண்டும்.

(ஆ) அலுவலகத்திற்கு வருகை தந்திருக்கும் பொழுதோ மக்கள் குழுமியிருக்குமிடத்தில் இருக்கும் பொழுதோ மது அருந்தியவராகவோ, அல்லது மதுவின் செயல்விளைவுக்கு உட்பட்டவராகவோ இருத்தல் கூடாது.

**விதி 22. வேலை நிறுத்தங்கள்:-**

அரசுப் பணியாளர் எவரும் வேலை நிறுத்தத்தில் அல்லது அதனைத் தூண்டுதல் அல்லது அதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது.

**விளக்கம் :-** இவ்விதியின் நோக்கங்களுக்காக "அதுபோன்ற நடவடிக்கைகள்" எனும் சொற்றொடரானது, அனுமதியின்றி பணிக்கு வராமையையும் கடமைகளைப் புறக்கணித்தலையும், தன்னுடைய மேலலுவலர்களோ அரசோ ஏதேனும் செய்யவேண்டுமெனக் கட்டாயப்படுத்தும் நோக்கத்துடனான அல்லது இவைபோன்ற காரணங்களுக்காக "பட்டினிப்போராட்டம்" என வழக்கமாகக் குறிப்பிடப்படும் உண்ணாவிரதப் போராட்டத்தையும் உள்ளடக்குவதாகும்.

**விதி 22அ. ஊர்வலம் மற்றும் கூட்டங்கள்:**

அரசுப் பணியாளர் எவரும், அரசு அலுவலகத்தில் அல்லது அலுவலக வளாகத்தின் எந்தப் பகுதியிலும் அல்லது அதையொட்டிய திறந்தவெளி எதிலும்,

(அ) எந்தப் பணி நாட்களிலும் அலுவலக நேரத்திலும் மற்றும்

(ஆ) நேர்வுக்கேற்ப, துறைத் தலைவரின் அல்லது அலுவலகத் தலைவரின் அனுமதியின்றி அலுவலக நேரத்திற்கு அப்பாலும், விடுமுறை நாட்களிலும் ஊர்வலம் செல்வதோ, நடத்துவதோ அல்லது கூட்டத்தில் உரையாற்றுவதோ கூடாது.

**விதி 23. மதச்சார்புடைய அல்லது சமுதாய நல்லிணக்க எதிர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள்:-**

அரசுப் பணியாளர் எவரும் மதச் சார்புடைய அல்லது சமுதாயத்தில் ஒற்றுமையின்மையை உருவாக்கும் போக்குடைய அல்லது இந்தியாவின் இறையாண்மை நலனுக்கும் ஒருமைப்பாட்டிற்கும் ஊறு விளைவிக்கும் ஆர்ப்பாட்டம் மற்றும் மாநிலத்தின் பாதுகாப்பிற்கும், அயல் மாநிலங்களுடனான நட்புறவுக்கும், பொது அமைதிக்கும், நற்பாங்குக்கும், நன்னடத்தைக்கும் அல்லது நீதிமன்ற அவமதிப்புக்குள்ளாகின்ற, அவதூறு அல்லது குற்றம் செய்யத் தூண்டுகிற எதிலும் ஈடுபடவோ, பங்கேற்கவோ கூடாது.

**விதி 24. அரசுப்பணியாளர் சங்கங்களில் சேர்தல்:-**

அரசுப்பணியாளர் எவரும், இந்தியாவின் இறையாண்மை மற்றும் ஒருமைப்பாட்டு நலன்களுக்கும் பொது அமைதிக்கும் ஒழுக்கத்திற்கும் ஊறுவிளைவிக்கக்கூடிய நோக்கங்களையும் நடவடிக்கைகளையும் உடைய சங்கத்தில் உறுப்பினராகச் சேர்வதோ அதில் தொடர்ந்து இருப்பதோ கூடாது.

**விதி 24 அ. கடவுச் சீட்டுக்கு விண்ணப்பிப்பதற்கு அல்லது அயல்நாட்டுக்குப் பயணம் மேற்கொள்வதற்கு முன் தடையின்மைச் சான்றிதழ் பெறுதல்:**

அரசுப் பணியாளர் எவரும், அரசிடமிருந்து தடையின்மைச் சான்றிதழ் பெற்றாலன்றி, கடவுச்சீட்டைப் பெறுவதற்கு அல்லது புதுப்பிப்பதற்கு விண்ணப்பிக்கவோ அல்லது அயல் நாட்டிற்குப் பயணம் மேற்கொள்ளவோ கூடாது. அவ்வாது தடையின்மைச் சான்றிதழைப் பெற விண்ணப்பிக்கையில், பயணத்தின் நோக்கம், தங்கும் கால அளவு மற்றும் செல்ல முடிவு செய்யப்பட்டுள்ள நாடுகளின் பெயர்கள் தொடர்பான விவரங்கள் அளிக்கப்பட வேண்டும்.

இருப்பினும், வெளிநாட்டில் வேலை தேடும் பொருட்டு கடவுச்சீட்டினைப் பெறுவதற்கான தடையின்மைச் சான்றிதழை அளிப்பதற்கு இவ்விவரங்கள் தேவையில்லை. இருப்பினும் அரசின் முன் அனுமதியின்றி இந்தியாவை விட்டு அவர் வெளியேறக்கூடாது.

(அரசாணை எண்.180 ப.(ம).நி.சீ., துறை, நாள்:5.7.1993-ல் சேர்க்கப்பட்டது)

சுற்றுலாப் பயணிகளாக அல்லது புனிதப் பயணம் மேற்கொள்பவர்களாக அல்லது நண்பர்கள் அல்லது உறவினர்களைக் காண அல்லது வேலை தேடுவதற்காக அயல் நாடுகளுக்குச் செல்வதற்குரிய கடவுச் சீட்டினை வழங்குவதற்கு "ஆ", "இ" மற்றும் "ஈ" பிரிவுகளைச் சார்ந்த அரசுப் பணியாளர்களுக்கு தடையின்மைச் சான்றிதழ் அளிப்பதற்கான அரசின் அதிகாரங்களை இவ்விதியின் கீழ் செயற்படுத்த உரிய துறைத் தலைமை அலுவலர்கள் தகுதியுடையவர்களாவர்.

(அரசாணை எண்.140, ப.(ம).நி.சீ., துறை, நாள்:7.9.2006, அமல் 31.7.2006)

மேலும், தமிழ்நாடு ஹஜ் குழு வாயிலாக சவூதி அரேபியாவுக்கு எட்டு திங்கள் வரை செல்லுந்தன்மை கொண்ட தற்காலிக ஹஜ் கடவுச் சீட்டு பெற்று, ஹஜ் புனிதப் பயணத்திற்காக சவூதி அரேபியாவுக்குச் செல்லும் அரசுப் பணியாளர்களுக்கு தடையின்மைச் சான்றிதழ் பெறுவதினின்றும் விலக்களிக்கப்படுகிறது.

(அரசாணை எண்.124, ப.(ம).நி.சீ., துறை, நாள் : 12.7.2006-ல் சேர்க்கப்பட்டது)

**விதி 25. பொருள் விளக்கம்:-**

இவ்விதிகளுக்கு விளக்கம் காண்பதில் ஏதேனும் ஐயம் எழுமானால் அது குறித்து அரசுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். அதன் மீதான அரசின் முடிவே இறுதியானதாகும்.

**விதி 26. நீக்கமும் காப்பும்:-**

1960 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 2ஆம் நாளிட்ட செயின்ட் ஜார்ஜ் கோட்டை அரசிதழ் பகுதி (I) இதன் பிற்சேர்க்கை (எண்.9)யில் 1 முதல் 26 வரையிலான பக்கங்களில் பொதுத் (பணிகள்) துறையின் 24.2.1960 ஆம் நாளிட்ட அறிவிக்கையுடன் வெளியிடப்பட்ட 1960 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் நடத்தை விதிகளும் (பின்னர் திருத்தப்பட்டுள்ள) இவ்விதிகள் நடைமுறைக்கு வருவதற்கு உடன் முன்னதாக இவ்விதிகளுக்குத் தொடர்புடையனவாகவும், பிற அனைத்து விதிகளும் இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகின்றன.

இருப்பினும், அவ்வாறு நீக்கப்பட்ட விதிகளின் கீழ் வெளியிடப்பட்ட ஆணை அல்லது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையானது அவ்விதிகளுக்குரிய காப்புரைகளின் கீழ் இயற்றப்பட்டிருப்பதாக அல்லது மேற்கொள்ளப் பட்டிருப்பதாகக் கருதப்பட வேண்டும்.

மேலும், இந்நீக்கமானது, இந்நீக்கத்தினால் இவ்விதிகளின்படி அமைந்த முந்தைய நடவடிக்கைகளைப் பாதிக்காது என்பதால், மேற்படி விதிகளில் எதையேனும் மீறுவதானது இவ்விதிகளை மீறியதாகக் கருதப்பட்டு அதற்கேற்ற தண்டனை விதிக்கப்படும்.

## பிற்சேர்க்கை

## துணை விதிகள்

**1. விடுப்புப் பெறும் நோக்கத்திற்காக மருத்துவர் ஒருவரைக் கலந்தறிதல்:**

மருத்துவச் சான்றிதழின் மீது விடுப்பு அல்லது விடுப்பு நீட்டிப்பு பெறும் நோக்கத்தோடு மருத்துவர் ஒருவரைக் கலந்தறியும் அரசுப் பணியாளர் ஒவ்வொருவரும் அதே நோக்கத்திற்காக வேறு மருத்துவர் எவரையேனும் கலந்தறிந்துள்ள செய்தியையும், அத்தகைய கலந்தறிவின் முடியையும், அந்த மருத்துவரிடம் கூறவேண்டியது அவர்தம் கடமையாகும். அரசுப் பணியாளர் எவரேனும் இதனைச் செய்யத் தவறுவது அல்லது இவ்வகையில் மருத்துவர் ஒருவரிடம் தவறான தகவல் எதையேனும் அளிப்பது துறை அளவில் கடுமையான நடவடிக்கைக்குரியதாகும்.

**2. பரிந்துரை:-**

அரகப்பணியாளர் எவரும், விண்ணப்பதாரரால் தன் மூலம் அலுவல் முறையில் அனுப்பப்பட்ட எழுத்து வடிவிலான விண்ணப்பத்தின் மீது மேற்குறிப்பு மூலமாக அல்லாமல் அரசுப் பணியிலமைந்த பணியிடம் எதற்கும், எவரையும் தேர்ந்தெடுக்கும், நியமிக்கும் அல்லது பதவி உயர்வு அளிக்கும் அலுவலரிடம் அல்லது அவ்வாணைக் குழுவின் உறுப்பினரிடம் அல்லது அவ்வமைப்பின் பணியாளரிடம் பரிந்துரைக்கக்கூடாது.

**3. பதவி விலகலை விலைக்கு வாங்குதல்:-**

அரசின் எந்த அலுவலகத்திலேனும் பணிபுரிபவர்களில் ஒருவரை மற்றவர்களுடைய நன்மைக்காகப் பதவி விலகச் செய்வதற்காகப் பண வகையில் ஏற்பாடு செய்து கொள்வதினின்று அரசுப் பணியாளர்கள் இதன் மூலம் தடை செய்யப்படுகின்றனர். அவ்வாறான பதவி விலகலையடுத்து செய்யப்படும் எந்த ஒரு தேர்ந்தெடுப்போ நியமனமோ நீக்கப்படுவதுடன் இத்தகைய ஏற்பாடுகளைச் செய்தவர்கள் தொடர்ந்து பணியில் இருப்பின் அவர்கள் அரசின் ஆணை கிடைக்கும் வரை தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட வேண்டும்.

**4. நீக்கப்பட்டது:-**

(அரசு ஆணை நிலை எண்.980, பணியாளர் (ம) நிருவாகச் சீர்திருத்தத் (ப-அ) துறை, நாள் : 20.09.1984).

**5. சம்பளம் வாங்க மறுத்தல்:-**

ஒன்று சேர்ந்து திட்டமிட்டவாறு அல்லது ஒருங்கிணைந்தவாறு அரசுப் பணியாளர்கள் தங்கள் சம்பளத்தை வாங்க மறுத்தலானது கடுமையான ஒழுங்கு நடவடிக்கைக்குரியதாகும்.

## தனியார் நிறுவன வேலைக்குத் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் விண்ணப்பிப்பதற்குரிய விதிகள், 1973.

**(அரசாணை (நிலை) எண்.2226, பொதுத் (பணிகள்-அ) துறை, நாள் : 18.8.1973)**

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 309 ஆவது பிரிவுக் கூறின் காப்புரைகளால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும் 9.3.1960 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பகுதி I இன் பிற்சேர்க்கையில் (எண்.9-அ) 24.2.1960 ஆம் நாளிட்ட 1 முதல் 26 வரையிலான பக்கங்களில் பொதுத் (பணிகள்) துறையின் அறிவிக்கையுடன் வெளியிடப்பட்ட 1960 ஆம் ஆண்டு தனியார் நிறுவன வேலைக்குத் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் விண்ணப்பிப்பதற்குரிய விதிகளை பதிலிட்டகற்றியும் தமிழ்நாடு ஆளுநர் பின்வரும் விதிகளை அமைக்கிறார்:-

**விதிகள்:-**

1. இவ்விதிகள் "தனியார் வேலைக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் விண்ணப்பிப்பதற்குரிய விதிகள், 1973" எனப்படும்.

2. தமிழ்நாடு மாநில நடவடிக்கைகள் தொடர்பான குடிமுறைப் பணித்தொகுதி அல்லது பணியிடம் எதிலேனும் பணிபுரிபவர் எவரும், தாம் வகிக்கும் பணியிடத்திற்குரிய நியமன அலுவலரின் எழுத்து மூலமான அனுமதியை முன் கூட்டியே பெறாமல் தனியார் வேலைக்கு விண்ணப்பிப்பதோ அவ்வேலையை ஒப்புக் கொள்வதற்கான தன்னுடைய விருப்பத்தைத் தெரிவிப்பதோ கூடாது.

இருப்பினும், ஓய்வு பெறுவதற்கான ஆயத்த விடுப்பிலுள்ளவரைப் பொறுத்தவரையில், அவர் கடைசியாக பதவி வகித்த பணியிடத்திற்குரிய நியமன அலுவலரானவர், துறைத் தலைவருடைய சார்நிலை அலுவலராக இருப்பினும், அவ்வனுமதியானது துறைத் தலைவரால் வழங்கப்படலாம்.

3 (அ) ஓய்வு பெறுவதற்கான ஆயத்த விடுப்பு நிலையிலுள்ளவர், தனியார் வேலைக்கு விண்ணப்பிக்க அல்லது ஒப்புக்கொள்ள, அந் நிறுவனமானது இந்தியாவிலுள்ள வணிக நிறுவனமாக இருந்தால் மட்டுமே பொதுவாக அனுமதிக்கப்பட வேண்டும். இந்தியாவிலுள்ள தனியார் வணிக நிறுவனத்தில் விண்ணப்பிப்பதற்கு அல்லது அதனை ஏற்றுக் கொள்வதற்கான அனுமதியானது, உடனடி ஓய்வு எனும் வரையறைக்குட்பட்டு, மிகவும் விதிவிலக்கான நேர்வுகளில் மட்டும் வழங்கப்படலாம்.

(ஆ) ஒருவருடைய முதிரா வயதிலான பதவி விலகலானது அரசுப் பணிக்கு ஊறு ஏற்படாத வகையில் ஏற்றுக் கொள்ளப்படலாம் எனத் தகுதிவாய்ந்த அதிகாரி மனநிறைவு கொண்டாலான்றி, தனியார் நிறுவன வேலைக்கு விண்ணப்பம் செய்வதற்கு அல்லது அதனை ஏற்றுக் கொள்வதற்குரிய அனுமதியானது எவருக்கும் வழங்கப்பட மாட்டாது.

(இ) மாநில அரசுப் பணிக்கு தங்களது பயனுடைமையை அதிகரிக்கும் பொருட்டு, மாநில அரசுச் செலவில் சிறப்பான, செலவுமிக்க பயிற்சி அளிக்கப் பெற்றவர்களது விண்ணப்பங்களைப் பொறுத்தவரையில் மாநில அரசிடமிருந்து முன் அனுமதி பெறப்பட வேண்டும்.'

4. தனியார் வேலைக்கு விண்ணப்பம் செய்வதற்கு அல்லது அதனை ஏற்றுக் கொள்வதற்கு அனுமதி மறுக்கப்படும் ஒருவர், மாநில அரசின் கீழுள்ள தம்முடைய வேலையை விட்டு விலக விரும்பினால் அத்தகைய பதவி விலகல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

5. ஓய்வுக்கான ஆயத்த விடுப்பில் இல்லாத ஒருவர் தனியார் வேலைக்கு விண்ணப்பம் செய்வதற்கு அல்லது அதனை ஏற்றுக் கொள்வதற்கு அனுமதிக்கப்படும்போது, அவர் அத்தகைய வேலையை ஏற்றுக் கொண்டவுடன் மாநில அரசின் கீழுள்ள தன் வேலையை விட்டு உடனே விலக வேண்டும்.

## பணியிடங்களுக்குத் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் விண்ணப்பிப்பதற்குரிய விதிகள், 1973.

**(அரசாணை (நிலை) எண்.2226, பொதுத் (பணிகள்-அ) துறை, நாள் : 18.8.1973)**

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 309 ஆவது பிரிவுக் கூறின் காப்புரைகளால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும் 9.3.1960 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பகுதி I இன் பிற்சேர்க்கையில் (எண்.9-அ) 24.2.1960 ஆம் நாளிட்ட 1 முதல் 26 வரையிலான பக்கங்களில் பொதுத் (பணிகள்) துறையின் அறிவிக்கையுடன் வெளியிடப்பட்ட 1960 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் தனியார் பணியிடங்களுக்கு விண்ணப்பிப்பதற்குரிய விதிகளை பதிலிட்டகற்றியும் தமிழ்நாடு ஆளுநர் பின்வரும் விதிகளை அமைக்கிறார்:-

**விதிகள் :-**

1. (1) இவ்விதிகள் பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் விண்ணப்பிப்பதற்குரிய விதிகள், 1973" எனப்படும்.

(2) இவை, 1964 ஆம் ஆண்டு தமிழ்நாடு சார்நிலை காவல்துறை அலுவலர் நடத்தை விதிகளுக்குட்பட்டவாறுள்ள சார்நிலை காவல் அலுவலர்களை தவிர்த்து மாநில அரசுப் பணியில் அமர்த்தப்பட்ட அனைவருக்கும் பொருந்தும்.

2. மாநில அரசின் ஆட்சிக் கட்டுப்பாட்டின் கீழமைந்ததொரு பணித் தொகுதிக்கு அல்லது அதன்கண் அமைந்த ஏதேனும் பணியிடத்திற்கு அரசுப் பணியிலிருந்தவாறே விண்ணப்பம் செய்யும் ஒருவர் நேர்வுக்கேற்ப அவர் பணியாற்றும் அலுவலக தலைவரின் அல்லது மாநில அரசுத் துறையின் அல்லது மாநில அரசின் அல்லது மைய அரசின் ஒப்புதலின்றி விண்ணப்பம் செய்திருந்தால் அவர் நியமனத்திற்குத் தகுதியுடையவராக மாட்டார்.

**விளக்கம் : -** வேறு ஏதேனும் மாநில அரசின் கீழ் அல்லது மைய அரசின்கீழ் பணிபுரியும் விண்ணப்பதாரரை பொறுத்தவரையில் நியமன அதிகாரியானவர் மேலனுப்புகின்ற அலுவலருடைய மேற்குறிப்பிலிருந்து அல்லது வேறு வகையில், உரிய அரசினால் செய்யப்பட்ட விதிகளின்படி விண்ணப்பம் செய்யப்பட்டிருக்கின்றது என்று மனநிறைவு கொண்டால் உரிய அரசின் இசைவு அளிக்கப்பட்டுள்ளது எனக் கொள்ளலாம்.

3. மாநில அரசின் மற்றொரு அலுவலகத்தில் அல்லது துறையில் அல்லது வேறு மாநில அரசின் கீழ் அல்லது மைய அரசின் கீழ் உள்ள பணியிடத்திற்கு அல்லது பணியிட மாற்றத்திற்கு விண்ணப்பிக்கும் மாநில அரசின் ஆட்சிக் கட்டுப்பாட்டின் கீழ் அமைந்த பணித் தொகுதிக்கு நியமிக்கப்பட்டுள்ளவர் விண்ணப்பிக்கும்போது, தாம் வகித்துவரும் பணியிடத்திற்கு தம்மை நியமிக்கத் தகுதிவாய்ந்த அலுவலர் மூலம் தன்னுடைய விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும். விண்ணப்பதாரர் விண்ணப்பிக்க அனுமதிக்கப்படலாமா என்பதை அந்த அலுவலர் தீர்மானிக்க வேண்டும். வேறோரு மாநில அரசின் அல்லது மைய அரசின் கீழமைந்த பணியிடத்திற்கான விண்ணப்பத்தின் நேர்வில், நியமன அதிகாரியானவர் விண்ணப்பம் மேலனுப்பப்படலாமா, கூடாதா என்பதைத் தீர்மானித்து, ஆணைக்காக மாநில அரசின் உரிய ஆட்சித் துறைக்கு தன்னுடைய பரிந்துரைகளுடன் அனுப்ப வேண்டும். இது தொடர்பாக பரிந்துரைக்கையில், விண்ணப்பம் செய்யும் அரசுப் பணியாளர் மாநில அரசு செலவில் முழுவதுமாகவோ, பகுதியளவிலோ சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ள விவரத்தையும் கருத்தில் கொள்ள வேண்டும். விண்ணப்பங்கள் மேலனுப்பப்படுவதால் அரசுப் பணி நலன் பாதிக்கப்படாது எனக் கருதப்பட்டால், பொதுவாக அவ்விண்ணப்பங்கள் மேலனுப்பப்படலாம்.

# தமிழ்நாடு குடிமைப் பணி
# (ஒழுங்கு & மேல்முறையீடு) விதிகள்

## பகுதி - I - பொது

**விதி 1 :-** (a) இவ்விதிகள் தமிழ்நாடு குடிமைப் பணி (ஒழுங்கு & மற்றும் மேல்முறையீடு) விதிகள் என அழைக்கப்படலாம்.

(b) அவை ஜனவரி 1, 1955 முதல் செயலாக்கத்திற்கு வரும்.

**விதி 2:-** இவ்விதிகள் மாநில குடிமைப் பணி உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் மற்றும் மாநிலத்தின் கீழ் குடிமைப் பதவியிடம் வகிக்கும் ஒவ்வொரு நபருக்கும், பிறவாறு வெளிப்படையாக வகை செய்யப்பட்டிருந்தால் தவிர, பொருந்துவனவாகும்.

**விளக்கம் :-** மாநிலத்தின் குடிமைப் பணியின் உறுப்பினர் மற்றும் மாநிலத்தின் குடிமைப் பதவி வகிக்கும் நபர்கள் இவர்கள் பணியானது குழுமம் / கழகம் உள்ளாட்சி அமைப்பின் கீழ்விடப்படினும் அவர்தம் ஊதியமானது மாநில ஒட்டு மொத்த நிதியிலிருந்து பெறாவிடினும் இவ்விதிகளின் பொருட்டு மாநில குடிமைப் பணி உறுப்பினராகவும் குடிமைப் பதவி வகிப்பவராகவும் கருதப்படுவார்கள்.

**விதி 3:-** விதி 2ன் வகையங்கள் எவ்வாறு இருப்பினும், தமிழக ஆளுநர் அரசிதழ் அறிவிக்கை வாயிலாக, இவ்விதிகளின் பகுதியினை அல்லது முழுமையான, செயல்பாட்டிலிருந்து, ஏதேனும் பதவி வகிப்பவரை (அ) தொகுதிப் பதவியிடங்கள் வகிப்பவரை, மாநில ஆளுநர் உரியவாறு பொருந்தாது என விளம்புகை செய்யலாம் மற்றும் அதன் பேரில் இவ்விதிகள் அத்தகைய விலக்கலுக்கு உள்ள வரை அவ்வாறே பொருந்துவது முடிவுறுத்தப்படும்.

**விதி 4:-** ஐயப்பாடு ஏதேனும் எழுமாயின்,

(a) ஏதேனும் நபர்க்கு இவ்விதிகள் பொருந்துவது குறித்து மற்றும்

(b) இவ்விதிகள் பொருந்திடும் ஏதேனும் நபர் ஒருவர் எந்த குறிப்பிட்ட பணிக்கு அல்லது இரண்டு அல்லது மேற்பட்ட பணிகளில் அத்தகைய பணிகளில் எதனைச் சார்ந்தவர் என்பது குறித்து ஐயப்பாடு எழுமாயின், அதன் விபரம் அரசிற்கு சுட்டியுரைக்கப்படும் அரசின் முடிவே இறுதியானதாகும்.

## பகுதி - II - வகைப்பாடு

விதிகள் 5,6, மற்றும் 7 நீக்கம்

## பகுதி - III - ஒழுங்கு - தண்டணைகள் விதிகள்

விதி 8:- கீழ்க்காண் தண்டனைகள் தகுந்த மற்றும் போதுமான காரணங்களின் பேரில் மற்றும் இதன்பின்னர் வகை செய்யப்பட்டுள்ளவாறு, விதி 2ல் குறித்துரைக்கப்பட்டுள்ள மாநில குடிமைப் பணி உறுப்பினர் அல்லது மாநிலத்தின் கீழ் குடிமைப் பதவி வகிக்கும் ஒவ்வொரு நபர் மீதும் விதிக்கப்படலாம். அவையாவன:-

(i) கண்டனம்

(ii) தண்டம் / அபராதம் (இவ்விதிகளின் கீழ் அத்தகைய தண்டனை அனுமதிக்கத்தக்க நபர்களின் நேர்வில்)

(iii) ஊதிய உயர்வு அல்லது பதவி உயர்வு நிறுத்தி வைத்தல் * இருப்பினும், ஊதிய உயர்வு நிறுத்தத் தண்டனை பணியில் இருக்கும் போது முழுமையாக செயல்படுத்த முடியாது எனில், சொல்லப்பட்ட தண்டனை அரசு ஊழியர் மீது விதிக்கப்படாது.

மேலும் வரம்புரையாக, ஊதிய உயர்வு நிறுத்த தண்டனை விதிக்கப்பட்ட பின்னர் எழுந்த எதிர்பாரா நிகழ்வு காரணமாக, ஊதிய உயர்வு நிறுத்த தண்டனையை முழுமையாக அமல்படுத்த இயலாதிருக்கிறவிடத்து நேர்வுகளில், செயல்விளைவு அளிக்க முடியாத அத்தகைய ஊதிய உயர்வுத் தொகைக்கு நிகரான பணத் தொகை அந்நபரிடமிருந்து பிடித்தம் செய்யப்படும்.

இன்னும் வரம்புரையாக ஊதிய உயர்வு திரள் விளைவு நிறுத்த நேர்வுகளில், நிறுத்த உத்தரவிடப்பட்ட ஊதிய உயர்வுகளின் தொகைக்கு மூன்று மடங்கு சமமான பணத் தொகை பிடித்தம் செய்யப்படும்.

(iv) முதுநிலைப் பட்டியலில் கீழ்நிலைக்கு இறக்கும் அல்லது நேடியாக நியமனம் செய்யப்பட்ட பதவியிடத்திற்கு கீழ் அல்லாத கீழ் பதவியிடம் அல்லது நேரடியாக நியமனம் செய்யப்பட்ட சம்பள ஏற்ற முறைக்கு கீழ் அல்லாத கீழ் கம்பள ஏற்றமுறை அல்லது சம்பள ஏற்ற முறையில் கீழ்நிலை

வரம்புரையாக, சில நேர்வுகளில் சம்பள ஏற்ற முறையில் கீழ்நிலை இறக்க தண்டனை முழுமையாக செயல்விளைவு கொடுக்க முடியாதிருக்கிறவிடத்து, அத்தகைய சம்பள ஏற்ற முறையில் கீழ்நிலை இறக்கத்தின் விளைவாக தண்டனைக் காலத்தில் கழிவுறாத காலத்திற்கு நிகரான பணத் தொகை நபரிடமிருந்து பிடித்தம் செய்யப்படும்.

(v) a) உத்தரவை பொருட்படுத்தாததினாலும் உத்தரவை மீறியதினாலும் மத்திய, மாநில அரசுகளுக்கு அல்லது உள்ளாட்சிகளுக்கு பணஇழப்பு (Pecuniary Loss) ஏற்பட்டிருப்பின் அத்தொகை ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும்

(vi) கட்டாய ஓய்வு

(vii) மாநில அரசு குடிமைப் பணியிலிருந்து பணி விலக்கல் / நீக்கல்

(viii) மாநில அரசு குடிமைப் பணியிலிருந்து பணியறவு

(ix) பணி இடைநீக்கம், விதி 17 (e)ன் கீழ் நபர் ஒருவர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறவிடத்து, தண்டனை விதிக்கும் அதிகாரி அவசியமெனக் கருதுகிற அளவுக்கு

இனங்கள் (i) முதல் (iii), (v) மற்றும் (ix)ல் குறிப்பிடப்பெற்ற தண்டனைகள் சிறு தண்டனைகளாகவும் மற்றும் இனங்கள் (iv) & (vi) முதல் (viii) வரை பெருந்தண்டனைகளாகவும் கருதப்படும்.

இனங்கள் (vi) (vii) அல்லது (viii)-ல் குறிப்பிடப்பெற்ற தண்டனைகள் நேர்விற்கேற்ப, தமிழ்நாடு அரசு

---

* அரசாணை எண்.113 ப.நி.சீ, நாள் : 02.08.2006

ஊழியர் நடத்தை விதிகள் விதி 19ன் மீறுகைக்காக அரசு ஊழியர் மீது விதிக்கப்படும்.

**விளக்கம் I :- பணியிலிருந்து விடுவித்தல்**

(i) தகுதிகாண் பருவத்தில் பணியமர்த்தப்பட்ட நபர் ஒருவரை வகுத்தமைக்கப்பட்ட (அ) நீட்டிக்கப்பட்ட தகுதிகாண் பருவம் முடிவடைவதற்கு முன்னர் அல்லது இறுதியில் அல்லது

(ii) ஒப்பந்தத்தின் கீழ் நியமிக்கப்பட்ட நபர் ஒருவர் ஒப்பந்த விதிமுறைகளின்படி விடுவித்தல் அல்லது

(iii) ஒப்பந்தத்தின் கீழன்றி வேறுவகையில் தற்காலிகமாக பணியமர்த்தப்பட்ட நபர் ஒருவர், பணியமர்வு காலம் கழிவுற்ற பின்னர் விடுவிக்கப்படுதல் என்பது,

இந்த விதியின் பொருளமைவில் பணி நீக்கம் அல்லது பணியறவு எனக் கொள்ளப்படுதலாகாது.

**விளக்கம் II :-** கீழ்க்கண்டவை இந்த விதியின் பொருளமையில் தண்டனையாகக் கொள்ளப்படாதது, அவையாவன

(i) அரசு ஊழியர் வகிக்கும் பதவியின் பணி நியமன, பணி விகிதங்களுக்கிணங்க துறைத் தேர்வில் தேர்ச்சி பெறத் தவறியமைக்காக அரசு ஊழியர் ஊதியத்திலிருந்து ஊதிய உயர்வு நிறுத்தி வைத்தல்

(ii) நிலைபேறுள்ள (அ) நிலைபேறில்லா தகுதியில், பதவி உயர்வுக்கு தகுதி உள்ள பணி, கிரமநிலை (ஆ) பதவியிலிருந்து அரசு ஊழியர் ஒருவரின் பதவி உயர்வு இன்மை.

(iii) அரசு ஊழியர் ஒருவரின் நடத்தை தொடர்பாக அன்றி, நிர்வாக அடிப்படையின் காரணமாக (அ) உயர்பதவிக்கு பொருத்தமற்றவர் எனக் கருதுவதன் அடிப்படையில் அரசு ஊழியர் ஒருவர் உயர்பதவியிலிருந்து கீழ்நிலை பதவிக்கு பதவி இறக்கம் பெறுதல்

(iv) தகுதிகாண் பருவகால விதிகளுக்கிணங்க அல்லது பணிநியமன விதிகளுக்கிணங்க, தகுதிகாண் பருவத்தில் ஏதேனும் பதவிக்கு நியமனம் செய்யப்பட்ட அரசு ஊழியர் தனது நிலையான பணிக்கு மாற்றப்படுதல்.

(v) மத்திய / மாநில அரசு துறைகளிடமிருந்து அல்லது நிறுவனங்களிடமிருந்து பணி இரவல் பெறப்பட்ட அரசு ஊழியர் திரும்ப பணியமர்த்தப்படல், மற்றும்

(vi) முதுமை அல்லது பணி ஓய்வு தொடர்பான வகையங்களுக்கிணங்க அரசு ஊழியர் ஒருவரின் கட்டாயப் பணி ஓய்வு

**விளக்கம் III :-** நபர் ஒருவரை மாநில அரசின் குடிமைப் பணியிலிருந்து பணி வில்க்கல் (Removal) செய்வது எதிர்கால வேலைவாய்ப்பிற்கு அவரை தகுதிக் கேடாக்காது. ஆனால் நபர் ஒருவரை மாநில அரசின் குடிமைப் பணியிலிருந்து பணியறவு (Dismissal) செய்வது எதிர்கால வேலைவாய்ப்பிற்கு தகுதிக் கேட்டினை உண்டாக்கும்.

**விதி 9:-** (a) விதி 8-ல் குறித்துரைக்கப்பட்ட தண்டனைகளுடன் கூடுதலாக, வனக்காப்பாளர்கள் மீது 15 தினங்களுக்கு மேற்படாத பணியிடை நீக்க தண்டனையினை, வனப் பொறியாளர், வனப் பயன்பாட்டு அலுவலர், மாநில பணி மதிப்பீடு அலுவலர் (அ) மாவட்ட வன அலுவலர் நேர்விற்கேற்ப, விதிக்கலாம்.

(b) விதி 8-ல் அடங்கியுள்ளது எது எவ்வாது இருப்பினும், இவ்விதிகளின் பின்னிணைப்பு I கலம் (2)ல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தண்டனைகளை, தமிழ்நாடு சிறைத்துறை சார்நிலைப் பணியாளர்கள், தீயணைப்புத் துறை சார்நிலைப் பணியாளர்கள் மற்றும் தமிழ்நாடு துறைமுக சார்நிலைப் பணியாளர்கள் மீது கலம் (1)ல் நேரிணையாக குறித்துரைக்கப்பட்டுள்ள மற்றும் கலம் (3)ல் நேரிணையாக குறித்துரைக்கப்பட்டுள்ள அதிகாரிகள் விதிக்கலாம்.

(c) (1) ஆளுநர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் ஒரு அதிகாரி பொது அல்லது சிறப்பு உத்தரவு மூலம்:-

(i) ஏதேனும் அரசு ஊழியருக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை தொடங்கலாம்.

(ii) அரசு ஊழியர் எவருக்கும் எதிராக ஒழுங்கு நடவடிக்கை துவக்குமாறு, விதி 8ல் குறித்துரைக்கப்பட்ட தண்டனைகளை விதிக்க அதிகாரங்கொண்ட தகுதி வாய்ந்த அதிகார ஆயத்திற்கு நெறியுறுத்தலாம்.

(2) விதி 8ல் இனங்கள் (i) முதல் (iii) & (v) ல் குறித்துரைக்கப்பட்ட தண்டனைகளை விதிக்க தகுதிவாய்ந்த அதிகாரம் ஆயம், விதி 8 இனங்கள் (iv) & (vi) முதுல் (viii)ல் குறித்துரைக்கப்பட்ட தண்டனைகளை விதிப்பதற்கான ஒழுங்கு நடவடிக்கைகளை, அத்தகைய அதிகாரி பிந்தைய தண்டனைகளை விதிக்க அதிகாரங் கொண்டவரல்ல என்னும் பொருண்மை பொருட்டின்றி, அரசு ஊழியருக்கு எதிராக துவக்கலாம்.

* விதி 9A:- ஒரே துறையினைச் சார்ந்த ஒன்றுக்கு மேற்பட்ட அரசு ஊழியர்கள் கூட்டாக ஈடுபட்டிருக்கிற நேர்வில் (அ) அவர்களின் வழக்குகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக இருக்கும்போது, அத்தகைய அரசு அலுவலர்களுள் உயர் பதவி வகிக்கும் அலுவலரினைப் பொறுத்து அந்த துறையின் உடனடி உயர் அதிகாரி ஒழுங்கு நடவடிக்கை தொகுத்திட அதிகாரங் கொண்டவராவார். மற்றும் அனைவருக்கும் எதிரான ஒழுங்கு நடவடிக்கை ஒன்றாகச் சேர்க்கப்படும். விதி 17(b)யின் விதிமுறைக்கிணங்க விசாரணை நடத்தப்படவிருக்கிறவிடத்து, சொல்லப்பட்ட அதிகாரியானவர் தானே விசாரணை நடத்தலாம் அல்லது அத்தகைய அதிகாரிகளுள் உயர் அதிகாரி மீது பெருந்தண்டனை விதிக்கவல்ல தகுதிவாய்ந்த அதிகாரியினால் நியமிக்கப்பட்ட விசாரணை அதிகாரி மூலம் விசாரணை நடத்தச் செய்திடலாம். சொல்லப்பட்ட அதிகாரியானவர், உரிய நிலையில் வழக்கினை இறுதி உத்தரவு பிறப்பித்தலுக்காக, அத்தகைய அரசு அலுவலர்களுள் உயர் பதவி வகிக்கும் அரசு அலுவலர் பொறுத்து விதி 8-ல் குறித்துரைக்கப்பட்ட தண்டனைகளை விதிக்க அதிகாரங் கொண்ட அந்த துறையின் தகுதி வாய்ந்த அதிகாரிக்கு வழக்கினை குறித்தனுப்பிடுவார்.

வரம்புரையாக பல்வேறு துறைகளைச் சார்ந்த கூட்டாக தொடர்புள்ள அரசு ஊழியர்களின் நேர்வில் அல்லது ஒன்றுக்கொன்று தொடர்புள்ள வழக்குகளின் நேர்வில், விதி 8ல் குறித்துரைக்கப்பட்ட தண்டனைகளை விதிக்கவும் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை தொடுக்கவும் அரசு அதிகாரங் கொண்டதாகும். மற்றும் அத்தகைய நேர்வுகளில் உயர் பதவி வகிக்கும் அரசு ஊழியர் பொறுத்து, தலைமைச் செயலக நிர்வாகத் துறை அத்தகைய ஒழுங்கு நடவடிக்கைகள் தொடங்கி, இவ்விதிகளில் விதிக்கப்பட்டுள்ள முழுமையான நடைமுறைகளைப் பின்பற்றி இறுதி உத்தரவு பிறப்பித்திடும்.

மேலும் வரம்புரையாக, அரசு தலைமைச் செயலரின் நிர்வாக கட்டாள்கையின் கீழ் கூட்டாக ஈடுபட்ட அரசு அதிகாரிகள் நேர்வில் இந்த விதி பொருந்தாது.

விதி 10:- தண்டம் / அபராதம் தண்டனையானது, சார்நிலைப் பணிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள தமிழ்நாடு கடைநிலைப் பணியினைச் சார்ந்த உறுப்பினர் மீது மட்டும் மற்றும் இவ்விதிகளின் இணைப்பு II-ல் குறித்துரைக்கப்பட்ட பதவியிடங்களில் பதவி வகிக்கும் நபர் மீது விதிக்கப்படலாம்.

விதி 11:- நீக்கம்

(அ.நி.எண்.19.ப.ம.நி.சீ (என்) துறை, நாள்:11.2.2008, அமல் 11.2.08)

விதி 12:- (1) விதி 8 இனங்கள் (i) & (iii) முதல் (viii)ல் குறித்துரைக்கப்பட்ட தண்டனைகளில் எதனையும் மாநில அரசானது, மாநிலப் பணி உறுப்பினர் மீது விதிக்கலாம்.

வரம்புரையாக தமிழக ஆளுநர் ஏதேனும் பணி, வகுப்பு (அ) வகையினர்க்கு பணி நியமன அதிகாரியாக இருப்பாராயின், சொல்லப்பட்ட தண்டனைகளில் எதனையும் பணி, வகுப்பு (அ) வகையினைச் சார்ந்த உறுப்பினர்கள் மீது நேர்விற்கேற்ப விதிக்கலாம்.

மேலும் வரம்புரையாக, இவ்விதிகளின் பின்னிணைப்பு (iv)ல் கலம் (1)ல் குறித்துரைக்கப்பட்ட பணி

---

* அரசாணை எண்.113 ப.நி.சீ, நாள் : 02.08.2006

உறுப்பினர்களின் நேர்வில், இனங்கள் (i), (iii)-ல் குறித்துரைக்கப்பெற்ற தண்டனைகள், ஊதிய உயர்வு நிறுத்தம் தொடர்பானவை மற்றும் விதி 8 (v)ன் தண்டனைகளை கலம் (2) (3) & (4)ல் நேரிணையான பதிவுகளில் குறிக்கப்பெற்ற அதிகாரிகள் விதிக்கலாம்.

* இன்னும் வரம்புரையாக, சென்னையில் உள்ள உயர்நீதிமன்றம், தமிழ்நாடு மாநில நீதித்துறை பணி உறுப்பினர்கள் மீது, விதி 8ன் இனங்கள் (i), (iii), (iv), (v) & (ix)ல் குறித்துரைக்கப்பட்ட தண்டனைகளை விதிக்கலாம்.

* (2) இவ்விதிகளில் அடங்கியுள்ளது எது எவ்வாறு இருப்பினும், நியமன அதிகாரி அல்லது நியமன அதிகாரியினை விட நிர்வாக முறையில் உயர்ந்த எந்த அதிகாரியும், விதி 8 இனங்கள் (i), (iii), (iv), (v) & (ix)ல் குறித்துரைக்கப்பட்ட தண்டனைகளை மாநிலப் பணி உறுப்பினர்கள் மீது விதிக்கலாம்.

வரம்புரையாக, அரசினால் அல்லது பணிநியமன அதிகாரியினை விட நிர்வாக முறையில் உயர்ந்த அதிகாரியினால் மாநிலப் பணி உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கிறவிடத்து, விதி 8 இனங்கள் (iii)ல் தண்டனை பதவி உயர்வு நிறுத்தம் தொடர்பானவை மற்றும் (iv),(vi), (vii), & (viii)ல் குறித்துரைக்கப்பட்ட தண்டனைகள் அரசு (அ) அத்தகைய உயர் அதிகாரியினால் மட்டுமே விதிக்கப்படும்.

மேலும் வரம்புரையாக, மாநிலப் பணியில் உள்ளடக்கப்பட்ட பதவியிடங்கள் வகிக்கும் உறுப்பினர்களுக்கு மாநில அரசு பணி நியமன அதிகாரியாக இருக்கிறவிடத்து, தொடர்பான துறைத் தலைவர்கள் இனம் (i) & (iii)ல் குறித்துரைக்கப்பட்ட த்ண்டனைகளை ஊதிய உயர்வு நிறுத்தம் தொடர்புடைய மற்றும் விதி 8 இனங்கள் (v) & (ix)ல் குறிப்பிடப்பெற்ற தண்டனைகளை அத்தகைய துறைத் தலைவர்களுக்கு உடன் கீழ் அல்லாத அத்தகைய உறுப்பினர்கள் அன்றி பிற உறுப்பினர்கள் மீது விதிக்கலாம்.

இன்னும் வரம்புரையாக, மாநிலப் பணியில் உள்ளடக்கப்பட்ட பதவியிடங்கள் வகிக்கும் உறுப்பினர்களின் நேரடி உயர் அதிகாரியாக உள்ள அனைத்து அதிகாரிகளும் தண்டனை வழங்க அதிகாரமில்லாதிருந்தாலும் கூட அத்தகைய மாநிலப் பணி உறுப்பினர்கள் மீது விதி 17(b)யின் கீழ் குற்றச் சார்த்து வனைந்திடலாம் அல்லது விதி 17(a) யின் கீழ் காரணங்கேட்கும் குறிப்பாணை வழங்கிடலாம் மற்றும் அவர்கள் தாங்களே விசாரணையினை நடத்தலாம் அல்லது விசாரணையினை நடத்த விசாரணை அலுவலரை நியமித்திட தகுதிவாய்ந்த அதிகாரியினை வேண்டலாம். வழக்கு விசாரணை நடைமுறை முடிந்து இறுதி நிலை எட்டிய பின்னர் அல்லது காரணம் கேட்கும் குறிப்பாணைக்கு விளக்கம் பெற்ற பின்னர் நேர்விற்கேற்ப தகுதிவாய்ந்த அதிகாரிக்கு இறுதி உத்தரவிற்கு ஆவணங்களைச் சமர்ப்பித்திடுவார்.

இன்னும் வரம்புரையாக, பணி நியமன அதிகாரி அல்லது பணி நியமன அதிகாரியினை விட நிர்வாக முறையில் உயர்ந்த அதிகாரி மாநிலப் பணி உறுப்பினர்கள் மீது விதி 17 (e)யின் கீழ் பணியிடை நீக்க உத்தரவு பிறப்பித்திருக்கிறவிடத்து, அத்தகைய உறுப்பினர்கள் மீது விதி 8 இனம் (ix)ல் குறித்துரைக்கப்பட்ட தண்டனையை விதிக்க தங்கள் அதிகாரத்தினைச் செயலுறுத்தலாம்.

**விதி 14(a)(1) :-** விதி 17(e)ல் சுட்டுகை செய்யப்பட்டுள்ள பணியிடை நீக்கத் தண்டனை (அ) தண்டனைகளை

(i) கண்டனம்

(ii) தண்டம்

(iii) ஊதிய உயர்வுகள் நிறுத்தம், மற்றும்

(iv) (a) உத்தரவுகளை மீறியதனால் அல்லது கவனக்குறைவினால் மாநில அரசு (அ) மைய அரசு (அ) உள்ளாட்சி அமைப்புக்கு ஏதேனும் நிதி இழப்பு ஏற்படுத்தியதனால், முழுவதுமாக அல்லது பகுதியாக ஊதியத்திலிருந்து பிடித்தம், அல்லது

(b) நிறுத்தப்பட்ட ஊதிய உயர்வு தொகைக்கு நிகரான பணமதிப்பு தெர்கை அவசியமான அளவுக்கு

* அரசாணை எண்.19 ப.நி.சீ, நாள் : 11.02.2008

ஊதியத்திலிருந்து பிடித்தம், அத்தகைய உத்தரவு செயல்விளைவு கொடுக்கப்பட முடியாதிருக்கிறவிடத்து, மாநில சார்நிலைப் பணி அலுவலர் மீது அவரது உடனடி உயர் அதிகாரி, அல்லது அத்தகைய உறுப்பினர்களின் நியமன அதிகாரியாக சார்நிலைப் பணி அதிகாரி இருக்கிறவிடத்து, அத்தகைய அதிகாரி அல்லது ஏதேனும் உயர் அதிகாரி

வரம்புரையாக, நகரத்தில் (அ) ஊரகத்தில் உள்ள மருத்துவ நிலையத்தில் பணியாற்றும் சார்நிலைப் பணியாளர்கள் பொறுத்து, ஊதிய உயர்வு நிறுத்த தண்டனை வழங்கிட சிவில் சர்ஜன் படிநிலைக்கு குறையாதவராக இருக்கிறவிடத்து, நிலையத் தலைவர் மற்றும் பிற நேர்வுகளில் மாவட்ட மருத்துவ அலுவலர், அத்தகைய நிலையத் தலைவர் (அ) மாவட்ட மருத்துவ அலுவலர் நேர்வுக்கேற்ப, நியமன அதிகாரியாக இல்லாதிருக்கிறவிடத்து தண்டனை விதிப்பதற்கு முன் அத்தகைய அதிகாரிக்கு அறிக்கையிட்டு முன் ஒப்பளிப்பு பெறுதல் வேண்டும் எனும் நிபந்தனைக்குட்பட்டவராவர்.

மேலும் வரம்புரையாக, NCC அலகுகளில் / பிரிவுகளில் பணியாற்றும் சார்நிலைப் பணி உறுப்பினர்களைப் பொறுத்து இந்தக் கூறில் குறிப்பிடப்பெற்ற தண்டனைகளை விதிக்கவல்ல தகுதிவாய்ந்த அதிகாரி தொடர்பான அலகுகளின் மேல்நிலை அதிகாரி ஆவார்.

குறிப்பு 1:- இந்தக் கூறில் "மாநிலப் பணியின் உடனடி உயர் அதிகாரி" எனும் சொற்றொடர் தவறிழைத்த காலத்தில் குற்றமிழைத்த அரசு ஊழியர் எவரின் கீழ் புரிந்தாரோ அந்த பணி மாநிலப் பணியின் உடனடி உயர் அதிகாரி மற்றும் அவரது அலுவலக வழிமுறையுரிமையர் எனப் பொருள்படும்.

குறிப்பு 2:- "மாநிலப் பணியின் உடனடி உயர் அதிகாரி" எனும் சொற்றொடர், மத்திய, மாவட்ட சிறைச்சாலைகளில் பணியாற்றும் தமிழ்நாடு சிறைத் துறை சார்நிலைப் பணி, தமிழ்நாடு அமைச்சுப் பணி, தமிழ்நாடு பொது சார்நிலைப் பணி (வகுப்பு XXII) உறுப்பினர்கள் பொறுத்து தொடர்பான சிறைச்சாலைக் கண்காணிப்பாளரை சுட்டுகை செய்வதாகப் பொருள் கொள்ளப்படும்.

குறிப்பு 3:- "மாநிலப் பணியின் உடனடி உயர் அதிகாரி" எனும் சொற்றொடர், தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணி, தமிழ்நாடு பொது சார்நிலைப் பணி (வகுப்புகள் XV & XXII) மற்றும் தமிழ்நாடு கடைநிலைப் பணி உறுப்பினர்கள் பொருந்துகைப் பொறுத்து தலைமைச் செயலகத்தின் தொடர்பான துறையின் பணியமைப்பு பொறுப்பு வகிக்கும் சார்பு செயலர் எனக் கருதப்படுவார்.

வரம்புரையாக, "மாநிலப் பணியின் உடனடி உயர் அதிகாரி" எனும் சொற்றொடர் ஓட்டுநர்கள், வாகன துப்புரவாளர்கள், மற்றும் தலைமைச் செயலகத்தில் (வகுப்பு IV)தமிழ்நாடு பொது சார்நிலைப் பணி) உள்ள மோட்டார் சைக்கிள் செய்தியாளர்கள் பொருந்துகைக்கு பொதுத் துறை சார்பு செயலரையும் உள்ளடக்கியதாகக் கருதப்படும்.

(2) கீழ்க்காண் தண்டனைகளை

(i) பதவி உயர்வு நிறுத்தம்

(ii) முதுநிலைப் பட்டியலில் கீழ் கிரம நிலைக்கு (அ) கீழ் பதவியிடத்திற்கு (அ) கீழ் சம்பள ஏற்ற முறைக்கு இறக்கம் அதே பணியில் (அ) வேறு பணியிலும் அல்லது சம்பள ஏற்ற முறையில் கீழ் நிலைக்கு இறக்கம்.

(iii) குடிமைப் பணி ஒழுங்காற்று விதிகளின் உறுப்பு 465 (2) அல்லது 465 A குறிப்பு Iன் கீழ் வேறுவகையில் கட்டாய ஓய்வு

(iv) மாநில அரசு குடிமைப் பணியிலிருந்து பணி விலக்கல் / நீக்கம்.

(v) மாநில அரசு குடிமைப் பணியிலிருந்து பணியறவு, NCC பிரிவின் சார்நிலைப் பணி உறுப்பினர் உட்பட பணி நியமன அதிகாரி (அ) வேறு ஏதேனும் அதிகாரி விதிக்கலாம்.

வரம்புரையாக, பணியமர்வு அதிகாரியினை விட உயர் அதிகாரியினால் பணி நியமனம் செய்யப்பட்ட நபர்களின் நேர்வில், இந்தக் கூறில் குறிப்பிடப்பட்ட தண்டனைகளை அத்தகைய உயர் அதிகாரிக்கு சார்நிலை அதிகாரியினால் விதிக்கப்படலாகாது.

மேலும், வரம்புரையாக, இவ்விதிகளின் பின்னிணைப்பு III ல்குறித்துரைக்கப்பட்ட பணி உறுப்பினர்களின் நேர்வில், கூறு (1) & (2)ல் குறிப்பிடப்பெற்ற தண்டனைகள் மற்றும் விதி 17(e)ல் சுட்டுகை பணியிடை நீக்கம் விதிக்கவல்ல அதிகாரிகள் ஒவ்வொருவருக்கும் எதிராக குறித்துரைக்கப்படலாம்.

(b) ஏதேனும் வழக்கு ஒன்றில் இவ்விதியின் கீழ் உயர் அதிகாரி தண்டனை விதித்து அல்லது விதிக்க மறுத்து இருக்கிறவிடத்து, அதே வழக்கு பொறுத்து கீழ் நிலை அதிகாரி இவ்விதியின் கீழ் மேற்கொண்டு நடத்திட அதிகார வரம்பு கிடையாது.

(c) கீழ்நிலை அதிகாரி ஏதேனும் வழக்கு ஒன்றில் தண்டனை விதித்து அல்லது விதிக்க மறுத்து இருக்கும் நிகழ்மை (பொருண்மை) அதே வழக்கு பொறுத்து உயர் நிலை அதிகாரி இவ்விதியின் கீழ் தனது அதிகாரம் செலுத்த தடையாக இராது.

(d) ஏதேனும் வழக்கு ஒன்றில் இவ்விதியின் கீழ் உயர் அதிகாரியின் தண்டனை விதிக்கும் அல்லது விதிக்க மறுக்கும்உத்தரவானது, அதே வழக்கு பொறுத்து கீழ் நிலை அதிகாரி பிறப்பித்த உத்தரவினைப் புறக்கணித்து இருக்கும்

(e) நபர் ஒருவருக்கு எதிரான குற்றச்சாட்டு மெய்ப்பிக்கப்படவில்லைஎன்று கீழ்நிலை அதிகாரி நடவடிக்கை விட்டு விடுதல் எனும் பொருண்மை, உயர் அதிகாரியானவர் எழுத்துருவிலான காரணங்கள் பதிவின் பேரில் அவ்வாறான குற்றச்சாட்டை புத்துயிரூட்டி நடவடிக்கை எடுப்பதற்கு தடையாக இராது.

**விதி 15 (a) :-** பணித் தொகுதியின் வகுப்பு, வகை அல்லது கிரம நிலை சார்ந்த உறுப்பினர் பதவி உயர்வு (அ) மாற்றல் செய்யப்படுகிறவிடத்து, வேறு பணியில், மாநிலத்தில் (அ) சார்நிலைப் பணியில் வேறு வகுப்பு, வகை அல்லது கிரம நிலையில் பதவி அமர்த்தப்படும் போது, அத்தகைய பதவி உயர்வு அல்லது மாற்றலுக்கு முன்னர்அவரது பணி மற்றும்நடத்தை பொறுத்து பிந்தைய பணித் தொகுதியின் வகுப்பு, வகை அல்லது கிரமநிலை நேர்விற்கேற்ப உறுப்பினர் மீது தண்டனை விதிக்க அதிகாரம் வாய்ந்த அதிகாரி தவிர யாதொரு அதிகாரியினாலும் தண்டனை விதிக்கப்படுதல் கூடாது.

(b) நபர் ஒருவர் பதவி இறக்கம் அல்லது மாற்றப்படுகிறவிடத்து

மாநிலப் பணியிலிருந்து சார்நிலைப் பணிக்கு, அல்லது ஒரு பணியிலிருந்து மற்றொரு பணிக்கு, அல்லது ஒரு பணித்தொகுதியின் வகுப்பு, வகை அல்லது தர நிலையிலிருந்து மற்றொரு வகுப்பு, வகை அல்லது தரநிலைக்கு

அவர் பணித் தொகுதியின் வகுப்பு, வகை அல்லது தரநிலை நேர்விற்கேற்ப பணியிலிருந்த போது, அவரது பணி மற்றும்நடத்தை குறித்து யாதொரு தண்டனையும், எதிலிருந்து பதவிஇறக்கம் அல்லது மாற்றம் செய்யப்பட்டதோ அத்தகைய பணித் தொகுதியின் வகுப்பு, வகை அல்லது தரநிலையின் உறுப்பினர்மீது தண்டனை விதிக்கும்அதிகாரம் வாய்ந்த அதிகாரியால் தவிர, பிறரால் தண்டனை விதிக்கப்படுதல் கூடாது.

**விதி 16 :-** நபர் ஒருவர் தண்டனை வழங்கிடும் அதிகார ஆயத்திற்கு இரவல் அளிக்கப்பட்டிருக்கிறவிடத்து,

(i) கட்டாய ஓய்வு (அ) பணி விலக்கல் (அ) பணியறவு தண்டனை விதிக்கவல்ல அதிகாரம் இரவல் அளித்திடும் அதிகார ஆயத்திடம் அல்லாது பிற அதிகாரியிடம் கிடையாது. இரவல் பெற்றிடும் அதிகார ஆயம், சில நேர்வில் கட்டாய ஓய்வு (அ) பணி விலக்கல் (அ) பணியறவு தண்டனை விதிக்க வேண்டும் என கருதுகிறவிடத்து, விசாரணையினை முடித்து, தொடர்பான நபரை இரவல் அளித்த அதிகாரிக்கு அத்தகைய அதிகாரி தேவையெனக் கருதும் அத்தகைய நடவடிக்கைக்கு திரும்ப அனுப்பி வைத்தல் வேண்டும்.

வரம்புரையாக, நபர் ஒருவர் ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு இரவல் அளிக்கப்பட்டிருக்கிறவிடத்து மற்றும்இரு துறைகளும் ஒரே நிர்வாக அதிகாரத்தின் கீழ் இருக்கும் போது, தொடர்பான நபரை இரவல் அளித்த அதிகாரிக்கு மாற்றம் செய்ய வேண்டுறுத்தும் இக்கூறின் வகையம் பொருந்தாது.

(i) தமிழக ஆளுநரால் ஏதேனும் நேர்வில் குறிப்பான உத்தரவுகளினால் வேறு விதமாக வகை செய்யப்பட்டிருந்தாலன்றி, தண்டனை வழங்கிடும் அதிகாரி ஏதேனும் சிறிய தண்டனை வழங்கிடும் முன்னர் இரவல்அளித்த அதிகாரியினை கலந்தாலோசிப்பார் மற்றும்தற்காலிக பணிநீக்க நேர்வில், அந்த தண்டனை விதிக்க வழிவகுத்த சூழல்களைப் பற்றி இரவல்அளித்த அதிகாரிக்கு அறிக்கையிடுவார்.

**விதி 16 A :-** மாநிலப் பணித்தொகுதி உறுப்பினர் ஒருவர் அல்லது மாநில குடிமைப் பதவியிடம் வகிக்கும்நபர் ஒருவரின் பணி ஏதேனும் நிறுவனம், கழகம், அமைப்பு அல்லது உள்ளாட்சி கழகத்திடம் விடப்பட்டிருக்கிறவிடத்து, அவ்வாறு அவரது பணி வைக்கப்படுவதற்கு முன்னரான ஏதேனும் காலத்தில், விதி8ல் குறித்துரைக்கப்பட்ட தண்டனைகளுக்குள்ளாகும் ஏதேனும் செயல் அல்லது தவறுகை செய்திருந்தால், விதி 14ன் கீழ் அத்தகைய உறுப்பினர் (அ) நபர்மீது அத்தகைய தண்டனை விதிக்க அதிகாரங் கொண்ட அதிகாரி மட்டுமே அவருக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கைதுவக்க முடியும் மற்றும்தான் பொருத்தமெனக் கருதுகிற விதி 8ல் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய தண்டனையை விதிக்க முடியும் மேலும் அத்தகைய நடவடிக்கை துவங்கும் நேரத்தில் அவர் எந்த இரவல் பெற்ற அதிகாரியின் கீழ் பணியாற்றுகிறாரோ அவர், அத்தகைய நடவடிக்கைகளை தொடங்கி நடத்திடும் அத்தகைய தகுதி வாய்ந்த அதிகாரிக்கு அனைத்து தகுந்த வசதிகளைச் செய்திட கட்டுப்பட்டவராவார்.

**விதி 16B (1) :-** நிறுவனம், கழகம், அமைப்பு, தன்னாட்சி வாரியங்கள் (அ) ஏதேனும் பிற அதிகார அமைப்புகளிலிருந்து இரவல் பணி பெறப்பட்ட நபர் ஒருவருக்கு தற்காலிக பணிநீக்க உத்தரவு பிறப்பிக்க அல்லது ஒழுங்கு நடவடிக்கை நடத்த வேண்டியிருக்கிற விடத்து, உடனடியாக இரவல் கொடுத்த துறைக்குஅரசு ஊழியருக்கு பணியிடை நீக்க உத்தரவு அளிக்க அல்லது ஒழுங்கு நடவடிக்கை துவக்க வேண்டிய வழிவகுத்த சூழல்கள் பற்றி தெரிவித்தல் வேண்டும்.

(2) அரசு ஊழியருக்கு எதிராக நடத்தப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைக்கான முடிவுகளின் பேரில் ஒழுங்குநடவடிக்கை அதிகாரி விதி 8 கூறு (i) முதல் (iii) & (v) ல் குறித்துரைக்கப்பட்ட தண்டனைகளை வழங்க எண்ணங்கொண்டிருப்பின், இரவல் கொடுத்த அதிகாரியுடன் கலந்தாலோசித்து, தான் அவசியமெனக் கருதும் அத்தகைய உத்தரவுகளைப் பிறப்பிக்கலாம் :

(i) இருப்பினும், இரவல் பெற்ற மற்றும் இரவல் கொடுத்த துறைகளிடையே கருத்து வேறுபாடு எழும் நிகழ்வில், அரசு ஊழியரின் பணி இரவல் கொடுத்த துறைக்கு திரும்ப மாற்றப்படும்.

(ii) விதி 8 இனங்கள் (iv & (vi) முதல் (viii) வரையிலான ஏதேனும் தண்டனைகளை அரசு ஊழியர்மீது விதிக்க இரவல் பெற்ற அதிகாரி எண்ணங்கொள்வாராயின், இரவல் கொடுத்த துறைக்கு அத்தகைய அரசு ஊழியரின் பணி திரும்ப அளித்தும் மற்றும் அவசியமெனக் கருதும் அத்தகைய நடவடிக்கைகளுக்கு வழக்கு நடவடிக்கைகளைமாற்றி அனுப்பிடுதல் வேண்டும்.

**விதி 17(a) :-** மாநில குடிமைப் பணி உறுப்பினர் மீது அல்லது குடிமைப் பதவி வகிக்கும் நபர் ஒவ்வொருவரின் நேர்வில், விதி 8 இனங்கள் (i), (ii), (iii), (v) & (ix)ல் அல்லது விதி 9ல் குறித்துரைக்கப்பட்ட தண்டனைகள் விதிக்கப்படுவதாக இருக்கிறவிடத்து, அவர் விரும்பும்விளக்கம் தந்திட தகுந்த வாய்ப்பு அளித்திடல் வேண்டும் மற்றும் அத்தகைய விளக்கம், தண்டனை உத்தரவு பிறப்பிக்கப்படுவதற்கு முன் பரிசீலனை செய்யப்படுதல் வேண்டும்.

வரம்புரையாக, சங்கதிகளின் அடிப்படையில் நீதிமன்றத்தில் குற்றத் தீர்ப்புக்குள்ளாக்கப்பட்ட அரசு ஊழியர் மீது மேற்சொன்ன தண்டனைகள் விதிக்க கருத்துரு கொண்டிருக்கிறவிடத்து (அ) தொடர்பான அரசு ஊழியர்தலைமறைவாகி இருக்கிறவிடத்து (அ) பிற காரணத்தினால் அரசு ஊழியருடன் தகவல் தொடர்பு கொள்ள இயலாதிருக்கிறவிடத்து, இத்துணை விதியின் வேண்டுறுத்தல்கள் பொருந்தாது.

மேலும், வரம்புரையாக, அரசு ஊழியரின் விளக்கம் / முறையீடு ஏதேனும் பரிசீலித்த பின்னர், ஊதிய உயர்வுகள் நிறுத்தம் செய்தல் மற்றும் அத்தகைய ஊதிய உயர்வுகள் நிறுத்தமானது அரசு ஊழியருக்கு கொடுபடத்தக்க ஓய்வூதியத்திற்கு கேடு பயன் அளித்திடும் வகையில் அல்லது 3 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திற்கு ஊதிய உயர்வு திரள் பயனின்றி நிறுத்தம் (அ) ஏதேனும் காலத்திற்கு திரள் பயனுடன் ஊதிய உயர்வு நிறுத்தம் தண்டனைகளை விதிக்க எண்ணம் கொண்டிருக்கும் ஒவ்வொரு நேர்விலும், அத்தகைய தண்டனை உத்தரவு அரசு ஊழியர் மீது பிறப்பித்தலுக்கு முன்னர் துணை விதி (b) யில் உள்ள நடைமுறைகளை பின்பற்றுதல் வேண்டும்.

(b) (i) 1850 ஆம் ஆண்டு பொது ஊழியர்களின் விசாரணைச் சட்டத்தின் வகையங்களுக்கு குந்தகமின்றி, மாநில குடிமைப் பணி உறுப்பினர் (அ) குடிமைப் பதவியிடம் வகிக்கும் நபர் மீது விதி 8 இனங்கள் (iv), (vi), (vii) & (viii)ல் குறித்துரைக்கப்பட்ட தண்டனைகளை விதிக்க கருத்துரு கொண்டிருக்கிறவிடத்து, அரசு ஊழியரின் மேல் நடவடிக்கை எடுப்பதற்கான அடிப்படைகளை ஒன்றுபடுத்தி தகுந்த தெளிவான குற்றச்சாட்டுகளாகத் தொகுத்து எந்தக் குற்றச்சாட்டு மற்றும் எந்த சூழ்நிலைகளின் அடிப்படையில் ஒவ்வொரு குற்றச்சாட்டு அமைந்துள்ளது என்பதை விவர அறிக்கையுடன் தயாரித்து, அதில் எந்த சூழலை எதை அடிப்படையாக கொண்டு உத்தரவு பிறப்பிக்கப்பட உள்ளது என்பதனை நபருக்கு தெரிவிக்க வேண்டும். அரசு ஊழியர்தகுந்த காலவரையறைக்குள் தனது எதிர் அறிக்கையில் தாம் விரும்புவது வாய்மொழி விசாரணையாஅல்லது நேரில் கேட்டறிதலா என்பதையும் குறிப்பிட்டு அறிக்கை அனுப்ப வேண்டும். குற்றம் சாட்டப்பட்ட ஊழியர் விரும்பினால் அல்லது அதிகார ஆயம் பணித்தால் வாய்மொழி விசாரணை மேற்கொள்ளப்படும். குற்றம் சாட்டப்பட்ட ஊழியரே வாய்மொழி விசாரணை புறந்தள்ளி இருப்பினும் கூட, சாட்சிகளின் சாட்சியங்களால் மட்டுமே மெய்ப்பிக்கப்படக்கூடிய குற்றஞ்சாட்டப்பட்டவரால் ஏற்றுக் கொள்ளப்படாத குற்றச்சாட்டுகள் பொறுத்து, தொடர்பான அதிகாரியினால் அத்தகைய விசாரணை நடத்தப்படலாம். விசாரணையின் போது ஏற்கப்படாத குற்றச்சாட்டுகளுக்கு வாய்மொழி சாட்கியம் கேட்கை செய்யப்படும் மற்றும்குற்றம் சாட்டப்பட்டவர் சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்திடவும் மற்றும் தாம் விரும்பும் சாட்சிகளை அழைத்திடவும்உரிமையுடையவராவார்.இருப்பினும் விசாரணை நடத்தும் அதிகாரி சிறப்பு மற்றும்போதுமான காரணங்களின் எழுத்துருவிலான பதிவின் பேரில் சாட்சி ஒருவரை அழைத்திட மறுக்கலாம். குற்றம் சாட்டப்பட்ட நபர் வாய்மொழி விசாரணை விரும்பினாலும் (அ) கேட்கப்பட்டிருந்தாலும் இறுதி உத்தரவு பிறப்பித்தலுக்கு முன்னர் விசாரணையின் எந்த நிலையிலும் நேர்முக கேட்கை செய்யப்படலாம். விசாரணை அல்லது நேர்முக கேட்கை (நேர்விற்கேற்ப) பற்றிய அறிக்கை, விசாரணை அல்லது கேட்கை செய்திடும் அதிகாரியால், அத்தகைய அதிகாரி தண்டனை வழங்கவல்ல அதிகாரியாக இருப்பினும் இல்லாவிடினும், விசாரணை அறிக்கை தயாரிக்கப்படும். அத்தகைய அறிக்கை போதுமான சாட்சிய பதிவுருக்கள், ஏதேனுமிருப்பின் மற்றும் காண்முடிவுகளின் விவர அறிக்கை மற்றும் அதற்கான அடிப்படைகளையும் கொண்டிருக்கும். விசாரணை அதிகாரி விசாரணை ஒன்றில் கேட்கை மற்றும்சாட்சியத்தினை முழுமையாக அல்லது பகுதியாக பதிவு செய்த பின்னர்ஆள்வை செயலுறுத்தல் முடிவுற்றால் மற்றும் அத்தகைய அதிகாரவரம்பினைச் செலுத்திடும் மற்றொரு விசாரணை அதிகாரி வழிமுறையுரிமை கொண்டால், அவ்வாறு பின்வரும் விசாரணை அதிகாரி முன்னவர் பதிவு செய்த சாட்சியத்தின் பேரில் நடவடிக்கை எடுக்கலாம் அல்லது முன்னவரின் சாட்சியத்தின் பகுதி மற்றும் தான் பதிவு செய்த சாட்சியத்தின் பகுதியின் பேரிலும் நடவடிக்கை எடுக்கலாம்.

வரம்புரையாக, வழிமுறையுரிமை விசாரணை அதிகாரி நீதிநலன் பொருட்டு ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட சாட்சிகளின் சாட்சியத்தை மேலும் விசாரணை செய்ய எண்ணங் கொண்டிருப்பின், அத்தகைய சாட்சிகளை இதன் பின்னர்வகை செய்யப்பட்டுள்ளவாறு மறுபடியும் அழைத்து, விசாரணை குறுக்கு விசாரணை செய்திடலாம்.

* மேலும் வரம்புரையாக தமிழ்நாடு அரசு ஊழியர் நடத்தை விதிகள் விதி 20B -யின் பொருளமைவில் பாலியல் சித்ரவதை புகார் ஒன்று இருக்கிறவிடத்து, அத்தகைய புகார்களை விசாரிக்க ஒவ்வொரு அரசு அலுவலகம் அல்லது துறையில் நிறுவப்படும் புகார்கள் குழு, இந்த விதிகளின் நோக்கங்களுக்காக ஒழுங்கு நடவடிக்கை

அதிகாரியினால் நியமனம் செய்யப்பட்ட விசாரணை அதிகாரி எனக் கருதப்படல் வேண்டும் மற்றும் புகார்கள் விசாரிக்கும் குழுவானது இயன்றவரையில் இவ்விதிகளில் விதிக்கப்பட்டுள்ள நடைமுறைகளுக்கிணங்க விசாரணை நடத்துதல் வேண்டும்.

* (அ.நி.எண் 160 ப.ம.நி.சீ (என்) துறை, நாள் 20.09.2006 அமல் 20-09.2006)

இன்னும் வரம்புரையாக, அரசு ஊழியர் ஒருவர் தனது வழக்கைமுன்னிட ஓய்வு பெற்ற அரசு ஊழியரது உதவியைப் பெற்றிடலாம். ஆனால் விசாரணை அதிகாரி சட்டத் தொழிலாற்றுநராக இருந்தாலான்றி, அல்லது விசாரணை அதிகாரி வழக்கின் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு அவ்வாறு அனுமதித்திருந்தாலன்றி இந்நோக்கத்திற்காக வழக்கறிஞர் ஒருவரை அனுமதித்தலாகாது.

**விளக்கம் :** உதவி அளித்திட இரண்டு ஒழுங்கு நடவடிக்கை வழக்குகள் தம்வசம் நிலுவையில் வைத்துள்ள ஓய்வுபெற்ற அரசு ஊழியரின் உதவியினை அரசு ஊழியர் பெறுதல் கூடாது.

(ii) கூறு (1)ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விசாரணை அல்லது நேர்முக விசாரணை முடிந்தவுடன் தண்டனை வழங்க தகுதிறம் கொண்ட அதிகாரியானவர், விசாரணையின் போதான சாட்சியங்களின் அடிப்படையில் தண்டனை வழங்க கருத்து / எண்ணம் கொண்டிருப்பின், அவ்வாறான தண்டனைஉத்தரவு பிறப்பித்திடுவதற்கு முன், அரசு ஊழியருக்கு விசாரணை பற்றிய நகல் பிரதி ஒன்றினை அளித்து, விளக்க அறிக்கை ஒன்றினை 15 நாட்களுக்குள் கோரலாம். இறுதி உத்தரவு பிறப்பித்திடுவதற்கு முன்னர் விசாரணையின் போதான சாட்சிய அடிப்படையிலான ஊழியரின் விளக்க அறிக்கை பரிசீலனை செய்திடலாம். குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஊழியருக்கு தண்டனை விதிப்பதற்கு முன்னர், விதிக்கப்படவுள்ள தண்டனை தொடர்பாக முறையிட வாய்ப்பு வழங்க அவசியமில்லை.

இருப்பினும், ஒழுங்கு நடவடிக்கை அதிகாரியானவர் ஒவ்வொரு வழக்கிலும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்துடன் கலந்தாலோசிக்க வேண்டிய அவசியமிருப்பின், கலந்தாலோசித்து, தண்டனை விதிப்பதற்கு முன்னர் அவ்வாலோசனையினை கருத்தில் கொள்ள வேண்டும்.

மேலும் வரம்புரையாக, வேறு பணி அல்லது வகுப்பிலிருந்து மாற்றல் செய்யப்பட்டு தற்காலிகத்துறையில் பணி நியமனம் செய்யப்படும் ஒரு நபரின் நேர்வில், மாநில அரசானது, எந்நேரத்திலும் சொல்லப்பட்ட பதவியிடத்திற்கு அத்தகைய நபர் முழு உறுப்பினராக நியமனம் செய்யப்படுவதற்கு முன்னர், காலிப்பதவியிடம் தேவைக்காக (அ) அரசின் தேவைக்கு அவர்பதவியிடம் மிகையாகும் போது (அ) சொல்லப்பட்ட பதவியிடத்திற்கு அவருக்கு அவசியமான உளச்சார்பு இல்லை என மாநில அரசு உளநிறைவு கொள்ளுமாயின், இத்துணை விதியில் குறிப்பிடப் பெற்ற நடைமுறைகளைப் பின்பற்றாமல் அவரை அத்தகைய பிற வகுப்புக்கு (அ) பணிக்கு பணியிறக்கம் செய்திடலாம்.

(c) (i) (1) குற்றவியல் நீதிமன்றத்தால் குற்றத்தீர்ப்புக்குள்ளாக்க வழிவகுத்த சங்கதிகளின் அடிப்படையில் பணி உறுப்பினர்மீது (அத்தகைய நீதிமன்றத்தால் அவர் உடனடியாக தண்டனை விதிக்கப்பட்டாலும் (அ) இல்லாவிடினும்)துணை விதி (b) கூறு (i) ல் உள்ள தண்டனைகளை விதிக்கக் கருதுகிறவிடத்து, துணை விதி (b) யின் வேண்டுறுத்தல்கள் பொருந்தாது. ஆனால் அவர் விரும்பிடும் முறையீடு அளிக்க தகுந்த வாய்ப்பு கொடுக்கப்படும் மற்றும்அத்தகைய முறையீடு ஏதேனும், தண்டனை உத்தரவு பிறப்பிக்கப்படுவதற்கு முன்னர் பரிசீலனையில் கொள்ளப்படும்.

(2) குற்றவியல் நீதிமன்றத்தால் குற்றத் தீர்ப்புக்கு வழிவகுத்த சங்கதிகளின் அடிப்படையில் (அ) தொடர்பான நபர்தலைமறைவாகிறவிடத்து (அ) பிற காரணங்களின் பேரில் அலுவலருடன் தகவல் தொடர்பு கொள்ள இயலாதிருக்கிறவிடத்து, பணி உறுப்பினர் மீது விதி 8 (அ) 9ல் குறித்துரைக்கப்பட்ட தண்டனைகளைவிதிக்க கருத்துரு கொண்டிருக்கிறவிடத்து, துணைவிதி (b) யின் வேண்டுறுத்தல்கள் பொருந்தாது.

(ii) நாட்டு நலன் பொருட்டு துணை விதி (b) யில் குறிப்பிடப்பெற்ற நடைமுறைகளை பின்பற்றுதல் உகந்தது அல்ல என மாநில ஆளுநர் மன நிறைவு கொள்கிறவிடத்து, துணை விதி (b)யின் காப்புரைகள் பொருந்தாது.

(d) (i) துணை விதி (a) மற்றும் (b) யின் ஏதேனும் வகையங்கள் அல்லது அனைத்தும், தவிர்க்க முடியாத நேர்வுகளில் சிறப்பு மற்றும் போதுமான எழுத்துருவிலான காரணங்கள் பதிவின் பேரில், துணைவிதிகளின் வேண்டுறுத்தல்கள் பின்பற்றுவது கடினமாக இருக்கிறவிடத்து கைவிடப்படும் மற்றும் குற்றம் சாட்டப்பட்டவருக்கு அநீதி இழைக்கா வண்ணம் அந்த வேண்டுறுத்தல்கள் கைவிடப்பட வேண்டியதாகும்.

(ii) துணை விதி (b) யில் வகுத்தமைக்கப்பட்ட நடைமுறையினைப் பின்பற்றுவது இயலுமா என்பது குறித்து ஐயம் எழுமாயின், அத்தகைய நபரை பணியறவு (அ) பணி விலக்கல் அல்லது பணிநிலை இறக்கம் செய்திட தகுதிறம் வாய்ந்த அதிகாரியின் முடிவே இறுதியானதாகும்.

(iii) மற்றும் (iv) சிறைத்துறை மற்றும் தற்காலிகப் பணியாளர் சார்ந்தது.

(e) பணித் தொகுதி உறுப்பினர் ஒருவர் பணியிடை நீக்கம் செய்யப்படலாம்.

(i) அவருக்கெதிராக கடுங்குற்றத்திற்காக விசாரணை எதிர்நோக்கப்படுகிறவிடத்து (அ) நிலுவையில் இருக்கிறவிடத்து, அல்லது

(ii) அவருக்கு எதிராக குற்றவியல் குற்றப் புகார் புலனாய்வில் (அ) வழக்கு விசாரணையில் மற்றும் அத்தகைய பணியிடை நீக்க உத்தரவு பொது நலன் முன்னிட்டு அவசியமாக இருக்கிறவிடத்து

(2) அரசு ஊழியர்எவர் ஒருவர் குற்றமுறு குற்றச்சாட்டின் பேரில் அல்லது வேறுவகையில் 48 மணிநேரத்திற்கு மேற்பட்டு சிறைக்காவலில் இருத்தி வைக்கப்பட்டால் இவ்விதியின் கீழ் பணியிடை நீக்கம் செய்யப்பட்டதாகக் கருதப்படுவார்.

(3) பணியிடை நீக்கத்தில் உள்ள அரசு ஊழியர் ஒருவர் மீது விதிக்கப்பட்ட பணியறவு, பணி விலக்கல், அல்லதுகட்டாயப் பணி ஓய்வு உத்தரவு மேல்முறையீடு அல்லது மறு ஆய்வின் பேரில் இவ்விதிகளின் கீழ் நீக்கறவு செய்யப்படுகிறவிடத்து மற்றும் வழக்கானது மேலுமான விசாரணைக்கு (அ) நடவடிக்கைக்கு (அ) வேறு ஏதேனும் பணிப்புரைகளுக்கு குறித்தனுப்புகை செய்யப்படும்போது, பணியிடை நீக்க உத்தரவானது. பணியறவு, பணி விலக்கல் (அ) கட்டாயப் பணி ஓய்வு அசல்உத்தரவு தேதியிலிருந்து தொடர்ந்து செயலாற்றலில் இருப்பதோடு மேலுமான உத்தரவுகள் பிறப்பிக்கப்படும் வரை செயலாற்றலில் இருக்கும்..

(4) அரசு ஊழியர் ஒருவர் மீது விதிக்கப்பட்ட பணியறவு, பணி விலக்கம் (அ) கட்டாய பணி ஓய்வு தண்டனை உத்தரவானது நீதிமன்ற உத்தரவினால் நீக்கறவுஅல்லது இல்லாநிலையதாக்கப்படுகிறவிடத்துமற்றும் ஒழுங்கு நடவடிக்கை அதிகாரி வழக்கின் சூழல்களை பரிசீலித்து, எந்தக் குற்றச் சாட்டுகளின் பேரில் பணியறவு, பணிவிலக்கல் (அ) கட்டாயப் பணி ஓய்வு முதலேற்பில் விதிக்கப்பட்டதோ அதன் பேரில் மேலுமான விசாரணை செய்திட முடிவு செய்திடும் போது, பணியறவு, பணிவிலக்கல் அல்லது கட்டாய பணி ஓய்வு உத்தரவு அசல் தேதி முதல் அரசு ஊழியர் தற்காலிக பணி நீக்கத்தில் வைக்கப்படுவதாகக் கருதப்படுவார் மற்றும் மேலுமான உத்தரவுகள் பிறப்பிக்கப்படும் வரை பணியிடை நீக்கத்தில் தொடர்ந்து இருப்பார்.

வரம்புரையாக, வழக்கின் தகுதிப்பாடுகளை சீர்தூக்கிப் பாராமல் நுட்ப / நுணுக்க ஆதாரங்களின் பேரில் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருக்கிறவிடத்து, அந்த நிலையினை எதிர்கொள்ள தேவைப்பட்டாலன்றி அத்தகைய மேலுமான விசாரணை உத்தரவு பிறப்பித்தலாகாது.

(5) அரசு ஊழியர் ஒருவர் தற்காலிகப் பணி நீக்கத்தில் அல்லது தற்காலிகப்பணி நீக்கம் செய்யப்பட்டதாக கருதப்படுகிறவிடத்து (ஏதேனும் ஒழுங்கு நடவடிக்கைகள் தொடர்பாக (அ) பிறவாறு) மற்றும் அந்தப் பணியிடை நீக்க காலத்தில் வேறு ஏதேனும் ஒழுங்கு நடவடிக்கைகள் தொடங்கப்படும் போது (அ) ஏதேனும் குற்றவியல் புகார் புலனாய்வில் இருக்கும் போது (அ) அவருக்கு எதிராக வழக்கு விசாரணை இருக்கும் போது மற்றும் கூறு (1)ன் வேண்டுறுத்தலின்படி பொது நலன் முன்னிட்டு அரசு ஊழியரின் தற்காலிகப்பணி நீக்கம் அவகியமாக இருக்கிறவிடத்து, அவரை தற்காலிகப் பணி நீக்கம் செய்ய தகுதிறம் வாய்ந்த அதிகாரி, எழுத்துருவிலான காரணங்கள் பதிவின் பேரில், அத்தகைய அனைத்து வழக்கு நடவடிக்கைகள், குற்றவியல் நீதிமன்றத்தால் குற்றத்தீர்ப்புக்கு அடிப்படையான சங்கதிகளின் பேரிலான துறை நடவடிக்கைகள் உட்பட, முடிவடையும் வரை, அத்தகைய அரசு

ஊழியரைத் தொடர்ந்து தற்காலிகப் பணி நீக்கத்தில் வைத்திருக்க உத்தரவிடுவார்.

(5) இந்த விதிகளின் கீழ் செய்யப்பட்ட (அ) செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட தற்காலிக பணி நீக்க உத்தரவு, அதனைப் பிறப்பித்த அதிகாரியினால் (அ) அதன் சார்நிலை அதிகாரியினால் எந்நேரத்திலும் திரும்பப் பெறப்படலாம்/ நீக்கப்படலாம்.

(f) ஒரு அரசு ஊழியருக்கு, அவருக்கு எதிரான குற்றங்கள், அதன் சார்பான குற்றச்சாட்டுக்கள் பற்றிய அறிக்கை, மற்றும் வழக்கில் உத்தரவு பிறப்பித்தலுக்கு கருத்தில் கொள்ளப்பட்ட சூழ்நிலைகள் போன்ற விவரங்கள் கொண்ட அறிக்கை நகல் ஊழியருக்கு அளிக்கப்பட்டு, ஊழியர் தனது மறுப்புரையை அந்த நோக்கத்திற்கான குறிப்பிட்ட நாட்களுக்குள் அளிக்காமலிருந்தால் அல்லது விசாரணை அதிகாரியின் முன் நேரில் ஆஜராகாமலிருந்தால் அல்லது இவ்விதிகளின் காப்புரைகளின்படியான நடைமுறைகளைக் கடைப்பிடிக்காதிருந்தால், விசாரணை அதிகாரியானவர் விசாரணையினை ஒரு தலைப்பட்சமாக முடிவு செய்திடுவார்.

(g) ஓர் அரசு ஊழியருக்கெதிரான தவறான நடத்தைச் குற்றச்சாட்டில் உண்மை இருப்பதாக ஒழுங்கு நடவடிக்கை அதிகாரி கருதிடும் போது, தானே விசாரிக்கலாம் அல்லது விசாரணை அதிகாரியை நியமித்து விசாரிக்கலாம்.

**விளக்கம் :** ஒழுங்கு நடவடிக்கை அதிகாரியே விசாரணை நடத்துகிறவிடத்து **"விசாரணை அதிகாரி"** எனும் சுட்டுகை ஒழுங்கு நடவடிக்கை அதிகாரியினை சுட்டுவதாகப் பொருள் கொள்ளப்படும்.

**விதி 17A :** ஒழுங்கு நடவடிக்கை ஆணையர் மற்றும் துணை ஆணையர், ஒழுங்கு நடவடிக்கை அதிகார ஆயம் சுட்டியுரைப்பதன் பேரில், மாநில பணித் தொகுதி உறுப்பினர் அல்லது குடிமைப் பதவியிடம் வகிக்கும் நபர் பொறுத்து விதி 17(b)(i) ன் கீழான விசாரணை நடத்தலாம்.

**விளக்கம் :-** இந்த விதியின் நோக்கத்திற்காக **"ஒழுங்கு நடவடிக்கை அதிகாரி"** எனில் விதி 17(b)(i)யில் குறிப்பிடப்பட்டுள்ள தண்டனைகளை விதிக்க அதிகாரம் வாய்ந்த அதிகாரி அல்லது அவருக்கு சார்நிலையாக உள்ள ஆனால் விசாரணை நடத்தப்பட உள்ள அதிகாரியினை விட உயர் அதிகாரி எனப் பொருள்படும்.

**விதி 18:-** (அ) தண்டனை வழங்கவல்ல அதிகாரி கீழ்க்கண்ட விபரங்களுடன் கூடிய பதிவுருவை பராமரித்தல் வேண்டும்.

(i) அரசு அலுவலரின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளின் பேரில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்,
(ii) வனையப்பட்டுள்ள குற்றச் சார்த்துகள்
(iii) குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அலுவலரின் முறையீடுகள் ஏதேனும் மற்றும் ஏதேனும் சாட்சியங்கள்,
(iv) விசாரணை கண்டுபிடிப்புகள் மற்றும் அதற்கான ஆதாரங்கள்

(ஆ) அனைத்து தண்டனை உத்தரவுகளும் எந்த அடிப்படையில் விதிக்கப்பட்டுள்ள என எழுத்துருவில் குறிப்பிட்டு எந்த நபருக்கு எதிராக பிறப்பிக்கப்படுகிறதோ அவருக்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

(இ) இவ்விதியின் கீழ் ஒவ்வொரு ஆணை அறிவிக்கை மற்றும் கட்டளைகள் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அரசு அலுவலருக்கு நேரிலும் அல்லது ஒப்புதலுடன் கூடிய பதிவு அஞ்சலிலும் அல்லது நபர் இல்லை எனில் குடும்பத்தின் முதிய உறுப்பினரிடம் சார்பு செய்தல் வேண்டும் மற்றும் மேற்சொன்ன வழியில் சமர்ப்பிக்கப்பட முடியவில்லையெனில் அரசு அலுவலரின் இறுதி இருப்பிடத்தில் தெளிவாகத் தெரியும் இடத்தில் ஒட்டி வைத்திட வேண்டும்.

(ஈ) இறுதி உத்தரவு பிறப்பிக்கும் போது ஒழுங்கு நடவடிக்கை அதிகாரியானவர் விசாரணையின் பேரில் சான்றுப் பொருட்கள் மீதான பொறுப்புத் தீர்வு தொடர்பாகவும் ஆணையிடலாம். மேல்முறையீடு காலம் முடிந்த பின்பு தொடர்புடைய அலுவலர் சான்றுப் பொருட்களை தீர்வு செய்திடுவார்.

## பகுதி IV- மேல்முறையீடு

**விதி 19 :-** மாநில குடிமைப் பணி உறுப்பினர் மற்றும் குடிமைப்பதவி வகிக்கும் நபர் அரசுப் பணியில் முடிவுறுத்தப்பட்ட நபர் உள்பட ஒவ்வொருவரும் இதன் பின் வகை செய்யப்பட்டுள்ளவாறு, அதிகாரியினால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கு எதிராக மேல்முறையீடு செய்திட உரிமையுடையவராவர்.

(அ) விதி 8 அல்லது விதி 9ன் கீழ தண்டனை விதிக்கப்பட்டால்

(ஆ) குறிப்பிட்ட காலத்திற்கான அல்லது வரையில்லா காலத்திற்கான ஒப்பந்தத்தில் பணியமர்த்தப்பட்டிருப்பின், அவரது ஒப்பந்த விதிமுறைகளுக்கிணங்க பணியிலிருந்து விடுவித்தல் மற்றும் அவரது பணி முடிவுறுத்தப்படும் போது இருவகையான ஒப்பந்தப் பணியிலிலும் அவர் 5 வருடத்திற்கும் மேலாக தொடர் பணியினை முடித்திருத்தல் மற்றும்

(இ) ஓய்வூதிய விதிகளுக்கிணங்க அரசு அலுவலருக்கு அனுமதிக்கப்பட்டுள்ள அதிக பட்ச ஓய்வூதியத்தை கூடுதல் ஓய்வூதியம் உட்பட குறைத்தல் மற்றும் நிறுத்தி வைத்தல்.

**விதி 20:-** (1) மாநில பணித் தொகுதி உறுப்பினர் அல்லது சார்நிலைப் பணி உறுப்பினர், அத்தகைய பணியிலிருந்து முடிவுறுத்தப்பட்ட உறுப்பினர் உட்பட, எவர் நேர்வில் அரசு இறுதி உத்தரவு பிறப்பித்திருக்கிறதோ, அவர் உத்தரவு தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து 2 திங்களுக்குள், கீழ்க்காண் அடிப்படைகளில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை மறு ஆய்வு செய்ய வேண்டி அரசிற்கு மனு செய்ய உரிமை கொண்டவராவார்

அ) தகுதியான அதிகாரியினால் உத்தரவு பிறப்பிக்கப்பட வில்லையென்றும்

ஆ) தன்னைக் காத்துக் கொள்வதற்கான தகுந்த வாய்ப்பு கொடுக்கப்படவில்லை என்றாலும்

இ) தண்டனை மிகுதியானது அல்லது அநீதியானது என்றாலும்

ஈ) வழக்கு தொடர்பான புதிய சாட்சியத்தை கண்டுபிடித்தது தனது அறிவுக்கு எட்டாவண்ணம் இருந்ததாகவும் மற்றும் தண்டனை உத்தரவு பிறப்பிக்கப்படுவதற்கு முன் நிரூபிக்க முடியவில்லை என்றும் அரசின் திருப்திக்கேற்ப முறையீட்டாளர் நிரூபித்தல்

உ) காலவரையறைச் சட்டத்தினை பொருந்தச் செய்யத் தவறுதல் அல்லது பதிவுருக்களின் தோற்றத்தில் தெளிவாக காணப்படும் பிழை போன்ற வெளிப்படையான தவறுகை (அ) விடுதல்கள்

வரம்புரையாக, அரசானது தன் உளத்தேர்வின்படி சொல்லப்பட்ட இரு மாதங்களுக்குள் மறுஆய்வு சமர்ப்பித்தலுக்கான ஏதேனும் காலத்தாழ்வினை மன்னித்து விட்டுவிடலாம்.

(2) மேற்காண் ஏதேனும் அடிப்படைகளை உளநிறைவு செய்திடாத மறு ஆய்வு மனு ஒட்டு மொத்தமாக நிராகரிக்கப்படும்.

* (3) மாநில அரசு அன்றி வேறு அதிகாரி, விதி 12 துணை விதி (2)ன் பயன் திறத்தினால், மாநில பணித் தொகுதி உறுப்பினர் மீது தண்டனை விதிக்கும் உத்தரவு பிறப்பித்திருக்கிறவிடத்து, அத்தகைய உறுப்பினர் உத்தரவானது துறைத் தலைவரின் சார்நிலை அதிகாரியால் பிறப்பிக்கப்பட்டிருப்பின் துறைத்தலைவருக்கும் துறைத் தலைவரால் பிறப்பிக்கப்பட்டிருப்பின் அரசிற்கும் மேல்முறையீடு செய்ய உரிமையுடையவராவார்.

* (அ.நி.எண்.19 ப.ம.நி.சீ(எண்) துறை, நாள்:11.2.2008, அமல் 11.2.2008)

**விதி 21:-** நீக்கம்

**விதி 22 :-** இவ்விதி NCC, நகராட்சி பொறியியல் சார்நிலைப் பணி, காவல்துறை விரல் ரேகைப் பிரிவு அலுவலர்கள் மேல்முறையீடு செய்வது பற்றியது.

**விதி 23:-** (1) விதி 8 அல்லது 9ன் கீழ் தண்டனைக்கான மேல்முறையீட்டுக் குழு கீழ்க்காணும்

மேல்முறையீடு விபரங்களைப் பரிசீலிக்கும்;

(a) தண்டனை உத்தரவிடுவதற்கான காரணங்கள் நன்கு உறுதிப்படுத்தப்பட்டு உள்ளனவா என்றும்

(b) நடவடிக்கை எடுப்பதற்கு போதுமான உறுதியான காரணங்கள் உள்ளனவா என்றும்,

(c) தண்டனையானது மிகுதியாகவும், போதுமானதாகவும் அல்லது போதுமற்றவையாகவும் இருப்பின் உத்தரவு மூலம்

(i) உறுதிப்படுத்தி அதிகப்படுத்தி, குறைத்து அல்லது நீக்கறவு செய்து

(ii) தண்டனை வழங்கிய அதிகாரிக்கே அல்லது வேறு அதிகாரிக்கு வழக்கை குறித்தனுப்பி வழக்கின் நிலவரத்திற்கு தகுந்தவாறு கட்டளையை பணிக்கலாம்.

வரம்புரையாக (i) மேல்முறையீட்டு அதிகாரியினால் விதிக்கப்படவிருக்கும் அதிகப்படுத்தப்பட்ட தண்டனையானது விதி 8ன் கீழ் (iv) (v) (c) (vi) (vii) (viii) தண்டனையாக இருப்பின், துணை விதி 17 (b)யின் படி முன்னதாக விசாரணை நடத்தப்படவில்லையெனில் விதி 17(c)யின் காப்புரைகளுக்கிணங்க மேல்முறையீட்டு அதிகாரியே அத்தகைய விசாரணை நடத்தலாம் அல்லது விதி 17 (b)யின் வகையங்களுக்கிணங்க விசாரணை நடத்த உத்தரவிடலாம் மற்றும் அதன் பின்னர் அத்தகைய விசாரணை நடவடிக்கைகளின் முடிவின் பேரில் பொருத்தமெனக் கருதும் அத்தகைய உத்தரவுகளைப் பிறப்பிக்கலாம்.

(ii) மேல்முறையீட்டுக் குழுவினால் விதிக்கப்படவிருக்கும் அதிகப்படுத்தப்பட்ட தண்டனையானது விதி 8ன் கீழ் (iv) (v) (c) (vi) (vii) & (viii) தண்டனையாக இருப்பின், துணை விதி 17 (b) யின்படி முன்னதாக விசாரணை நடத்தப்பட்டு இருப்பதால் விதிக்கப்படவிருக்கும் தண்டனையை எதிர்த்து முறையீடுகள் செய்வதற்கான "தகுந்த வாய்ப்பு" மேல்முறையீட்டாளருக்கு கொடுத்த பின்பு சாட்சியங்களின் அடிப்படையில் தகுந்த உத்தரவுகளைப் பிறப்பிக்கலாம்.

(iii) வேறு யாதொரு வழக்கு எதிலும் அதிகரிக்கப்பட்ட தண்டனைக்கு எதிராக விதி 17 (a) யின் வகையத்திற்கிணங்க மேல்முறையீட்டாளருக்கு தகுந்த வாய்ப்பு அளிக்கப்பட்டாலன்றி அத்தகைய அதிகரிக்கப்பட்ட தண்டனை விதித்தல் கூடாது.

(2) தண்டனை விதிக்க பின்பற்றப்படும் நடைமுறையில் ஏதேனும் தவறு அல்லது பிழையினை, மேல்முறையீட்டு அதிகாரி எழுத்துருவிலான காரண பதிவின் பேரில் அந்த தவறு அல்லது பிழை ஒரு பொருட்டு அல்ல என்றும் அது தொடர்பான நபருக்கு அநீதி விளைவிக்காது அல்லது வழக்கின் முடிவுகளையோ பாதிக்காது என்பதன் பேரில் ஒதுக்கி விடலாம்.

**விதி 24 :-** மேல்முறையீடு ஒன்றின் நேர்வில் நீதி மற்றும் சமத்துவ அடிப்படையில் வழக்கின் சூழல்களுக்கேற்ப மேல்முறையீட்டு அதிகாரி மேல் முறையீடு விண்ணப்பத்தின் மேல் உத்தரவுகளை பிறப்பிக்கும்.

**விதி 25:-** மேல்முறையீடு செய்யும் நபர் தனியாகவும், தன் சொந்தப் பெயரிலும் மேல்முறையீடு செய்ய வேண்டும்.

விதி 26:- இவ்விதிகளின் கீழ் மேல்முறையீடு மனுவானது மேல் முறையீட்டாளரின் சார்பான அனைத்து வாதங்கள் கொண்டதாகவும் முழுமையானதாகவும், பொருத்தமானதாகவும், பொருத்தமான நாகரீகமான மொழி நடையிலும் மற்றும் அவமரியாதை மொழியற்று இருத்தல் வேண்டும். ஒவ்வொரு அத்தகைய மேல்முறையீடு மனுவானது மேல்முறையீட்டு அதிகாரிக்கு முகவரியிட்டு விண்ணப்பிக்கப்படும் மற்றும் மனுவானது மேல்முறையீட்டாளர் சார்ந்திருந்த அல்லது சார்ந்துள்ள துறைத்தலைவர் மூலமாகவும் அல்லது மேல்முறையீட்டிற்கான உத்தரவு பிறப்பித்த அதிகாரி மூலமாகவும் அல்லது சார்நிலைப் பணியாளர்கள் வழக்கமான அலுவலக வழி மூலமாகவும் மனுவை சமர்ப்பிக்கலாம்.

விதி 27:- எந்த அதிகாரியின் உத்தரவினால் மேல்முறையீடு செய்யப்பட்டதோ அந்த அதிகாரிக்கு கீழல்லாத அதிகாரியினால் மேல்முறையீடு ஒன்று நிறுத்தி வைக்கப்படும்.

(1) இவ்விதிகளின் கீழ் மேல்முறையீடு இல்லா வழக்கில் மேல்முறையீடாக இருப்பின், அல்லது

(2) விதி 26ன் வகையங்களைப் பின்பற்றவில்லையெனில், அல்லது

(3) மேல்முறையீட்டுக்குரிய உத்தரவு பற்றி மேல்முறையீட்டாளருக்கு தெரிவிக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் இரு திங்களுக்குள் மேல்முறையீடு முன்னிடப்படவில்லையெனில் மற்றும் காலத்தாழ்விற்கு போதிய காரணம் காண்பிக்கப்படவில்லையெனில், அல்லது

(4) மேல்முறையீடு மனுவானது, இரண்டாவதாகவும் முந்தைய மேல் முறையீடு மனுவின் மறு பதிப்பாகவும் முந்தைய மனுவை பரிசீலித்த அதே மேல்முறையீட்டு அதிகாரிக்கு முன்னிட்டும் மற்றும் மறுபரிசீலனை செய்வதற்கான் புதிய காரணங்கள் இல்லையெனில், அல்லது

(5) இவ்விதிகளின் கீழ் மேல்முறையீடு முன்னிடப்பட வேண்டியிராத அதிகாரிக்கு முகவரியிடுதல்

வரம்புரையாக, மேல்முறையீடு நிறுத்தி வைக்கப்படும் ஒவ்வொரு நேர்விலும் மேல்முறையீட்டாளருக்கு அதற்கான காரணக்கூறுகள் தெரிவிக்கப்படுதல் வேண்டுதல்.

மேலும் வரம்புரையாக, விதி 26ன் வகையங்களைப் பின்பற்றத் தவறிய காரணத்தின் பேரில் மட்டுமே நிறுத்தி வைக்கப்பட்ட மேல்முறையீடு ஒன்று, நிறுத்தி வைப்பு பற்றி மேல்முறையீட்டாளருக்கு தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் மீண்டும் சமர்ப்பிக்கலாம் மற்றும் அவ்வாறான வகையங்களை பின்பற்றிய வடிவத்தில் மீண்டும் சமர்ப்பிக்கப்படுமாயின், நிறுத்தி வைக்கப்படாது.

விதி 28:- தகுதிறம் வாய்ந்த அதிகாரியினால் மேல்முறையீடு நிறுத்தி வைக்கப்பட்டதற்கு எதிராக மேல்முறையீடு இராது.

விதி 29 & 30 :- நீக்கம்

விதி 31 (அ) :- இந்த விதிகளின் கீழ் நிறுத்தி வைக்கப்படாத ஒவ்வொரு மேல்முறையீட்டையும் எவரின் உத்தரவுக்கெதிராக மேல்முறையீடு செய்யப்படுகிறதோ அந்த அதிகாரி யாதொரு கருத்தும் வெளிப்படுத்தாமல், மேல்முறையீட்டு அதிகாரிக்கு அனுப்பிடுவார்.

(ஆ) விதி 27-ன் கீழ் நிறுத்தி வைக்கப்பட்ட மேல்முறையீடுகளின் பட்டியல், நிறுத்தி வைத்தலுக்கான காரணங்களுடன், அரை ஆண்டுக்கொருமுறை நிறுத்தி வைப்பு அதிகாரியால் மேல்முறையீட்டு அதிகாரிக்கு அனுப்பி வைக்கப்படும்.

விதி 32:- சார்நிலை அதிகாரியினால் நிறுத்தி வைக்கப்பட்ட இவ்விதிகளின் கீழ் அனுமதிக்கத்தக்க ஏதேனும் மேல்முறையீட்டினை மேல்முறையீட்டு அதிகாரி விசாரணை செய்திடலாம் மற்றும் அதன் பேரில் பொருத்தமெனக் கருதும் அத்தகைய உத்தரவுகளைப் பிறப்பிக்கலாம்.

விதி 33:-

விதி 34:- நீக்கம்

விதி 35:- எழுதுபொருள் அச்சகத் துறை சார்ந்தது.

## பகுதி - V - சீராய்வு

**விதி 36:- சீராய்வு**

(1) இவ்விதிகளில் அடங்கியுள்ளது எது எவ்வாறு இருப்பினும் -

(i) மாநில அரசு அல்லது

(ii) துறைத் தலைவர் அல்லது

(iii) மாநில அரசு அன்றி மேல்முறையீட்டு அதிகாரி, சீராய்வு செய்யப்பட வேண்டிய உத்தரவின் தேதியிலிருந்து 6 திங்களுக்குள் அல்லது

(iv) இதன் பொருட்டு மாநில அரசினால் பொது அல்லது சிறப்பு உத்தரவு மூலம் குறித்துரைக்கப்பட்ட வேறு ஏதேனும் அதிகாரி, மற்றும் அத்தகைய பொது அல்லது சிறப்பு உத்தரவில் வகுத்தமைக்கப்பட்ட அத்தகைய காலத்திற்குள் எந்நேரத்திலும் தாங்களாகவே அல்லது வேறுவகையில் ஏதேனும் விசாரணையின் பதிவுருக்களை வரவழைக்கலாம் மற்றும் அத்தகைய கலந்தாலோசனை அவசியமாயின் TNPSCயுடன் கலந்தாலோசித்து பின்னர் இவ்விதிகளின் கீழ் ஏதேனும் உத்தரவினை மாற்றிடலாம்.

(a) உறுதிப்படுத்திடலாம், மாற்றியமைக்கலாம் (அ) உத்திரவினை நீக்கறவு செய்திடலாம், அல்லது

(b) உத்தரவினால் விதிக்கப்பட்ட தண்டனையினை உறுதிப்படுத்தலாம், குறைக்கலாம், அதிகப்படுத்தலாம் (அ) நீக்கலாம் (அ) தண்டனை ஏதும் விதிக்கப்படாதிருக்கிறவிடத்து தண்டனை விதிக்கலாம், அல்லது

(c) எந்த அதிகாரி உத்தரவினைப் பிறப்பித்தாரோ அவருக்கு திரும்ப அனுப்புதல் (அ) வேறு ஏதேனும் அதிகாரிக்கு அத்தகைய அதிகாரி வழக்கின் சூழல்களில் தான் முறையெனக் கருதும் அத்தகைய மேலுமான விசாரணையினை செய்திட நெறியுறுத்தல், அல்லது

(d) அவர்கள் அல்லது தான் பொருத்தமெனக் கருதும் அத்தகைய பிற உத்தரவுகளைப் பிறப்பித்தல்

வரம்புரையாக, சீராய்வு அதிகாரியினால் தண்டனை விதித்து அல்லது அதிகரித்து எந்தவொரு உத்தரவும், அந்த உத்தரவுக்கு எதிராக அரசு ஊழியருக்கு முறையிட தகுந்த வாய்ப்பு அளிக்கப்பட்டாலன்றி விதிக்கப்படுதல் கூடாது. மற்றும் விதி 8ல் கூறுகள் (iv) (v) (c), (vi) (vii) & (viii)ல் குறிப்பிடப்பட்ட தண்டனைகளை விதிக்க கருத்துரு கொண்டிருக்கிறவிடத்து அல்லது சீராய்வு வேண்டப்படும் உத்தரவினால் விதிக்கப்பட்ட தண்டனையை அந்த கூறுகளில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தண்டனைகளுக்கு அதிகரிக்க கருத்துரு கொண்டிருக்கிறவிடத்து, மற்றும் விதி 17(b)யின் கீழ் ஏற்கனவே அந்த வழக்கில் விசாரணை நடத்தப்படாதிருப்பின், அத்தகைய தண்டனை எதுவும், சொல்லப்பட்ட விதி 17 (b)யில் விதிக்கப்பட்ட முறையில் விசாரணை 17 (c)யின் வகையங்களுக்கிணங்க நடத்தப்பட்ட பின்னர் அன்றி மற்றும் அத்துடன், அத்தகைய கலந்தாலோசனை அவசியமாயின் TNPSCயுடன் கலந்தாலோசித்து, அத்தகைய தண்டனை விதிக்கப்படுதல் வேண்டும்.

மேலும் வரம்புரையாக, துறைத் தலைவரால் சீராய்வு அதிகாரம்:-

(i) மேல்முறையீட்டில் உள்ள உத்தரவினை பிறப்பித்த அதிகாரி அல்லது

(ii) மேல்முறையீடு செய்யப்படாதிருக்கிறவிடத்து, மேல்முறையீடு முன்னிடப்பட வேண்டிய அதிகாரி,

துறைத் தலைவருக்கு சார்நிலை / கீழ்நிலை அதிகாரியாக இருந்தாலன்றி, அவர் சீராய்வு அதிகாரம் செயலுறுத்த மாட்டார்.

(2) சீராய்வு நடவடிக்கை எதுவும் தொடங்கப்படாது-

(a) ஓர் மேல்முறையீட்டிற்கான காலவரையறை கழிவுறுவதற்கு முன்னர், யாதொரு மேல்முறையீடும் செய்யப்படா திருக்கிறவிடத்து, அல்லது

(b) அத்தகைய மேல்முறையீடு செய்யப்பட்டிருக்கிறவிடத்து, அத்தகைய மேல்முறையீடு தீர்வு

செய்யப்படுவதற்கு முன்னர்

(c) சீராய்வுக்கான விண்ணப்பம் ஒன்று, இவ்விதிகளின் கீழான மேல்முறையீடு போன்றே அதே வகையில் முறையில் நடவடிக்கைக்கு எடுத்துக் கையாளப்படும்.

**விதி 37:- மறு ஆய்வுக்கான அதிகாரம்**

மாநில அரசானது எந்நேரத்திலும் தாமாகவே அல்லது வேறுவகையில், மறு ஆய்வின் கீழ் உள்ள உத்தரவு பிறப்பிக்கும் நேரத்தில் கிடைக்காத (அ) முன்னிடப்படாத புதிய சான்றுப் பொருள் (அ) சாட்சியம் மற்றும் வழக்கின் போக்கை திசை மாற்றக் கூடிய தன்மையிலானது அவர்தம் கவனத்திற்கு வந்திடும்போது, இவ்விதிகளின் கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை மறு ஆய்வு செய்திடலாம்.

வரம்புரையாக, மாநில அரசினால் தண்டனை விதித்து அல்லது அதிகரித்து எந்தவொரு உத்தரவும், அந்த உத்தரவுக்கு எதிராக அரசு ஊழியருக்கு முறையிட தகுந்த வாய்ப்பு கொடுக்கப்பட்டாலன்றி, பிறப்பிக்கப்படுதல் கூடாது மற்றும் விதி 8-ல் குறித்துரைக்கப்பட்ட தண்டனைகள் ஏதேனும் விதிக்க கருத்துரு கொண்டிருக்கிறவிடத்து, அல்லது மறு ஆய்வு வேண்டப்படும் உத்தரவினால் விதிக்கப்பட்ட சிறு தண்டனையினை பெருந்தண்டனையாக அதிகரிக்க கருத்துரு கொண்டிருக்கிறவிடத்து, மற்றும்விதி 17(b)யின் கீழ் ஏற்கனவே அந்த வழக்கில் விசாரணை நடத்தப்படாதிருப்பின், அத்தகைய தண்டனை எதுவும், சொல்லப்பட்ட விதி 17(b) யில் விதிக்கப்பட்ட முறையில் விசாரணை 17(c)யின் வகையங்களுக்கிணங்க நடத்தப்பட்ட பின்னர் அன்றி மற்றும் அத்துடன் அத்தகைய கலந்தாலோசனை அவசியமாயின் TNPSCயுடன் கலந்தாலோசித்து, அத்தகைய தண்டனை விதிக்கப்படுதல் வேண்டும்.

## இணைப்பு - I

**விதி 17 (ஆ)ன் கீழ் குற்றச்சாட்டு தொடுக்க முடிவெடுப்பதற்கான வழிகாட்டல் நெறிமுறைகள்**

**(அ.க.எண் 145353/பணி.எண்/ப.ம.நி.சீ. துறை நாள் : 11.03.93)**

கீழ்க்கண்ட நேர்வுகளில் விதி 17 (ஆ)ன் கீழ் பெருந்தண்டனை விதிக்க குற்றச்சாட்டு தொடுக்கலாம்.

1) குற்றம் அரசு ஊழியரால் உறுதியாக செய்யப்பட்டிருக்கும் என நம்பகமான சூழ்நிலையில் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திட போதுமான சாட்சியங்கள் இல்லாத நிலையில் - உதாரணமாக

அ) வருமானத்தை மீறிய சொத்து சேர்த்து வைத்திருத்தல்

ஆ) சட்ட விரோத கையூட்டு பெற முயற்சித்தல் அல்லது பெறுதல்

இ) அரசு சொத்து, நிதி மற்றும் பங்கு முதல்களில் கையாடல் செய்தல்

ஈ) விலைமதிப்புள்ள பொருள் அல்லது பணஞ்சார்ந்த பயன்பெறுதல் அல்லது பெற முயற்சித்தல்

2) அரசு கணக்குகளில் முறைகேடு

3) நேர்மையற்ற நோக்கத்துடன் அலுவலகப் பணியில் முறையின்றி அல்லது கவனக்குறைவுடன் செயல்படல்

4) சொந்த நலனுக்காக அதிகாரத்தை தவறாக பயன்படுத்துதல்.

5) அலுவலக ரகசியக் காப்புச் சட்டத்தின் கீழ் வராதிருப்பின் கமுக்கமான தகவல்களை வெளிப்படுத்துதல்.

6) அரசு நிதி கையாடல், தவறான பொய்யான பயணப்படி பட்டி மற்றும் மருத்துவ ஈட்டளிப்பு பட்டி முதலியன உரிமை கொள்ளல்.

பெருந்தண்டனைக்கான பணி நீக்கம், பணி அகற்றல், கட்டாய ஓய்வு முதுநிலைப் பட்டியலில் கிரம நிலை இறக்கம், கீழ் பதவிக்கு இறக்கம் மற்றும் சம்பள ஏற்ற முறையில் இறக்கம் போன்ற தருணங்களன்றி பிற நேர்வுகளில் விதி 17(ஆ)ன் கீழ் குற்றச்சாட்டு தொடுப்பதை தவிர்க்க வேண்டும்.

## இணைப்பு - II

### விதி 17 (அ)ன் கீழ் காரணம் கோரும் குறிப்பாணைக்கான வழி காட்டல்கள்

1. இணைப்பு 1ல் குறிப்பிடப்படாத ஒழுக்க இனம் சாராத பிற குற்றங்களைப் பொறுத்தவரை, குறிப்பான குற்றச்சாட்டு தொடுப்பதற்கு பதிலாக விதி 17 (அ)ன் கீழ் காரணம் கோரும் குறிப்பாணை போதுமானது. குறிப்பாணையில் நடைபெற்ற தவறு / குற்றத்திற்காக ஏன் ஒழுங்கு நடவடிக்கை கூடாது? எனவும், 17(அ)ன் கீழ் ஏன் நடவடிக்கை மேற்கொள்ளக்கூடாது எனவும், விதி17(அ)ன் கீழ் ஏன் தண்டனை வழங்கப்படக் கூடாது? என்பன போன்ற வாசகங்கள் பயன்படுத்தலாகாது, இம்மாதிரியான வாசகங்கள் தீர்ப்பாயத்தினால் நீக்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட கால வரையறைக்குள் நடைபெற்ற தவறு/குற்றத்திற்கான விளக்கம் குற்ற அலுவலரிடம் கோருவதே போதுமானது.

2 (i) ஊழியர் மீதான ஊதிய உயர்வு நிறுத்தமானது அவருக்கான ஊதிய உயர்வை பாதிக்குமெனில், அல்லது

ii) மூன்று வருடத்திற்கு மிகையான திரள் பயனின்றி ஊதிய உயர்வு நிறுத்தம் அல்லது

iii) திரள் பயனுடன் ஊதிய உயர்வு நிறுத்தம் போன்ற தருணங்களில் ஊழியரிடமிருந்து விளக்கம் பெற்ற பின்னர் விதி 17 (ஆ)ன் கீழான நடை முறைகளைப் பின்பற்றி தண்டனை வழங்கலாம்.

<u>துறை ஒழுங்கு நடவடிக்கை விசாரணை கால வரம்புகள்</u>

| | | |
|---|---|---|
| அ) | த.நா.கு.ப (ஒழுங்கு & மே) விதி 17யின் கீழ் விளக்கம் கோருதல்<br>(அ) விதி 17யின் கீழ் குற்ற விவர அறிக்கை தயாரித்தல் | 15 நாட்கள் |
| ஆ) | குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அரசு அலுவலர் பதிவுருக்களை கொண்டு, தன்னிலை விளக்க அறிக்கை தயாரித்தல் | 30 நாட்கள் |
| இ) | விசாரணை அதிகாரி நியமனம் | 7 நாட்கள் |
| ஈ) | விசாரணை முடிக்கப்பெற்று விசாரணை அறிக்கை சமர்ப்பித்தல் | 30 நாட்கள் |
| உ) | விசாரணை அறிக்கை கிடைக்கப்பெற்ற பின்பு ஒழுங்கு நடவடிக்கை அதிகாரி முடிவு எடுத்தல் | 10 நாட்கள் |
| ஊ) | தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்துடன் ஆலோசனை | 30 நாட்கள் |
| எ) | இறுதி உத்தரவு பிறப்பித்தல்<br>அ) அரசு இல்லாத ஒழுங்கு நடவடிக்கை குழு<br>ஆ) செயலகம் - வேறு துறைகளுடன் கலந்து | <br>7 நாட்கள்<br>30 நாட்கள் |

மேற்கண்ட கால அளவிற்குள் விசாரணை முடிக்கப்படவில்லையெனில் விசாரணை அதிகாரியானவர் மேல் அதிகாரியிடமிருந்து கால அளவை நீட்டிக்க வேண்டிய உத்தரவுகளை தகுந்த காரணங்காட்டிப் பெறலாம்.

<u>DVAC ஒழுங்கு நடவடிக்கை விசாரணை கால அளவுகள்:-</u>

| | | |
|---|---|---|
| i) | கண்காணிப்பு மற்றும் ஊழல் தடுப்புத் துறையினரால் விசாரணை நடத்தப் பெற்று கண்காணிப்பு குழு மூலமாக அறிக்கையினை அரசிற்கு அனுப்புதல் | 1 வருடம் |

ii) தீர்ப்பாயம் (TRIBUNAL) மூலமாக விசாரணை முடிக்கப் பெற்று தலைமைச் செயலகத்திற்கு கண்டுபிடிப்புகளை அனுப்புதல் — 1 வருடம்

iii) அரசின் இறுதி முடிவு — 4 திங்கள்

**(அ.க.எண்.46568 பணி எண்.86-1, ப.ம.நி.சீ, நாள் : 24.6.86)**

## இந்திய தண்டனைச் சட்டமும் அரசு அலுவலரும்

பொது ஊழியர் என்று இந்த அத்தியாத்தில் அரசாங்க ஊழியர்களைக் குறிப்பிட்டுள்ளது எனவே கீழ் வரும் பிரிவுகளில் வருகின்ற பொது ஊழியர் என்ற பதம் அரசாங்கப் பணியில் உள்ளவர்களைக் குறிக்கும்.

பிரிவு 161: பொது ஊழியருக்கு அரசு ஊதியம் கொடுக்கின்றது. ஒரு கடமையை ஆற்றுவதற்காக அல்லது சலுகையைக் காட்டுவதற்காக அல்லது உதவி செய்வதற்காக அவர்கள் பிறரிடமிருந்து எத்தகைய ஊதியமும் (இலாபமும்) பெறக்கூடாது. அப்படிப் பெறுவது குற்றமாகும்.

பொது ஊழியர் என்ற பதம் மத்திய அரசில் பணிபுரிவோர், மாநில அரசில் பணிபுரிவோர் ஆகிய அனைவரையும் அரசாங்க நிறுவனங்களில் பணிபுரிவோர் ஆகிய அனைவரையும் குறிக்கும். பொது ஊழியராகப் பணிபுரியும் நிலையை எதிர் நோக்கியுள்ளவர்கள் மேலே குறிப்பிட்டபடி ஊதியம் பெறுவதும் குற்றமாகும். இந்தக் குற்றத்திற்கு மூன்று ஆண்டுகள் வரை சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு 162:- பொது ஊழியரை லஞ்சம் கொடுத்தாவது அல்லது சட்டத்துக்கு மாறான வழியிலாவது அவருடைய அதிகாரத்திற்கு உட்பட்ட ஒரு காரியத்தைச் செய்யும்படியாவது அல்லது செய்யாமலிருக்கும்படியாவது தூண்டக்கூடாது. ஒருவருக்கு சலுகை காட்டும் படி அல்லது அவருக்கு எதிராக நடந்து கொள்ளும்படி பொது ஊழியரைத் தூண்டுவதன் மூலம் மத்திய அரசு அல்லது மாநில அரசு அல்லது பாராளுமன்றம் அல்லது சட்டசபை அல்லது உள்ளாட்சி அமைப்பு அல்லது நகர சபை, அரசினர் நிறுவனம் ஆகியவற்றில் காரியம் சாதித்துக் கொள்ளக் கூடாது.

இந்த வகையில் பொது ஊழியரைத் தூண்டி வேலை செய்வதற்கென்று யாரேனும் ஊதியம் (அல்லது இலாபம்) பெற்றுக் கொள்வதும் பெற்றுக் கொள்ள ஒத்துக் கொள்வதும், பெற முயற்சி செய்வதும் குற்றமாகும். தான் பெற்றாலும், தனக்காக தனக்கு வேண்டியவர்கள் யாராவது பெற்றாலும் குற்றமாகும். இந்தக் குற்றத்திற்கு மூன்று ஆண்டுகள் வரையில் சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு 163:- மேலே விவரிக்கப்பட்டுள்ளபடி ஒரு பொது ஊழியரைத் தன் சொந்தச் செல்வாக்கைப் பயன்படுத்திக் காரியம் ஆற்றும்படி செய்வதற்காக யாரேனும் எத்தகைய பிரதிபலனை (அல்லது) இலாபத்தைப் பெற்றாலும், பெற ஒத்துக் கொண்டாலும் பெறுவதற்கு முயற்சி செய்தாலும் குற்றமாகும். இந்தக் குற்றத்திற்காக அந்த நபருக்கு ஓராண்டுக்கு மேற்படாத வெறுங்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு 164:- மேலே 162 அல்லது 163 வது பிரிவுகளில் கூறப்பட்டுள்ளபடி குற்றம் புரியும் நபருக்கும் சம்மந்தப்பட்ட பொது ஊழியர் குற்ற உடந்தையாக இருந்தால், அவருக்கும் மூன்று ஆண்டுகள் வரை சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு 165:- ஒரு பொது ஊழியர் மூலம் ஒருவருக்கு ஒரு காரியம் நடைபெற வேண்டியிருக்கிறது. இதனை அந்தப் பொது ஊழியர் அறிவார். இந்த நிலையில் அவர் அந்த நபரிடமிருந்து விலை கொடுக்காமல் ஒரு விலை மதிப்புள்ள பொருளைப் பெறுவது குற்றமாகும். அந்தப் பண்டத்திற்கு உரிய விலையை விட மிகவும் குறைந்த விலையில் அந்த பண்டத்தைப் பெறுவது குற்றம். அவர் அந்தப் பொருளைத் தமக்காகப் பெறுவதும் தமக்கு

வேண்டிய வேறொருவருக்காகப் பெறுவதும் குற்றமாகும். தம்முடைய மேலதிகாரியின் மூலம் ஒரு காரியம் அந்த நபருக்கு ஆக வேண்டிய நிலையில் அப்படிப் பெறுவதும் குற்றமாகும். மேற்கூறியவாறு அந்தப் பண்டத்தைச் சம்பந்தப்பட்ட நபரிடம் இருந்து பெறாமல், அந்த நபருக்கு வேண்டியவா அலலது சொநதககாரரிடம் இருந்து அப்படிப் பெறுவதும் குற்றமாகும். இந்தக் குற்றத்திற்கு மூன்று ஆண்டுகள் வரையில் சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு 165-(ஆ):- 161 அல்லது 165 ஆவது பிரிவுகளில் கூறப்பட்டுள்ள குற்றத்தைப் பிறர் புரிவதற்கு குற்ற உடந்தையாக யார் இருந்தாலும், அவர் குற்றம் புரிந்தவராகின்றார். உடந்தையாக இருந்ததன் விளைவாக அந்தக் குற்றம் நடைபெறாமல் இருந்தாலும் பாதகம் இல்லை. அப்போதும் உடந்தையாக இருந்தவரைக் குற்றவாளி என்று கருதி அவருக்கு மூன்று ஆண்டுகள் வரை சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு 166:- ஒரு பொது ஊழியர், பணியாற்றும் பொழுது எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கான வரைமுறைகள் உள்ளன. அந்தப் பொது ஊழியர் பிறருக்குத் தீங்கு உண்டாக்க வேண்டும் என்ற கருத்துடன் அல்லது தீங்கு நேரிடும் என்று தெரிந்த பின்னும் அந்த வரைமுறைகளை மீறிச் செயல்படுவது குற்றமாகும். இந்தக் குற்றத்திற்காக ஓர் ஆண்டு மேற்படாத வெறுங்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு 167:- ஒரு பொது ஊழியருக்கு ஓர் ஆவணத்தை உருவாக்கும் பொறுப்பு அல்லது அதனை மொழி பெயர்க்கும் பொறுப்பு தரப்பட்டிருக்கிறது. பிறருக்குத் தீங்கு உண்டாக்க வேண்டும் என்ற கருத்துடன் அல்லது அதனால் பிறருக்குத் தீங்கு நேரிடும் என்று அறிந்த பின்னும் அந்த ஆவணத்தை தவறாக உருவாக்குபவரும் அல்லது அதனைத் தவறாக மொழி பெயர்ப்பதும் குற்றமாகும். இந்தக் குற்றத்திற்காக அந்தப் பொது ஊழியருக்கு மூன்று ஆண்டுகள் வரை சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு 168:- ஒரு பொது ஊழியர் எத்தகைய வியாபாரத்திலும் (தொழிலிலும்) சட்டப்பூர்வமாக ஈடுபடக் கூடாது. இருப்பினும் அந்தப் பொது ஊழியர் அப்படித் தொழிலில் (அல்லது வியாபாரத்தில்) ஈடுபட்டால் அவருக்கு ஓர் ஆண்டுக்கு உட்பட்ட வெறுங்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு 169:- ஒரு பொது ஊழியர் குறிப்பிட்ட ஒரு சொத்தை வாங்கக் கூடாது. ஏலம் கேட்கக் கூடாது என்ற நியதி இருக்கிறது. அந்த நியதியை மீறி ஒரு பொது ஊழியர் அப்படிப்பட்ட சொத்தை தம் பேரிலாவது தனியாகவோ, கூட்டாகவோ வாங்குவதும் ஏலம் கேட்பதும் குற்றமாகும். அந்தப் பொது ஊழியருக்கு அத்தகைய குற்றத்துக்காக, இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாத சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும். இதில் சம்பந்தப்பட்ட சொத்தை அவர் விலைக்கு வாங்கியிருந்தால் அந்தச் சொத்தும் பறிமுதல் செய்யப்படும்.

பிரிவு 170:- ஒருவருக்கு எத்தகைய அரசாங்கப் பொறுப்பும் இல்லாத போது தாம் ஒரு பொது ஊழியராகப் பணி புரிவதாக நடிப்பதும் குற்றமாகும். அப்படிப் பொறுப்பில் இல்லாத போது பொறுப்பில் உள்ள ஒரு பொது ஊழியரைப் போல் ஆள் மாறாட்டம் செய்வது குற்றம் ஆகும். இப்படிப் பொறுப்பில் இருப்பது போல் நடித்து எத்தகைய காரியத்தைச் செய்தாலும் செய்ய முயற்சித்தாலும் குற்றமாகும். இந்தக் குற்றத்திற்காக இரண்டு ஆண்டுகள் வரை சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு 171:- சில தரப்பட்ட பொது ஊழியர்கள் சீருடைகள் அல்லது அடையாளச் சின்னங்கள் அணிய வேண்டும். ஆனால் அத்தகைய பொது ஊழியராக இல்லாதவர் யாரும் அந்தச் சீருடைகளை அணிவதும், அடையாளச் சின்னங்களை வைத்திருப்பதும் குற்றமாகும். தாம் பொது ஊழியர் என்று பிறரை நம்ப வைப்பதற்காக அத்தகைய சீருடைகளை அணிவதும், அடையாளச் சின்னங்களை வைத்திருப்பதும் குற்றமாகும். இந்தக் குற்றத்திற்காக மூன்று மாதங்கள் வரை சிறைக்காவல் அல்லது இருநூறு ரூபாய் வரை அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

---

**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**

தொடக்கக் கல்வி - ஊராட்சி ஒன்றிய பள்ளிகள் - தொடக்கக் கல்வித் துறையில் பணியாற்றிய தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு 01.06.1988க்கு முன்பு இடைநிலை ஆசிரியர்களாகவும், தொடக்கப்பள்ளித் தலைமை ஆசிரியர்களாகவும் பணியாற்றிய மொத்த பணிககாலத்தை 01.06.1988க்கு பின்னர் தொடக்கப்பள்ளித் தலைமை ஆசிரியர்களாக பதவி உயர்வு பெற்று பணிபுரிந்த காலததுடன் சேர்த்து தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர் பதவியில் தேர்வு நிலை / சிறப்பு நிலை அனுமதித்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வி (ஜி2) துறை**

**அரசாணை (நிலை) எண்.216** **நாள் 30 .12.2011**

படிக்க :-

1. அரசாணை (நிலை) எண்.234, பள்ளிக் கல்வித் (ஜி2) துறை, நாள் 10.09.2009.
2. அரசாணை (நிலை) எண்.270, பள்ளிக் கல்வித் (ஜி2) துறை, நாள் 20.09.2010.
3. தொடக்கக் கல்வி இயக்குநரின் கடித எண்.13368/எல்1/ 2011, நாள் 23.05.2011 மற்றும் 27.10.2011.

ஆணை :-

மேலே 1ல் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயத்தில் வழக்கு தொடுத்து தீர்ப்பாணை பெற்றுளள 63 நபர்களுக்கு மட்டும் அவர்கள் 01.06.1988க்கு முன் பணியாற்றிய இடைநிலை ஆசிரியர் மற்றும் தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் பணிக்காலத்தை கணக்கில் கொண்டு தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் பதவியில் தேர்வு நிலை / சிறப்பு நிலை வழங்க தொடக்கக் கல்வி இயக்குநருக்கு அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

2. பின்பு, மேலே 2ல் படிக்கப்பட்ட அரசாணையில், அவ்வரசாணை வெளியிடப்பட்ட நாள் வரை நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து குறிப்பான ஆணை பெற்றவர்களுக்கு மட்டும் (restricted to those persons who have got specific order of the Court) மேலே 1ல் படிக்கப்பட்ட அரசாணையின் பலனை நீட்டித்து ஆணை வழங்கப்பட்டது.

3. இந்நிலையில், மேலும் சுமார் 3137 ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் மேற்கண்ட அரசாணைகளின் படி தேர்வு நிலை / சிறப்பு நிலை அனுமதிக்குமாறு கோரி வழக்கு தொடுத்ததில் சுமார் 137 ஆசிரியர்கள் இவ்வரசாணைகளின் படி பரிசீலனை செய்ய சாதகமாக தீர்ப்பாணை பெற்றுள்ளனர். மேலும் 3000 ஆசிரியர்களால் தொடரப்பட்ட வழக்குகள் நீதிமன்றங்களில் நாளது தேதி வரை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு நிலுவையில் உள்ளது. எனவே, 01.06.1988க்கு பிறகு தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர்களாக பதவி உயர்வு பெற்று பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்களுக்கு அரசாணை (நிலை) எண்.234, பள்ளிக் கல்வி (ஜி2)துறை, நாள் 10.9.2009 மற்றும் அரசாணை (நிலை) எண்.270, பள்ளிக் கல்வி (ஜி2) துறை, நாள் 20.09.2010ன் படி சுமார் 2263 ஆசிரியர்களுக்கு திருத்திய பணப்பலன்கள் பெற்று வழங்கப்பட்டதை போல மீதமுள்ள சுமார் 3137 ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும் 1.6.1988க்கு முந்தைய பணிக்காலம் மற்றும் 1.6.1988க்கு பின்பு தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர்களாக பதவி உயர்வு பெற்று பணிபுரிந்த பணிக்காலத்தையும் கணக்கிட்டு தேர்வு நிலை / சிறப்பு நிலை அனுமதித்து ஊதிய நிர்ணயம் செய்தல் சார்பாக ஒரு பொதுவான அரசாணை பிறப்பிக்குமாறு தொடக்கக் கல்வி இயக்குநர் கோரியிருந்தார்.

4. தொடக்கக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலனை செய்து, இந்நிகழ்வில் வழக்கு தொடுத்து தீர்ப்பாணை பெற்றவர்கள், வழக்கு தொடுத்து தீர்ப்பாணை பெறாதவர்கள் மற்றும் வழக்கு தொடுக்காதவர்கள் ஆகிய அனைவரும் பயன் பெறும் வகையில், 01.06.1988க்கு முன்பு (அதாவது 31.05.1988 வரை) இடைநிலை ஆசிரியர்களாகவும், தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர்களாகவும் பணியாற்றிய மொத்த பணிக்காலத்தையும் கணக்கிட்டு 01.06.1988க்கு பின்னர் தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர்களாக பதவி உயர்வு பெற்று பணிபுரிந்த காலத்துடன் சேர்த்து தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர் பதவியில் தேர்வு நிலை / சிறப்பு நிலை அனுமதித்து, ஊதிய நிர்ணயம் செய்ய தொடக்கக் கல்வி இயக்குநருக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண். 66659/சிஎம்பிசி/2011 மற்றும் 66659/கல்வி ஐஐ/2011, நாள் 30.12.2011-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தி.ஸ்ரீ.ஸ்ரீதர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

## தமிழ்நாடு அரசு

### சுருக்கம்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் - பள்ளிகள் - உயர்நீதிமன்ற தீர்ப்பாணைக்குடபட்டு இடைநிலை ஆசிரியா மறறும் துவக்கப்பள்ளித் தலைமையாசிரியராக பணியாற்றிய காலத்தையும் சேர்த்து கணக்கிட்டு 1.6.1988 ல் நடுநிலைப்பள்ளி பட்டதாரி தலைமை ஆசிரியர் நிலையில், சிறப்பு நிலை அனுமதித்து ரூ.2200-75-2800-100-4000 என்ற ஊதிய விகிதத்தில் ஊதிய நிர்ணயம் செய்ய ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (ஆ.தி.ந.7) துறை

**அரசாணை (நிலை) எண்: 33** நாள்: 04.04.2012

படிக்க:

1. அரசாணை (நிலை) எண். 210, பள்ளிக்கல்வித் (ஜி.1) துறை , நாள். 14.08.2009
2. அரசாணை (நிலை) எண். 190, பள்ளிக்கல்வித்(ஜி.1)துறை , நாள். 12.07.2010
3. ஆதி திராவிடர் நல ஆணையரின் கடித ந.க.எண். ஒ1/12718/2010 நாள்: 9.12.2011

ஆணை:

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட பள்ளிக்கல்வித் துறையின் அரசாணையில், தமிழ்நாடு நிருவாகத் தீர்ப்பாயம் மறிறும் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்து தங்களுக்கு சாதகமாக தீர்ப்புப் பெற்ற 65 நடுநிலைப்பள்ளி பட்டதாரி தலைமையாசிரியர்கள் பொருட்டு, அவர்கள் 1.6.1988க்கு முந்தைய இடைநிலை ஆசிரியர் மற்றும் துவக்கப்பள்ளி தலைமையாசிரியராகப் பணியாற்றிய பணிக்காலத்தை (31.05.1988 முடிய) கணக்கிட்டு 1.6.1988 அன்று 5ஆம் ஊதியக்குழு பரிந்துரையின் அடிப்படையில் நடுநிலைப்பள்ளி பட்டதாரி தலைமை ஆசிரியர் பணியில் சிறப்பு நிலை அனுமதித்து நடுநிலைப்பள்ளி பட்டதாரி தலைமையாசிரியருக்கான சிறப்பு நிலையில் ரூ.2200-75-2800-100-4000 என்ற ஊதிய விகிதத்தில் ஊதிய நிர்ணயம் செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட பள்ளிக்கல்வித் துறையின் அரசாணையில், அவ்வாணை வெளியிட்ப்படும் நாள் வரை நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து குறிப்பான ஆணை பெற்றவர்களுக்கு மட்டும் (Restricted to those persons who got specific order of the court) அரசாணை ( நிலை) எண் 210 பள்ளிக்கல்வித் துறை நாள். 14.08.2009 ல் ஆணையிட்டவாறு, 01.05.1988க்கு முந்தைய இடைநிலை ஆசிரியர் மற்றும் துவக்கப்பள்ளித் தலைமையாசிரியராகப் பணியாற்றிய காலத்தை கணக்கிட்டு 1.6.1988 அன்று 5வது ஊதிகயகுழுவின் பரிந்துரையின் அடிப்படையில் 1.6.1988 முதல் நடுநிலைப்பள்ளி பட்டதாரி தலைமையாசிரியர் பணியில் சிறப்பு நிலை அனுமதித்து நடுநிலைப்பள்ளி பட்டதாரி தலைமை ஆசிரியருக்கான சிறப்பு நிலையில் ரூ.2200-75-2800-100-4000 என்ற ஊதிய விகிதத்தில் ஊதிய நிர்ணயம் செய்யஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

3. மேலே 3ல் படிக்கப்பட்ட கடிதத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் பலர் அரசாணை நிலை எண் 210 பள்ளிக்கல்வித் துறை நாள் 14.8.2009ன்படி தாங்கள் 1.61988க்கு முன் பணிபுரிந்த இடைநிலை/ துவக்கப்பள்ளித் தலைமை ஆசிரியர் பணிக்காலத்தை (31.5.1988 முடிய) கணக்கிட்டு நடுநிலைப்பள்ளித் தலைமையாசிரியர் பதவியில் 1.6.1988 முதல் தேர்வு நிலை/ சிறப்புநிலை வழங்கி திருத்திய ஊதியம் நிர்ணயம் செய்யக் கோரி உயர்நிதி மன்றத்தில வழக்கு தொடுத்து வருகின்றனர் என்றும், பலர் தங்களுக்குச் சாதகமான தீர்ப்பாணை பெற்றுள்ளனர் என்றும் நீதிமன்ற தீர்ப்பினை செயல்படுத்த வேண்டி நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடுத்து வருகின்றனர் என்றும் இதனைத் தவிர்க்கும் பொருட்டு நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து தீர்ப்பாணை பெற்ற, இத்துறையைச் சார்ந்த ஆசிரியர்களுக்கு மட்டும் அரசாணை (நிலை) எண் 210, பள்ளிக்கல்வித்துறை நாள் 14.08.2009ன் அடிப்படையில் அவர்கள் 1.6.1988 க்கு முன்பு இடைநிலை ஆசிரியர் மற்றும் துவக்கப்பள்ளி தலைமை ஆசிரியராக பணியாற்றிய காலத்தைக் (31.05.1988 முடிய) கணக்கிட்டு 1.6.1988 முதல் நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர் பணியில் சிறப்பு நிலை/ தேர்வு நிலை வழங்க உரிய ஆணை பிறப்பிக்குமாறு ஆதிதராவிடர் நல ஆணையர் அரசைக் கோரியுள்ளார்.

4. ஆதிதிராவிடர் நல ஆணையரின கருத்துருவினை ஏற்று, அரசாணை (நிலை) எண்190 பள்ளிக்கல்விததுறை நாள் 12.7.2010 வெளியிடபபட்ட ஆணையின் அடிப்படையில், ஆதிதிராவிடர் பற்றும் பழங்குடியினர் நலத்துறையின் பள்ளிகளில் பணியாற்றி ஆசிரியர்களுள் நாளது தேதி வரையில் உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்து, குறிப்பாணை பெற்றவர்களுக்கு மட்டும் (Restricted to those persons who got specific order of the court) 1.6.1988 க்கு முந்தைய இடைநிலை ஆசியீரியர் மற்றும் துவக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் பணிக்காலத்தை (31.05.1988 முடிய) கணக்கிட்டு 1.6.1988 அன்று 5வது ஊதிகயகுழுவின் பரிந்துரையின் அடிப்படையில் 1.6.1988 முதல் நடுநிலைப்பள்ளி பட்டதாரி தலைமையாசிரியர் பணியில் சிறப்பு நிலை அனுமதித்து நடுநிலைப்பள்ளி பட்டதாரி தலைமை ஆசிரியருக்கான சிறப்பு நிலையில் ரூ.2200-75-2800-100-4000 என்ற ஊதிய விகிதத்தில் ஊதிய நிர்ணயம் செய்ய ஆணையர் ஆதிதிராவிடர் நலம் அவர்களுக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வாணை நிதித்துறையின் இசைவுடன் (அ.சா. எண்.127/து.செ(வி.எஸ்)/12, நாள் 28.03.2008) வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ஆ.க.ஜீவரத்தினம்**, அரசு செயலாளர்

**தமிழ்நாடு அரசு**

**நிதித் (ஓய்வூதியம்) துறை**

**அரசாணை எண்:2, நாள் : 02.01.2012**

பொங்கல் பண்டிகை, 2012 - ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் மற்றும் முன்னாள் கிராம அலுவலர்களுக்கு பொங்கல் பரிசு வழங்குதல் - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

படிக்கவும்:

1) அரசாணை நிலை எண். 2, நிதித் (ஓய்வூதியம்) துறை, நாள்:03.01.2011

2) அரசாணை நிலை எண். 1, நிதித் (படிகள்) துறை, நாள்: 2.1.12

ஆணை:

அனைத்திந்திய பணி உட்பட, மானியம் பெறும் கல்வி நிறுவனங்கள், உள்ளாட்சி மன்றங்களின அனைததுவகை தனி ஓய்வூதியதாரர்கள், முன்னாள் கிராம அலுவலர்கள் உட்பட ஓய்வூதிய தாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள அனைவருக்கும் ஒரு மொத்த பொங்கல் பரிசுத் தொகையாக ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) வழங்கி அரசு ஆணையிடுகிறது.

2. இந்த ஆணை மேலே 1-ஆம் பத்தியில் குறிப்பிட்டுள்ள தற்போதுள்ள ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் அனைவருக்கும் பொருந்தும். மேலும், இவ்வாணை தற்காலிக ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் பொருந்தும். இந்தப் பொங்கல் பரிசுத்தொகை, 02.01.2012 நாளன்றோ, அதற்குப் பின்னரோ பணியிலிருந்து ஓய்வுபெறும் பணியாளர்களுக்கும், 02.01.2012 நாளன்றோ அதற்குப் பின்னரோ பணியிலிருக்கையில் இறக்கும் பணியாளர்களின் குடும்பங்களுக்கும் அனுமதிக்கத்தக்கதல்ல.

3. 01.10.2010 முதல் 01.01.2012 வரையிலான கால அளவில் பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ள / பணியிலிருக்கையில் இறந்துவிட்டவர்களைப் பொருத்தவரையில், மேலே பார்வை 2-இல் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணையில் பிறப்பிக்கப்பட்ட ஆணையின் படி அவர்களுக்கு மிகை ஊதியம் / சிறப்பு மிகை ஊதியம் வழங்கப்பட்டிருக்குமே யாயின், அவர்களுக்கு இந்தப் பொங்கல் பரிசுத்தொகை வழங்க தகுதியுடையவர்கள் ஆகமாட்டார்கள். இதற்காக, இந்த ஓய்வூதியதாரர்களுக்குத் தொகை வழங்குவதற்கு முன், சம்பந்தப்பட்ட துறைகளிடமிருந்து தொகை வழங்கப்பட வில்லை என்பது குறித்த சான்றிதழைப் பெறுமாறு ஓய்வூதியம் வழங்கும் அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

4. இந்த ஆணை பின் வரும் வகையிலான ஓய்வூதியதாரர் களுக்குப் பொருந்தாது:-

i) உலேமா உதவித் தொகைகள், மாநில சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கான உதவித் தொகை பெறுபவர்கள், புகழ்பெற்ற அறிஞர்கள் மற்றும் சிறந்த மனிதர்களுக்கான சமூக உதவித் தொகைகள் போன்ற சிறப்பு ஓய்வூதியதாரர்கள்;

ii) பணியில் இருக்கும் பணியாளர்களுக்குப் பொருந்தக் கூடியவாறான மிகை ஊதியம் / சிறப்பு மிகை ஊதியம் பெறுகின்ற கருணை அடிப்படையில் நியமனம் பெற்றுள்ள குடும்ப ஓய்வூதியதாரர்கள்.

5. ஓய்வூதிய முன்னோடித் திட்டத்தின் கீழ் வரும் ஓய்வூதிய தாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களைப் பொருத்தமட்டில், பொங்கல் பரிசுத்தொகை வழங்குவதற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது:-

i) அரசுச் செலவில் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பணவிடை மூலம் அனுப்பப்படுவதைப் பொருத்தமட்டில், இந்தப் பொங்கல் பரிசுத் தொகையும் அரசு செலவில் பணவிடை மூலம் அனுப்பப்பட வேண்டும்.

ii) ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியத்தை வங்கிகள் மூலம் பெறும் ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களைப் பொருத்த மட்டில்,

அ) பட்டியலுக்குத் தொகை அளிக்க காசோலை / மின்னணு (ECS) முறை செயலிலுள்ள சென்னை ஓய்வூதியம் வழங்கல் அலுவலகம், மாவட்டக் கருவூலங்கள் மற்றும் சார்நிலை கருவூலங்களில், காசோலைகள்' வெளியிட்டு அவற்றை தொகை செலுத்தும் சம்பந்தப்பட்ட வங்கிக் கிளைகளுக்கு அனுப்ப சென்னை

ஓய்வூதியம் வழங்கல் அலுவலருக்கும், மாவட்டக் கருவூலங்கள் மற்றும் சார்நிலைக் கருவூலங்களின் அலுவலர்களுக்கும் அனுமதி வழங்கப்படுகிறது. அந்தக காசோலைகளுடன், ஓய்வூதிய தாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களின் சேமிப்பு வங்கிக் கணக்கில் தொகையை வரவு வைக்க அந்தந்த ஓய்வூதிய தாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியல் ஒன்றை இணைத்து அனுப்ப வேண்டும்.

ஆ) பட்டியலுக்கு தொகை அளிக்க காசோலை / மின்னணு (ECS) முறை செயலில் இல்லாத வங்கிப் பணி வசதியுள்ள சார் கருவூலங்களில் (Banking Sub-Treasuries) வங்கிக் கணக்கு காசோலை / வங்கி வரைவு காசோலை எடுத்து அவற்றை ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் சேமிப்பு வங்கிக் கணக்கில் வரவு வைப்பதறகாக சம்பந்தப்பட்ட ஓய்வூதியம் வழங்கும் வங்கிக் கிளைகளுக்கு அவற்றை அனுப்பி வைக்க சார்நிலைக் கருவூல அதிகாரிகளுக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

இ) வங்கிப்பணி வசதியல்லாத சார்நிலைக் கருவூலங்களைப் (Non-Banking Sub-Treasuries) பொருதத மட்டில், பொங்கல் பரிசுத்தொகையைப் பெற்று, ஓய்வூதியதாரர்கள், குடும்ப ஓய்வூதியதாரர்களின் சேமிப்பு வங்கிக் கணக்கில் தொகையை வரவு வைக்க, வங்கிகளின் சம்பந்தப்பட்ட தொகை செலுத்தும் கிளைகளுக்கு அவற்றை அனுப்ப ஏற்பாடு செய்ய சார்நிலைக் கருவூல அதிகாரிகளுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

6. பொதுத்துறை வங்கித் திட்டத்தின் கீழ்வரும் ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர் களைப் பொருத்தமட்டில், ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் கணக்கில் நேரடியாகத் தொகையை வரவு வைக்க அனைத்துப் பொதுத் துறை வங்கிகளுக்கும் அனுமதி வழங்கப்படுகிறது.

7. மாநில நிதியிலிருந்து ஓய்வூதியம் வழங்குதல் குறித்த செலவு செய்யப்படும் வகையிலான ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களைப் பொருத்தமட்டில், இந்த செலவு கீழ்க்கண்டுள்ள கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்:

"2071. ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நனமைகளும் - 01. சிவில் - 800. ஏனைய செலவு - I. திட்டத்தில் சேராதது - AF. ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர் களுக்குப் பொங்கல் பரிசு - 27. ஓய்வூதியங்கள் - 09. ஏனையவை (த.தொ.கு.2071 01 800 AF 2799)".

முன்னாள் கிராம அலுவலர்களுக்கு வழங்கப்படும் பொங்கல் பரிசுத் தொகை கோரிக்கை எண்.50ன் கீழ் கீழ்க்கண்டுள்ள கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்:

"2071. ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் - 01. சிவில் - 800 ஏனைய செலவு - I. திட்டத்தில் சேராதது - AK. முன்னாள் கிராம அலுவலர்களுக்கு பொங்கல் பரிசு - 27. ஓய்வூதியங்கள் - 09. ஏனையவை (த.தொ.கு.2071 01 800 AK 2791)".

உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர் கணக்கு வைத்துவரும் நிதி அல்லது நகராட்சி நிதிகளிலிருந்து ஓய்வூதியம் குறித்த செலவு செய்யப்படும் வகையிலான உள்ளாட்சி மன்றங்களின் ஓய்வூதிய தாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களைப் பொருத்தமட்டில், இந்த செலவு மேலே குறிப்பிட்டுள்ளவாறான அந்தந்த நிதிகளிலிருந்து செய்யப்பட வேண்டும்.

8. மேலே அனுமதிக்கப்பட்ட பொங்கல் பரிசுத் தொகையை ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதிய தாரர்கள் மற்றும் முன்னாள் கிராம அலுவலர்களுக்கு உடனடியாக பெற்று வழங்க அறிவுறுத்தப் படுகிறது.

9. 2011-2012 ஆம் நிதியாண்டில் சம்பந்தப்பட்ட கணக்குத் தலைப்பின் கீழ் போதிய நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. எனினும், கூடுதல் நிதியொதுக்கம் தேவைப்படும் பட்சத்தில், சம்பந்தப்பட்ட கணக்குத் தலைப்பின் கீழ் தேவையான கூடுதல் நிதியொதுக்கம் 2011-2012-ஆம் நிதியாண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் சேர்க்கப்படும். அத்தகைய நிதியொதுக்கட்தினை எதிர்நோக்கி தேவயான தொகையினை செலவு செய்யலாம்.

10. இந்த ஆணை கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 1318 (ஆயிரத்து முன்னூற்று பதினெட்டு) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. சண்முகம்**
அரசு முதன்மைச் செயலாளர்

**GOVERNMENT OF TAMIL NADU**

**ABSTRACT**

Revision of scales of pay – Revival and Appointment of Chairman and Members to the Pay Grievance Redressal Cell – Implementation of the orders of the Hon'ble High Court dated: 08.3.2012 in W.P.No.7006 of 2011 and batch cases – Orders – issued.

---

**FINANCE (PAY CELL) DEPARTMENT**

G.O.Ms.No.123 Dated: 10.04.2012.

Read:

1. G.O.Ms.No. 71, Finance (PC) Department, dated: 26.2.2011.
2. Judgement of the Hon'ble High Court dated: 18.3.2011 in W.P.No. 7006 of 2011.
3. Government Letter No.19111 / Pay Cell / 2011—4, Finance Department, dated: 07.3.2012.
4. Judgement of the Hon'ble High Court dated: 08.3.2012 in W.P.No. 7006 of 2011 and batch cases.
5. From the Special Government Pleader, High Court, Madras, 104, Letter dated: 16.3.2012.
6. From the Hon'ble High Court Division Bench order dated: 27.3.2012 in W.A.Nos. 504, 505, 514, 515 and 516 of 2012.

ORDER:

In the Government Order first read above, orders were issued downgrading / revising the scales of pay of some of the categories of employees in certain departments consequent to the rectification of anomalies pointed out in the recommendations of the One Man Commission. In the said orders, Government has also constituted a Pay Grievance Redressal Cell under the Chairmanship of Thiru R.Thyagarajan, I.A.S., the then Special Secretary to Government, Finance Department to examine the grievances, if any received from the employees whose scales of pay have not been revised / downgraded and submit its report to Government within a period of three months and based on the recommendations made therein the Government shall examine and issue suitable orders.

2) Consequent on the issue of the above Government Order, aggrieved by the downgradation in the pay scales, several employees associations / individual employees have filed Writ Petitions and obtained "Interim Stay". Due to the "Interim Stay" granted by the Hon'ble High Court, the Pay Grievance Redressal Cell constituted to redress the pay grievance could not function and as the Officer appointed as Chairman has retired from service, the Pay Grievance Redressal Cell became redundant.

3) The Hon'ble High Court in its order dated: 08.3.2012 in a batch of Writ Petitions Nos. 7006 of 2011 etc. has made a detailed review of the cases and dismissed the Writ Petitions with a direction to the Government to constitute the Pay Grievance Redressal Cell within a period of four weeks by appointing a suitable officer as Chairman and thereafter the said Committee will proceed to hear the grievance of all persons including the petitioners. Subsequently, based on the Writ Appeal filed by the petitioners in W.A.Nos. 504, 505, 514, 515 and 516 of 2012, the Hon'ble Division Bench of the Madras High Court in its order dated: 27.3.2012 has granted "Interim Stay" on the operation of G.O.Ms.No.71, Finance (PC) Department, dated: 26.2.2011 and the orders of the learned single Judge except the operative portion of the order in para-32 viz. constitution of Pay Grievance Redressal Cell.

4) The Government after careful consideration of the orders of the Hon'ble High Court dated: 08.3.2012 in W.P.No.7006

of 2011 and batch cases and the further orders of the Hon'ble Division Bench in W.A.Nos. 504, 505, 514, 515 and 516 of 2012, dated: 27.3.2012 have decided to implement the same. Accordingly, Government direct that the Pay Grievance Redressal Cell shall be re-constituted with the following officers in Finance Department:

| | | |
|---|---|---|
| 1) Thiru S. Krishnan, I.A.S., Secretary (Expenditure) | : | Chairman |
| 2) Thiru M. Padmanabhan, Additional Secretary to Government | : | Member |
| 3) Thiru P. Umanath, I.A.S., Joint Secretary to Government | : | Member |

5) The following are the terms of reference of the Pay Grievance Redressal Cell:

(i) The Pay Grievance Redressal Cell shall examine all the representations so far received and also further representations if any, from the Employees Associations / Head of Departments / Individual employees including the aggrieved petitioners relating to anomalies in the revised pay structure of the respective posts;

(ii) The Pay Grievance Redressal Cell shall make specific recommendations to Government on the representations / anomalies considered;

(iii) The Pay Grievance Redressal Cell shall submit its report to Government within a period of three months.

6) The Deputy Secretary to Government dealing with Pay Cell subject shall assist the Chairman / Members of the Pay Grievance Redressal Cell. As regards supporting staff to the Pay Grievance Redressal Cell, orders will be issued separately.

(BY ORDER OF THE GOVERNOR)

**K.SHANMUGAM,**
PRINCIPAL SECRETARY TO GOVERNMENT

**GOVERNMENT OF TAMIL NADU**

**Abstract**

Pay Grievance Redressal Cell – Extension of the tenure of Pay Grievance Redressal Cell and Appointment of a Member – Orders – Issued.

---

**FINANCE (PAY GRIEVANCE REDRESSAL CELL) DEPARTMENT**

**G.O.Ms.No.261** **Dated: 17.7.2012**

Read:

G.O:Ms.No.123, Finance (PC) Department, dated: 10.4.2012.

**ORDER:**

In the Government Order read above, orders have been issued re-constituting the Pay Grievance Redressal Cell to examine all the representations received fromthe Employees Associations / Heads of Department / Individual Employees including the aggrieved petitioners relating to anomalies in the revised pay structure of therespective posts and make specific recommendations to Government and submit itsreport to Government within a period of three months.

2. The Pay Grievance Redressal Cell has conducted personal hearing with the Recognised / Un-recognised Service Associations / Individuals and WritPetitioners from 9.7.2012 to 11.7.2012 and the above Associations including severalindividual employees have submitted their detailed Memoranda/Representations tothe Pay Grievance Redressal Cell seeking redressal of their grievances/payanomalies. As the tenure of the Pay Grievance Redressal Cell expires on 9-7-2012and as it will take ample time to examine the representations and finalise the report,it is considered imperative to extend the tenure of the Pay Grievance Redressal Cellfor a further period of three months beyond 9.7.2012.

3. Further, Thiru M. Padmanabhan, Additional Secretary to Government,Finance Department who was appointed as a Member of the Pay GrievanceRedressal Cell has retired from service on superannuation on 31.5.2012 A.N andTmt. M. Shanthi has been appointed as Additional Secretary to Government,Finance Department in the place of Thiru M. Padmanabhan. Hence, it is considered appropriate to appoint Tmt. M. Shanthi, Additional Secretary to Govemment,Finance Department as a Member in the Pay Grievance Redressal Cell in the place of the retired Member.

4. After careful consideration, Government has decided to extend the tenure of the Pay Grievance Redressal Cell constituted in the Government Order read above and also to amend the para 4 of the said Government Order to incorporate a new Member for the Pay Grievance Redressal Cell. Accordingly, Government pass the following orders:-

i. The tenure of the Pay Grievance Redressal Cell constituted in G.O.Ms.No.123, Finance (PC) Department, dated: 10.4.2012 shall be extended for a further period of three months beyond 9.7.2012.

ii. The para-4 of G.O.Ms.No.123, Finance (PC) Department, dated: 10.4.2012 shall be amended to the extent that Tmt. M. Shanthi, Additional Secretary to Government, Finance Department be appointed as a Member of the Pay Grievance Redressal Cell in the place of Thiru M. Padmanabhan, Additional Secretary to Government retired on 31.5.2012.

(BY ORDER OF THE GOVERNOR)

K. SHANMUGAM,
PRINCIPAL SECRETARY TO GOVERNMENT.

## Abstract

Revision of scales of pay – Extension of the tenure of Pay Grievance Redressal Cell – Orders – Issued.

---

**Finance (Pay Grievance Redressal Cell) Dept.**

**G.O.Ms.No. 376** **Dated: 19.10.2012**

Read:

1. G.O.Ms.No.123, Finance (PC) Department, dated:10-4-2012.
2. G.O.Ms.No.261, Finance (PC) Department, dated:17-7-2012.

**ORDER:**

In the Government Order first read above, orders have been issued re-constituting the Pay Grievance Redressal Cell to examine all the representations received from the Employees Associations / Head of Departments / Individual Employees including the aggrieved petitioners relating to anomalies in the revised pay structure of the respective posts and make specific recommendations to Government and submit its report to Government within a period of three months. Subsequently in the Government Order second read above, the tenure of PayGrievance Redressal Cell has been extended for a further period of three months beyond 9-7-2012.

2. The Pay Grievance Redressal Cell has conducted personal hearing with the Recognised / Un-recognised Service Associations / Individuals and Writ Petitioners from 9-7-2012 to 11-7-2012 and also on 16-8-2012 and the above Associations including several individual employees have submitted their detailed Memoranda/ Representations to the Pay Grievance Redressal Cell seeking redressal of their grievances/pay anomalies. As the tenure of the Pay Grievance Redressal Cell has lapsed on 8-10-2012 and as it will take some more time to finalise the report, it is considered imperative to extend the tenure of the Pay Grievance Redressal Cell upto 31-10-2012.

3. After careful consideration, Government direct that the tenure of the Pay Grievance Redresssal Cell constituted in the Government Order first read above shall be extended upto 31-10-2012 to submit its report to Government.

(BY ORDER OF THE GOVERNOR)

**K.SHANMUGAM**
PRINCIPAL SECRETARY TO GOVERNMENT

**தமிழ்நாடு அரசு**

**நிதித் (ஓய்வூதியம்) துறை**

**அரசாணை எண்.325, நாள் 28.11.2011**

ஓய்வூதியம் - அரசு ஊழியர்களின் திருமணமாகாத / விவாகரத்தான / விதவை மகள்களுக்கு வாழ்நாள் முழுவதற்கும் குடும்ப ஓய்வூதியம் வழங்குவது - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

படிக்கவும்.

1. அரசாணை எண்.327, நிதித் (ஓய்வூதியம்) துறை, நாள் 30.8.2011.
2. இந்திய அரசு, பணியாளர் பொதுமக்கள் குறை தீர்ப்பு மற்றும் ஓய்வூதிய அமைச்சகம், ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியர் நலத்துறை அலுவலக குறிப்பாணை எண்.1/19/03 - P&PW(E) நாள் 30.8.2004.
3. இந்திய அரசு, பணியாளர் பொதுமக்கள் குறை தீர்ப்பு மற்றும் ஓய்வூதிய அமைச்சகம், ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியா நலத்துறை அலுவலக குறிப்பாணை எண்.1/19/03 - P&PW(E) நாள் 6.9.2007.
4. அரசாணை எண்.235, நிதித் (ஊதிய பிரிவு) துறை, நாள் 1.6.2009.

ஆணை:

மத்திய அரசு தனது ஓய்வூதியதாரர்களின் திருணமாகாத / விதவை / விவாகரத்தான மகள்களுக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்கி ஆணை வழங்கியுள்ளதன் அடிப்படையில், தமிழக அரசின் ஓய்வூதிய தாரர்களின் திருமணமாகாத / விதவை / விவாகரத்தான மகள்களுக்கு அவர்களது வாழநாள் முழுவதற்கும் குடும்ப ஓய்வூதியம் வழங்க பல்வேறு ஓய்வூதியதாரர் சங்கங்கள், ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதிய தாரர்களின் திருமணமாகாத மகள்கள் அரசிற்கு தொடர்ந்து கோரிக்கை வைத்து வந்தார்கள். அவர்களின் கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலித்து, அதனை ஏற்பதென அரசு முடிவெடுத்துள்ளது.

2. அதன்படி, மத்திய அரசு ஆணையிட்டுள்ளதுபோல் ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதிய தாரர்களின் திருமணமாகாத / விதவை / விவாகரத்துபெற்ற மகள் ஆகியோருக்கு அவர்கள் 25 வயதைக் கடந்த பிறகும் குடும்ப ஓய்வூதியம் கீழ்க்கண்ட நிபந்தனை களுக்குட்பட்டு, வழங்கப்பட வேண்டும் என அரசு ஆணையிடுகிறது.

(i) ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களின் 25 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத மகள்களும் / விதவை / விவாகரத்தான மகள்களும் அவர்கள் வாழ்நாள் முழுமைக்கும் குடும்ப ஓய்வூதியம் பெற தகுதியுடையவர்.

(ii) ஒரு குடும்பத்தில் 25 வயதிற்குக் குறைவான, ருடும்ப ஓய்வூதியம் பெற தகுதியுடைய குழந்தைகள் அவர்கள் குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்கான தகுதிக் காலம் முடிந்த பின்னரோ, மேலும் அக்குடும்பத்தில் வேறு மாற்றுத்திறன் படைத்த குழந்தைகள் இல்லாவிடில் மட்டுமே, 25 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத / விதவையான / விவாகரத்தான மகள்கள் வாழ்நாள் குடும்ப ஓய்வூதியம் பெற தகுதி பெறுவர்.

(iii) இத்தகைய 25 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத மகள்கள் மற்றும் விதவை / விவாகரத்தான மகள்கள், திருமணமோ / மறுமணமோ புரிந்தபின் அவர்களின் குடும்ப ஓய்வூதியம் அத்திருமணத்திற்கு பின் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இதனை உறுதி செய்யும் பொருட்டு மேற்கூறிய ஓய்வூதியதாரர்கள் ஓவ்வொரு வருடமும் அவர்கள் "மணம் / மறுமணம் புரியாமை" சான்றிதழ் ஓய்வூதியம் வழங்கும் அலுவலரிடம் வழங்க வேண்டும்.

(iv) 25 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத / விதவை / விவாகரத்தான மகள்களில் அவர்களின் வயதின் அடிப்படையில் மூத்தவருக்கு முதலில் வாழ்நாள் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும். மூத்தவர் மறுமணம் புரிந்தாலோ / இறக்க நேரிட்டால் மட்டுமே அடுத்த இளைய மகள் குடும்ப ஓய்வூதியம் பெற தகுதியுடையவராவார்.

(v) திருமணமாகாத மகள்கள் / விதவை / விவாகரத்தான மகள்களின் மாத வருமானம் ரூ.2,550/க்கு மிகாமல் இருக்க வேண்டும். இது தொடர்பாக வருமானச் சான்றிதழை ஆண்டுதோறும் ஓய்வூதியம் வழங்கும் அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

3. உரிய ஆவணங்களின் அடிப்படையில் மேலே உள்ள நிபந்தனைகளை நிறைவு செய்யும் இனங்களில் சென்னையைப் பொறுத்தவரை ஓய்வூதியம் வழங்கும் அலுவலரும் / அந்தந்த மாவட்டங்களில் உரிய மாவட்டக் கருவூல அலுவலர்களும் மேலே பத்தி இரண்டில் குறிப்பிடப் பட்டுள்ள சான்றிதழ்களின் நம்பகத் தன்மையை உறுதி செய்துகொண்டு குடும்ப ஓய்வூதியத்தை ஒப்பளிப்பு செய்ய அரசு அதிகாரமளிக்கிறது. வங்கிகள் மூலமாக ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்களைப் பொறுத்தவரை மேற்கண்ட நடைமுறைப் பின்பற்றி ஓய்வூதியம் வழங்கும் அலுவலர் (Pension Pay Officer) மாவட்டக் கருவூல அலுவலர்கள் சம்பந்தப் பட்ட வங்கிகளுக்கு அனுப்பி வைக்கவும் அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை வெளியிடப்படும் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.
5. தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள் 1978க்கு தக்க திருத்தம் தனியாக வெளியிடப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. சண்முகம்,**

அரசு முதன்மைச் செயலாளர்

**தமிழ்நாடு அரசு**

**நிதித் (ஓய்வூதியம்) துறை**

**அரசாணை எண்: 165, நாள் : 21.05.2012**

**ஓய்வூதியம் - அரசு ஊழியர்களின் திருமணமாகாத / விவாகரத்தான / விதவை மகள்களுக்கு வாழ்நாள் முழுவதற்கும் குடும்ப ஓய்வூதியம் வழங்குவது - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.**

---

படிக்கவும்:

1. அரசாணை எண்.325, நிதித் (ஓய்வூதியம்) துறை, நாள்.28.11.2011.
2. கருவூல கணக்கு ஆணையர், சென்னை-15 அவர்களது கடித எண்.2262 / 12 / உகு, நாள்.23.1.2012.
3. மாநிலக் கணக்காயர், சென்னை - 15 அவர்களது கடித எண். Pen.30/III/3 – 5 / FP/ 2011-2012/ 169144, நாள்.07.02.2012.

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின் பத்தி மூன்றிற்கு கீழ்க்கண்டவாறு திருத்தம் வெளியிடப்படுகிறது.

திருத்தம்

" 3. உரிய ஆவணங்களின் அடிப்படையில் மேலே உள்ள நிபந்தனைகளை நிறைவு செய்யும் இனங்களில், இறந்த ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களின் திருமணமாகாத / விவாகரத்தான / விதவை மகளுக்கு வாழ்நாள் குடும்ப ஓய்வூதியம்வழங்குவதற்கான விண்ணப்பங்கள் தகுந்த ஆவணங்களுடன் சம்பந்தப்பட்ட அரசு அலுவலர் ஓய்வு பெற்ற அல்லது பணியில் இருந்தபோது இறந்த அலுவலகத்தின் ஓய்வூதியம் ஒப்பளிப்பு அலுவலரால் (Pension Sanctioning Authority) பெற்றுபரிசீலிக்கப்பட்டபின் முன்மொழிவுகள் அவ்வலுவலகத்தால் மாநிலக் கணக்காயருக்கு அனுப்பப்பட்டு மாநிலக் கணக்காயர், சென்னை-18 அவர்களால் "குடும்ப ஓய்வூதிய அனுமதி (Family Pension Authorisation) ஆணை வழங்கப்பட்ட பின்னர் சம்பந்தப்பட்ட ஓய்வூதியம் வழங்கும் அலுவலரால் (Pension Pay Officer) / மாவட்ட கருவூல அலுவலர்களால் இவ்வாணை வெளியிடப்படும் நாளிலிருந்து குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படவேண்டும்" என அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. சண்முகம்,**
அரசு முதன்மைச் செயலாளர்

**GOVERNMENT OF TAMIL NADU**

**ABSTRACT**

Public Services -Disciplinary Proceedings - Review Committees for Suspension~ Cases - Constitution - Orders - Issued.

---

**PERSONNEL AND ADMINISTRATIVE REFORMS (N) DEPARTMENT**

**G.O. (Ms) No. 30** **Date 23.2.2012**

Read:

ORDER:

It is noticed that in many cases, the Government servants are kept under suspension unduly for a long time for the reason that the disciplinary cases have not been finalized. In order to curb the delay in finalizing the suspension of a Government servant in a disciplinary proceeding, the Government have decided to Constitute Review Committees at two tier level, one at Government level and another at Heads of Department level.

2. The composition of the Review Committees shall be as follows:

**(1) Review Committee at Government level:-** The Review Committee at Government level shall consists of;

(1) Principal Secretary / Secretary of the Administrative Department concerned.

(2) Heads of the Department concerned

(3) Principal Secretary / Secretary, Personnel and Administrative Reforms {Trg} Department.

**(2) Review Committee at Heads of Department level:-** The Review Committee at Heads of Department level shall consists of;

(1) Heads of Department

(2) Regional level Officer

(3) District level Officer

3. The above Review Committees shall have a meeting to review the suspension cases in disciplinary proceedings under their authority once in three months viz.

(1) End of March
(31st of March) -1st Quarter

(2) End of June
(30th of June) - 2nd Quarter

(3) End of September
(30th September) - 3rd Quarter

(4) End of December
(31st of December) - 4th Quarter

4. The minutes of the meetings and its progress shall be sent to Government in Personnel and Administrative Reforms Department with a copy marked to Administrative Departments of Secretariat and Vigilance Commission (where Vigilance cases reported).

5. The Heads of Department may be requested to constitute the said committee and issue the orders with immediate effect and it may be informed to the Administrative Departments of Secretariat at the earliest.

(BY ORDER OF THE GOVERNOR)

**V. IRAI ANBU**
SECRETARY TO GOVERNMENT

GOVERNMENT OF TAMIL NADU

ABSTRACT

Public Services - Disciplinary Cases relating to Retired Government Servants under Tamil Nadu Pension Rules 1978 - Modification to Rule 9 of the Tamil Nadu Pension Rules, 1978 - Orders - Issued.

---

**PERSONNEL AND ADMINISTRATIVE REFORMS (N) DEPARTMENT**

**G.O. (Ms) No. 31** **Date 23.2.2012**

Read:

ORDER:

Rule 9 (1) of the Tamil Nadu Pension Rules, 1978 vests with the Government, the right of withholding or withdrawing a pension or part thereof, whether permanently or for a specified period if, in any departmental or judicial proceedings, the pensioner is found guilty of grave misconduct or negligence during the period of his service, including service rendered upon re-employment after retirement / the right of ordering recovery from the pension of the whole or part of the pecuniary loss caused by such grave misconduct or negligence. The proviso to Rule 9 (2)(a) of the Tamil Nadu Pension Rules, 1978, requires that where the departmental proceedings are instituted by an authority under rule 9 (2) (a) and that authority is subordinate to the Government, that authority shall submit a report recording its findings to the Government. The Rule 9 (2) (b) (i) stipulates that the disciplinary proceedings if not instituted while the Government Servant was in service whether before his retirement or during his reemployment shall be instituted with the sanction of the Government.

2. In view of the aforesaid rule positions, once a Government servant retires, irrespective of their category, the disciplinary cases are referred to Government for its disposal and issue of final order in the disciplinary proceedings, which results in accumulation of disciplinary cases at the Government level.

3. The Government, after careful examination, has proposed to modify the provisions in rule a of the Tamil Nadu Pension Rules, 1978 suitably. Accordingly, the Government direct that the disciplinary cases of the pensioners who belong to State Service alone be sent to the Government and other cases shall be dealt with by the Heads of Department concerned.

4. Necessary amendment to the Tamil Nadu Pension Rules, 1978 will be issued separately by the Finance Department.

5. This order issues with the concurrence of the Finance Department in U.O. No.548/FS/P/Pen/2012, dated 22.02.2012.

(BY ORDER OF THE GOVERNOR)

**V. IRAI ANBU**
SECRETARY TO GOVERNMENT

**GOVERNMENT OF TAMIL NADU**

**ABSTRACT**

Public Services -Disciplinary Proceedings - Review Committees for Suspension~ Cases - Constitution - Orders - Issued.

---

**PERSONNEL AND ADMINISTRATIVE REFORMS (N) DEPARTMENT**

G.O. (Ms) No. 30 **Date 23.2.2012**

Read:

ORDER:

It is noticed that in many cases, the Government servants are kept under suspension unduly for a long time for the reason that the disciplinary cases have not been finalized. In order to curb the delay in finalizing the suspension of a Government servant in a disciplinary proceeding, the Government have decided to Constitute Review Committees at two tier level, one at Government level and another at Heads of Department level.

2. The composition of the Review Committees shall be as follows:

**(1) Review Committee at Government level:-** The Review Committee at Government level shall consists of;

(1) Principal Secretary / Secretary of the Administrative Department concerned.

(2) Heads of the Department concerned

(3) Principal Secretary / Secretary, Personnel and Administrative Reforms {Trg} Department.

**(2) Review Committee at Heads of Department level:-** The Review Committee at Heads of Department level shall consists of;

(1) Heads of Department

(2) Regional level Officer

(3) District level Officer

3. The above Review Committees shall have a meeting to review the suspension cases in disciplinary proceedings under their authority once in three months viz.

(1) End of March
(31st of March) -1st Quarter

(2) End of June
(30th of June) - 2nd Quarter

(3) End of September
(30th September) - 3rd Quarter

(4) End of December
(31st of December) - 4th Quarter

4. The minutes of the meetings and its progress shall be sent to Government in Personnel and Administrative Reforms Department with a copy marked to Administrative Departments of Secretariat and Vigilance Commission (where Vigilance cases reported).

5. The Heads of Department may be requested to constitute the said committee and issue the orders with immediate effect and it may be informed to the Administrative Departments of Secretariat at the earliest.

(BY ORDER OF THE GOVERNOR)

**V. IRAI ANBU**
SECRETARY TO GOVERNMENT

GOVERNMENT OF TAMIL NADU

ABSTRACT

